

கயிலைமுனிவர் பேருராதீனம்

தவத்திரு சாந்தலிங்கஇராமசாமி அடிகளார் மணிவிழா மலர்

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

கயிலைமுனிவர்

பேரூராதீனம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

மணிவிழா

சிறப்புமலர்

திருவள்ளுவர் ஆண்டு 2016 குரோதன - மாசித்திங்கள் - 10


கயிலைமுனிவர்
பேரூராதீனம்
தவத்திரு சாந்தலிங்கஇராமசாமி அடிகளார்
மணிவிழா மலர் - 1986

வெளியீடு :

மணிவிழாக் குழு
பேரூராதீனம்
பேரூர், கோவை - 641 010

பதிப்பாசிரியர்கள் :

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
டாக்டர் ம. ரா. போ. குருசாமி



ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள்



உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

பல்லாண்டு கூறுதுமே....

"பேரூர் உறைவாய் பட்டிப்பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலவும் பரவப்படுவாய் பாரூர் அம்மனே..."

உலக இருள்நீங்க ஆதவன் உதிக்கும் காலைப் பொழுது, காஞ்சிமா நதிக்கரை, பட்டிப் பெருமான் திருக்கோயிலில் பண்ணெழுகு இசைப் பாடல், சுந்தரரின் செந்தமிழில் அருளூற்றாய் அடியவர் உள்ளத்தில் பாய்கிறது.

ஆம், எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாய் இந்தமண்ணில் ஞானச் செல்வர் களின் அருட்செயல்கள் தொடர்கின்றன...

அனுபூதிச் செல்வர்கள் உருவாக்கித் தந்த தவச்சாலையில் காலம் காலமாய் அருளாளர்களின் அனுபவ விளைச்சல்கள்.

* முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளாரின் அருள் உள்ளத்தில் ஊற்றெடுத்து தலைமுறை தலைமுறையாய் ஞான விளைச்சலைநல்கி ஞான பூமியாகத் திகழ்வது பேரூராதீனம்.

ஞானபீடத்தமர்ந்து அருளாட்சி செய்யும் "கயிலை முனிவர்" தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் சமய வழியில் இச்சமுதாயத்தைத் திருத்தும சான்றோராகத்திகழ்கிறார்கள் இவர்தம் அருளாட்சியில் கொங்கு மண்டலமும், தமிழகமும், கடல்

கடந்த தமிழ்ச் சமுதாயமும் பெற்ற அருட்பயன்கள் பலவாகும்.

கல்விப்பணியைத் தலையாய பணியாகக் கொண்டு இன்றைய இளைஞர்களை நற்குடி மக்களாக உருவாக்கும் கல்வித் தந்தையாக விளங்குகின்றார்கள். இமயத்திற்கும் குமரி முனைக்கும் இடைப் பட்ட பாரதத்தின் பண்டைச் சமயநெறி வளர்க்கும் காவலராய், திருநெறிய தமிழ்பேணும் செந்நெறியினராய் செந்தமிழால் இறைவனைப்பேணும் திறலுடையவர் ஆவார். உள்ளத்தில் ஒளி யேற்றி உலகத்தவர்க்கு நல்வழியைக் காட்டும் ஞானத்தந்தையாக விளங்குகின்றார்கள்.

ஞானத்தந்தைக்கு மணிவிழா, இம்மங்கல விழாவில் சென்ற காலத்தின் பழுதிலாத் திறனை எதிர்காலத்தினர் அறிய, இம்மலர் எங்களது எளிய காணிக்கை.

* மணிவிழா மலர் சிறக்க அல்லும் பகலும் உழைத்த எஸ். இராமசாமி, கே. சின்னுசாமிக் கவுண்டர், கே. நடராசன் த. தருமராசன், ம. ஈசுவரசாமி, செ. செங்கோடன், எஸ். ஆர். சுப்பிரமணியம், செ. துரைசாமி, அ. பழனியப்பன், ஸ்ரீ பிரகாஸ், எஸ். பிரகாஸ்.

* மலர் சிறக்க ஆலோசனை நல்கிய டாக்டர். ம. ரா. போ. குருசாமி பதிப்பாசிரியர் டாக்டர். இ. சுந்தரமூர்த்தி ஆகியோர்க்கும்.

* அழகிய முறையில் அச்சிட்டு வழங்கிய கோவை நந்தி அச்சகம் சென்னை கதிரவன் அச்சகம் ஆகியோர்க்கும் மலரை வலிவும், பொலிவுமுறச் செய்த ஆதீனத் தலைவர்கள், அறிஞர்கள், பெரியோர்கள், கவிஞர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றி மலர்கள்.

* இன்று மணிவிழாக்கண்ட தவத்திரு அடிகளின் பணி ஆன்மீக எழுச்சியாக அன்பிதயங்களை நோக்கி......


முன்னொரு காலத்தில்-ஆதியும் அந்தமும் கடந்த அளப்பருஞ் சோதியை ''பல்லாண்டு ... பல்லாண்டு'' எனப்பாடிய பக்தியின் கனிவு...

அந்த தெய்வவண்டீந்தமிழால் நாமும் நமது குருமணியை வாழ்த்தி வணங்குவோம் .....


பல்லாண்டு கூறுதுமே......

இனிய அன்பு

மலர்க் குழுவினர்



கயிலைமுனிவர் பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்கஇராமசாமி அடிகளார்



தவச்சாந்த லிங்கமுனி தகைசான்ற திருக்கோயில் பவம் போக்கும் குடமுழுக்கு நீராட்டு நற்காட்சி



தவத்திரு

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

மணிவிழா மலர்

1986

அருளாளர் நோக்கில் அடிகளார்



தவத்திரு மாணிக்க சுவாமிகள்



தவத்திரு ஆறுமுக சுவாமிகள்

மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் மடாலயம்
மயிலம் & பொம்மயபாளையம்.

மயிலம் 23
பாண்டி 4208
தேதி 15-2-1986

வாழ்த்துரை

உலகம் உய்வடைதற் பொருட்டுத் தோன்றியது சமயம் சமயங்கள் பலதிறப்பட்டன. அவற்றுள் உலகளாவிய சமயமாகத் திகழ்வது சைவம். சைவம் சிவசம்பந்தமுடையதென்பர், ஆன்றோர். சிவமாவது மங்கலம் என்ற பொருளைத் தரும். மங்கலம் என்பது நன்மையாம். நன்மையெனப்படுவன எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மையாவது வீடுபேறு. எனவே உயிர்கட்கு வீடுபேற்றை அருள்பவன் குறைவிலா மங்கலக் குணத்தவனாகிய சிவபரம் பொருளேயாம் அப்பரம்பொருள் குருமூர்த்தங்கொண்டு சரமூர்த்தியாகி அருள்பாலிக்கிறது அச்சரமூர்களுள் பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் திரு மடத்தில் எழுந்தருளி அருட் செங்கோலோச்சி தமிழையும் சமயத்தையும் புரந்து வரும் ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுள் ஒருவராவார்.

நமதன்பிற்குரிய பேரூராதீனம் ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்கஇராமசாமி அடிகளார் அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவது அறிந்து மகிழ்கிறோம். அடிகளார் பல்லாண்டுகள் இனிது வாழ்ந்து சமயத் தொண்டும் சமுதாயத் தொண்டும் புரியவும் மணிவிழாவின் மலர்மணம் எங்குணம் பரவவும் மயிலந்தண் மாமலை முருகனையும் நமதாதீன ஆதிகுரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனம் 26-ஆவது
குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள்**

தருமபுரம்
மயிலாடுதுறை அஞ்சல் 609 001

19-02-1986

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

கொங்கு நாட்டுப் பகுதியில் செந்தமிழும், சிவநெறியும் வளர சிறந்த தொண்டாற்றி வருவது பேரூர் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் திருமடம். இத்திருமடத்தின் தலைவராக விளங்கும் தவத்திரு சாந்தலிங்கஇராமசாமி அடிகளார் தமிழ்ப் புலமையும், சமய ஒழுக்கமும் நிரம்பப் பெற்றவர். பேரூர் தமிழ்க் கல்லூரியின் முதல்வராக விளங்கி பலநூறு மாணாக்கர்களை உருவாக்கியவர் அண்மையில் கயிலாய யாத்திரை மேற்கொண்டு திரும்பிய தவத்திரு அடிகளார் அவர்களின் மணிவிழா சிறப்பாக அன்பர்களால் கொண்டாடப்படுவதும், இதனை ஒட்டி மணிவிழா மலர் ஒன்று வெளிக் கொணரவிருப்பதும் பெரிதும் மகிழ்ச்சிக்குரியன.

மணிவிழாக் காணும் அடிகளார் செந்தமிழுக்கும், சிவநெறிக்கும் மேலும் தொண்டுகள் பல இயற்றி நீடு இனிது வாழவும், மணிவிழா மலர் பயன்பூத்து மலரவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவ சிவ

தன்கடன் அடியேனையும் தாங்குதல்

என்கடன் பணிசெய்து கிடப்பதே

தவத்திரு குன்றக்குடி அடிகளார் குன்றக்குடி-623206

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

தொலைபேசி: குன்றக்குடி-27

நாள்: 5-2-86

வாழ்த்துரை

அருட்டிரு கயிலை முனிவர் சாந்தலிங்க இராமசாமி அடிகள் அவர்கள் பசவேசர் நெறிநிற்கும் பண்பாளர்; நுண்மாண் நுழைபுலமிக்க தமிழாளியர்; திருநெறிய தமிழ் தோய்ந்த நெஞ்சினர்; மனிதநேயம் மிக்குடையவர்; சமய வழிப்பட்ட சமுதாயம் காணும் ஆர்வத்தினர்; பேரூரில் தமிழ்க் கல்லூரி கண்டவர்; தகைமை சான்ற கல்லூரி முதல்வர்; சமய நெறியில் முற்போக்குச் சிந்தனையாளர்; சேக்கிழாரின் செந்நெறி இவ்வையகத்தில் நிலைபெற வேண்டுமென்ற திருவுளப்பாங்கினர்; திருநெறிய தொண்டு நெறி நிற்பவர்; நிரந்தினிது சொல்லும் பெற்றியர்; பழகுதற்கு இனிய அன்பினர்; தண்ணளி மிகுதியுமுடையவர்; நம்பால் உழுவலன்பு கொண்டொழுகும் தோழமையர்; அருட்டிரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் மணிவிழா மன்பதைக்கு நலம் சேர்க்கும் விழா! செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் சிறப்பு நல்கும் விழா! விழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

உ   சிவசிவசிவ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகர் திருவடிவாழ்க

ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள்
ஸ்ரீ மௌனதேசிகர் ஆதீன
ஆதீன கர்த்தர்

சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தன் அடியினை மறவாத மணிவிழாக்குழு அன்பர்கள் அனைவருக்கும் திருவருளால் நலம் வளர்க.

பேரூராதீனம் ''கயிலைமாமுனிவர்'' தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள், சிரவையாதீனம் சந்நிதானங்களின் அருந்துணை கொண்டு, நீண்ட காலமாக நின்று போயிருந்த துறவியர் சங்கத்தைத், துறவியர் பேரவை என்ற அமைப்பிலே தொடங்கி, கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகம் முழுவதும் மட்டுமின்றி, இந்தியா முழுவதும் ஆண்டுக்கொரு முறை துறவியர் அனைவரும் சந்திக்கும்படியான வாய்ப்பினை உருவாக்கிட, அதன் மூலமாக ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் தம் அறவுரையையும் கேட்டுப் பயன்பெறும் வசதியைச் செய்துள்ளார்கள்.

மழலையர் பள்ளி தொடங்கி, முதுகலைப்பட்டம் படிப்பும், அதற்கும் மேல் நிலையில் உள்ள ஆய்வுப்பட்ட வகுப்பு, முது முனைவர் ஆய்வுப் பட்டப்படிப்பு வரை தமது மடாலயத்து வளாகத்திலேயே உருவாக்கிக் கல்விப் பணியாற்றிவருகின்றார்கள்.

சத்வித்யா சங்கத்தின் வாயிலாகவும், ஆங்காங்கே நிகழும் பல்வகை விழாக்களில் கலந்து கொண்டும் மக்கள் மத்தியிலே ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்ச்சியையும் சோதி வழிபாட்டின் சிறப்பையும் எடுத்துக்கூறி இறையுணர்வூட்டி நன்னெறியில் வாழ மக்களை வழிப்படுத்திச் சமுதாயப் பணியாற்றி வருகின்றார்கள்.

கல்விப் பணியோடு கூடிய சமுதாயப் பணியாற்றிவருகின்ற சந்நிதானங்கள் காவிரியாற்று மணலினும் பன்னெடுங்காலம் வாழ்ந்து, மணிவிழாவனது, பவளவிழா, முத்துவிழா என வளர எல்லாம்வல்ல தில்லைக் கூத்தன் திருவருளையும் மௌன தேசிகர் குருவருளையும் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருமகா சந்நிதானம்

திருவாவடுதுறை ஆதீனம்

ஆசியுரை

பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் சமயம், மொழிவளர்ச்சி கட்குப் பல்லாற்றானும் சிறப்பாகத் தொண்டாற்றி வருதலை யாவரும் அறிவர். அவர்களது இனிய பண்பு நலன்களும் எத்தகையாரையும் பிணிக்கவல்ல சொற்பொழிவாற்றலும் பெரிதும் பாராட்டப்படுதற்குரியன.

22—02—1986 அன்று அடிகளாருக்கு மணிவிழா நடைபெறவுள்ளமை தெரிந்து மகிழ்கிறோம். அடிகளார் இத்தகு இனிய விழாக்கள் பலவுங்காண நீண்ட நல்வாழ்வெய்தவும், விழாவின் நினைவு என்றும் நிலவ அமையும் விழாமலர் தெய்வத் தமிழ் மணங்கமழ்ந்து பொலியவும், விழா இனிது நிகழவும் எம் ஆன்மார்த்த மூர்த்தமாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

சிவசிவ

திருப்பனந்தாள்-612504
(தஞ்சை மாவட்டம்)

தேதி 8-10-85

கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர்: ஸ்ரீகாசிமடம்

வாழ்த்துச் செய்தி

அறனறிந்து மூத்தவராய்—காலத்தானும் சீலத்தானும் அறிவானும்—மூத்தவராய்த்—தமிழ்ச் சைவப் பணிகளைப் பல்லாற்றானும் ஆற்றி, ஆற்றுப்படுத்தி வருகின்ற பேரூராதீனம், ''கயிலை முனிவர்'' தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் அறுபான் அகவை நிறைவு மணி விழா எடுக்கப்பெறுவதறிந்து மகிழ்ச்சி.

புதுமைக் கவர்வுகளில் ஆட்பட்டு போக்கறியாது தவிக்கும் இளஞ் சந்ததியினருக்கே யன்றி மாற்றுக் குரலின் மயக்கத்தில் திளைக்கும் மூத்தோர்க்கும் தக்க வழி காட்டி, சமய உண்மை, அதன் சீர்மை, அதன் வழிப்பட்டால் எய்தலாகும் வளமை, எய்தியோர் நிரல்கள் ஆகியவற்றைப் பொருந்துமாற்றான் எடுத்துப் புகன்ற அறிவு, தலைவர்களின் தேவை இன்று இன்றியமையாததாயிற்று. இத் தேவையைப் பூர்த்தி செய்யும் தக்க பெருந்தகைகளில் 'கயிலைப் புனிதரும்' அடங்குவர்.

அவர்களின் அறுபான் அகவை நிறைவு மணிவிழாச் சிறப்புற நிகழ்ந்து நிறைவுறவும், அவர்கள் பல்லாண்டு பாரினில் வாழ்ந்து சமயப் பணிகளைச் சந்ததமும் ஆற்றிடவும் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்.

சிவசிவ

ஸ்ரீதொண்டை மண்டலாதீனம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஆசியுரை

சைவ சமய வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஆதாரமாகவும், அரணாகவும், தொன்று தொட்டு இருந்து வருவன திருக்கோயில்களும், திருமடங்களும் ஆகும். திருக்கோயில்கள் வழி பாட்டிற்குரிய இடங்களாகவும் சமய இலக்கணங்களுக்கு விளக்கம் அளிக்கும் சாதனங்கள் (Practical Laborataries) ஆகவும் விளங்குகின்றன. திருமடங்கள் இதற்குரிய இலக்கிய இலக் கணங்களைப் பயிற்றுவிக்கும், பதிப்பிக்கும், நூல் நெறி நின்று வாழப் பயில்விக்கும் நிலயங்க ளாகவும் விளங்குகின்றன.

தென்னாட்டில் தொடர்ந்து சிறந்த சமயப் பணிகளைச் செய்துவரும் திருமடங் களுள் ஒன்று பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் திருமடம் ஆகும். இத்திருமடத்தை நிறுவிய பெருமானின் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாவும், இன்றைய இவ்வாதீனகர்த் தரின் மணி விழாவும் அண்மையில் நடைபெற இருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி அடை கின்றோம்.

ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் சைவ சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக எக்காலத்தும் பயன்பெறும் வகையில் நான்கு அருள் நூல்களை அருளிச்செய்துள்ளார்கள்.

இதுபோது மணிவிழாக் காணும் அடிகள் உழைப்பால் தாம் உயர்ந்து, பிறரும் இந்த நிறுவனத்தால் உயர வழிவகுத்து வருபவர்.

> "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
> பேணித் தமராக் கொளல்"

என்பது வள்ளுவர் வாக்கு. இந்நிலையில் நின்று வாழ்ந்து வெற்றிகண்டவர் அடிகள். மிகச் சிறு வயதிலேயே சிரவை ஆதீனத்தை நிறுவிய தவத்திரு. இராமானந்த சுவாமிகளிடம் கொண்ட அடிமைத்திறத்தின் உண்மைப் பயனே இந்நிலையை இவருக்கு உருவாக்கியது எனலாம்.

பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தின் இளவரசு பட்டம் பெற்றிருந்த காலை இவர் மயிலம் தமிழ்க் கல்லூரியில் எஞ்சிய தமது படிப்பை முடித்து வித்துவான்பட்டம் பெற்றார். அதுபோது அந்நாள் கோவை மாநகரில் வாழ்ந்த அனைத்துப் பெருமக்களின்

நன்மதிப்பிற்குரியவராகி, இவர்களின் அனைவரின் உதவியையும் நாடித் திருப்பேரூரில் ஸ்ரீசாந்த லிங்கப் பெருமான் திருப்பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரியை நிறுவியதோடு, அன்று இப்பகுதி யிலிருந்த கல்வி நிலையங்களின் நிலையை உணர்ந்தவராய், இதனைச் சீரமைக்கும் வகையில் ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, பாலர்பள்ளி ஆகிய இவைகளையும் நிறுவினர். ஆக இக்கல்வி நிலையங்களின் தொழிலாண்மைப் பேராளராகவும் கல்லூரி முதல் வராகவும் இருந்து, இன்றுள்ள நிலைக்கு இவைகளை உயர்த்தியுள்ளார்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகளிடம் வீரசைவ முறையில் தீக்கையும், இவ்வகைத் திருமடங்களுக்கு உரிய பயிற்சியும் பெற்றார். திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தொடர்பு இவரது ஆக்கத்திற்கு உறுதுணையாக விளங்குகின்றது. சிரவைத் திருமடத்தின் மேம்பாட்டில் என் றும் அக்கரையுடையவர். தவத்திரு சுந்தர சுவாமிகள் பட்டம் ஏற்றபோது அங்கிருந்த சில சிக்கல்களைத் தீர்க்க இவர் ஆற்றிய பணிகள் என்றும் பாராட்டுக்குரியவை. இவ்விரு திரு மடங்களும் இணைந்து சமுதாய சமயப் பணிகளை இன்றும் தொடர்ந்து செய்துவருவது யாவரும் அறிந்ததே. நாங்கள் மேற்கொண்ட திருக்கயிலாய யாத்திரையின் போது நாடோறும் தவழாமல் சிவபூசை செய்ய இவர் பல வகையில் துணைநின்ற ஒன்று எம் நினைவில் இன்றும் பசுமையாயுள்ளது.

இவரை நாம் அறிந்த நாள் முதலாக இவர் சமய வழிபாடுகள் விழாக்கள் முதலிய அனைத்தும் தமிழ்மொழி மூலமாகவே செய்யப்பெற வேண்டும் என்பதில் மிக்க ஆர்வம் கொண்டவராய், இத்துறையில் தமது பணியை ஒல்லும் வகையில் ஒயாது செய்து வருகிறார்.

இப்படியாக இவரது கல்வியறிவால்—செயல் திறமையால்—பொது நோக்கான பண் பால்—நிருவாகச் சிறப்பால் இவர் பட்டம் ஏற்பதற்கு முன்பு பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமி கள் மடம் என்று இருந்த ஒன்று இதுபோது பேரூரில் ஆதீனம் எனச் சிறப்புப் பெயர் பெற வளர்ந்து வலிவும் பொலிவும் உடையதாக விளங்குகிறது.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்ப்
பண்புபா ராட்டும் உலகு"

என்ற முறையில் அன்பர்கள் இவருக்கு மணிவிழா எடுப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

விழா நன்கினிது நடைபெறவும் விழாமலர் நன்கு மலர்ந்து நலம்பல பயக்கவும், அடிக ளார் மேலும் பல்லாண்டுகள் அருள்நெறி பரப்பி ஆதீனத்தை வளர்த்துச் சிறக்கவும், இவ்விழா வில் பங்கு பற்றியுள்ள அனைவரும் எல்லா நலன்களுடன் இனிது வாழவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவம்

உ

குருவே துணை

மணிவிழா வாழ்த்துப்பா

தவத்திரு சுந்தர சுவாமிகள்
ஆதீனகர்த்தர் கௌமார மடாலயம் சின்னவேடம்பட்டி

1. காரூர்தண் பொழில்புடைசூழ் கவின்கொங்குத்
திருநாட்டில் கவினும் பற்பல
சீரூர்க ளிற்சிறந்து திகழ்மேலைச்
சிதம்பரமாய்ச் சிறப்புற் றோங்கும்
பேரூரில் திருமடங்கொள் சாந்தலிங்கப்
பெருமானார் பேரா தீனம்
பாரூர்கள் வியந்துவக்கும் பலபணிகள்
பல்லாண்டாய்ப் படைத்த தாமால்!

2. அத்தலத்தில் மாணிக்க சாமியுடன்
ஆறுமுக அடிகள் அன்பர்
சித்தமகிழ் வுறற்கான பலபணியும்
சன்மார்க்கச் சிறப்பும் செய்தார்
நத்தருமை செறிமுதலி பாளையத்தில்
சிவராம சாமிநல் லோன்
வித்தமார் புதல்வர்களில் ராமசா
மித்திருப்பேர் மேலோர் வந்தார்

3. கல்விகேள்வி களிற்சிறந்து சிரவையிற்கௌ
மாரமடம் கவினு மாறு
நல்விதத்தில் தாபித்த தவராமா
னந்தகுரு நாதற் கன்பு
பல்வகையில் பல்லாண்டு பணிசெய்து
கந்தமுனி நாதர் அன்பால்
சொல்வகையில் தமிழ்கற்று என்னுடனே
நட்புமுறை தொடரப் பெற்றார்.

4. மயிலமமலச் சிவஞான பாலையர்கல்
லூரியினில் மாண்பார் கல்வி
பயிலலுற்றுப் புலமைநலம் பெற்றிட்டார்
பேரூரில் பாங்கர் வைகி
நயமுறநற் சாந்தலிங்கர் திருப்பெயரால்
கல்லூரி நண்ணச் செய்து
செயமுறும்அம் மடாலயத்தின் தலைவர்எனப்
பொறுப்பேற்ற சிறப்பின் மிக்கார்

5. சாந்தலிங்கர் திருக்கோவில் கல்விநிலை
யங்களிவை தக்கவாறு
ஆந்தகையில் வளர்த்திட்டார் கயிலாயத்
திருமலையை அன்பால் கண்டார்
தோய்ந்ததமிழ்ப் பேச்சாளர் தவசீலர்
வீரசைவத் தொடர்பு பூண்டார்
வாய்ந்தபிற நாட்டினிலும் தமிழ்ப்பண்பை
வளர்க்கின்ற வகைமேற் கொண்டார்

6. வீரசைவ சித்தாந்தத் திலகமெனும்
சாந்தலிங்கர் விளக்கும் நூல்கள்
வாரமுடன் அச்சிட்டு ஆங்கிலத்தில்
ஆய்வுரையில் வளரச் செய்தார்
நாரமையும் உளத்துடனே கௌமார
மடாலயத்தில் நாட்டம் கொண்டோர்
பேராளர் சாந்தலிங்க ராமசாமி
அடிகள்நலம் பெருகி வாழ்க!

7. ஐம்பதெனக் குலவாண்டில் பொன்விழா
வினைக்கண்ட அடிக ளார்தாம்
தெம்பமையும் ஆறுபத்தாம் ஆண்டதனில்
மணிவிழாத் திகழக் கண்டார்
உம்பர்களும் போற்றவரும் பவளவிழா
வைரவிழா உவந்து கண்டு
இம்பர்களும் எம்பர்களும் போற்றிசெய
பவளவிழா எய்தி வாழி

சுந்தரசாமிகள்
கோவை-6 கௌமாரமடாலயம்

உ
முருகா

சிதம்பரம்
7-2-86

பாராட்டுப்பா

நேரிசை வெண்பா

புகழ்சாந்த லிங்க அடிகளார் பொற்றாள்
அகமகிழ்ந்து போற்றிசெயும் அண்ணல் - தகவு
திகழ்ராம சாமித் திருமுனியைச் சார்ந்தோர்
மகபதிபோல் வாழ்வார் மகிழ்ந்து.

அன்பன்
கிருபானந்தவாரி

ஸ்ரீஜெகத்குரு சாந்ததேவ சாரங்கதேசிகேந்திர மகாசுவாமிகள்
பெரிய மடம், தலைமை அஞ்சகச்சாலை, கும்பகோணம்.

ஆசியுரை

பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மணிவிழாக் குழு வினருக்கு நம் அருளாசி என்றும் உரியவையாகும்.

நம் வீரசைவ ஆதினங்களுள் ஒன்றாக அருட்டிரு சாந்தலிங்கப் பெருமானாரால் தோற்றுவிக்கப்பட்ட குரு மரபில் இப்பொழுது வீற்றிருக்கும் மகாசந்நிதானத்தின் மணிவிழா சிறப்பாக நடைபெறுவதறிந்து மகிழலானோம்.

மணிவிழாக் கொள்ளும் சந்நிதானத்தின் அருளாட்சியில் மடாலயத்திருப்பணி சிறப்புறச் செய்தும் கொங்கு நன்னாட்டில் சிவாலயத் திருப்பணிகள் நிகழவும் ஆதீனச் சார்பாக மேனிலைப்பள்ளி கல்லூரி முதலிய பல கல்வி நிலையங்கள் சிறப்புற நிகழ்த்தியும் தமிழ் நாட்டில் எங்கணும் சென்று சைவ நெறி பரப்பியும் பல பணிகள் புரிவது யாவரும் அறிந்ததே.

இத்தகைய பணிகள் மேலும் சிறக்கவும் நம் வீரசைவப் பெருங் கொள்கை மேலும் சிறக்கவும் நம்மகாசந்நிதானம் பல்லாண்டுகள் திருமடத்தை அலங்கரிக்கவும் நம் சாரங்கேந்திரப் பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

மணிவிழாவின் தொடர்பாகச் சிறந்த மலர் வெளியிடுவதை அறிந்து பெருமகிழ் வடைந்தோம். விழா மலர் சிறந்த கருத்துக்களை கொண்டு வெளிவரவும் மணிவிழாச் சிறக்கவும் நம் மடாலயத்தில் வீற்றிருக்கும் வீரபத்திரப் பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

மணிவிழாக் குழுவினரின் குருபக்தி மேலும் மேலும் இங்ஙனம் சிறப்புறுவதாகுக.

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலய ஏழாம் குருநாதர்—ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அருளிய

வாழ்த்துரை

சிவம் பெருக்கும் திருஅமைந்தீர்!

இஞ்ஞான்று சைவ உலகம் விழையும் அளவிற்குச் சமயத் துறையில் ஸ்ரீமத் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆற்றும் தொண்டு அளவிடற்கரிய நிலையது: எந்த இடமாயினும் எவ்வகை மக்களாயினும் அழைக்கும் அழைப்பினை ஏற்றுச் சிறிதும் சலிப்பின்றிக் கலந்துகொண்டு அவ்வவர்களை மகிழ்வித்தருளலும் அந்தச் சுற்றுச் சூழலிலே சமய—மொழி உணர்வுகளையும் தூண்டிவிடுதலும் கண்டு மகிழ்கிறோம்.

கொங்கு நாட்டுத் திருநகரிலே பெருஞ் சிறப்புடன் இன்று திகழும் கல்வி நிலையங்களுக்குப் பேராதரவுடன் கல்வித் தொண்டு புரிவது பெரும் பணியாகும்.

ஆங்கு பயிலும் மாணவ, மாணவியர், தம் கல்வியையும், ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்வதோடு, தாம் அலுவல் மேற்கொள்ளும் பகுதிகளில் தூய—சிறந்த தொண்டுகளோடு பணியும் புரிந்து, தாம் சிறப்பதோடு, தம்மிடம் பயில்வோரும் சிறக்கச் செய்வதால் நாடு நலம் பெறுகிறது.

அறநிலையத் தலைமையேற்றபின் ஆங்கு ஆற்றிவரும் தொண்டுகள் இன்னின்னவையெனக் கணித்துப் பார்ப்போர் எவரும் இறும்பூதெய்தாமலிரார்.

மணிவிழாக் கொள்ளும் நம் அடிகளாரும் அவருடன் இணைபிரியாது தொண்டாற்றும் ஸ்ரீலஸ்ரீ சுந்தர சுவாமிகளும் இவ்வண்ணமே பற்பல அருந்தொண்டுகளில் ஈடுபடுவதால் சமய வளர்ச்சி பெரிதும் ஓங்கத் தடையில்லை.

ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்க இராமசாமி அடிகளார் இவ்வாறே சிறந்த பல தொண்டுகளிலீடுபட்டு நெடிது வாழ ஸ்ரீவசவண்ணர் திருவடிகளையும் எம் ஆதீன முதற்குருநாதர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருவடிகளையும் அவர்கட்கு ஆறுமுறை திருவடி தீட்சை புரிந்தருளி ஸ்ரீமஹாபரணவோபதேசமருளிய எம் உபாஸனா மூர்த்தியாம் ஸ்ரீவள்ளி தேவஸேனா ஸமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமியின் திருவடிகளையும் வந்தித்து வாழ்த்துகிறோம்.

உ

சூரியனார் கோவில் ஸ்ரீசிவாக்ர யோகிகள் ஆதீனம்

26-வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளிய

வாழ்த்துரை

பேரூர் ஆதீனம் சந்நிதானம் கயிலைப் புனிதர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் என்று நினைத்தவுடனே அவர்களது உருத்திராக்க தாரணம் இலிங்கதாரணம் விபூதிப் பூச்சு முதலிய தோற்றப் பொலிவும் முகமலர்ச்சியுடன் புன் முறுவல் அழகும் கண்முன் தோன்றுகிறது.

அவர்கள் இம்மடத்திற்கு எழுந்தருளிய சமயம் சிலமணி நேரங்கள் திருவாசகம் பெரிய புராணத்தில் சிவநாயன்மார்களைப் பற்றியும் சாத்திரக் கருத்துக்கள் பற்றியும் உரையாடி னோம். என்னே? அவர்களுக்குச் சைவத்திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் உள்ள ஈடுபாடு, தோய்வு, உருக்கம் முதலியன கண்டு வியந்தோம். அம்மட்டோ! அவர்களது ஆதீனத்திலே தமிழ்க் கல்லூரி நிறுவி பல மாணவர்களை உருவாக்கி சைவமும் தமிழும் வளர்க்கத் தமிழ்நாட் டுக்குத் தருகிறார்கள் என அறிந்தோம். மகிழ்ந்தோம்.

அதோடல்லாமல் மடத்து சிஷ்யர்களையும், பக்குவிகளையும் தானும் உடன் போந்து ஆலய வழிபாடு (ஸ்தல யாத்திரை) பூஜை முதலிய சிவப் பணிகளில் ஈடுபடுத்திச் சைவம் புரந்து வருகிறார்கள் என்பதைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

அவர்களுக்கு (1986 பிப்ரவரி மீ 1, 2) தேதிகளில் மணி விழா சிறப்புற நிகழ்வதறிந்து மகிழ்ச்சி.

சோதிட கணக்குப்படி சூரிய தெசை முதல் சுக்கிர தெசை முடிய 120 ஆண்டுகள் ஒருவர்க்குரிய வயது. அதில் பாதி அறுபதாண்டு நிறைவு. இதனை 'மணிவிழா' எனக் கொண் டாடுகிறோம். எனவே பல விழாக்கள் கொண்டாட சிவ பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.

மணிவிழா சிறப்புற அமையவும் மணிவிழாக் கொள்ளும் சந்நிதானம் அவர்கள் ஆரோக்கிய திடகாத்திரத்துடன் வாழ்ந்து மேலும் பல விழாக்கள் நடைபெறவும் இத்தகு நற் பணிகளுக்கு ஒல்லும் வகையெல்லாம் பணிபுரியும் அன்பர்கள் அலுவலர்கள் மாணவர்கள் எல் லோரும் வாழ்விற்கு வேண்டிய எல்லா நலனும் வளமும் புகழுடன் மகிழ்வும் திருவருளும் குரு வருளும் பெற்று நீடூழி வாழ அருள் புரியுமாறு ஞானப் பூங்கோதை ஸமேத ஸ்ரீ காளத்தீஸ்வரர் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றனம்!

மணி விழா மலர் இறையருளால் மணங்கமழ வெளிவருவதாகுக!

உ

திலகவதியார் திருநாமம் வாழ்க

டாக்டர் (சாயிமாதா) சிவபிருந்தாதேவி
தலைவர் : உலக மகளிர் பேரவை.

திலகவதியார் திருவருள் ஆதீனம்
மச்சுவாடி, புதுக்கோட்டை—622001
தமிழ்நாடு—தென் இந்தியா.

தொண்டுக்கெனத் தோன்றியவர்கள்

குன்றக்குடி நிகழ்ச்சிகளில் பல ஆண்டுகட்கு முன்பே பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களைப் பல முறைகள் சந்தித்தும், அவர்களது அருந் தமிழை அள்ளிப் பருகியும் ஆனந்தம் அடைந்திருக்கின்றோம்.

மற்றும் பல தலங்களிலும், விஸ்வஹிந்து பரிசத் மாநாடுகளிலும், அவர்களோடு நிகழ்ச்சிகளில் உரையாற்றி இருக்கின்றோம். அவர்களால், பேரூர் திருமடத்திற்கு அழைக்கப் பெற்றும் பேசியுள்ளோம். 30-6-83இல் தவத்திரு சுவாமிகளது அன்பு கலந்த அருளாசியோடு. புதுக்கோட்டையில் திலகவதியார் திருவருள் ஆதீன அருளாட்சி ஏற்றது நாம் என்றென்றும் மறக்க முடியாத அற்புதக் காட்சியாம்.

1984 பிப்ரவரி 18, 19ல் இவர்களது பேராதரவோடு கோவை மாநகரில், உலகப் பாவையர் மாநாட்டைச் சாலச் சிறப்புடன் நடத்தியிருக்கின்றோம். அதற்கு இவர்களிடம் நன்றி செலுத்த என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் தலைமைப் பொறுப்பேற்றுள்ள உலக இந்துப் பெண்கள் பேரவையின் சார்பாக 85 செப்டம்பரில் மலேசியத் தலைநகரில்—கோலாலம்பூரில் நடந்த உலக இந்துப் பெண்கள் மாநாட்டிற்கும், சுவாமிகள் எழுந்தருளி அருளுரையாற்றியதையும், அவர்களது மணிவிழா நாளில் நாம் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கின்றோம்.

தவத்திரு பேரூர் ஆதீனம் அவர்கள்,

சமயத் தொண்டிற்கும்
சமுதாயத் தொண்டிற்கும்
தமிழ்த் தொண்டிற்கும்

ஒரு வழி காட்டியாக;
ஒரு இலக்கணமாக
கலங்கரை விளக்காக
தவத்தின் திருவுருவாக
விளங்குகின்றார்கள்.

இவர்கள், ''தொண்டுக்கெனத் தோன்றியவர்கள்'' என்பதுணர்ந்து, நாம் அகமிக மகிழ்ந்து அம்பலக் கூத்தன் அடியிணைகளைப் போற்றிப் பாராட்டுகின்றோம்.

டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி
திலகவதியார் திருவடிப்பொடி

''திலகவதியார் திருவடிகளே சரணம்.''

குருபழநி ஆதீனம், திருக்குறள் பீடம் குருகுலம்
மதுராந்தகம்–603306
சிவத்திரு குருபழநி அடிகள் - இரண்டாவது திருக்குறள் பீடாதிபதிகள்

வாழ்த்துரை

திருவருள்

தோன்றி வளர்ந்து தகுதி பெற்று, சூழல் வாய்த்து அறச் செயல் செய்த பின்பே தோன்றுதற்குரிய புகழ் என்றால், திருவள்ளுவர் தோன்றும் போதே, புகழொடு தோன்றுக என்று கூறுகின்றாராதலின் அதற்குரிய திரு கருவிலேயே அடைந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

மக்கள் வாழும் முறையில்தானே புகழ் உண்டாக வேண்டும். இதனைத் தெரிவிப்பதே 'புகழ்பட வாழாதார்' என்னும் குறள்.

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்'

ஆகியவற்றிற்கு உரியவராகவும் வாழ்தல் வேண்டும்.

ஆண்டவனது இயல்பாகிய திருவருள் என்பது வேறு, உயிர்களிடத்து இரக்கமுடைமையாகிற அருளுடைமை வேறு. 'திருவருள்' இரக்கமுடைமை மட்டும் அன்றி நீதியுடைமை முதலிய வல்லமைகளின் தொகுப்பு, அந்த இரக்கமுடைமையை ஒத்ததாக உயிர்கள் பிற உயிர்களிடத்தில் காட்டும் இரக்கமும் இருப்பதனால் திருவருள் என்பதில் உள்ள அருட்பெயர் உயிரிரக்கத்துக்கு வந்தது.

திருவருளுக்கும் உயிரிரக்கத்துக்கும் உரியவராகவும் திகழும் நம் பேரூர் ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் மணிவிழா சிறப்புற நடப்பதறிந்து பேருவகையடைகின்றோம்.

அடிகளார்க்கு எடுக்கும் மணிவிழா தமிழுக்கும் சமயத்துக்கும் எடுக்கும் விழா.

பேரூர் தவத்திரு அடிகளார் அவர்களின் மணிவிழா சிறக்க விழா, சார்பில் வெளியிடும் மணிவிழா மலர் திருக்குறள் நெறியும் சிவநெறியும் பரப்பும் மணமலராய்த் திகழ்ந்து நாடுவாழ உதவ வேண்டுகிறோம்.

மணிவிழா காணும் அடிகள் நாடு வாழ நீடுவாழ்ந்து அருள்பாலிக்க, சாந்தலிங்கர்தாள் மலரினையும் ஆதிபகவன் இணையடிகளையும் வந்தித்து வாழ்த்துகின்றோம்.

தவத்திரு தி. செ. முருகதாச சுவாமிகள்
கௌமார மடாலயம்,
திருவாமாத்தூர்.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் நடைபெற்ற

முப்பெருவிழாப் பாராட்டு வாழ்த்து

வெண்பா

சாற்றுதவச் சாந்தலிங்கர் தம்மடத்தி னற்றலைவர்
ஏற்றதமிழ்க் கல்லூரி யின்முதல்வர்—போற்றும்
கவிஞர் புலவர் கவின்வீர சைவச்
சிவநெறியேற் குந்தே சிகர்

சிரவையிரா மானந்தத் தேவனடித் தொண்டு
விரவப் பலநாள்செய் மேலோர்—பரவு
கவுமார நன்னெறியைக் காட்டுதண்ட பாணி
ஓவுநூல்கள் கற்றவுர வோர்.

தமிழேதன் பேச்சாய்த் தமிழேதன் மூச்சாய்த்
தமிழே வழிபாட்டிற் சார்ந்து—தமிழ்பேசும்
நாடுபல கண்டன்பால் நன்மக்க ளோடுறவு
கூடும் உயர்சற் குணர்.

சாந்தலிங்கர் கோயில் தமதாதீ னத்தினிடை
வாய்ந்ததிரு அம்பல வாணர்க்குத்—தோய்ந்ததமிழ்த்
தங்குகும்ப நீராட்டு சத்வித்யா சன்மார்க்க
சங்கப் பவளவிழாச் சார்பு.

என்னத் திகழும் எழில்முப் பெருவிழா
மின்னச்செய் ராமசா மித்தவனார்—பன்னும்
மணிவிழாக் கண்டுவந்த மாண்பினார் பற்பல்
அணிவிழா நாளுஞ்செய் வார்.

ஓதுபுகழ்ச் சுந்தரப்பே ருற்ற முனிவருடன்
சாதுமகா நாட்டினிடை சார்ந்துபல—நீதியினைக்
கூறுமுயர் பேச்சாளர் கொற்றம் பெறுந்துறவுப்
பேறுபெற்ற நற்பண் பினர்.

சிவராம சாமிபெற்ற செல்வப் புதல்வர்
தவசாந்தந் தோய்ராம சாமிச்—சிவமுனிவர்
மூவர்தமிழ் பெற்றபல மூர்த்திதலந் தீர்த்தமென்ப
யாவு மெய்திக் கண்டா ரிசைந்து.

எயிலொரு மூன்றைப் பொடித்த ஈசன்மருவும்
கயிலைமலை கண்டுவந்த காதல்—பயிலருளார்
எல்லோரும் போற்ற இனிமையொடெம் மோடுறவாய்ப்
பல்லாண்டு வாழ்க பரிந்து.

உ 25-1-86

தவத்திரு சிவஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம் ஆண்டவர் மன்றம்

கோவிலூர், மாநகரி (வழி)—முகவை.

வாழ்த்துரை

திருச்சிற்றம்பலம்


தில்லையம் பலத்தில் தேவர்கள் கைதொழ
எல்லையில் நடம்புரி இன்பக் கூத்தன்
திருவரு ளதனால் சீர்மிகப் பெற்று
பேரூரா தீனம் பெருமையுறப் பொலியும்
அருளுரு வாகிய அண்ணல்எம் பெருமான்
சாந்த லிங்கர் தவத்திருக் கோவில்
திருக்குட முழுக்குச் சீர்பெரு நல்விழா
எல்லோ ரும்தொழ் இனிதுநடந் திடுக
சிவநெறி வளர்க்குஞ் செந்தமிழ்ச் செல்வர்
வேதாந்தத்தின் மெய்ப்பொருள் விளங்க
அருள்நூல் நான்கினை அருளிச் செய்தவர்
சாந்த லிங்கனார் தம்திருக் கோவில்
மங்கல நீர்விழா மகிழ்வுடன் பொலிக!
அம்பல வாணர் அருட்பெரு விழாவும்
அம்பல வாணன் அருளினைப் பெற்று
மாபெருஞ் சிறப்புடன் மகிழ்வுடன் பொலிக!
சங்கம் தவழ்ந்த தமிழுஞ் சமயமும்
கண்ணென வளர்த்துக் கவின் பணிபுரியும்
சத்வித்யா சன்மார்க்க சங்கம் மேற்கொளும்
பவள விழாவும் பண்புடன் பொலிக
சமயப் பேரவை தழைத்தினி தோங்க!
நாதாந் தத்தின் நற்பொரு ளான
வேதாந் தத்தின் மெய்நெறி பரப்பும்
அன்பரும் அடிகளும் அருள்பெற் றோங்குக!
சிவநெறி பரப்பும் திருக்கூட் டத்தினர்
பசிப்பிணி யின்றிப் பன்நலம் பெற்று
வசியும் வளமுடன் வாழ்கபல் லாண்டே!



தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
மணிவிழா மலர்

1986

அறிஞர் நோக்கில் அடிகளார்



அண்ணா பல்கலைக் கழகம்

டாக்டர் வா. செ. குழந்தைசாமி
பி.இ., எம்.டெக்., டி.எஸ்.எஸ்.,
பிஎச்.டி., டி.லிட்., எப்.ஐ இ., எம்.ஐ.ஏ.எச்.ஆர்.,
துணை வேந்தர்.

தொலைபேசி : 414545
தந்தி : அண்ணாடெக்

25—1—1986

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்தம் மணிவிழா மாசித் திங்களில் நடப்பது அறிந்து மகிழ்ந்தேன். தவத்திரு அடிகளார் அவர்களைக் கடந்த 15 ஆண்டுகளாக நான் நேரில் அறிவேன். சிலசமயங்களில் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் இருந்தது. அடிகளார் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்தபோது நானும் ஒரு உறுப்பினராகப் பணிபுரிந்தேன். அந்தச் சமயத்தில் அடிகளார் அவர்கள் தமிழ் வளர்ச்சியின் பால், தமிழ் இனவளர்ச்சியின்பால் கொண்டிருந்த அளவிறந்த பற்றை யான் பலமுறை வியந்ததுண்டு. அரசுக் கல்வித் துறை, பல்கலைக்கழகக் கல்வியாளர் போன்றோர் செய்யவேண்டிய பணிபற்றி அவர் கொண்டிருந்த ஆர்வத்தின்பால் எனக்குப் பெரும் மதிப்பு ஏற்பட்டது.

அடிகளார் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கான எண்ணங்களையும், சிந்தனைகளையும் தெளிவாக எடுத்துரைக்கும் திறன் பெற்றவர். காட்சிக்கு எளியவர், கடுஞ்சொல் அறியாதவர். காவி அணிந்த துறவியின் வாழ்வுக்கு இலக்கணமாக அமைந்தவர். ஆனால் அத்துறவு அவரைத் தமிழ் மொழியினின்றும், தமிழ் இனத்தினின்றும், தமிழ்ச் சமுதாயத்தினின்றும் பிரிக்கவில்லை. ஒளி வீசும் அவரது உள்ளத் தூய்மையையும், உணர்வுகளின் விழுமங்களையும் நான் அன்றும் வியந்தேன். இன்றும் வியக்கிறேன். அடிகளார் அவர்கள்தம் பணியின் பயணம் நீண்டது. இன்னும் நெடுந்தூரம் இருக்கிறது. அடிகளார் நிறைந்த நலனும், நீண்ட ஆயுளும் பெற்றுத் தமிழ் இனத்திற்கும், தமிழ்மொழிக்கும் பெருந்தொண்டாற்றுவார் என்ற நம்பிக்கையுடனும், ஆற்ற வேண்டும், என்ற ஆசையுடனும் அடிகளார் அவர்களுக்கு எனது பணிவு கலந்த வாழ்த்துக்களைக் காணிக்கை ஆக்குகிறேன்.

வா. செ. குழந்தைசாமி

டாக்டர் மால்கம் ச. ஆதிசேஷய்யா
சென்னைப் பல்கலைக் கழக
முன்னாள் துணை வேந்தர்

27—1—1986

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களை நான் இப்போது பத்தாண்டுகளாக அறிவேன். அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சியின் ஓர் அன்பான அங்கத்தினராக ஆறு ஆண்டுகளுக்கு உழைத்தார். அவருடைய ஆலோசனையும், அவரது சிந்தனையும் துணை வேந்தராக இருந்த எனக்கு மிகுந்த சிறந்த உதவியாக இருந்தது. ஒருநாள் நான் அடிகளார் அவரது தமிழ்க் கல்லூரிக்குச் சென்று அங்கே கோவை மாணவர்கள் வள்ளுவரைக் குறித்தும், திருக்குறளைப் பற்றியும் பேசி விவாதிப்பதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். அப்போது தமிழர்களாகிய நாம் தாய் மொழியில் உரையாற்றும்போது எவ்வாறு நூல்களை நாம் உண்மையாக தனிமையாக அறிய முடியும் என்பதைக் கண்டு கொண்டேன். அதற்கு, சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

ம. பொ. சிவஞானம்
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை–600 009
10–2–1986

நாடு பல துறைகளிலும் முன்னேறி வருகிறதென்றாலும், அதே நேரத்தில் நாசகாரமான சக்திகள் நாட்டைக் கெடுத்து வருவதையும் பார்த்து வேதனைப்பட வேண்டியிருக்கிறது என் போன்ற வயதானவர்கள் நூல்களைப் படித்தோ, பிறரிடம் கேட்டோ அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லாமல், கிட்டத்தட்ட மூன்று தலை முறைக் காலம் நாட்டில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை அனுபவம் மூலமாகவே அறிந்து கொள்ள முடிந்திருக்கிறது, அந்த அனுபவம் மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இல்லை.

திரைப்படக் கலையானது அளவுக்கு மீறி மக்கள் மீது ஆதிக்கம் பெற்றுவிட்டது. அந்த ஆதிக்கம் வளர்பிறையாகவும் இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். மக்கள் மத்தியிலே கவர்ச்சிகரமான சக்திகளுக்கு அதிகச் செல்வாக்கு ஏற்பட்டு விடுகிறது.

இந்த அவலச் சூழ்நிலையிலும் ஒழுக்க நெறியில் நின்று வாழும் சான்றோர் பலர் நம்மிடையே இருந்து வருகின்றனர் என்பது ஆறுதலைத் தருவதாக இருக்கிறது. அந்தச் சான்றோர்களிலே ஒருவரான தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரை நான் மதிக்கிறேன். அவரோடு பல சந்தர்ப்பங்களிலே நெருங்கிப்பழகும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிலே மூன்றாண்டுக்காலம் நான் அவருடன் சேர்ந்து அங்கம் பெற்றிருந்தேன். அந்தக் காலத்திலே திங்களுக்கு ஒரு முறை சந்தித்துப் பழகினோம்.

அடிகளாரின் தவச் சாலையாகிய பேரூர் சாந்தலிங்க சுவாமிகளின் மடத்திற்கும் பலமுறை வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் அடிகளாரின் அன்பான உபசாரத்தைப் பெற்று மகிழ்ந்திருக்கிறேன். ஆதீனத்தால் நடத்தப்படும் கல்லூரியிலும் பல முறை பேசியிருக்கிறேன். மிகச் சிறப்பாக நடந்த ஆண்டு விழாக்களிலும் பங்கு பெற்றிருக்கிறேன். ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்களுடன் சேர்ந்துவந்து விழா ஒன்றில் கலந்து கொண்டது எனது நினைவில் இன்னும் பசுமையாக இருக்கிறது.

அடிகளாரின் சமூகத் தொண்டும், சமயத் தொண்டும் ஆடம்பரத்தை விரும்பாத குறிப்பாக விளம்பரத்தை விரும்பாத பண்புடையவையாகும்.

சமய வரம்பைக் கடந்து சென்று ஆரவாரமாக விளம்பரம் பெறுவதுதான் சமுதாயத் தொண்டு என்று சமயத் தலைவர்களாலேயும் சிலர் நினைக்கின்ற காலம்

இது. அவர்களைப் பின்பற்ற முயலாமல் சமய வரம்புக்குள்ளே நின்று தவத்திரு அடிகளார் சமுதாயத் தொண்டிலும் ஈடுபடுவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்;

அடிகளாருக்கு அறுபது ஆண்டு நிறைவு பெறுவதால் மணிவிழா நடப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மணி விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு கட்டுரை வழங்குவதை எனக்குக் கிடைத்த நல்வாய்ப்பாகக் கருதுகிறேன்.

மணிவிழா சிறப்புடன் நடைபெற இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் துவராடையை அணிந்த துறவி. பெருமைமிக்க வரலாற்றைப்படைத்த மடத்தின் தலைவராகவும் இருக்கிறார். அவரை வணங்குவதன்றி, வாழ்த்துவது இல்லறத்தானாகிய எனக்குப் பொருந்தாது. ஆயினும் ''நமச்சிவாய வாழ்க'' என்று சொல்லி இறைவனுக்கே வாழ்த்துக் கூறும் சைவசமயத்தை நாங்கள் சார்ந்திருத்தலால், அடிகளாருக்கு நான் வாழ்த்துக் கூறுவதில் தவறு இருக்க முடியாது.

ஒரு நூறு வயதுக்கு மேலும் வாழ இறையருளைப் பிரார்த்தித்து அவரை வாழ்த்துகின்றேன்.

டாக்டர் அர. சுப்பையன்
துணைவேந்தர்,
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641046

25—01—1986

பாராட்டுரை

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களைப் பல்லாண்டுகளாக நான் நன்கறிவேன். கோவையில் ஒரு தமிழ்க் கல்லூரியை நிறுவி அரிய தொண்டாற்றி வரும் அவருடன்; கல்விப் பணி தொடர்பாகப் பலமுறை நெருங்கிப் பழகியிருக்கிறேன். குறிப்பாகச் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவில் அவரும் நானும் இணைந்து பணியாற்றிருக் கிறோம். கல்வியின்பால் அவர் மிக்க ஈடுபாடு கொண்டுள்ளவர்.

தனிப்பட்ட முறையில் என்னிடம் மிக்க அன்புடன் பழகக் கூடியவர், எல்லோரிடத் திலும் அன்புடனும் பரிவுடனும் உரையாடக் கூடியவர். மிக எளிமையானவர். சைவ சாத் திரங்களில் அறிஞர். பக்தி நெறி வழுவாதவர்.

சமயப் பணி, கல்விப் பணி, தமிழ்ப்பணி, சமுதாயப்பணி ஆகிய அனைத்திலும் அவர் ஆற்றிய தொண்டு மிகச் சிறந்தது. அத்தகையவர் மணிவிழா காணும் இத்தருணத்தில், பல்லாண்டு வாழ்ந்து மேலும் மேலும் சிறப்பான பணிகள் செய்திட எல்லாம் வல்லான் திருவருள் துணைநிற்குமாக, என்று வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்–613 001

16–01–1986

பாராட்டுரை

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தமிழ் ஆக்கப் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் தவமுனிவர். பொலிவான முகம், அமர்ந்த இனிய நோக்கு; அமைதியான பேச்சு: எனவே அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

அன்பன்
வ. அய். சுப்பிரமணியம்

பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்

முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளின் மணிவிழா மலர் வெளியிட இருப்பது அறிந்து மிக மகிழ்ச்சி. அவர்கள் மயிலம் கல்லூரியில் புலவருக்காகப் படிக்கும் நாளிலிருந்து இன்றுவரை பழகி வருகிறேன். அவருடைய உணவு நெறியும் விருந்தோம்பும் நெறியும் எனக்கு மிகப் பிடித்தவை. இக்காலப் பெரும்பாலான துறவிகளைப் போலக் கண்ட உணவுகளை வெளியில் எங்கும் உண்பதில்லை. புளி, காரம் குறிப்பாக மிளகாய் நீக்கியும் காப்பி, டீ முதலிய பருகு பொருள்களை விலக்கியும் சாத்வீக உணவை அளவுடன் உண்டு "உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து", "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற நெறிநின்று தன் உடலைப் பருக்காமலும் நெறிக்கேற்பப் பொருத்தமாகவும் தக்காங்கு வைத்திருக்கிறார். இந்த உணவு நெறியை விடாப்பிடியாகக் கையாள்வதுயாரையும் கவரும். நானும் அவரும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி செய்து வரும்போது இவ்விடாப் பிடியைக் கண்டேன். சுவைமிக்க ஈர்க்கும் பண்டங்களையும் அவர் விலக்கி நின்றமை எனக்கும் துணையாகவும் தெம்பாகவும் அமைந்தது. அதுபோலவே, தமிழுணர்ச்சியிலும் என்னுடன் இணைந்து செயல்பட்டமை மறக்க முடியாத ஒன்றாம். சென்னைப் பல்கலைக்கழகம் தமிழகம் முழுவதும் ஆட்சி செலுத்தி வந்தபோது தாய் மொழித் தமிழை இளங்கலைப் பட்ட வகுப்பினர்க்கு இரண்டு ஆண்டுகட்கு வாரத்திற்கு ஆறு மணி பாடவேளை என்றிருந்ததை நீக்கி ஒரு ஆண்டுக்கு மட்டும் அதுவும் வாரத்திற்கு இரண்டு மணியே பாடவேளை எனக் குறைக்கத் திட்டமிட்டுக் கொள்கையாகக் கொண்டுவந்த நேரத்தில் கல்விக் குழுவிலும் ஆட்சிக் குழுவிலும் நான் எதிர்த்து நின்று போராடியபோது என்னைப் போன்ற ஒத்த உணர்வுடன் இணையாக, துணையாக நின்று அவர் பேசிய நிகழ்ச்சி நினைவிலிருந்து நீங்காத விழுப்புண் போல இன்றும் உள்ளது. எனவே அவருடைய உணவு நெறியும் தமிழுணர்வும் என் நினைவில் பதிந்துள்ளன.

தி. சு. அவிநாசிலிங்கம்
நிறுவனர்—இயக்குநர்

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷின் வித்யாலயம்
கோயமுத்தூர்–641020.

14—01—1986

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் சைவத்திற்கும் தமிழுக்கும் செய்து வரும் தொண்டு பெரிது. அவர் தொண்டுகள் சிறக்க அவர் இன்னும் நெடுநாள் சௌக்கியமாய் வாழ்ந்து பணிபுரிய ஆண்டவன் அருள் செய்வானாக.

அன்புள்ள,

தி. சு. அவிநாசிலிங்கம்

அன்னூர் கோவிந்தசாமி நாயுடு

வாழ்த்துரை

கொங்கு நாட்டின் சிறப்புக்குக் காரணமாக விளங்குபவர்கள் நமது பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களும், சிரவண புரம் சுந்தரசுவாமிகள் அவர்களும் ஆவார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. எனது அருள்நெறிப் பணிக்கு உதவியாக இருப்பவர்கள் இவ் விருவருமே எனக்கு இயல்பாக இருக்கும் தர்மசிந்தனையை வளர்த்து அன்ன தானம், திருக்கோயில் திருப்பணிகள் முதலிய பல அறச் செயல்களில் என்னை ஈடுபடுத்தி வருகின்றார்கள்.

இவ்விருவருள் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் இப்பொழுது அறுபதாண்டு நிறைவு மணிவிழாக் கொள்கிறார்கள். இவர் களோடு எனக்கு இருக்கும் தொடர்பை நான் மிகப் பெரிதாக, மதிக்கின் றேன். கொல்லாமை புலால் மறுத்தலாகிய சிவநெறி தழைக்க வேண்டும் என்பது எனது கொள்கை. இதற்கு ஆதரவாக இவர்கள் பல்லாண்டுகள் நமது தமிழுக்கும், சமயத்துக்கும் அரும்பெரும் பணிகள் செய்து சிறந்து வாழ வேண்டும் என்றும் பவளவிழா முதலிய பல விழாக்களும் கண்டு பெருமை பெற வேண்டும் என்றும் எனது வழிபாடு கடவுளாகிய பழநி தண்டபாணிக் கடவுளின் திருவருளை வேண்டுகின்றேன்.

அன்புடன்,

கே. கோவிந்தசாமி நாயுடு

C. பொன்னையன்
சட்டத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
புனித சார்சு கோட்டை
சென்னை

போற்றுதற்குரிய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு மிகுந்த வணக்கங்கள்.

கொங்கு நாட்டின் திருத்தலங்களில் சிறந்ததும், சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களுக்கு இறைவனும், இறைவியும் (பட்டீசுவரரும் பச்சை நாயகியும்) வயலில் நாற்று நடுவதாகக் காட்சி நல்கியதுமான வரலாற்றுப் பெருமைமிக்க திருப்பேரூரிலே அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருக்கோவிலுக்கு திருக்குட நன்னீராட்டு விழாவும், தங்களின் மணிவிழாவும் நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியுற்றேன்.

அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் முதல்வராக இருந்து நாடெங்கும் அருள்நெறி பரப்பி வரும் தாங்கள் பெருந்திரளாக பக்தர்களை ஒருங்கிணைத்து, சமயத் திருப்பணிக்கு மக்கள் சக்தியைத் திரட்டி, அரிய சாதனைகள் புரிந்திருக்கும் தாங்கள் மணிவிழா காணும் இவ்வாண்டில் அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் குருபூஜை விழாவினையொட்டி, திருக்கோவிலுக்கு திருக்குட நன்னீராட்டு விழாவினையும் மற்றும் மெய்ப்பொருள் ஆய்வுக் கூடம் ஆகியவற்றின் திறப்பு விழாக்களும் செய்ய இருப்பது மிகவும் போற்றுதற்குரியது. மகிழ்வூட்டுவது, இத்திருப்பணிக்குப் பொருளுதவி புரிந்தவர்களையும் திருப்பணித் தொண்டாற்றிய சமயத் தொண்டர்களையும் மனமுவந்து பாராட்டுகிறேன்.

மணிவிழாக் காணும் தாங்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்திருந்து உலகம் உய்யும் பொருட்டு நாடெங்கும் அருள்நெறி பரப்பி வரும் தங்களின் சமயப்பணி சிறந்து வளர எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதம் பணிந்து நிற்கிறேன்.

வாழ்க சாந்தலிங்க இராமசாமி சுவாமிகள்
வளர்க அவரது சமயப்பணி.

இப்படிக்கு

(ஒ-ம்) **C. பொன்னையன்**

அருட்செல்வர்
டாக்டர். ந. மகாலிங்கம் அவர்கள்

வாழ்வாங்கு வாழ்க!

இந்திய நாட்டில் பல்வேறு சமயங்கள் தோன்றியும், வளர்ந்தும் பல்வேறு நிலைகளை அடைந்துள்ளன. அவற்றில் சைவ சமயத்தைப் பொருத்தவரையில் வீழ்ச்சியும், வளர்ச்சியும் பல்வேறு கால கட்டங்களில் பலவிதமாக அமைந்து வந்துள்ளது. தமிழகத்தில் மட்டும்தான் சைவசமயம் மக்கள் வாழ்க்கையில் முழுமையாக இடம் பெற்றுள்ளது. ஆனால் சைவசமயத்தின் உண்மைக் கொள்கையினையோ, அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்ளும் நெறிமுறைகளையோ மக்கள் நிறைவாகத் தெரிந்துள்ளனர் எனக் கூற முடியாது. அத்தகைய சம்பிரதாயத்தினை நமக்கு அடிகள் பெருமக்கள் கற்பித்துத் தரவேண்டும்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தலங்கள்தோறும் சென்று இறைவனைப் பாடியதோடு, மக்களிடையேயும் பக்தியுணர்வினையும், பண்பாட்டினையும் வளர்த்தனர். ஆனால் இன்றைய நிலையில் நமது சமயத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்து காணப்படுகின்றன. இதனைக் காரணங்காட்டிப் புறச்சமயத்தினர் நம் சமய மக்களைத் தம்பக்கம் இழுக்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.

இன்று மணிவிழாக் காணும் தவத்திரு. பேரூர் சுவாமிகள் பல மாநிலங்களுக்கும் யாத்திரையாகச் சென்று உயர்ந்த சிந்தனைகளைப் பரப்பி வருகின்றார்கள். இவர்களைப்போல மற்றையோரும் கீழே இறங்கி வரவேண்டும்.

நமது நாட்டில் திருக்கோயில்களில் வழிபாடும், விழாவும் சிறப்பாக இடையீடின்றி நடந்துவர நமது முன்னோர்கள் பல சொத்துக்களை எழுதி வைத்தார்கள். இன்று அவை அரசின் பொறுப்பில் இருப்பதால் அதனைக் குத்தகைக்காகப் பார்ப்பவர்கள் சொந்தம் கொண்டாடுகின்றனர். இந்த நிலை

மாற மக்கள் சக்தியெல்லாம் ஒன்று திரண்டு புதிய எழுச்சியாக மாறி நமது கோயில்கள் அரசின் பொறுப்பில் இல்லாமல், மக்கள் மன்றத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இந்தக் கருத்தினை மணிவிழா நாயகர் மதுரையில் நடைபெற்ற துறவிகள் மாநாட்டில் எடுத்துக்கூறி தீர்மானம் நிறைவேற்றினார்கள். இத்தகைய பெருஞ் சிந்தனையை அனைவரும் வரவேற்றனர். வரவேற்போடு நின்றுவிடாது அனைத்துத் தரப்பு ஆதரவும் இருந்தால் இத்திட்டமானது பொறுப்பாக அமைய வாய்ப்பு உள்ளது. திருக்கோயில் நிர்வாகத்திற்கு பக்த பெருமக்கள் நல்லவர்களை, சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்களை நிர்வாகத்திற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சர்ச், மசூதி போன்றவற்றை அரசு ஏற்பதில்லை. ஆனால் நமது இந்துக் கோயில்களுக்குத்தான் இந்த நிலைமை. இது மாறி நமது கோயில்களை நிர்வகிக்கும் தன்மையை நாமே செய்ய வேண்டிய நிலை ஏற்பட வேண்டும். இந்த நிலை அமைய அரசும் விட்டுக் கொடுக்க வேண்டும்.

தவத்திரு. பேரூர் சுவாமிகள் சிதம்பரத்தில் நடந்த துறவிகள் மாநாட்டில் காசி, அயோத்தி போன்ற திருக்கோயில்கள் இந்துக்களின் மத்தியில் வர வேண்டும் எனத் தீர்மானம் போட்டு எழுச்சியை ஏற்படுத்தினார்கள். அதனை மீட்பதற்குரிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் சிறந்த தவச்சீலராக விளங்கும் நமது சுவாமிகளின் பணி தென்னாட்டில் மட்டுமின்றி கடல் கடந்த நாடுகளிலும் பரவி வருகிறது. அவர்களின் பணிக்கு இந்த நாட்டு மக்கள் என்றும் உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையினைக் கூறி, அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து சமயநெறியில் மக்களை வழிநடத்தி வாழ்வாங்கு வாழ இறையருளைப் பிராத்தித்துப் போற்றி மகிழ்கின்றேன்.

பேரூர் ஆதீனம்-தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்

மணிவிழா - வாழ்த்துரை

கொங்குநாடு பல வழிகளில் புகழ்பெற்று விளங்குவது. கொங்கு நாட்டில் அவிநாசி- சுந்தரர் வரலாற்றில் தனிச்சிறப்புடையது. அவிநாசி வட்டத்தைச் சேர்ந்த முதலிபாளையத்தில் உழவுத் தொழில் மேற்கொண்ட கொங்கு வேளாளர் மரபில் இன்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நம் அடிகளார், சிரவை ஆதீன முதல்வர் தவத்திரு இராமனந்த சுவாமிகளின் அன்புக்குரியவராய் விளங்கினார். மயிலையில் தமிழ் கற்று, பேரூரில் தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்து, தமிழ் வளர்த்து அரும்பணி ஆற்றி வருகின்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராக இருமுறை இருந்து தமிழுக்கும், கல்விக்கும் சிறந்த தொண்டாற்றி உள்ளார். அப்பதவிக் காலத்தில் கோவை, பெரியார் மாவட்டத்திலுள்ள பல கல்லூரி களின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை செய்துள்ளார். காட்சிக்கு எளியவர், சொல்லில் இனியர், உள்ளத்தில் கருணையும், தமிழும் எப்பொழுதும் மணந்து கொண்டே இருக்கும். அவர் இன்னமும் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ் மொழிக்கும், மக்களுக்கும், நாட்டுக்கும் சேவை செய்து மேன் மேலும் ஆக்கமும், புகழும் பெற இறைவனை வேண்டுகிறேன்.

இங்ஙனம்

பி. என். சிலம்பண்ணன்

பதிவாளர்

பாரதியார் பல்கலைக் கழகம்

கோயம்புத்தூர் - 641046

டாக்டர் தா. வே. வீராசாமி
பேராசிரியர், தலைவர்
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 001

வாழ்த்துரை

மேலைச் சிதம்பரம் என்று மேலோர்
நூலில் காணும் பேரூர்ப் பதியில்
ஆடல் வல்லான் அழகு ஒளியில்
நாளும் தமிழும் சைவமும் பரப்பும்
அருண்மிகு சாந்த லிங்கர் மடத்தில்
தவத்திரு சாந்த லிங்க இராம
சாமி அடிகளார் மணிவிழாப் பொலியத்
தமிழக அறிஞர் சமயத் தலைவர்
அன்பர் அடியார் அருள்மிகு செல்வர்
யாவரும் கூடி நல்விழா எடுத்தனர்
மணிவிழா நாயகர் மாண்புடன் வாழ்க!
சாந்த லிங்கர் நன்னெறி ஓங்குக!
பேரூர்ப் புகழ்போல் என்றும் பொலிக!

அன்புள்ள,

தா. வே. வீராசாமி

டாக்டர் தா. வே. வீராசாமி, எம்.ஏ. பிஎச்.டி.
தொகுப்பியல் துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை

அடிகளாரின் அன்புள்ளம்....

தமிழகத்தில் மயிலம், தருமபுரம், திருப்பனந்தாள், திருவையாறு ஆகிய இடங்களில் மட்டும் தமிழ்ப் பயிர் வளர்ந்த காலத்தில். கொங்கு நாடு தமிழ் மழையை அவாவி நின்றது. தென் தமிழ்க் கங்கையாம் தமிழைக் கொங்கு நாட்டில் கொணர்ந்த புதிய பகீரதனாகத் தவத்திரு இராமசாமி அடிகளார் அன்று எங்கள் கண்முன் விளங்கினார். இன்று அது பரந்து பெருகியோடும் தமிழ்க் கல்லூரியாய் விளங்குவதில் அவர்தம் தமிழன்பு எம்போன்றவர் உள்ளத்தில் தமிழுணர்வைத் தழைக்கச் செய்தது.

திருமடத்திற்குச் சென்ற போதெல்லாம் அகமும் முகமும் மலர அருள் தந்து அரவணைத்து, அமுதூட்டி விடுக்கும் துறவற விருந்தோம்பும் அன்பை எண்ணும்போதெல்லாம் இதயம் களி கூரும்.

உடலை வளர்க்க வழிகாட்டிப் பின் உயிர் வளர்க்கும் வகையில், நாம் விடைபெறும் போது, சாந்தலிங்கர் நூல்கள் போன்ற அருட் கொடை நல்கி அருள் செய்யும்போது அவருடைய பல்லுயிரோம்பும் அன்பு புலப்படும்.

அடிகளார் காட்டும் அன்பால் தமிழ் வளர்கிறது. எம்போன்ற மக்களின் உடலும், உயிரும் வளரத் தமிழின் குமிழ் சிரிப்புப் பொங்க இடையறாது அன்புப் பணி புரிகிறார். அவர் அன்புப் பணி வளர்க!

ஆ. சிவலிங்கனார்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம்
டி.டி.டி.ஐ. (அஞ்)
சென்னை-600 113.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்

மணிவிழா வாழ்த்து

இளமையிற்கண்ட இனிய குணங்கள்

தேந்தமிழ் மயிலத் தமர்ந்த வாசா
னாஞ்சிவ ஞான பாலய னாகுந்
தேசிகன் பாலுப தேசம் பெறுத
லாசான் சாந்தலிங்கன் அருள்மலி
மரபு விளங்க மாண்புறு நந்தங்
குரவன் ஆதல் அவைக்குறு குணங்க
ளிளமையி லமைந்தே யினியமா ணவரா
வளர் தமிழ்க் கல்லூரியிற் பயில் இராம
சாமி யாய் இருந்த காலத் தாசா
னாயிருந் தேன் சிவலிங்கன் நறுந்தமி
ழுமுதுடன் அன்பும் அருளும் உயரிய
பண்பும் அடக்கமும் பலரும் உடன்படி
நண்புமா ணவரும் நயமுடன் ஏற்க
நடந்தும் நடத்தியும் நலஞ்செய்தனகள்
தொடர்ந்து கண்டேன் தொழுமணி விழாவா
லிடந்தோறும் சிறக்க வாழ்த்துவன் வாழி.

24-01-1986

டாக்டர் சு. சிவகாமசுந்தரி எம்.ஏ., பிஎச்.டி., டிப். எட்.
தமிழ்ப் பேராசிரியர்—துறைத் தலைவர்

திரு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி
ஆட்சிக்குழு உறுப்பினர்—பாரதியார் பல்கலைக்கழகம். கோவை

அடிகள் நடத்திய பாடம் . . .

தவத்திரு அடிகளார் அவர்களைக் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகவே நான் நன்கு அறிவேன். எனது திருமணத்தை உறுதிசெய்ய எனது தந்தையார் தஞ்சை திரு. பழனிவேல் அவர்கள் கோவை வந்தபொழுது செய்தி கேட்டு மகிழ்ந்து அன்று மதியம் விருந்து தந்து பாராட்டி வாழ்த்தியவர் அடிகளார். இந்து சமய மாநாட்டுக்காக இலங்கை, கோலாலம்பூர், சிங்கப்பூர் சென்ற பொழுதெல்லாம் அவர்களது தாய்ப்பாசத்தையும், பாராட்டி வாழ்த்தும் சிறப்பையும் உணர்ந்து நெகிழ்ந்ததுண்டு. எத்தனை விழாக்களில் தமிழால் சந்தித்திருக்கின்றோம் என்றாலும் என் மனதில் நிறைந்து உணர்வூட்டும் அந்த நிகழ்ச்சி...

பாரதியார் பல்கலைக் கழகத்தின் முதல் ஆளவை மன்றக் கூட்டம். மன்றத்திலே ஆளவை மன்ற உறுப்பினர்கள் ஆவல் நிறைந்த விழிகளோடு அமர்ந்திருக்கின்றனர். மன்றக் கூட்ட நடவடிக்கைகள் ஆங்கிலத்திலே துவங்குகிறது. தவத்திரு அடிகளார் அவர்களை வாழ்த்திப் பேசுமாறு துணைவேந்தர் கேட்டுக் கொள்கின்றார். ஒலி வாங்கியின் முன்நின்ற அடிகளார் "தமிழ்க் கவிஞன் பாரதியின் பெயரால் நடைபெறுகின்ற பல்கலைக் கழகத்திலுமா கூட்ட நடவடிக்கை பிற மொழியில் நடக்கிறது?" எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" என்று கூறுகின்ற ஆட்சியிலும் தமிழுக்குப் பாரதியார் பல்கலைக் கழகத்தில் இரண்டாவது இடமா? என முப்பது மணித்துளிகளுக்கு மேல் நயமாக, மென்மையாக இடித்துரைக்கும் பாங்கில் சொற்களை அருவி போல் கொட்டிப் பேசினார். இடையில் ஒலிவாங்கி திட்டமிட்டு நிறுத்தப்பட்டது. அதனைக் கண்டித்து "சீறுவோர்ச்சீறு" என்ற மகாகவிஞன் பாரதியின் ஆரம்ப ஆத்திச் சூடியை அடிகளார் அவர்கள் அன்று பாரதியார் பெயராலேயே அமைந்த பல்கலைக்கழக ஆளவை மன்றத்தில் பாடமாக நடத்திக் காட்டிவிட்டு அமர்ந்தார்கள், பாரதியார் பல்கலைக் கழகக் கூட்ட நடவடிக்கைகள் தமிழில் நடத்தப்பெறுகின்றபொழுதுதான் இனி கூட்டங்கட்கு வருவேன் எனச் சொல்லிலும், எழுத்திலுமாக சூளுரைத்ததை இன்றுவரை நிறைவேற்றி விட்டார்கள். அந்தத் தமிழ் உணர்வுக்குத் தலைவணங்குகின்றேன். கண்ணில் ஒற்றிக் கொண்டு அழுத்தமாக அந்தப் பாதையைப் பற்றிக்கொண்டு இன்று எங்கும் நடைபோடுகின்றேன்."

மு. இராமநாதன் *M.L.A.*
கோவை மேற்கு
சட்டமன்றத் தொகுதி

05—12—1985

தமிழைத் துறக்காத தனிப்பெருந்துறவி

தவத்திரு அடிகளார் என் நெஞ்சம் நிறைந்தவர்கள். கொங்கு நாட்டுக்குப் புகழ் சேர்த்தவர்கள். தமிழுக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட குருமகா சன்னி தானம். தமிழன் பிறரைத் தாழ்த்தான்—பிறருக்கு என்றும் தலைதாழான் என்ற சொல்லுக்கு இலக்கணமாக விளங்கி வருபவர்கள்.

"குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
அமைபவன் நூலுரை ஆசிரி யனன்னே"

என்ற நன்னூலின் இலக்கணமாக நம்மிடையே வாழ்ந்துவரும் பெருந்தகை நமது அடிகளார் ஆவார்கள்.

தன்னேர் இலாத தமிழைத் துறக்காத தனிப்பெரும் தமிழ்த் துறவியாக கொங்கு நாட்டில் அறம் வளர்த்து, தூய துறவு நிலை காத்து, கருணை வடிவாய் அருள் சுரக்கும் குருமகா சன்னிதானம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரைப் போற்றுகின்றேன்.

மணிவிழா காணும் எங்கள் தமிழ்த் துறவியின் தாள் பணிந்து, அடிகளார் தமிழ்போல் இளமை பெற்றுப் பல்லாண்டு நீடுழி வாழ்கவென வணங்குகின்றேன்.

முருகன் துணை

தமிழ் வளர்த்த துறவிகள்

பேராசிரியர் சி. துரைசாமி
மயிலம் தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர்

தமிழ் வளர்த்த துறவிகளில் துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒருவர். எல்லாப் பெரியவர்களும் பெரும்பாலும் இறைவனை நோக்கி வேண்டிக் கொள்வது பிறவி வேண்டாம் என்பதே. திருநாவுக்கரசர் கூத்தப் பெருமான் குஞ்சிதபாதம் காணப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே என்பர். ஆனால் சிவப்பிரகாசர் 'விரை விடை இருவரும் நினைப் பிறவாமை வேண்டுனர் வேண்டுக மதுரம் பெருகுறு தமிழ்ச் சொல் மலர் நினக்கு அணியும் பிறவியே வேண்டுவன்' என்று வேண்டுகிறார் அன்றியும், குன்றுதோறாடும் குமரனே எனவும் கொடுஞ்சிலை மதனவேள் எனவும் புன்றொழில் மனிதர் புகழ்ந்து பாழ்க்கு இறைக்கும் புலமை தீர்த்து என்பதால் இன் தமிழால் இறைவனைப் பாடவேண்டும் என்கிறார். தமிழ் வளர்ச்சிக்காகவே பிறவி வேண்டும் என்பர் சிவப்பிரகாசர்.

இன்னோர் அன்ன பெருமை வாய்ந்த சிவப்பிரகாச அடிகளாரின் குருமூர்த்தியாக இருந்தவர் மயிலம் பொம்மபுரம் ஆதீன இரண்டாம்பட்ட சிவஞான பாலைய சுவாமிகள். அவர்கள் பின் வந்த 18ஆம் பட்டம் சுவாமிகள் அருந்தமிழ் நாடு ஒரு கோடி செய்த தவப்பயன் என்ற சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கும், தமிழ்தேர் மயில மால்வரை என்ற இலக்கண விளக்க ஆசிரியர் வாக்கும் வாய்மையாம்படி பட்டம் ஏற்றார்கள். தமிழ் வளர்க்கும் தண்முகிலாய்த் தமிழ்க் கல்லூரி நிறுவிப் பல பக்கங்களிலிருந்தும் மாணவர் கூட்டம் பெருகிப் பயின்று தமிழ்ப் புலமைபெற்றுத் தமிழை வளர்த்து வருகின்றார்கள்.

கொங்கு நாட்டுத் திலகமாகிய மணிவிழா மலர் ஏற்கும் நுண்மாண் நுழை புலம்மிக்க அருண்மிகு இராமசாமி அடிகளும் அங்குப் பயின்று புலவர் பட்டம் பெற்றார்கள். அங்குப் பயின்ற போதே தமிழ் வளர்க்க எண்ணிக் கொங்கு நாட்டில் தமிழ் பரப்ப முயன்றார்கள். அதன் பயனாய்க் கொங்கு நாட்டில் எங்கும் தமிழ் மணம் கமழக் கல்லூரிகண்டார்கள். அதன் பயனாய் கொங்குநாடு முழுவதும் தமிழால் சிறப்புற்று ஓங்குகிறது.

சாலைகளும் சோலைகளும் தண்டமிழின் மணம் கமழ
வேலையெனச் சிறுவர் பயில மேல் மாடம் அமைத்தனையால்
வாழ்க தமிழ்.

எம். முத்துசாமி பிள்ளை ஐ.ஏ.எஸ்.
ஓய்வு பெற்ற மாவட்ட ஆட்சியாளர்
சென்னை

பண்போடு கூடிய பரிவு

கோவையில் ஏறத்தாழ 15 ஆண்டுகள் யான் பணியாற்றி வந்தகாலத்தில், பேரூர் அருள்மிகு சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். பூர்வாசிரமத்து வீரசுப்பைய சுவாமிகள், சென்னையிலிருந்து இத்திருமடத்திற்கு வந்த காலங்களில் சுவாமிகளின் பூர்வாசிரமத்து உறவினர் என்ற முறையில், அவர்களிடம் ஆசிபெற யான் இத்திருமடத்திற்கு வந்திருக்கிறேன். அக்காலத்தில் இத்திருமடத்தின் தலைவராய் விளங்கிய தவத்திரு மாணிக்க சுவாமிகள் ஏற்பாடு செய்துவந்த சொற்பொழிவுகளிலும் அன்னம்பாலிப்புகளிலும் யான் கலந்து கொண்டேன். பின்னர், இத்திருமடத்தின் தலைமையில் தற்போது திகழும் சைவசீலத் தவத்திரு சாந்தலிங்கசுவாமி அடிகளாரிடம் நெருங்கிஅணுகும் வாய்ப்பைப் பெற்றதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் சமுதாயத்திற்கும் தவத்திரு அடிகளார் ஆற்றிவரும் அரும்பணிகளை யான் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக அறிந்து வருகிறேன்.

தவத்திரு அடிகளார் அவர்களிடம் காணத்தக்க தனிச்சிறப்பு தம்மை நாடி வருபவர்களிடம் அவர்கள் காட்டும் பண்போடு கூடிய பரிவும், அன்போடு கூடிய ஆதரவுமாகும். சைவ சித்தாந்தப் பெருமன்றம் என்னும் பெயரில் தற்போது விளங்கும் மன்றம் முன்னர்ச்சைவ சித்தாந்த மகா சமாஜம் என்னும் பெயரில் இயங்கி வந்தது.

அதன் தலைவராகச் சில ஆண்டுகள் யான் பணியாற்றிய காலத்தில், அதன் ஓராண்டு விழாவை நடத்தித் தருமாறு யான் தவத்திரு அடிகளாரிடம் வேண்டினேன். அவ்வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக் கொண்டு அவ்விழாவை, தாம் நடத்திவரும் தமிழ்க் கல்லூரிக் கட்டடத்தில் சிறப்புற அவர்கள் நடத்தியுதவினார்கள். மற்றும் தமிழ்க் கல்லூரியின் ஓராண்டு விழாவில் யான் தலைமை ஏற்குமாறு அவர்கள் அருளினார்கள். மற்றும் அவர்கள் அவ்வப்போது உதவிகள் அளித்து வந்துள்ளார்கள்.

இவ்வாறு தெய்வீகப் பணியும் தமிழ்ப் பணியும் ஆர்வமுடன் நேர்மையாக ஆற்றிவரும் தவத்திரு அடிகளார் அவர்கள் மக்கள் நலத்திற்காகவும் பல வழிகளிலும் உதவி புரிந்து வருகிறார்கள். பொதுவாகத் தமிழ் நாட்டிற்கும் குறிப்பாகக் கொங்கு நாட்டிற்கும் தவத்திரு அடிகளார் அவர்கள் கிடைத்தற்கரிய நற்பேறாக விளங்கி வருகிறார்.

தவத்திரு அடிகளார் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு முழு நிறைவோடும் வாழ்ந்து மேலும் மேலும் அரும் பணிகள் ஆற்ற எல்லாம் வல்ல சிவபெருமான் அருள் பாலிப்பாராக.

சி. வி. நரசிம்மன் ஐ.பி.எஸ்.

முன்னாள் டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் மணிவிழா மாசித் திங்களில் நடைபெறவிருக்கிறது என்பது அறிய மிக்க மகிழ்ச்சி. அடிகளார் 1984 ஆம் ஆண்டு கோவையில் அகில உலக மகளிர் மாநாட்டை ஏற்பாடு செய்து மிகச் சிறப்பாக எல்லா நிகழ்ச்சிகளையும் நடத்தியபோது அவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அன்னாரின் அமைதி கூட்டும், அருள் நோக்கும் அன்புநெறி பரப்பும் பொன்மொழிகளும் நற்பண்புகள் பரிமளிக்கச் செய்யும் ஆக்கச் செயல்களும் என்னை மிகவும் ஈர்த்தன.

அன்னாருடன் இருந்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட வாய்ப்புக்கள் அனேகருக்கு அமைய இறைவன் அருள்வானாக!

'திருமுறையாராய்ச்சிக் கலைஞர்'
'கலைமாமணி'
பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்)
142. கனகசபைநகர்,
சிதம்பரம் 608 001

பேரூராதீனம் 'கயிலைமுனிவர்'
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

மணிவிழா வாழ்த்து

திங்களணி சடைப்பெருமான் திருக்கோயில்
கொண்டருளுஞ் சீர்த்தி வாய்ந்த
கொங்குவளர் பேரூரின் சாந்தலிங்கர் மரபில்வரு
குரிசில் அன்பாற்
சங்கமலி தமிழ்வளர் கல்லூரி நிறுவுபெருந்
தகையெஞ் ஞான்றும்
தங்குபுகழ்த் தவச்செல்வர் இராமசா மிப்பெயர்கொள்
சான்றோர் வாழ்க!

சிவனடியே சிந்திப்பார் செந்தமிழே பகர்ந்திடுவார்
சேரும் அன்பர்
பவமகல ஞானநெறி பயிற்றியருட் பணிபுரிவார்
பாரோர் வாழத்
தவநெறிதந் தருள்சாந்த இராமசாமி அடிகளார்
என்ன யாண்டும்
எவருமகிழ்ந் தினிதேத்தப் பேரூரா தீனமெழில்
பெற்ற தாலோ

திருநாவுக் கரசடிகள் திருத்தொண்டின் நெறிவாழத்
தேர்தெந் நாளும்
குருவாணை வழிநின்று சிவலிங்க பூசைதனைக்
குறிக்கொண் டாற்றி
கருவாதை மாற்றியரன் திருவருளாற் கயிலாயங்
கண்டு வந்த
திருவாளர் சாந்தலிங்க இராமசாமிப் பெயர்கொள்
சீர்த்தி யாளர்

அண்ணலார் வீற்றிருக்குங் கயிலாயத் திருமலைகண்
டன்பாற் போற்றி
நண்ணியசீர்க் கயிலைமுனி வரர்இராம சாமியெனும்
நல்லோர் நந்தம்
புண்ணியத்தின் பேறனையார் மணிவிழாக் கண்டுமகிழ்
பொலிவு பெற்றோம்
எண்ணுறு நூறாண்டுவிழா இறைவனரு ளாற்பெற்றிங்
கினிது வாழி!

"நல்லாற்றாரான அடிகளார்"

மீ. சு இளமுருகு பொற்செல்வி
நிறுவனர், தமிழ்க் 'கா.சு.' நினைவு இலக்கியக் குழு
குழித்தலை, திருச்சி மாவட்டம் 639 104

பேரூர் !

பெயரால் மட்டுமல்ல. நிலையிலும், புகழிலும் பேரூரேதான்.

காரணம் !

பேரூரில் உள்ள முருகன்! அத்திருக்கோயிலின் கலைச் சிறப்பு. பேரூர் சாந்த லிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி!

அவை மட்டுமல்ல. அடக்கமாகவும், அமைதியுடனும், அரும்பணியாற்றி வரும் மரியாதைக்கு உரிய அருட்டிரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் அறச் செயல்களுமே.

முருகன் தமிழ்த் தெய்வம், அதனால் பேரூரில் தமிழ் அரசோச்சுகிறது—என நினைத்தால் அந்த நினைவு தவறுடையதுதான். தமிழகத்தின் பல நகரங்களில் முருகன் கோயில் பெருமையுடன் இருந்தாலும் அங்கெல்லாம் தமிழுக்குக் கோயில் இல்லை.


பேரூரில் அருட்டிரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வாழ்வதால் தமிழும் தவழ்கிறது.

அருட்டிரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாருடன் பழகும் வாய்ப்பை குழித்தலை தமிழ்க் 'கா. சு.' நினைவு இலக்கிய விழா மூலம் பெற்றேன். வாழ்நாளில் பெறற்கரிய பேறு அது!


எளிமை, அடக்கம், இன்சொல் என்ற திருவள்ளுவரின் அறநெறியின் இலக்கண இலக்கியத் தோற்றமாகவே அவர்களைக் காண முடிந்தது.

விழாவுக்கு வருகை தந்திருந்த அடிகளார் தமது நண்பகல் உணவைத் தாமே தயாரித்துக் கொள்ளும் செயலை மேற்கொள்ளும் பணியைத் தொடங்க இருந்தார்கள், அதைக் கண்டு நான் திடுக்குற்று ''தங்களுக்குத் தேவையானவற்றை நானல்லவா செய்து கொடுப்பது முறை'' எனப் பதட்டத்துடன் சொன்னேன்.

''நான் உணவில் புளி, காரம் எதுவும் சேர்த்துக்கொள்வது வழக்கமில்லை. சாதம் மோர் இவைதாம்'' என்று புன்னகை தவழும் முகத்துடன் கூறினார்கள்.



அருளாளர் வினோபா அவர்களுடன் அடிகளார்



தவச்செல்வரும் அருட்செல்வரும் - தாம் மகிழும் எழிற்காட்சி

சோமலெ

சென்னை

அன்புடையீர்

பேரூர் ஆதீனத்தின் ஞான பீடத்தில் அமர்ந்தும், தமிழ்க்கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்றும் சமய, சமுதாய, தமிழ்மொழிப் பணிகளை இனிது நிறைவேற்றியும் வருகின்ற தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களை நான் 30 ஆண்டுகளாக நன்கு அறிவேன். சிறப்பாகக் கொங்கு நாட்டிலும் பொதுவாகத் தமிழ் நாட்டிலும் சைவம் தழைக்க அவர்கள் அடக்கமாகவும், அமைதியாகவும் அதே நேரத்தில் அருமையாகவும் செம்மையாகவும் செய்துவரும் பணிகள் ஏராளம்; அவர் களுடைய ஆழமான புலமை, இனிய பண்புகள் நல்லவற்றையே நாளும் சிந்திக்கும் பாங்கு ஆகியவற்றை முதல்முதலாகப் பேரறிஞர் கோவை கிழார் திரு. ம. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் வாயிலாக அறிந்தேன். வீர சைவக் கொள்கைகளைப் பரப்பிவரும் இந்த உத்தமருக்குப் பல்லாண்டு கூறும் வாய்ப்பை யான் பெற்ற பேறாகக் கருதுகிறேன்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

இயக்குநர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அன்புடையீர்,

வணக்கம்,

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் மணிவிழா 22-2-1986 அன்று நடைபெற இருப்பதையறிந்து பெரிதும் மகிழ்கின்றேன் தமிழ்த்தொண்டையும் சைவத்தொண்டையும் இரண்டு கண்களாக எண்ணிப் பாதுகாத்துப் போற்றிப் பாராட்ட விரும்புகிறவர்கள் தவத்திரு இராமசாமி அடிகள் அவர்கள். அவரிடம் தமிழ்க்கல்லூரியில் படித்த மாணாக்கர்கள் பல பகுதிகளில் நல்ல உணர்வோடும், தமிழ்ப்பண்போடும் இருப்பதறிந்து உணர்ந்து மகிழ்கின்றேன். தமிழுக்காகவும், சைவத்திற்காகவும் அவர்கள் ஆற்றிவருகின்ற தொண்டினை நாமும் பின்பற்றிச் செயல்படுவோமானால் இந்த இரண்டும் வாழும் என்பதில் எனக்கு ஐயமில்லை!

அவர்களின் மணிவிழாவில் பணிந்து வணங்கி மகிழ்கின்றேன்.

இரா. செங்கோட்டு வேலன்,
நீதிபதி,
உயர்நீதி மன்றம், சென்னை.

22, பொதிகை வளாகம்
கிரீன்வேஸ் ரோடு,
சென்னை-28.
23—1—86

அன்புருவாம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமியடிகள் மணிவிழா எனது பழைய அனுபவங்கள் பலவற்றை நினைவு காட்டுகிறது. 34 ஆண்டுகளுக்கு முன் நான் கோவையில் எனது மாமனார் காலஞ்சென்ற பெருந்தகை வழக்கறிஞர் கணபதி அ. பழனிசாமிக் கவுண்டரவர்களுடன் வழக்கறிஞர் தொழில் தொடங்கிய காலம். ஒரு நாள் காலை வெள்ளை ஆடையுடுத்தி, ருத்திராட்சந்தரித்து சிவப்பொலிவுடன் வந்த இரு இளைஞர்களை "வாங்கோ இராமசாமி, சுந்தரம்' என்று அன்புடன் வரவேற்று இவர்கள் கௌமார மடத்தின் தொண்டர்கள், நமக்கு உறவினர்கள் என்று அறிமுகம் செய்து வைத்தது எனது வாழ்க்கையில் மிக்க பயனுடைய நிகழ்ச்சியாக அமைந்தது.

பின்பு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாகவும், தவத்திரு சுந்தரசுவாமி களாகவும் பரிணமித்த இவர்கள் மூலம் எனக்குத் தமிழறிவையும், சமய உணர்வையும் ஊட்டத் திருவருள் கூட்டுவித்தது. நான் கோவையில் வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் இவ்விரு பெருமக்களுடனும், இவர்கள் பணியாற்றும் நிலையங்கள் ஆற்றும் பணிகள் ஆகியவற்றில் தொடர்பு கொண்டதன் மூலம் எனது வாழ்க்கையை ஒரு அளவுக்கு நிறைவு செய்துகொண்டேன்.

சமய உணர்வையும், தமிழ் மொழியையும் மறந்திருந்த கொங்குச் சமுதாயத்தை அடியோடு மாற்றித் தமிழ், சமய உணர்வு மிக்கவர்களாக மாற்றிய இவ்விருவர்களை "ஞானத்தின் திருவுரு" என்றாலும் மிகையாகாது. இவர்கள் தொண்டு சமய வரலாற்றில் நிலைத்த இடம் பெறும்.

மணிவிழாக் காணும் சாந்தலிங்க இராமசாமியடிகளை "மன்னுக பெருமயாம் வாழுமாறே" என வாழ்த்தி, இவர்களை உருவாக்கிய தவத்திரு இராமாநந்த சுவாமிகளுக்கு அஞ்சலிசெய்து, இப்பெருமகனாரின் சமய, கல்விப் பணிகள் இவர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் மேலும் சிறக்க எனது வழிபடு தெய்வத்தைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

பாவலர் மா. முத்துசாமி பி.ஏ.பி.டி.
துணைத்தலைவர்

மாநிலத் திட்டக்குழு
எழிலகம், சென்னை-600 005.

30—1—1986

பேரன்புடையீர்,

வணக்கம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் மணிவிழா நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி,

விழாவினை ஒட்டி அவரது சிறப்புக்களை அகிலத்திற்கு உணர்த்தும் வகையில் மலர் ஒன்றினை வெளியிடத் தாங்கள் மேற் கொண்டுள்ள முயற்சிக்கு நமது பாராட்டுகள்.

ஆன்றவிந்து அடங்கிய, அன்பு மிக்க சான்றோர் வரிசையில் சிறப்பான இடத்தினைப்பெற்றுப் பேரூர் ஆதீனத்தின் ஞானபீடத்தமர்ந்து, சமய, சமுதாய, ஆன்மீகத் திருப்பணிகளை அல்லும் பகலும் ஆற்றிவரும் அடிகளாரின் சிறப்புக்களை எண்ணி எண்ணி இறும்பூதடைகிறேன். அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினை அதிகம் பெறவில்லை. எனினும், பழகிய ஒரு சில நாட்களில் அவரது உயர் சிறப்புக்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கிட்டியது. அமைதியான தன்மையும், எளிமையான தோற்றமும், அழகான தெளிந்த இனிமையான பேச்சும் ஆழ்ந்த சிந்தனைத் தெளிவும் கொண்டதோர் கருத்துக் கருவூலமாக காட்சியளிக்கின்ற அண்ணலை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற முதுமொழிக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழும் ஏந்தலின் சிறப்புக்களைப் பரப்பும் சிறந்த மலராக இம்மலர் அமைய வேண்டும்—அமையும் என்ற இதய நிறைவோடு எனது வாழ்த்துக்களையும் ஏற்குமாறு வேண்டுகிறேன்.

தங்களன்புசால்

பாவலர் பா. முத்துசாமி

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் தொண்டு

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
பேராசிரியர்-தலைவர், தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ்நாட்டை ஞானபூமி என்று வழங்குவர். காரணம் மேலைநாடுகள் பொருள் வளத்தில் (Materialistic) சிறந்திருந்தாலும் அருள்வளத்தில்—அதாவது ஆன்மீக வளத்தில் (Spiritualistic) நம் நாடு சிறந்து விளங்குகின்றது. 'பூரண ஞானம் பொலிந்த நன்னாடு' என்று பாரதியாரும் இந்த நாட்டைப் புகழ்ந்து பாடியுள்ளார். வரலாற்றின் பழைய காலத்திலிருந்து இந்த மண்ணில் எண்ணற்ற மகான்களும் துறவிகளும் தோன்றிக் கொண்டே வந்திருக்கிறார்கள். பழைய காலத்தில் 'அறிவர்' என்ற சொல்லால் இத்தகைய சான்றோர்களைக் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாட்டில் சைவர்களுக்குள்ளேயே (Saivites) வீர சைவர்கள் என்ற ஒரு பிரிவினர் சிறப்பாக விளங்குகிறார்கள். வீர சைவர்கள் தமிழ் நாட்டிலும் கர்நாடகத்திலும் அதிகமாக நிறைந்துள்ளார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தோன்றிய கவிஞரும் சிறந்த சமயப் புலவருமான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் வீர சைவத்தை மிகச் சிறப்பாக வளர்த்தார். அவர் 'கற்பனைக் களஞ்சியம்' (A treasure house of imagination) என்று போற்றப்பட்டார். அவருடைய காலத்திற்குப் பிறகு வீர சைவர்கள் தமிழையும் வீரசைவ சமயத்தையும் வளர்த்து வருகின்றனர். தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள 'மயிலம் மடம்' வீரசைவ மடமாகும். இதைப் போலவே கோவை மாவட்டத்தில் பேரூரில்அமைந்துள்ள தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம் வீரசைவ மடமாகும். இம்மடத்தின் தலைவராகவும் இம்மடத்தின் ஆதரவில் நடைபெறும் கல்லூரியின் தலைவராகவும் மதிப்பிற்குரிய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வீற்றிருக்கின்றார்கள்.

பல்கலைக்கழகப் பணிகள் : தமிழ்நாட்டில் உயர் கல்வியின் உயர்விடமாய்—உறைவிடமாய் விளங்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆட்சிக்குழு உறுப்பினராக (Member of the Syndicate) அமைந்து அருந்தொண்டாற்றி வந்துள்ளார். 1972-ஆம் ஆண்டு முதல் 1978-ஆம் ஆண்டு முடிய அடிகளார் இந்த ஆட்சிக் குழுவில் உறுப்பினராய் இருந்து நல்ல பணிகள் ஆற்றினார். அதற்கு முன்னால் கல்விக் குழுவிலும் (Academic Council) பேரவையிலும் (Senate) இடம் வகித்துக் கல்விப்பணி ஆற்றியுள்ளார். தமிழைப் பற்றி விவாதங்கள் வரும்போதெல்லாம் அவற்றில் கலந்து கொண்டு தம்முடைய கருத்தை அமைதியாக அடக்கத்தோடு ஆனால் அறிவுக்குப் பொருந்த எடுத்துச் சொல்லி வந்துள்ளார்கள். ஆட்சிக்குழுவின் பல்வேறு குழுக்களில் (Committee) இடம் பெற்றுத் தமக்குத் தரப்படுகின்ற பணிகளைச் சிறப்பாகச் செய்து வந்துள்ளார். எந்தப்

பொருளைப் பற்றியும் தமக்கே உரிய முறையில் அமைதியாகச் சிந்தித்துத் தம்முடைய கருத்துக்களை வழங்கி வருகின்றார். எதிலும் வேகமோ ஆரவாரமோ காட்டுவதில்லை. அவருக்குப் பல்கலைக் கழகத் தொடர்பு பல ஆண்டுகளாக இருந்து வருவதனால் தமிழைப் பொறுத்தவரை அவருடைய கருத்துக்கு எப்போதுமே பல்கலைக் கழகத்தில் தனிமதிப்பு உண்டு. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பாடநூல் குழுவில் உறுப்பினராய் மூன்றாண்டுகள் இருந்து புதிய பாடத் திட்டங்கள் வகுப்பதற்கு அவர் காரணமாக இருந்தார். அப்பொழுது அமைக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டக் குழுவின் தலைவராக இருந்து நல்ல பணிகளை ஆற்றி உள்ளார்.

தமிழ்த் தொடர்பு: தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் இளமை முதலே தமிழில் பெரும்பற்றுக் கொண்டவர். மயிலம் மடத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் தமிழ்க் கல்லூரியில் அந்தக்கால வித்வான் பட்டத்தையும் பெற்றவர். நல்ல தமிழ்ப் புலமை வாய்ந்தவர். இலக்கண, இலக்கியத்தில் (Grammar & Literature) நல்ல புலமை (Scholarship) வாய்ந்த அவர் தமிழுக்குத் தொண்டு செய்வதற்காக என்றே இப்போது மடத்தின் சார்பில் நடைபெற்று வரும் இக் கல்லூரியில் முதல்வராகப் பொறுப்பேற்று நல்ல முறையில் தம் பொறுப்பினை வகித்து வருகின்றார். பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டு தமிழைப் பரப்பி வருகின்றார். ஆண்டுதோறும் பல நல்ல மாணவர்களை உருவாக்கித் தமிழுலகிற்குத் தந்து வருகின்றார். தமிழறிஞர்கள் இடையில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாருக்குத் தனித்ததொரு இடமும் அன்பும் மதிப்பும் உண்டு.

கீழ்த்திசைக் கல்லூரிகள் (O. T. Colleges) பணிகள்: தமிழை ஆழமாகவும் முறைப்படியும் சொல்லி வருவனவாகத் தமிழ்க் கல்லூரிகள் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ளன. இலக்கணத்தை நுட்பமாகச் சொல்லித் தருதல் இக்கல்லூரிகளின் இயல்பு. ஏழை எளியவர்களும் இக்கல்லூரிக் கல்வியைப்பெற்று உயர்நிலை எய்தி உடனடியாகத் தமிழாசிரியர் பணியினை ஏற்றுத் தங்கள் வாழ்க்கையையும் வகுத்துக் கொள்ள முடியும். அந்த முறையில் தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக்கெனக் கீழ்த்திசைக் கல்லூரிகள் (O. T. Colleges) நல்ல பணியினை நீண்ட காலமாகவே ஆற்றி வருகின்றன. கீழ்த்திசைக் கல்லூரியில் வித்வான் பெற்ற அடிகளார் ஒரு கீழ்த்திசைக் கல்லூரியின் முதல்வராக இருந்து பல ஆண்டுகளாக நல்ல பணியினை ஆற்றி வந்துள்ளார். கீழ்த்திசைக் கல்லூரியில் என்னென்ன பாடங்கள் சொல்லித் தரப்பட வேண்டும் (to be taught) என்பதற்கு அவர்கள் திட்டமிட்டுப் பாடத்திட்டம் அமைத்துக் கொடுத்தார்கள். மேலும் வித்துவான் சான்றிதழ் (Diploma Certificate), புலவர் சான்றிதழ் (Pulavar Certificate) ஆவதற்கு அவர்தான் முதன் முதலாக முயற்சியினை மேற்கொண்டார். அந்தச் செயலுக்காகவே தமிழாசிரியர்கள் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். அடுத்து, புலவர் கல்லூரிகளைப் பி. லிட். பட்டப்படிப்புக் கல்லூரிகளாக மாற்றிய பெருமை அவருக்கே உண்டு. இப்போது மூன்று ஆண்டுகள்

தமிழ்க் கல்லூரியில் படித்து முடித்தால் பி.லிட். பட்டம் வாங்கிவிடலாம். இப்படி ஒரு தமிழ்ப் படிப்பைப் பட்டப் படிப்பாக மாற்றிய செயலில் அடிகளாருக்குப் பெரும்பங்கு உண்டு. அண்மையில் பி. லிட். கல்லூரிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவில் அவர் உறுப்பினராய் இருந்து புதிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளார். 'தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் குழு' (Thavathiru Santhalinga Ramaswami Adikal Committee) என்று பெயரிடப்பட்டு அந்தக் குழு பி. லிட். கல்லூரிகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அவற்றில் 6 தீர்மானங்கள் அமைந்துள்ளன.

1. பி.லிட். படிப்பு பி.ஏ. படிப்புக்கு நிகராகக் கருதப்பட வேண்டும்.

2. பி.ஏ.படிப்புக்குத் தரப்படுகின்ற சலுகைகள் அனைத்தும் பி.லிட்.படித்துத் தேறியவர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

3. பி.லிட். படிப்பை வழங்குகின்ற கல்லூரிகளுக்கு மாநில அரசும் மத்திய அரசும் பல்கலைக்கழக மானியக் குழுவும் (U.G.C.) பல்கலைக்கழகமும் போதிய நிதியுதவி வழங்க வேண்டும்.

5. பி.லிட், கல்லூரிகள் 'பயிற்சிக் கட்டணம்' (Tuition fees) சிறப்புக் கட்டணம் (Special fees) வசூலிக்கும் உரிமையைப் பெற வேண்டும்.

5. மாலைநேர பி.லிட். வகுப்புகள் தொடங்குவதற்கு இசைவு அளிக்க வேண்டும். அந்தக் கல்லூரிகள் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம் பயிற்றும் நேரமாகக் (Teaching periods) கொண்டு 225 நாட்கள் வேலை செய்ய வேண்டும்.

6. கலை, அரசியல் பாடங்கள் சொல்லித்தரும்கல்லூரிகளில் அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் வழங்குகிறார்களோ அதே சம்பளத்தைப் பி.லிட். கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

இந்த 6 தீர்மானங்களுள் 3, 4, 6 என்ற எண்கள் கொண்ட தீர்மானங்கள் அரசுடன் பேசி முடிவு செய்யப்பெற வேண்டுமென்றும் மற்றவைகளைப் பற்றிப் பல்கலைக் கழகம் பரிவு காட்டலாம் என்றும் முடிவு செய்யப்பெற்றுள்ளது.

இவ்வாறு தமிழ்க் கல்லூரிகளில் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் விடாப்பிடியாகப் போராடி அடிகளார் நல்ல திட்டங்களை மேற்கொண்டு நிலை நிற்கும் பணிகளைச் செய்து வருகின்றார்,

IV. சமயத் தொண்டு : அடிகளார் வீரசைவ சமயத்தைச் சேர்ந்தவர். வீர சைவர்கள் சிவபூசையில் சிறந்தவர்கள். சமயப் பற்று மிக்கவர்கள். நாள்தோறும் சிவ பூசை செய்துவிட்டே உணவு உண்பார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் சிவ பூசையைக் கைவிடாதவர்கள், அந்த முறையில் அடிகளாரும் நல்ல வீரசைவராக விளங்கி வருகின்றார். வீரசைவர் என்றாலும்கூட அவர் பார்ப்பதற்கும் பழகுவதற்கும் ஓர் ஈரசைவரே: (tender-hearted saint) அடிகளார் அதிரப் பேசமாட்டார். அமைதி யாகப் பேசுவார். ஆரவாரம் செய்யத் தெரியாது, ஆனால் அமைதியாக—ஒழுங்காகத் திட்டவட்டமாக எதையும் செயல்முறைப் படுத்தக்கூடியவர். (make It Practicable) வாய்ப்புகள் நேரும்போதெல்லாம் சமய மாநாடுகளுக்கும் சமயக் கூட்டங்களுக்கும் சென்று சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். நம்நாட்டு இளைஞர்கள் சமயப் பற்று மிக்கவர்களாக—சமய இலக்கிய வளர்ச்சி மிக்கவர்களாக விளங்க வேண்டுமென்று பாடு பட்டு வருகின்றார். புதிதாக அமைக்கப்பட்ட 10 + 2 + 3 மேல் உயர்பள்ளிப் (Higher Secondary Course) பாடத் திட்டக் குழுவில் அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார் பாளராக இருந்து பணியாற்றி வருகின்றார்.

இவ்வாறாக அவருடைய பன்முகப்பட்ட தொண்டுகள்பல. அவைகளை எல்லாம் நல்ல முறையில் ஆற்றிவரும் அடிகளார் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து பல்கலைக் கழகத்திற்கும் தமிழுக்கும் தமிழ்க் கல்லூரிகளுக்கும் சமயத்திற்கும் அளவற்ற தொண்டுகள் ஆற்ற வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

Dr. R. BALASUBRAMANIAN
M.A., Ph D .D.Litt. Director
The Dr. S. Radhakrishnan Institute
For Advanced Study in Philosophy
University of Madras, Madras-5

சென்னை-5
6-2-'86

சிவத்தலங்களால் சிறப்புற்றோங்கும் தமிழகத்தில் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற திருத்தென்குடித்திட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட எனக்குத் தாய் வழிப் பாட்டனாரின் ஊராக அமைந்தது மேலைக்கொங்கில் காஞ்சி நதிக் கரையில் உள்ள பேரூர். அவ்வகையில் குடிவழியுரிமை அமைத்த பின்னணியில் தவத்திரு சுவாமிகளிடம் எனக்கு ஒருவகை விவரிக்கவொண்ணாத பற்று இருந்தது. சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலும், பிற குழுக்களிலும் சுவாமிகள் உறுப்பினரா யிருந்த காலங்களில் தத்துவத்துறையின் இயக்குநர் என்ற வகையில் அடிகளுடன் நெருங்கிய தொடர்பு எனக்கு உண்டு. தெளிவான சிந்தனைப் போக்கும் செயற்பட வேண்டும் என்ற உறுதியும் உடையவர் சுவாமிகள் என்பதை என் அனுபவத்தாற் கண்டவன். இவைகளை மேலும் நெருக்கமாக உணர்ந்து கொள்வதற்கு வாய்ப்பாக ஒரு நிகழ்ச்சி அமைந்தது. தவத்திரு சுவாமிகள் என்னையும் பொருட்படுத்தி அழைத்து எனக்குத் 'தத்துவ வித்தகர்' என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப் பித்தருளினார்கள். பேரூரில் யான் இச்சிறப்பைப் பெறுமாறு செய்த தவத்திரு சுவாமி களின் பேரன்பும், என்றும் சிரித்த இளமை நோக்கும், செயல் துடிப்பும் என் நெஞ்சில் என்றும் நிலைத்திருப்பவை.

மணிவிழா நாயகர், கயிலை முனிவர், தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் நீடு வாழ்ந்து சமயம், சமுதாயப் பணி புரிந்திட வேண்டுமாய்ப் பேரூர்ப் பெருமானை வணங்கிப் போற்றுகின்றேன்.

இரா. பாலசுப்பிரமணியன்

டாக்டர் வை இரத்தினசபாபதி
வித்வான், பி. ஒ. எல்., எம். ஏ;, பி. எச். டி ,
தத்துவத்துறை சென்னைப் பல்கலைக் கழகம்.

தலைநாள் போன்ற விருப்பினர்

மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவத்திரு சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் மாணாக்கனாக யான் சேர்ந்த 1949 முதல் இன்றுவரை இடைப் பட்ட 37 ஆண்டுகள் பேரூர் ஆதினத்தின் ஞானபீடத்தமர்ந்து சமய மறுமலர்ச்சி, சமுதாய இலக்கிய மறுமலர்ச்சிப் பணிகளைச் செய்தும், செய்யவைத்தும் அயராது உழைக்கும் அருட்டிரு சாந்தலிங்க இராமசாமி அடிகளுடன் இணைந்து பழகும் வாய்ப்பினன்.

ஒரு சாலை மாணாக்கனாக, பேரூராதீனம் வீரசைவ திருமடத்துத் தலை மைக் குருமகா சந்நிதானத்தின் சீடனாக, மகிழ்வுப் பேருந்தில் அமர்ந்து சாந்தலிங்க அடிகளின் தத்துவ நூற் கொள்கைகளை ஆய்வு செய்யும் ஆய்வுரைகளில் உரையாடு வோனாக, சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் என்ற வகையில் அடிகள் திருமுன்னர் அப்பல்கலைக் கழக ஆட்சியில் அமைந்த தத்துவத்துறை ஆசிரியனாக இவ்வாறு ஒன்றோடொன்று மாறுபட்ட நால்வகை நிலைகளில் பழகிய பழக்கம் எனக்கும் அடிகளுக்கும் உண்டு.

ஒரு சாலை மாணாக்கனாக ஒரே வகுப்பில் ஒரே பலகையில் (அடிகளின் அருகில் அமர்வதில் எனக்கும் சிவகளை நாராயணன் அவர்களுக்கும் போட்டி வரும்) இணைய அமர்ந்து பாடங்கேட்ட காலத்தில் அடிகள் என்மேற் பொழிந்த தாய்மைப் பாசத்தை, அடிகள் பக்கத்தில் அமர வேண்டும் என்ற என் ஆர்வத்தைப் பேணிக்காத்த அரவணைப்பை, "தலைநாள் போன்ற விருப்பினன்" என்ற சங்க இலக்கிய வரியின் உட்பொருள் பொதுள, அன்றேபோல் இன்றும் இடைப்பட்ட வெவ்வேறு காலங் களிலும் ஒன்றேபோல் அமைய வாழ்ந்த வாழ்வே அடிகள் அருளாசியால் யான்பெற்ற பெருவாழ்வாக என் வாழ்வில் அமைந்த பேறு.

ஞானாம்பிகை ஆலை வெள்ளக்கிணர்
கோவை-29

எங்கள் குடும்பம், என் தந்தையார் சைவத்திரு. வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர்கள் காலம் முதலே பேரூர் அருண்மிகு சாந்தலிங்க அடிகளார் திருமடத்துடன் மிகவும் தொடர்புடையது. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் திருமடத்தின் இளவரசராகப் பட்டத்தில் இருந்த காலத்தில் தமிழ்க் கல்லூரி நிர்வாகம் தொடர்பாகவும், திருப்பேரூர் பட்டீசுவரர் கோயில் திருப்பணிகள் தொடர்பாகவும் எங்கள் இல்லத்திற்கு வந்து என் தந்தையாருடன் கலந்து பேசுவார்கள். இவர்களுடைய உழைப்பு, விடா முயற்சி முதலிய காரணங்களால் பேரூர் திருமடம் சமயத் துறையிலும், கல்வித்துறையிலும் அரிய பணிகள் பலவற்றைச் செய்து சிறப்படைந்து உள்ளது. இத்திருமடம் இன்னும் பலவகையில் சிறந்து விளங்கும் இன்று மணிவிழாக் காணும் நமது அடிகளார் அவர்கள் பவள விழா முதலிய பல விழாக்கள் கண்டு சிறந்து விளங்கவும் எல்லாம் வல்ல முருகப் பெருமான் திருவருளை வேண்டுகின்றேன்.

அன்புடன்,

வெ. சி. சு. சின்னசாமிக் கவுண்டர்

அடிகளும் அரிய பணிகளும்

எஸ். ராமசாமி, பி. ஏ.,
(முன்னாள் நகரமன்ற உறுப்பினர், கோவை.)

நான் நீண்ட நெடுங்காலை நமது மதிப்பிற்குரிய கயிலைமுனிவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அவர்களுடன் பழகியுள்ளேன். அவர்கள் குறிப்பாக தமிழுக்கும், சமயத்திற்கும் செய்திருக்கும் பணிகள் எண்ணிலடங்கா. அவரது 60 சித்திரை நன்னாளில் நாமெல்லாம் அவரது தொண்டினை பின்பற்றி நடந்து வருவேமேயானால் இத்தமிழ் நல்லுலகம் மிக்க வளமுள்ளதாக திகழும் என்பதற்கு ஐயமில்லை.

தவத்திரு அடிகளார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சிண்டிகேட் மெம்பராக இருந்து அரும்பெரும் சேவைகள் செய்துள்ளார்கள். சென்னை பல்கலைக் கழகம் ஆங்கிலேய மோகத்தில் திளைத்திருந்த காலம் ஒன்று உண்டு. அதைத் திருத்தி தமிழிலும் நாம் செயல்பாடு செய்ய முடியும் என்பதினை தெளிவாக நடத்திக் காட்டினார்கள். மேலும், சுவாமிகள் நமது சேவையில் குறிப்பாக பல கும்பாபிஷேகத்தினை நடத்தி வைத்து, நமது மக்களைத் தெய்வத் தமிழர்களாக்கி அரும்பெரும் தொண்டினை ஆற்றியுள்ளார்கள். நல்ல பல்லோரை தமிழ் மறைகளில் தோய்த்து எடுத்து கண்டுள்ளார்கள். அவர்கள் மிகப் பெரிய காரியம் செய்து தமிழ்க் கல்லூரியை தோற்றுவித்து அநேக தமிழ்ப் படடதாரிகளையும், மேல்நிலைப் பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளார்கள். மேலும், அடிகளார் அவர்கள் வடஇந்திய யாத்திரை மேற்கொண்டு அநேக திருத்தலங்களை சேவித்து அரும்பெருமை அடைந்துள்ளார்கள். குறிப்பாக திருக்கயிலாயம் சென்று மானசரோவர் முதலியவைகளைத் தரிசித்து சிவ பணியினை தவறாமல் நிறைவேற்றி நம்மையெல்லாம் சிவநேச செல்வர்களாக்கி ஆசி அருளியுள்ளார்கள். சென்ற மாதங்களில் தவத்திரு அடிகளார் அவர்கள் டில்லி மாநகரம் சென்று அங்கு உள்ள பாராளுமன்ற உறுப்பிர்னகளையும் மற்ற அதிகாரிகளையும் சந்தித்து, குறிப்பாக நமது அகில இந்திய பொது காரியதரிசி திரு மூப்பனார் ஐயாவின் மூலம், அயோத்தியில் எழுந்தருளி, அடைக்கப்பெற்று பூஜை செய்யாமலிருந்த ராமர் கோயிலை (ராமர் பிறந்த இடம்) முஸ்லீம் ஆதிக்கத்தினின்று விடுபடுத்தி நமக்கெல்லாம் (இந்துக்களுக்கு) அரும்பெரும் பணியாற்றியது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது ஆகும்.

அத்தகைய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பன்னெடுங் காலம் வாழ்ந்து தமிழுக்கும், சமயத்திற்கும் பெரும்பணி ஆற்றிவர எல்லாம் வல்ல சாந்தலிங்கப் பெருமான் அருள் புரிவாராக.

கவிஞர். சிற்பி. பாலசுப்பிரமணியம்
ந. க. ம. கலைக் கல்லூரி, பொள்ளாச்சி.

பேரன்புக்கும் வணக்கத்துக்கும் உரிய அடிகளார் அவர்களுக்குப் பணிந்து எழுதிக் கொள்வது,

கொங்கு நாடு தந்த துறவுக் கோவே!
மங்கலச் சாந்த லிங்கர் திருமடம்
அருளால் காக்கும் அறநெறி யாள!
செறிதரும் அன்பால் சமயமும் தமிழும்
இருகண் எனவே இனிதாய்க் காக்கும்
பெரியோய்! மணிவிழாப் பேறுடன் காணும்
உவகை நாளில் தவச் சான் றோர் பலர்
செவிகள் குளிர செப்பும் புகழுரை
மாலையில் என்மலர் சேர்ந்து மணக்க
ஓலையாய் எழுதி உங்கள்பால் அனுப்பினேன்
நொய்யல் நதியின் தாழை மடல்களின்
செய்ய மகரந்த நறும்பொடி எனும்படி
வணங்கி எழுதுமென் வாழ்த்துத் தங்களின்
இணங்கிய திருவடி ஏற்றிட இறைஞ்சினேன்.
வாழிய சாந்தலிங்க இராமசாமி அடிகளார் திருவருள்.

அன்புடன்,

19-02-1986

சிற்பி

டாக்டர் ந. சஞ்சீவி
பேராசிரியர்-தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை-600 005.

University of Madras
University Buildings
Chepauk
Triplicane P.o.,
Madras - 600 005.

பணிந்துரை வணக்கங்கள்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் பணிபுரிந்த பெருமைக்குரியவர்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சி குறித்து அவர்கள் காட்டிய ஆர்வத்திற்குத் தமிழ் உலகம் கடமைப்பட்டுள்ளது. நெருக்கடி காலத்தில் யான் பதவி விலக்கம் செய்யப்பட்டபோது அது குறித்து மெத்த கவலை கொண்ட ஓர் ஆட்சிக்குழு உறுப்பினர் என்பதால் அவரிடம் தனிப்பட்ட வகையில் எனக்கு மெத்த நன்றிக் கடப்பாடு உள்ளது. அவ்வப்போது அவர்கள் கல்லூரியில் யான் உரையாற்றுமாறு அழைக்கப்பட்டதற்கும் யான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். **தமிழகப் புலவர் குழுவில் உறுப்பினராக இருக்கும் ஒரு பெருந்துறவியார் அவர்கள்.** அவர்கள் அக்குழுவில் பல அரிய கருத்துக்களைக் கூறித் தமிழுக்கும் சைவத்திற்கும் நன்மைகள் விளையக் காரணமாய் உள்ளார்கள். அடிகளாரின் தமிழ்த் தொண்டு நாளும் சிறப்பதாக! கயிலை மலையைக் கண்டு வணங்கிய புண்ணியத்தாலும் அவர்கள் நூற்றாண்டு வாழ்ந்து நமக்கெல்லாம் வழி காட்டுவார்கள் என்று நம்பலாம். அடிகளார்க்குப் பணிவார்ந்த உளமார்ந்த நல்வாழ்த்துக்கள்! வணக்கங்கள்.

அன்புடன்
ந. சஞ்சீவி

ஜி. கனகசபை, எம்.ஏ.,
தலைவர்
அறநெறிக் கழகம். லால்குடி

24—01—1986

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஒரு கண்ணோட்டம்

சமயப்பணியும், சமூக நோக்கும் செல்வச் சிறப்பும் மலிந்து விளங்கும் கோவை மாவட்டத்தில் அமைதியான முறையில் நற்றொண்டு புரிந்துவரும் பேரூர் சுவாமிகளின் மணி விழா நிகழ்வது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

''முதிர்சுவை யமுதம் ஒழுக்கியதே யென மொய்த்த சிறைக் கிளிகள்'' என எங்கள் தமிழ்ச் சுவை கண்ட தவத்துறையைப் பற்றி மகாவித்துவான் பிள்ளையவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். அஃதே போல் முதிர் சைவநெறி யமுதம் ஒழுக்கியதேயென இன்புறும் கொங்கு நாட்டில், ஆடல் வல்லான் அருளால் நற்பணி பல புரிந்துவரும் தவத்திரு சுவாமிகளைப் பற்றிய ஓரிரு சிந்தனைகள்.

பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் என் சிந்தனை ஓடுகிறது. ஆம்; எனது தமையனார் திருக்குறள்வேள் அமரர் ஜி. வரதராசனார் அவர்கள் சுவாமிகளை எளியேனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அற்றை நாள் முதல் சுவாமிகளிடத்தில் திண்ணனுக்கு ஏற்பட்டது போன்ற அந்தப் பக்தி ஏற்பட்டது. திருச்சி மாவட்டத்தில் எந்தப் பகுதிக்கு எழுந்தருளினாலும் சுவாமிகளைச் சென்று தரிசித்து வருவது வழக்கமாயிற்று.

ஞான குருவாக விளங்கும் திருவண்ணாமலை ஆதீனத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், சைவத்தின் ஒளி விளக்காக விளங்கும் கௌமார மடத்தின் பெருந்தகை தவத்திரு சுந்தர சுவாமிகளும், இன்று மணிவிழாக் காணும் ஒப்பிலா மணியாக விளங்கும் பேரூர் மடத்தின் தந்தை தவத்திரு சாந்தலிங்க இராமசுவாமி சுவாமிகளும் தமிழ் பேசும் நல்லுலகிற்கு மும்மூர்த்திகளாகத் திகழ்கிறார்கள். சீர்மல்கு சைவக் குரவர்கள் போன்று தாங்களே வலியச் சென்று ஏழை எளியவர்களுடன் உரையாடிச் சைவ சமயப் பணி புரிந்து வருவதை சைவ உலகம் நன்கறியும்.

என் குருமணி நாதர்

கவிஞர் புவியரசு

அது ஒரு காலம்
அடிகள் மூட்டிய தமிழ்க்கனலால்
என் இதயம் பற்றி எரிந்த காலம்

அது ஒரு காலம்—
'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' பாடி
மடத்துச் சோற்றை அள்ளி விழுங்கிய காலம்
கணக்குப் பிள்ளை டெஸ்கின் முன்னே
கால்கள் மடக்கிச் சப்பணமிட்டு
இருண்ட அறையில் தலை மாணாக்கர்களாய்
குருட்டுவிழி விழித்துக் கொண்டிருந்த காலம்
தமிழ் வெளிச்சம் வீசி, என்சாமி, எம்மிரவைப்
பகலாக்கிக் கொண்டிருந்த காலம்

அது ஒரு காலம்—
அந்தப் பரிமேலழகனை
அவன் பரியோடு எம்மை விழுங்க வைக்க
எம் ஆசான் எமக்கு
செப்படிவித்தை கற்றுக் கொடுத்த காலம்

அது ஒரு கோலம்—
இடையில் வேட்டி கட்டி
மார்பில் துண்டு சுற்றி
வெட்கத்தை டிபன் பாக்சில்
மூடி வைத்து விட்டு
சிவபுராணம் பாடிப் பேரூர்த் தெருவில்
நடந்த காலம்

அடிகளார் தந்த ஈற்றடிகளுக்கு
வார்த்தைகள் தேடி
தென்னந்தோப்பில் அலைந்த காலம்
மீண்டு வருமோ அந்தக் காலம்?
ஓர் இனிய சொல்லால்
அந்தக் காலத்தை என்றும்
கட்டி யிழுத்துவர வல்லவர் என்பேராசான்

அவர் பார்வை
என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது
அவர் புன்முறுவல்
என்னைப் புளகம் போர்க்க வைக்கிறது

என்னையும் பொருட்டாக்கி
என் கைகூப்புக்குப் பதிலாய்
அவர் கைமலர்கள் குவிவதில்
என் தலை கனக்கிறது!

என் வெற்று மூங்கிலில்
தம் தமிழ்க் கனலால்
ஞானத் துளைகள் இட்டவர்
என் குருமணி நாதர்.

நான் பற்றிக் கொண்டது
அவர் கற்றுத் தந்த
'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற
மறை மொழியைத் தான்

நான் கற்றுக் கொண்டது
அவர் சொல்லித் தந்த
'அஞ்சுவது யாதொன்றும் இல்லை' என்ற
நிறை மொழியைத்தான்.

என் குருமணிதன் தாள் வாழ்க!

உ

பேரூராதீனகர்த்தர்

'கயிலை முனிவர்' தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின்


மணிவிழா வணக்கப் பாமலர்

அருள்ஞானப் பேரொளியாம் சாந்த லிங்கர்
அடிச்சுவட்டில் அறங்காத்து வளர்க்கும் ஞான
குருநாத! நின்னடிகள் பரவும் அன்பர்
குழாத்தொருவன் எனும் பெரிய பேறு பெற்றேன்
ஒருஞான மில்லாதேன் எனினும் என்பால்
உவந்தருளைப் பொழிகின்ற வள்ளல் ஆனாய்!
அறுபானாண் டகவைமணி விழாக்காண் நின்றன்
அடிமலர் என் முடியின்மிசை என்றும் நிற்க!

துறவுக்கோர் இலக்கணமே! தொண்டின் வாழ்வே!
தூயசுடர் ஞானமணி விளக்கே! மேலாம்
அருள் வானில் பூத்தெழுந்த நிலவே! சால்பிற்
கணிகலமே! தமிழ்ச்சமயம் உலக மெல்லாம்
பரவிவளர்ந்திட உழைக்கும் அருமை வாழ்வே!
பைந்தமிழ்த் தாய் செய்தவக் கொழுந்தே! போற்றி
ஒரு முதல்வன் தண்ணருளை வேண்டு கின்றேன்
ஒளிவழங்கி இனும்நூறாண் டோங்க வென்றே!

குன்றக்குடி
20—1—1986

அடியேன்,
மரு. பரமகுரு



இச்சையொடு சச்சிதானந்தர் மெச்சும் நம் ஆதீனம்



அருளுரையாற்றும் அருளுருக்கோலம்

அறம் வளர்க்கும் துறவி வாழ்க!

கவிஞர் சக்திக் கனல்

சாந்தலிங்கர் திருமடத்தின் தந்தை யானவன்—நாங்கள்
தமிழ்பாடும் பாடலுக்குள் சிந்து தான்இவன்!
மாந்தருக்குள் ளேசிறந்து துறவி யானவன்—மொழியை
வளர்ப்பதில்மு வேந்தர்போன்ற வள்ளல் ஆனவன்!

இமயமீது நடைநடந்து வீரன்ஆனவுன்!—என்றும்
எடுத்த பணிகள் வெற்றிகாணும் தீரன் ஆனவன்
சமயவாழ்வில் சைவநீதி தன்னில் நின்றவன்—அன்பில்
சாந்தலிங்க ராமசாமி கண்ணில் நின்றவன்!

அறுபதாண்டு நிறைவுகண்டும் இளைஞனானவன்!—நாளும்
அறம்வளர்க்கும் துறவிநல்ல கலைஞனானவன்
இருபதாண்டு துடிதுடிக்கும் வீறுகொண்டவன்!—சைவ
இயக்கம் ஓங்கித் தழைக்கவர லாறு கண்டவன்!

ஊனமுற்று உள்ளமஞ்சி ஒதுங்கிட மாட்டான்—தமிழுக்
குயிர்கொடுப்பான்! காத்திடுவான்! பதுங்கிட மாட்டான்!
ஆனமட்டும் கொங்குநாட்டில் தமிழ்பரப்பினான்—கல்வி
ஆலயங்கள் அமைத்தும்சைவ நெறிநிரப் பினான்

நூறுநூறு ஆண்டுநீண்டு வாழ்க அடிகளே!—நல்ல
நூல்கள் நூறு நூறுதந்து வாழ்க அடிகளே!
வாரிவழங்கும் புகழ்பரவும் தேவர் விண்ணிலே—எங்கள்
மனதுகுளிர வாழ்க இந்தக் கொங்கு மண்ணிலே!

என் வாழ் முதலாகிய தெய்வம்

வித்துவான் மு, செகந்நாதன் பி. லிட்.
தலைமைத் தமிழாசான், பேரூர்

முன்னுரை :

கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டு—மற்றீண்டு வாரா நெறிக்கு வழி வகுக்கும்—பேரூர் அடிகள் பெருமான் பேரூர் திருமடத்தின் இளவரசாகப் பொறுப்பேற்று சமயத்தோடு குழைத்த கல்வியினைத் தமது சிரவைக் குருபீடக் குருமுதல்வர் இராமானந்த சுவாமிகள் அருள்வழி நின்று—பேரூர்ச் சுற்றுப்புற வருங்காலச் செம்மல்களின் இளநெஞ்சங்களில் வித்திட வேண்டும் என்ற பெருநோக்கோடு கல்விக் கலைக் கூடங்களைத் தோற்றுவித்த சமயம்–அடியேனும் அக்கல்வியினைக் கற்றுக் கோட வேணவாக் கொண்டு வந்து. பயின்று பயன்பெற்று இற்றைக்கு முப்பதாண்டுகள் நிறைவுற்றன. இவண் பெற்ற பேறுகளும் அனுபவங்களும் பற்பல.

அடிகளின் குருபக்தி :

அடிகள் பெருமான் தமது குருநாதரான தவப்பெருந்திரு கந்தசாமி சுவாமிகளின் குருபூசைக்குப் பன்னீராண்டுகள் பேரூரிலிருந்து—சிரவை மடத்திற்குக் கல்லூரி ஆசிரியர்கள்—அற்றைய மாணாக்கர்களுடன் நடந்து சென்றே வழிபட்டு வந்தனர், அக்குழாத்தில் உற்ற மாணாக்கர்களில் அடியேனும் ஒருவன். வழிநடையில் உற்ற உணர்வுகள்...மனமகிழ்வுகள் பெற்ற அனுபவங்கள் இன்றும் மனநெகிழ்வை ஊட்டுகின்றன.

தலவழிபாடுகள்:

ஆண்டுதோறும் கோடைவிடுமுறையில் சோழநாட்டுக் காவிரியின் தென்கரை—வடகரையில் பாடல் பெற்ற தலங்களை அன்பர் குழாத்துடன் நடந்து சென்றே வழிபட்டனர். தருமையாதீனம் போன்ற திருமடங்களின் வரவேற்புகளும் உபசாரங்களும் இருந்தபோதிலும்—ஆங்காங்கே உள்ள கோயில் பிரசாதங்களையே ஏற்று எளிய பயணத்தை மேற்கொண்டனர். மேலும் பாண்டி நாட்டுத் தலங்கட்கும்—சேரநாட்டுத் திருவஞ்சைக்களத்திற்கும் ஆண்டுதோறும் சென்று வழிபட்டுவரும் முறையுண்டு. அப்பயணங்கள்தோறும் அடியேனையும் உடன் கூட்டிச் சென்றனர். திருச்செந்தூரில் கந்தப் பெருமானது சட்டிவிரதம் ஒருவார காலம் இருந்து வழிபட்டதும் நினைவுறுகின்றது.

நீலமலை தங்கல் :

1958–ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். கோடை வெம்மைக்கு நீலமலையில் தங்கிக் களிக்கக்கருதி என்னை உழையிருந்தானாக்கி— அதிகாரட்டி இராம

கிருட்டிண மடத்தில் தங்கி அட்டிற்பணியும் தாமே கொண்டு சமைத்து உண்டும் உண்பித்தும் ஒரு திங்கட்காலம் கழித்தனர். கோவைக்கிழார் ஐயா அவர்களும் உடனிருந்தார்கள்.

தமிழகப் புலவர் குழு :

தமிழகப் புலவர் குழு தோன்றிய காலத்துமுதல் கூடுந்தோறும் அடியேனை அணுக்கத் தொண்டனாக்கிக் கூட்டிச் சென்றமையில் பெற்ற அனுபவங்களும்—பெருமக்களின் சந்திப்பும் தொடர்பும் பெரிதும் எனக்குக் கிட்டிற்று.

பொலிவும் பணியும் :

அடிகள் பெருமான் காந்திய நெறியில் பெரிதும் பற்றுக் கொண்டிருப்பதனை அவர் உடுத்தும் கதராடையே கழறும். சிந்தையில் இடையறாப் பேரன்பும்— கந்தை மிகையாம் கருத்தும்—உழவாரத் திண்படையறாக் கரத்தின்றி உழைப்பின் உறைவிடமாகி எப்பணியும் செய்து கொண்டே இருக்கின்ற திறமும் திட்பமும் சிவனடிக்கே பதித்த நெஞ்சினராய் சிவவேட சிவபூசைப் பொலிவழகும்—நடையறாப் பெருந்துறவும் கொண்டு அருந்தமிழ்த் தொண்டாற்றி மக்களை நல்வழிப்படுத்தி வருகின்ற பாங்கும் யாவரும் அறிவர்.

பற்றற்ற பரிவும் எளிய உணவும் :

அடிகள் பெருமான் எதனையும் தாமே வந்து தலையளித்து ஆட் கொள்ளும் பெற்றிமையால்—அடிகட்குச் செயற்கருஞ் செயல் என்று எதுவுமில்லை. முன்னாள் பிரதமர் லால்பகதூர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் உற்ற உணவுப் பற்றாக்குறையினை ஈடுசெய்ய ஒருவேளை உணவைக் கட்டுப்படுத்திக் கொளல் நலம் என்ற கருத்தினை ஏற்று—அடிகள் இரவு உணவை நீக்கி—இறைவனுக்குப் படைக்கும் பாலினை மட்டும் பல ஆண்டுகள் பருகி வந்தனர். அடிகள் எப்பொழுதும் எளிய உணவில்—சிறிய அளவே உண்ணும் பழக்கமும் உடையவர்.

அடியேனுக்களித்த பணிகளும்—பாங்கும் :

அடிகள் தமக்குப் பணிவிடை ஆற்ற அடியேனை அமைத்துக் கொண்டதில் பெருமையும் மகிழ்வும் கொள்ளுகின்றேன். அடிகட்குக் கட்டுற்ற என்னை முன்னாள் இருந்த ஆறுமுகசாமிகட்கும் எம்மை ஆட்படுத்தி—பழனிப்பதியிலும்—கண்மருத்துவ மனையிலும்—உடனிருந்து பணிகொள்ள வைத்த பாங்கில் — அருளுரைகள் பல பெற்றேன்.

1960—ஆம் ஆண்டு முதல் நிலையத்தில் நிலையான கல்விப் பணிப்பொறுப்பை அடியேனுக்கு நல்கி நன்றிக் காணிக்கை செலுத்திவர வைத்தமைக்கும்— தந்தையிழந்து கண் கலங்கி கலுழ்ந்தக்கால்—தந்தையாக அரவணைத்து ஆறுதலளித்துத் திருமடத்தின் பொறுப்பு நல்கியும் பேணியும்வளர்த்து விட்டமைக்கு என்ன கைம்மாறு ஆற்றவல்லேன்.

அடிகள் பெருமான் எனக்களித்த அனுபவங்களோடு—அறவுரைகளும், அறிவுரைகளும்—திருத்தி நெறிப்படுத்திய தெளிவுரைகளும்—அருண்மிகு சாந்தலிங்கப் பெருமான் அருள் நூல்களை ஓத ஓதவித்த அருள் மனமும் என்னுள் தோய்ந்து நிற்பதால் எமக்கு எம் வாழ் முதல் தெய்வமாக விளங்குகின்றனர்.

சிவநெறிகளைச் செம்மையாக எம் உள்ளத்தில்—அனுபவத்தால் பதியவைத்து ஐந்தெழுத்தோதி தீக்கையளித்தனர். கௌமார நெறியில் எம்மை ஈர்த்துக்கொண்டவர் சிரவை யாதீனம் தவத்திரு சுந்தரசாமி அடிகள் ஆவர். இருவரும் இரு நெறிகளையிம் எம்முள்ளத்தில் வித்திட்டதோடு—கோவில்வழிபாட்டுமுறை—கும்பாபிடேகமுறைளையும் போதித்தமை யான் பெற்ற பேறே.

1967–இல் அடிகள் பெருமான் திருமடத்தில் தலைவராகப் பட்டம் தரித்தமையம் அடியேனைப் பெரும்பணிப் பொறுப்பில் ஆழ்த்திய திறமும்—முதல் காசியாத்திரை சென்று போந்தமையம் வரவேற்கும் பொறுப்பும் என் மனதில் அகலா இடத்தினைப் பெற்றுள்ளன.

வாழ்த்தும் வணக்கமும்

மனத்தொடு வாய்மையுடன் மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவும் வீரசைவ சின்னம் பொலிவுறத் துலங்கும் திருமேனிதனில் அசைவும்—உற்ற நோய் நோற்று உயிர்க்கு உறுகண் செய்யாத அருந் தவத்திருவுருவாய் விளங்கி—"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாகீசப் பெருந்தகையின் குறிக்கோளில் சமயப் பணியினை இன்னும் செம்மையாக்கிப் பாருக்குப் பாங்குற நல்க வாழ்க! வாழ்க!! என்று எல்லாம் வல்ல சாந்தலிங்கப் பெருமானிடம் மனம் மொழி மெய்களால் வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

ஓம்

கு. வெங்கடாசலம், B.A M.Ed.,
பொள்ளாச்சி,

என் கடன் பணிசெய்து கிடப்பதே

அடிகளாரின் தந்தை தவத்திரு சிவராமசாமி அடிகளின் ஆழ்ந்த சிவ வழிபாட்டின் பயனாகத் துறவியாகக்கூடிய ஒருவரைத் திருமகனாகப் பெற்றார். இறுதியில் மகா சிவராத்திரி தினத்தன்று சிவபூஜையெல்லாம் செய்துமுடித்து பிரசாதம் வழங்கி விட்டு இப்பூவுலகைவிட்டுச் சிவபதம் அடைந்தார். பிறகு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆண்டுதோறும் முதலிபாளையத்தில் சிவராத்திரியைப் பக்தி நிறைந்த ஓர் ஆன்மீக விழாவாக நடத்திவருவது சிறப்பான அம்சமாகும்.

ஒரு சமயம் தமிழ்க் கல்லூரியில் நடைபெற இருக்கும் ஓர் ஆண்டு விழாவிற்கு ஓரிரண்டு தினங்களுக்கு அடியேன் அங்கு போகவேண்டியிருந்தது. அடிகளாரைக் காணாது அங்கும் இங்கும் தேடினேன். தற்காலிகமாகத் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருந்த மூதறிஞர் ஒருவர் என்னைக்கூட்டிச் சென்றார். உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்குப் பின்புறத்தில் அடிகளார் மாணவர் சிலருடன் ஒரு பணியைப் புரிந்து கொண்டிருந்தார். அவ்விடத்தில் தாறுமாறாகக் குவிக்கப்பட்டிருந்த குப்பை கூளங்கள், கயிறு, காகிதங்கள் மூங்கில் குப்பை, மரத் துண்டுகள் ஆகியவற்றை மாணவர்களுடன் சேர்ந்து எடுத்து அப்புறப்படுத்திச் சுத்தம்செய்து கொண்டிருந்தார்.

இதைக் கண்ணுற்ற பேராசிரியர் அசந்து போனார். தமிழ்க் கல்லூரியின் முதல்வரும், ஆதீனத்தின் தலைவருமானவர் இத்தகைய சாதாரண வேலையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து வியப்பும் பரிவும் கொண்டார், இதைச் சொல்ல முயற்சிப்பதற்குள் அடியேனும் அந்த வேலையில் இறங்கினேன், விரைவில் அப்பணி முடிந்தது, பின்பு மூவருமாக அலுவலகத்திற்கு வந்தோம். அடுத்து நடக்க இருக்கும் விழா பற்றிய சில முடிவுகள் எடுக்க வேண்டும், அதைப் பற்றிப் பேச முனைந்தோம். பேராசிரியர் மற்ற ஆசிரியர் ஒருவர் பெறும் ஊதியத்தை விடத் தமது ஊதியம் குறைவாக இருப்பது தமக்குக் குறைச்சலாகத் தெரிவதைப்பற்றி எடுத்துரைத்தார். நாங்கள் இதைச் சற்று நயமாகத் தவிர்த்துவிட்டு விழா பற்றிய முடிவினைச் செய்தோம்.

வேதத்தின் சாரமெல்லாம் கொண்டுள்ள கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நான்கு மறைகளைத் தொகுத்துப் பாடியவர் சாந்தலிங்க அடிகளார், இந்த மகானின் பெயரில் நடைபெறும் திருமடத்தின் தலைவராக இருப்பவர். இந்த ஆன்மீக நூல்களைப் படித்தும் வெளியிட்டும் இருக்கிறார். திருமடத்தின் சார்புள்ள ஆசிரியர், மாணவர் அடியார்களுக்கு ஒரளவு இந்நூல்களில் உள்ள தத்துவங்களும் தெரியாமல் இல்லை.

கன்னட நாட்டரசர் குமார தேவர் சாந்தலிங்க அடிகளாரைத் தமது குருவாகக் கொண்டு வழிபட்டவர். அவரைச் சோதிக்க சாந்தலிங்க அடிகளார் ஒரு பணி இட்டார். குமார தேவருக்கு இதில் பயிற்சி என்பதே இருக்கமுடியாது. ஆனால் மன்னராகிய அவர் விறகை வெட்டினார். வெட்டத் தெரியாமல் தனது கையையும் சேர்த்து வெட்டிக் காயமடைந்தார், அதைப் பொருட்படுத்தாமல் ஏனைய எல்லாப் பணிகளையும் நிறை மனதுடன் செய்து உண்மையான சீடரானார். சுத்தம் செய்யும் பணியை அடிகளாருக்கு யாரும் இடவில்லை. தம்மைத் தொண்டராகப் பாவித்து அடிகளார் மடத்தில் எல்லாப் பணிகளையும் ஆத்மார்த்தமாகச் செய்தார்.

"அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே"—

இதில் யார் யாரைப் பணி செய்ய ஆளாக்கினார் என்பதை நாமே யூகித்துக் கொள்ளலாமல்லவா?

வெள்ளி விழா ஆன்மீக நாட்டத்தின் கட்டம்
மணிவிழா ஆன்மீகப் பயிற்சியின் கட்டம்
இனிமேல் ஆன்மீக அனுபவத்தின் கட்டமாக
விளங்கச் சாந்தலிங்கப் பெருமான் அருள்புரிவாராக!

குன்றக்குடி பெரிய பெருமான்

20—01—1986

'கருணையின் ஒழுக்கம்' களி நடம் புரியக் கண்டேன்!

உலகம் உய்யவும் சைவம் நின்றோங்கவும், நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறைகின்ற பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தினுள் மிகுந்த பணிவன்போடு நுழைகின்றேன். திருமடத்தை அருளாட்சி செய்கின்ற ஞானச்செல்வர், தமிழ் நாயகர் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பூசனை செய்து கொண்டிருப்பதாகத் தொண்டர் ஒருவர் அறிவிக்கிறார். தவத்திரு அடிகளார் அவர் களைக் 'கண்டுகொள்ளக்' காத்திருக்கிறேன்.

அனைத்து இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கோவை மாவட்டக்கிளை தொடக்க விழாவைப் பேரூர்த் தமிழ்க் கல்லூரியில் நடத்திக் கொள்ளத் தவத்திரு அடிகளாரிடம் இசைவு பெற வந்துள்ள என் உள்ளத்துள் 'ஒப்புதல் அளிப்பார்களோ? என்னவோ?' என ஓர் எண்ணம் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது!

பூசனை முடித்த புனிதத் திருக்கோலத்தோடு வந்த தவத்திரு அடிகளார் ஓர் ஆசனத்தில் அமர்ந்ததும், வணங்கி எழுந்து வந்திருக்கும் காரணத்தை மென்று விழுங்கி மெல்லக் கூறுகிறேன்! உடன் தவத்திரு அடிகளார் மிகுந்த மகிழ்வோடு, "அப்படியா? மகிழ்ச்சி! தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழ்க் கல்லூரியில் தொடங்குவது சாலப் பொருந்தும். விழாவை முற்பகலில் வைத்துக் கொள்ளுங்கள்; மதிய உணவைத் தமிழ்ப் படைப்பாளிகளுக்கு நமது திருமடம் படைத்து மகிழும்!" எனக் கூறுகின்றார்கள். கருணையோடும், களிப்போடும் தவத்திரு அடிகளார் அளித்த மறுமொழி—சேக்கிழார் பெருமானின் மணிமொழியை என் மனத்துள் நிறைக்கிறது! 'இடம் கிடைக்குமா?' என ஏக்கத்தோடு சென்ற நான், இனிய விருந்தும் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் ஊக்கத் தோடு சொல்லப் போனால் உற்சாகத்தோடு திருமடத்திலிருந்து திரும்புகிறேன். சேக் கிழார் பெருமானின் மணி மொழி என் சிந்தையுள் தித்திக்கிறது:

திருநாட்டுச் சிறப்பைப் பேசுகிறபோது, பொன்னிமா நதியை

"அண்ணல் பாகத்தை யாளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது"

என உவந்து போற்றுவார் சேக்கிழார் பெருமான். அத்தகைய 'கருணையின் ஒழுக்கம்' தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களிடம் 'களிநடம்' புரிந்த காட்சி யைக் காணும் பேறு எனக்குக் கிடைத்ததை என்றென்றும் மறவேன்!

பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாதராஜா
தலைவர், மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்.

18—01—1986

ஞானச் செல்வர்

நம் பாரதத் திருநாட்டின் தனிச்சிறப்பு ஆன்மீகத்தைச் செழித்தோங்கச் செய்த அருளாளர்கள் பலர் அவதரித்து, தன்னலமிக்க தனிமனிதனை சமுதாய உணர்வில், சமத்துவநேயப்பாங்கோடிணைவித்து ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த பண்பாட்டினை உருவாக்கியதாகும். அத்தகைய அருளாளர்களில் பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தனிப் பெரும் பேரருளாளர் ஆவார். தமிழும் சைவமும் தழைத்தோங்கப் பாடுபடும் அடிகளார் சமயக் காழ்ப்புணர்வு சிறிதுமின்றிக் கொங்கு வேளிரின் புகழ் பரப்பும் 'பெருங்கதை' விழாக்கள் நடத்தும் பெருந்தகைமையே அவரது சீர்சால் தமிழுணர்வின் சிறப்பினை விளக்கும்.

வீர சைவம் தழைக்க வந்த அவ்வீர நெஞ்சினரின் அருளொழுகு கண்களும், அமுதொழுகு செஞ்சொற் சிறப்பும் அனைவரையும் கவர்வன. 'பெருங்கதை' விழாவிற் பங்கு கொள்ளும் பேற்றினை வழங்கினார்கள். அவரது அறிவின் சுடரொளியும் ஆற்றொழுக்கான சொற்பொழிவும் அதில் மிளிரும் கருத்து மணிகளும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

அவர்கள் நீடூழி வாழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்றத் தமிழன்னையை வழுத்துகிறேன்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

டாக்டர் அ. வே. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் டி.எல்.டி.

இன் சொல்லும், மலர்ந்த முகமும், புன்சிரிப்பும், தவக்கோலமும் தாங்கிய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரைக் காணும் ஒவ்வொருவருக்கும் பணிவும், பவ்யமும் தோன்றவே செய்யும்.

சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக அடிகளாரிடம் எமக்குத் தொடர்புண்டு. தமிழ்நாடு இந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டியின் மாநாடுகள் நடக்கும்போது நாங்கள் தவறாமல் அடிகளாரை அழைப்போம். எத்தனையோ பணிகள் இருந்தாலும் அடிகளார் மாநாடுகளில் கலந்துகொண்டு இனிய உரைபகன்று எங்களை உற்சாகப் படுத்துவார்கள்.

அடிகளார் தெளிந்த புலமை படைத்தவர்கள், பொருள் பொதிந்த சொற்களை நிதானமாகப்பேசி, கேட்பவர்களின் உள்ளத்தைத் தம்பால் ஈர்க்கும் பெருமகனாராக அவர்கள் விளங்குகிறார்கள்.

பழம் பெருமைக்கும், புகழுக்கும் சிறந்து விளங்கும் பேரூராதீனத்தின் ஞான பீடத்தமர்ந்து அருட்செங்கோலோச்சும் அடிகளார் தமிழ் வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றி வருகின்றார்கள்.

கோவை மாவட்டத்தில் தவத்திரு பேரூரடிகளாரும், தவத்திரு சுந்தரசுவாமிகளும் மக்களுக்கு இரு கண்களாக விளங்குபவர்கள். சைவ சமயத்தின் தனிச்சிறப்பைத் தமிழகமெங்கும் பரப்பிவரும் அடிகளாரின் தொண்டு இன்றைய இளைஞர்கட்குப் புத்துணர்வூட்டுவதாக அமைந்திருக்கிறது.

கயிலைகண்ட தமிழ் முனிவராக, சைவம் பேணும் அருட்செல்வராக, சமுதாய வளர்ச்சியில் ஊக்கம் ஊட்டும் ஆன்றோராக, தவ வாழ்க்கையில் பெருநோக்குடைய ஆதீனகர்த்தராக, இந்து சமயத்தின் காவலராக தவத்திரு பேரூரடிகளார் விளங்கி வருகிறார்கள்.

''ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ?
ஞானகுரு புகழினைநாம் வகுக்கலாமோ?''

என்ற மகாகவி பாரதியின் வாக்கின்படி தவச்சீலர் பேரூரடிகளாரின் புகழ், பெருமை, பண்பாடு, குணம் அத்தனையும் மிக மிக உயர்ந்தது. எத்தனை எழுதினாலும் அதற்கப்பாலும் விரிவுடையதாகவே இருக்கும்.

செந்தமிழ்ச் சொற்களை மலர்களாக்கிச் சிறப்பு மிக்க அறுபது ஆண்டுகள் நிறைவு பெறும் அடிகளாரை நெஞ்சம் நிறைந்த பக்தி உணர்வோடு போற்றுகின்றோம். ஆயிரம் பிறை காணும் வரை அடிகளார் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆசீர்வதிக்கத் திருச்சிராமலையில் திருக்கோயில் கொண்ட தாயுமான இறைவனைப் போற்றிப் பணிகின்றோம்.

ச. ராஜ்கவி, எம். ஏ., எம். பில்.,
வெள்ளாங்கோவில் 638054
பெரியார் மாவட்டம்

வாழ்த்தென ஆன தவமே!

பனிமலர் இதழ்மனத் தவமுனி சாந்தையர்
பாதையில் இலங்கி யோங்கித்
தனித்தமிழ்க் கலைவளர் கல்லூரி தந்தெமைத்
தழைத்திட வைத்த ஞானி
இனிமையாய்ச் சமயமும் அருள்நெறிப் பணிகளும்
ஏற்றமாய்ப் புரியும் யோகி
உறுதியில் உழைப்பினில் இளமையாய் என்றுமே
உயர்ந்திடும் அன்புத் தேனி
கனிவையும் துணிவையும் கொண்டநம் அடிகளார்
காணுக பற்பல் லாண்டே
கலந்தநல் லன்பிலே உதித்ததோர் பாடலைக்
காணிக்கை யாக்கு கின்றேன்.

வாழ்த்தவும் வாழ்த்துவார் வாழவும் வாழ்ந்திடும்
வாழ்த்தென ஆன தவமே!
வளர்தமிழ் காத்திடும் அரனென எழுந்த
வளமருள் சேர்ந்த பொருளே!
தாழ்விலாச் சமுதாய மேம்பாட்டுச் செயல்களில்
தலைமையாய்ச் சிறந்த மனமே!
கயிலைமா முனிவரே! அயர்விலாத் தொண்டரே!
காணுமிம் மணிவி ழாவில்
ஆழ்ந்ததோர் தமிழ்மனதின் அன்பூறும் சாரெடுத்து
அணியெனக் கவிதை தந்தேன்
இவர்போல யாரென்றும் புவியோர்கள் உமையேத்த
வாழ்த்தியே வணங்கு கின்றேன்.

எழுதுகோல் தெய்வம் எழுத்தும் தெய்வம்

பேராசிரியர் நாரணதுரைக்கண்ணன்
'ஜீவா'

ஜீவோதயம்
25, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-600 094

ஆன்மீகந் தழைக்க அடிகளார் வாழ்க

காந்தியச் செல்வர், சன்மார்க்க சீலர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் 1957-ஆம் ஆண்டில் 'குடியரசு' என்ற பெயரில் வார இதழ் ஒன்றைத் தொடங்கினார். அதற்கு ஆசிரியராக நண்பர் திரு. எம். கே. சாமி அவர்கள் அமைந்தார்.

'குடியரசு' வெளியீட்டு விழாவுக்கு நா. மா. அவர்கள் என்னைத் தலைமை தாங்க அழைத்தார். என் வாயிலாக 'இந்து' ஆங்கிலத் தினசரியின் துணையாசிரிய ராக இருந்த திரு. வி. கே. நரசிம்மன் அவர்களை வரவழைத்து முதல் இதழை வெளி யிடச் செய்தார்.

இவ்விழாவுக்குப் பின் நா. ம. அவர்கள் தம் தந்தை பெயரால் நடத்திவந்த நாச்சிமுத்துக் கவுண்டர் கல்லூரிக்கு எங்கள் இருவரையும் அழைத்துச் சென்று மாண வர்களிடையே 'நவயுகக்' கல்வி குறித்துப் பேசவைத்தார்.

'கோவைக் கிழார்' என்று மதிப்புடன் அழைக்கப்பட்டு வந்த பேரறிஞர் சி. எம் இராமச்சந்திர செட்டியார் அவர்கள் தாம் பொறுப்பேற்று நடத்திவந்த பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் தமிழ்க் கல்லூரிக்கு வந்து மாணவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும் என்று என்னையும் நரசிம்மனையும் கேட்டுக் கொண்டார். அப் பெரியவர் விருப்பப்படியே நாங்கள் சென்று சொற்பொழிவு ஆற்றினோம்.

அச்சமயம்தான் அக்கல்லூரிக்கு முதல்வராக இருந்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரை நான் சந்தித்தேன். பெயருக்கேற்ப அவர் சாந்தமே உருவாகக் காணப்பட்டார். ஆனால், அவர் முகத்தில் பேரறிவு பொலிவு பெற்றிருந்தது.

அவர் சமயப் பணியுடன் கல்விப் பணியையும் திறம்படச் செய்து வந்தது என்னை அவர்பால் மதிப்புக்கொள்ள வைத்தது. திருவையாறு தமிழ்க் கல்லூரியைப் போலத் தம் கல்லூரியைத் தலைசிறந்து விளங்குமாறு செய்ய அவர் அரும்பாடுபட்டு வருகிறார் என்று நான் அறிந்தேன்:

பல ஆண்டுகளுக்கு முன், நம் திருக்கோயில்களில் தமிழிலேயே அருச்சனை செய்ய வேண்டும் என்று இயக்கமொன்று எழுந்தது நண்பர்களுக்கு நினைவு இருக்கலாம். அவ்விதக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்பே பேரூர் நடராஜப் பெருமான் திருக்கோயிலில் தமிழிலேயே அருச்சனை செய்யப்பட்டு வந்தது. அந்நன் முயற்சிக்கு முதன்முதலாக முனைந்து செயல்பட்டவர் இராமசாமி அடிகளார் என்று அறிந்து நான் அவர்பால் மதிப்புக் கொள்ளலானேன்.

இதுபோன்ற நல்ல செயல் பலவற்றுக்கும் உறுதுணையாயிருந்து வரும் அடிகளார் சென்னைப் 'பல்கலைக் கழகத்தின் கல்வியமைப்புக்களிலும் முக்கியப் பங்கு கொண்டு உயர் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்துக் கொடுத்துவருகிறார்.

மடாதிபதிகளாக இருப்போர் பெரும்பாலோர் சமயத் துறையில் மட்டுமே கவனஞ் செலுத்தி வருவதை நாம் பார்த்து வருகிறோம். 'பேரூர்' மடாதிபதியான இராமசாமி அடிகளாரோ குன்றக்குடி அடிகளாரைப்போல் மக்களிடையே சமயதத்துவ உண்மைகளைப் பரப்புவதோடு கல்வி வளர்ச்சிசமுதாய முன்னேற்றம் முதலிய பல விஷயங்களிலும் மக்களுக்கு உணர்வூட்டப் பெரிதும் பாடுபட்டு வருகிறார்.

இத்தகைய சிறப்பியல்புகளெல்லாம் அமைந்துள்ள இராமசாமி அடிகளாருக்கு அறுபதாண்டு நிறைவுற்றிருப்பதை முன்னிட்டு, திருவாளர்கள் ஜி. கே சுந்தரம், சந்திரகாந்தி கோவிந்தராஜுலு, சின்னசாமிக் கவுண்டர், கிருஷ்ணராஜ வானவராயர், டாக்டர் ம. ரா. போ. குருசாமி, மணிவண்ணன், பழனிச்சாமி முதலிய அன்பர்கள் மணிவிழா நடத்த முற்பட்டிருப்பது அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,

பேரூர் ஆதீன கர்த்தரின் மணிவிழா மாண்புடன் நடைபெறுக! சிறப்புற்று ஓங்குக! இராமசாமி அடிகளார் நீடூழி வாழ்க! ஆன்மீகம் தழைக்கப் பல்லாண்டு வாழ்க!

முருகன் துணை

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

தவப் பெருந்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் திரு உருவை உளத்தால் நினைந்து போற்றுவன்.

அனுபவ மண்டபம்

பேரூர் ஆதீனத்தின் ஆதி குரு முதல்வர் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாவும், அடிகளாரின் மணிவிழாவும் நடைபெறுவதறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். நிகழ்ச்சிகள் யாவும் பொலிவுடன் சிறக்க வேண்டுவன்.

அன்று பசுவண்ணர் கல்யாண் நகரில் ''அனுபவ மண்டபம்'' அமைத்துச் சைவம் தழைக்கத் தொண்டாற்றினர். இன்று அறவோர், துறவோர் சமயச் சான்றோர், பெரியோர் முதலியோரை ஒன்றிணைத்துச் சமூக சமயக் கல்வியைப் பரப்பும் (அனுபவ மண்டபம்) பணியை மேற்கொண்டுள்ளீர்கள் இம் முயற்சியைப் பெரிதும் போற்றுகின்றேன். மக்களின் சமய உணர்வு ஓங்கவும், தாங்கள் மேன் மேலும் நல்ல பல தொண்டுகளைச் செய்து நீடு வாழவும், எல்லாம் வல்ல முருகப் பெருமானை இறைஞ்சுவன். வாழ்க! நீடுழி வாழ்க!!

அன்பன்

புலவர். மா. சிவசங்கரன்

பெங்களூர்

ஆ. வேலுமணி, எம். ஏ.
சிரவை ஆதினப் புலவர்

சிவகிரி
ஈரோடு.

திருவடிக்கு

தமிழ் முனிவ! நின் தண்ணுர் மலரடிக்கு என் வணக்கம்
அமிழ்தினிய மொழிவளர்த்து ஆண்டாறு பத்தாக்கி
இமியேனும் ஓயாமல் இனியதமிழ் விதைத்திட்டீர்
பூமிவான் உள்ளவரை புகழ்நிலைக்கும் பெரும வாழி!

மணிவிழா நாயகரே! மாத்தமிழின் நேயவரே!
பணிகள்பல தமிழுக்கு பாங்குடனே செய்தீர்கள்
அணிஅணியாய் தெய்வநெறி ஆக்கியே புறமீந்தீர்!
மணிஓசை போலநும் மனஓசை ஒலிக்கட்டும்.

சாந்தலிங்கர் மலர்ப்பதத்தை சார்ந்துமே வணங்கி நிதம்
சாந்திபெற வழிகாட்டும் சாந்தலிங்கர் வழித்தலைவ!
ஏந்தியநல் கொள்கையுடன் எந்தைமொழி உயருதற்கு
சிந்தித்து வழிகள் செய்யும் செம்மலே! நீடு வாழி!

காஞ்சிநதிக் கரைவாழும் கரைமிடற்றன் தண்தாளை
வாஞ்சையுடன் வரிசைசெய்யும் வள்ளலே நீடு வாழி!
நெஞ்சினில் நிறைந்துவாழும் நேயமிகு முனிவவாழி!
செஞ்சொல்லின் தலைவ! வாழி! செழும்புகழால் நீடுவாழி!

ஓம் திருவடியில் எம் சென்னி வைப்பம்
அன்பு
ஆ. வேலுமணி

பேராசிரியர்,
வே. சிவசுப்பிரமணியன்,
மயிலம் - 604304.

17, 4வது முதன்மைச் சாலை,
கஸ்தூரிபாய் நகர்,
அடையாறு,
சென்னை-20
15-2-86

அன்புரை

அறிவும் உருவும் திருவும் சான்ற அடிகள் மாணவப் பருவத்திலேயே அருங்குணங்கள் பலவும் வாய்க்கப் பெற்றவர். எத்துணையும் சீற்றம் இல்லாச் சிறப்பியல்புடையவர். புன்னகை பூத்த இன்முகத்துடன் வரவேற்று இனியன கனியும் நீரும் தந்து மாணவப் பருவத்திலேயே உபசரிக்கும் தன்மை நிரம்பப் பெற்றவராக இருந்தார். பணிவு என்னும் சொல்லுக்குத் தக்க இலக்கணமாகத் தமது உள்ளத்தையும் உடலையும் அமைத்துக் கொண்டிருக்கும் அடிகள் நீடு வாழ்ந்து தமிழுக்கும், நாட்டிற்கும், சைவ சமூகத்துக்கும், சமய வாழ்நர்களுக்கும் தக்காங்கு தொண்டாற்ற இறைவன் திருவருளை இறைஞ்சுகிறேன்.

அன்புடன்
வே. சிவசுப்பிரமணியன்

திருப்பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாா்

அறுபாணுண்டு போற்றி போற்றி


குருசாந்த லிங்கேசர் மடாதிபதி செந்தமிழைச்
சிவமணத்தைக் குவல யத்தில்
தருசாந்த இராமசா மித்திருசேர் அடிகள்வளர்க்
குந்தகைமை சாற்ற வற்றோ?
சிறுமழலைப் பள்ளிமுதல் உயர்கல்வி கல்லூரி
ஒழுக்கமோடே சேர்த்தீ வண்மை
அருந்தொண்டுக் குக்கொங்கு நாடதுசெய்
தவமெதுவோ அரியோ மம்மா!

சாந்தலிங்க ராமசாமி அடிகட்கே அறுபதாண்
டாயிற்றும் சார்வி ழாவே
போந்ததெனக் குரோதனவின் கும்பமதி பத்தாநாள்
குருமார்கள் கூடி னார்கள்
தீந்தமிழைச் சிவனுறைவைக் கயிலைமுனி தனித்தகவைப்
பாராட்டித் தகைமை யாலே
ஏந்திமகிழ் செல்வர்களோ இறையருளை இவர்வழியே
நனிமிகவும் ஈர்த்தார் வாழ்வார்

பேணுமுதற் குரவர்தனி குடமுழுக்கும் கல்வி நிலை
யங்கள்தம் பெருவி ழாவும்
காணுநலச் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின்
பவளவிழாக் காண்ப தென்னக்
காணரிதும் கேட்பரிதும் கண்டுகேட் டுள்ளுறைவான்
கழலடிக்க கவினுஞ் சிந்தை
பேணுமன அறவாணர் அறிவாளர் ஆன்றோர்உள்
உறைசிவம்போல் பெரிதே வாழ்க,

தொண்டன்
க. பா. வேல்முருகன்
திருப்பாதிரிப்புலியூர்

குறிப்பு : பா.1 3ம் அடி= சேர்த்து + ஈ + வண்மை



அடிகளார் அவர்களும் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களும்



முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்
வித்துவான் சிவகளை மு. நாராயணன், (தவத்திரு) சுந்தர (சுவாமிகள்)
தவத்திரு பேரூர் (சாந்தலிங்க) இராமசாமி அடிகளார்,
வித்துவான் தி. மு. சங்கரலிங்கம்



அடிகளாரும் அறிஞர் பெருமக்களும்

நுகர்வனவற்றை நெறிப்படுத்துக!

மூலிகை மணி, க. வெங்கடேசன், எம்.ஏ.,பி.எச்.டி.

ஆம்! உள்ளத்தாலும் உருவத்தாலும் 'சாந்த சொருபியாக' விளங்கும் 'கயிலை மணி' தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரிடமிருந்து யான் பெற்ற வாழ்க்கை மந்திரம் 'நுகர்வனவற்றை நெறிப்படுத்துக', என்பதே! ஏறக்குறைய் பத்தாண்டு காலமாக அவருடன் பழகிய இனிய அனுபவத்திலிருந்து யான் உணர்ந்ததும் அறிந்ததும், பயன் மிகுந்தவையாகும்.

காட்சிக்கு எளிமையாகவும், கருத்திற்கு இன்சொல்லும் என வாழும் அடிகளார் துறவி என்றாலும், தமிழின் மீதும், சைவத்தின் மீதும் தீராக் காதல் கொண்டவர்.

சென்னைப் பல்கலைக்கழக 'சிண்டிகேட்' குழுவில் தொடர்ந்து அவர்கள் ஆற்றிய பணிகள் வரலாற்றுச் சிறப்புடையன. அமைதியானதொரு தமிழ்ப் புரட்சியையே அவர் நிகழ்த்தியுள்ளார். தமிழ் மொழிபெயர்ப்புக்கென—ஒரு மொழி பெயர்ப்பாளர் பதவியை உருவாக்கிய பெருமை அடிகளார் அவர்களையே சாரும். அவருக்குப்பின் 'பல்கலைக்கழக சிண்டிகேட்டில் 'தமிழுக்காக உரிமைக் குரல் கொடுக்க ஆளில்லாமல் தமிழ்த்துறை 'சவலைக்' குழந்தையாகிக் கொண்டிருக்கின்றது.

ஒருமுறை எமது மூலிகைமணி வாசகர்கள் சார்பில் ஆய்வுச் சொற்பொழிவு ஒன்றினைச் சென்னையில் ஏற்பாடு செய்திருந்தேன், 'சித்தர் நெறி' எனும் தலைப்பில் உரையாற்றுமாறு அடிகளாரை வேண்டினேன். ஒரு மணி நேரம் உரையாற்றிய அடிகளார் அருவியெனச் சித்தர் வாழ்வியலைக் குறிப்பிட்டு மணி முடியென

'நுகர்வனவற்றை நெறிப்படுத்தியவர்கள் சித்தர்கள் ஆகலாம்'

என்று குறிப்பிட்டார்

சித்தர்களின் தத்துவம்—வாழ்க்கை குழப்பமானது, புரியாதது—என்று நினைத்தவர்களுக்கு அன்று அடிகளார் கூறிய இக்கருத்து 'புதிய பாதையைக் காட்டியது. சுருங்கக்கூறி விளங்க வைக்கும் நுட்பமான திறனை அன்று அடிகளார் உரையில் உணர்ந்தேன்.

இன்று அயல் நாடுகளிலும், தமிழகமெங்கும் சித்தர் வாழ்க்கை நெறி பற்றி யான் உரையாற்ற முயலும்போதெல்லாம்,

'நுகர்வனவற்றை நெறிப்படுத்துக' எனும் அடிகளாரின் தாரக மந்திரத்தைத்தான் வழிமொழிந்து பேசி வருகின்றேன். அவ்வகையில் எனக்கு அடிகளார், 'அடியெடுத்துக் கொடுத்த அண்ணல்' ஆவார்.

தமிழ்ப் புலமையிலும். சைவ நெறியிலும் தனக்கென ஒரு பின்னணியை உருவாக்கியுள்ள அடிகளார், அமைதியுடன் ஆற்றியுள்ள பணிகள் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.

அப்பரடிகள் போல் தளரா நெஞ்சத்துடன் கயிலை சென்று கயிலைநாதனருள் பெற்ற புனிதர்

பல்கலைக்கழகத்தில் அருந்தமிழ்ப் பணியாற்றித் தமிழைப் பேணிய நற்றமிழ்க் காவலர்

வலிமையான சிந்தனைகளை எளிமையான சொற்களால் எல்லோர் நெஞ்சிலும் பதிப்பிக்கும் சொல்லேர் உழவர்

சிவநெறி தழைக்க அயராது பாடுபடும் சிவநெறித் தொண்டர்

நூற்றுக்கணக்கான புலவர்களையும் பண்டிதர்களையும் உருவாக்கிய தமிழ்ப் புரவலர்

என்போன்ற சித்தர் புகழ் பரப்பும் அன்பர்கட்கு வழிகாட்டும் வித்தகர்

பேரூராதீனத்தின் கடவுள் மனிதர்

அடிகளார்!

அவர் பல்லாண்டு வாழ்க! என வாழ்த்துவது 'தமிழையும் சைவத்தையும்' போற்றுவதற்கு இணையானதாகும்!

வாழ்க அடிகளார்;

வளர்க அவர்தம் திருப்பணி!

நிறை பண்பின் பேருருவம்

''எழில் முதல்வன்''

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ.,பி.எச் டி.
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி-620023.

பேரூராதீனம், 'கயிலை முனிவர்' தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் ஞானத்தின் திருவுருவம்; நிறை பண்பின் பேருருவம். அவர்களை நான் சந்திக்க நேர்ந்த இரு நிகழ்ச்சிகள் என் நெஞ்சில் என்றென்றும் பசுமையாக இருந்து வருகின்றன.

1964 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நான் அவர்களை முதன் முதலாகக் கண்டேன். நான் அப்போது கோவை அரசு கலைக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தேன். செந்தமிழ் அச்சகம் மாரியப்பன் அவர்களும், புலவர் ஆதி அவர்களும் ஏற்பாடு செய்திருந்த கலை இலக்கியப் பெருமன்றக் கூட்டம் ஒன்றில் அடிகளார் உரையாற்றினார்கள். அந் நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டுபேசினேன். கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் அவர்களும் பேசினார்கள். கூட்டம் கோவை இராமநாதபுரத்தில் நடந்தது. ஆதீனகர்த்தர் ஒருவர் அம்மாதிரிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியது என் இளமை உள்ளத்தில் பெரு வியப்பாய்ப் பதிந்தது. முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டதாகவே அவர்கள் பேச்சு அமைந்திருந்தது.

எனது இரண்டாவது சந்திப்பு 1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் எட்டாம் நாள் ஆடி வெள்ளியன்று நிகழ்ந்தது. அடிகளார்பால் ஓர் ஆதரவுகோரி அவர்களைச் சந்தித்தேன். அதற்கு முதல் நாள் கோவை அரசு கலைக்கல்லூரிக்குச் சென்று முதல்வர் டாக்டர் கா. மீ. அவர்களையும் சந்தித்திருந்தேன். அடிகளாரிடம், ''நான் டாக்டர் கா.மீ.யின் மாணவன் என்றும், ப. சு. ஐயாவின் அன்பிற்குரியவன்'' என்றும் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றுவதாகவும் கூறினேன். அடிகளார் அவர்கள் விபூதிப் பிரசாதமும், குங்குமமும் தந்தார்கள். முருகக் காய்ச்சிய பாலையும் அருந்தக் கொடுத்தார்கள். 'பேரூராதீனம்' என்ற கையடக்க நூல் ஒன்றையும் வழங்கினார்கள். 'வண்ணத்தியல்பு' என்ற நூலை நான் விலை கொடுத்து வாங்கினேன். முறைப்படி நான் அவர்களைச் சந்தித்த உடனேயே நிலம் தோய வணங்கியிருக்க வேண்டும்; ஒரு சலுகையை வேண்டிச் செல்கிறோம்; முதலிலேயே காலில் விழுந்தால் ஏதோ காரியத்திற்காக விழுவதாய் நினைத்துக் கொள்ளலாம், என்று தயங்கி வாளா இருந்து

விட்டேன். நான் அவர்களிடம் விடைபெற்றுக் கொள்ளும் நிலையில்தான் வணங்கினேன்.

ஆதீனகர்த்தராகிய தவத்துறவி ஒருவரை நிலம்தோய வணங்குவதே முறை. மேலும் அடிகளார் அவர்கள் தனி மனித நிலையில் நிறை பண்பின் பேருருவாகத் திகழ் கிறார்கள். அவர்கட்கு முறைப்படி வணக்கம் செலுத்துவதே சால்பு என்று என் உள் மனம் எனக்கு அறிவுறுத்தியது. (என்னைப் பற்றி அவர்கள் என்ன நினைத்தார்களோ தெரியாது!)

அவர்களை சந்தித்துப் பேசியது அரை மணி நேரத்திற்கும் குறைவாகவே இருக்கும். அந்த அரை மணி நேரத்தில் நான் அவர்களது அன்பில் முழுமையாக நனைந்தேன் எனில் அது மிகையாகாது.

நிறை பண்பின் பேருருவாய் விளங்கும் அடிகளார் அவர்கள் மணிவிழாக் காணும் செய்தி செவியில் தேனாகப் பாய்வதை உணர்கிறேன்.

அடிகளார் அவர்கள் நூறாண்டுக் காலம் பெருவாழ்வு வாழ்ந்து, தமிழ் மொழிக்கும் தமிழின் மக்களுக்கும் அருள் பாலிக்க வேண்டும்! இதுவே என் ஆசை!

பேராசிரியர்
அ. மு. பரமசிவானந்தம்

15—01—1986

வையம் வாழத் தான் வாழ்பவர்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மணிவிழா அறிந்து மகிழ்ந்தேன். அடிகளார் இன்னும் நெடுங்காலம் சிறக்க வாழ்ந்து சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கிடச் செய்வன செய்து சிறப்பார்களாக!

அடிகளாரின் எளிமையும் சைவத்தமிழ்த் தொண்டும் நாடறிந்தன, சமயம் சமுதாயத்தோடு இணைந்த ஒன்றே என்பதை உணர்த்தி மக்கள் தொண்டே இறைபணி என்னும் கருத்தில் செயலாற்றிச் சிறக்கும் அடிகளார் அனைவராலும் மதிக்கத்தக்கவராவர்.

அடிகளார் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிலும் பாடநூல் குழுவிலும் இருந்தபோது என்னுடன் இணைந்து செயலாற்றிய நாளில் செய்த நேரிய பணிகள் என் முன் நிழலாடுகின்றன. செய்வன திருந்தச் செய்யும் திறனும், உய்யும் நெறியினை மக்களுக்கு உணர்த்தும் வழியும் அடிகளார் கண்டுகொண்டவை. 'வையம் வாழத்தான் வாழும்' வகையில் மெய்த்திருத்தொண்டராய் உண்மைச் சைவராய் உயிர்களின் நலன் போற்றும் அடிகளார் பாரில் பன்னாள் சிறக்க வாழ்ந்து தெய்வ நெறியையும் செந்தமிழினையும் ஓம்பி வளர்ப்பார்களாக!

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர் & தமிழ் மொழித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம். சென்னை-600 005.

வான மீனினும் பன்னாள் வாழ்க!

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் தமிழிற்கும், சமயத்திற்கும் கிடைத்த வரப்பிரசாதம் ஆவர். பேரூர் ஆதீனத்தில் பேரூர்த் தமிழ்க் கல்லூரியில் அவர் ஆற்றி வரும் தமிழ்த் தொண்டு நின்று நிலைக்கவல்லது. அடிகளாரின் சமயப்பணி நெஞ்சுகொளத் தக்கது. அறிவாற்றலும், அன்பும், பண்பும், ஆன்மீகமும் இணைந்து காட்சி தரும் அடிகளார் இளைஞருலகு முன்னேற ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறார். சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினராகவும், தமிழ்ப் பாடத் திட்டக்குழு உறுப்பினராகவும் இருந்து அவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. சைவமும், தமிழும் தம் இரு கண்களெனப் பேணி வளர்த்து வரும் அடிகளார் வான மீனினும் பன்னாள் வாழ அருளுமாறு அவனருளாலே அவன் தாள் வணங்குவன். அடிகளார் மணி விழாக் கண்டு பல்லாண்டு வாழ்க!

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, M.A.PhD.
முதல்வர் & செயலர்

கே. வி. எஸ். எல். கல்லூரி
திருப்பனந்தாள்-612504

18—1—1986

அன்பினால் இன்பம் ஆர்வார்....

தவத்திரு இராமசாமி அடிகளார் அவர்கள் கடந்த 35 ஆண்டுகளாக நெருங்கிப் பழகி வரும் அருளாளராவர். அன்பினால் இன்பம் ஆர்வார் எனச் சேக்கிழார் கூறும் செந்தமிழுக்கு இலக்கியம் ஆவர். அஃகி அகன்ற அறிவும், ஆழ்ந்த தமிழ் நெஞ்சமும், தெய்வ மணம் கமழும் திருத்தோற்றமும், திருத்தொண்டின் பொலிவும் விளங்கக் காட்சி அளிப்பவர். 1952ல் திருநெல் வேலியில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் நடத்தப்பெற்ற சிவஞான போத வகுப்பில் கலந்து கொண்டதன் வாயிலாக, அக்காலத்து 24 நாட்கள் நெருங்கிப் பழகும் இனிய வாய்ப்புக் கிடைத்தது. அன்று முதல் நீரவர் கேண்மை நிறைநீரவாதலின் அவர்களின் தொடர்பும் அன்பும் பெருகிய வண்ணம் இருந்து வருகின்றது. அவர்கள் சாந்தலிங்க அடிகளார் ஆதீனத்தின் குரு முதல்வராக எழுந்தருளியதிலிருந்து அத்திருமடமும் அதனைச் சார்ந்து விளங்கும் தமிழ்க் கல்லூரியும் பல்லாற்றானும் சிறந்து விளங்கித் திகழ்கின்றன. கலைபயில் தெளிவும் மலர்நிகர் மாட்சியும் கொண்ட அவர்களின் அருளுரை தமிழ்ச் சைவ உலகம் பெரிதும் போற்றி ஏற்றற்குரியது. அவ்வாறு ஏற்றும் வருகிறது.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ.

டாக்டர் க. குழந்தைவேல், M.A. (Ohio) Ph.D.
செயலர், ஸ்ரீ ராமகிருஷ்ணமிசின் வித்யாலயம்
கலைக்கல்லூரி, கோவை-641024.

தவத்திரு இராமசாமி அடிகளார் அவர்களது மணிவிழாச் செய்தி மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. சமயத்துக்கும் தமிழுக்கும் அவர் ஆற்றி வரும் சேவை மிகப் பெரிது; போற்றுதற் குரியது. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் தலைவராகவும், திருமடம் நடத்தும் தமிழ்க் கல்லூரியின் முதல்வராகவும் பலப்பல ஆண்டுகளாக அரும்பணியாற்றி வந்து கொண்டுள் ளார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு, செனட் சபை போன்றவற்றின் உறுப்பினராக இருந்து பல்கலைக்கழகம் கல்லூரிகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பல நல்ல அறிவுரைகள் கூறி வந்துள்ளார்கள். தமிழ்க் கல்லூரியில் இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி வகுப்புகள் போன்றவற்றைத் துவக்கி கல்லூரியின் தரத்தை மிகவும் உயர்த்தி உள்ளார்கள். தமிழில் கல்வி, ஆழ்ந்த புலமை, பண்பாடு தழுவிய கல்வி, கல்வி நிலையங்களில் கட்டுப்பாடு ஆகியவற்றைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளார்கள். இறைவன் அருளால் அடிகளார் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து மேலும் மேலும் சிறப்பாக சமயப்பணியிலும், சமுதாயப் பணியிலும் ஈடுபட்டு நம் சமுதாயத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென இறைவனை மனமார வேண்டுகிறேன்.

குழந்தைவேல்
22—I—86

யான் கண்ட அடிகளார்!

கட்டுரைச் செல்வன் சிவகளை மு. சுப்பையா சிரவை யாதீனப்புலவன்
35, சிவபுரம் நெல்லை.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் அறுபதாம் ஆண்டைக் கடந்து அறுபத்தோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்கள், அவர்களது வாழ்வு பூரண வாழ்வு. புகழ்மிக்க வாழ்வு. துறவு வாழ்வு. பூர்வாசிரமம் முதலிபாளையம் என்ற கிராமத்தில் தவத்திரு சிவராம சுவாமிகளின் திருமகனாய் 1925ல் அவதரித்தார்கள். இராமசுவாமி என்ற நாமத்தோடு ஓடித் திரிந்து ஆடி மகிழ்ந்த சின்னஞ்சிறு பிராயத்திலேயே தந்தையார் கௌமார மடத்திற்குத் தத்தமளித்தார்கள். இப்போது சிரவை யாதீனமாக அருளாட்சி புரியும் தவத்திரு சுந்தரம் சுவாமிகளும் இவர்களும் இரட்டையர்களாய்த் திகழ்ந்தார்கள். இருவரும் நடமாடும் தெய்வமாய்த் திகழ்ந்த தவத்திரு இராமானந்த சுவாமிகட்கு அணுக்கத் தொண்டு புரியும் அரும் பெரும் பேற்றினைப் பெற்றவர்கள். இருவரும் தவத்திரு கந்தசுவாமி சுவாமிகளிடம் தமிழ்க் கல்வி பயின்றவர்கள். முறையாகத் தமிழறிவைப் பெருக்கிக் கொள்ள மயிலம் தமிழ்க் கல்லூரியிற் சேர்ந்தார்கள். ஐந்தாண்டு வித்துவான் படிப்பு அப்போது (1948) அவர்களது நட்பு கிடைத்தது. அதன்பின் வீரசைவத் திருமடமான பேரூர் சாந்தலிங்கர் திருமடத்துக்கு மயிலம் ஆதீனகர்த்தர் அவர்களால் இராமசாமி ஐயா என்ற நாமத்துடன் இளவரசுப் பட்டம் கட்டப் பெற்றார்கள். "விளையும் பயிர் முளையிலே" என்ற பழமொழிக்கொப்ப இவர்களது ஆற்றலையுணர்ந்த மயிலம் பதினெட்டாம் பட்டம் இவர்களிடம் தனிப்பரிவு காட்டி அரவணைத்தார்கள். ஆரம்பத்தில் இராமானந்தரின் கருணைக்கண்பட்ட இவர்கள் மயிலம்குருமுனிவரிடம் தமிழோடு வீரசைவத் தீக்கையும் பெற்றார்கள்.

கொங்கு நாட்டில் சைவ சமயத்தில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கியவர்கள் தவத்திரு இராமானந்த சுவாமிகள். அவர்கள் நெல்லை வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு முருகனைத் தலைவனாகக் கொண்ட கௌமாரத்தைப் பரப்பும் கௌமார மடத்தையும் கௌமார சபையையும் சிரவணபுரத்தில் நிறுவினார்கள். சாதி வேற்றுமையற்று துறவிகளை உருவாக்கினார்கள். கொலைபுலை நீக்கித் திருநீறிடவும் அக்க மாலையணியவும் மக்களைப் பழக்கினர். நால்வரை உருவாக்கி நான்கு புறமனுப்பினார்கள். அவர்களில் தவத்திரு மாணிக்கவாசக சுவாமிகளின் தலைமையின் கீழ்ப் பேரூர் சாந்தலிங்கர் திருமடம் சீரும் சிறப்பும் பெற்றது. அவர்கள் பேரூர் சத்வித்யா சன்மார்க்க சபையினை நிறுவிய ஞானியார் சுவாமிகள். மறைமலையடிகள், கயப்பாக்கம் சதாசிவஞ் செட்டியார், வீர சுப்பையா சுவாமிகள், திரு வி. க. சரவண முதலியார் போன்ற அறிஞர்களை ஆண்டாண்டு தோறும் அழைத்துச் சைவத்தையும் தமிழையும் வளர்த்ததுடன் திருமடத்துக்கும் நிலையான வருவாயை அமைத்தார்கள். அவர்களின் சீடராகத் திகழ்ந்த தவத்திரு ஆறுமுக சுவாமிகள் தக்கோரான நம் இராமசுவாமி ஐயாவைத் தேர்ந்தெடுத்து இளவரசாக்கினார்கள். மயிலம் கல்லூரிப்படிப்பை முடித்து வந்த இராமசுவாமி ஐயா அவர்கட்குத் திருவண்ணாமலை ஆதீனம் குருமகா சந்நிதானம் தவத்திரு அருணாசல தேசிக பரமாசாரியாரின் (குன்றக்குடியடிகளாரின்) தொடர்பு கிடைத்தது. இராமசாமி ஐயா

இராமசாமியடிகளானார்கள். கல்லாடை புனையும் போது சாந்தலிங்க இராமசாமி யடிகள் என்ற திட்சா நாமம் பெற்றார்கள்.

கொங்கு நாட்டில் தன்னிகரற்ற தலைவர்களாகத் திகழ்ந்த சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார், கோவைக்கிழார் சி. எம். இராமச்சந்திர செட்டியார் வெள்ளக்கிணறு வெ. சி. சுப்பைய கவுண்டர், சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய, முதலியார், திவான் பகதூர் இரத்தின சபாபதி முதலியார், பொள்ளாச்சி கொடை வள்ளல் N. மகாலிங்கம், கவியரசு கு. நடேச கவுண்டர் ஆகியோரது துணை கொண்டு தமிழ்க் கல்லூரி நிறுவி வளர்த்தார்கள். பேரூரில் அடியார் நடுவுள் இருக்கும் அருளை 1954லிருந்து 1963 வரை பெற்றேன்.

தமிழ்க் கல்லூரியுடன் உயர் நிலைப்பள்ளியையும், மழலைப் பள்ளியையும் உரு வாக்கினார்கள். தமிழ் வித்துவான் எனப் பட்டமளித்து வந்த சென்னைப் பல்கலைக் கழகம் அதனை மாற்றிப் புலவர் எனப் பட்டம் கொடுக்கும்படி செய்தவர்கள் இவர் களே. தமிழில் இளங்கலைப் பட்டம் (B.Lit.) உருவாக்க உறுதுணையாக இருந்தார்கள். சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினராகித் தமிழ்ப் பாடபோதனையிற் பல புதிய மாற்றங்களைப் புரிந்த புகழ் இவர்கட்குண்டு.

கருவிலே திருவுடைய அடிகளார் குறிக்கோளுடன் வாழ்பவர். கொள்கையிற் பிடிப்புடையவர். கடமையில் வழுவாதவர். கட்டுப்பாடு மிக்கவர். உணவிலும் கட்டுப்பாடு, எளிமை அவருடைய பண்பாடு. உழைப்பு அவருடைய மூச்சாகும். "எதனைத் துறப்பினும் தமிழைத் துறவாத் துறவி" என முத்தமிழ் வித்தகரால் போற்றப் பெறுபவர். தமிழுக்காகத் தன்னைத் தியாகம் செய்தவர். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது அவரது குறிக்கோள். சைவமும் தமிழும் இவரது இரு கண் களாகும். அதனால் தமிழ் வழிபாடு, தமிழ் குடமுழுக்கு, தமிழருச்சனை, தமிழ்த் திருமணம், தமிழ் அந்திமகிரியை ஆகியவற்றைக் கொங்கு நாட்டிற் பழக்கத்திற் கொண்டு வந்தவர். திருமுறைகளில் ஊற்றமும் திருக்குறளிற்றோய்வும் மிக்கவர். அனு தினமும் காலையும் மாலையும் அங்கைத்தலத்தில் இலிங்கத்தை வைத்துக் "கயிலை மலையானே போற்றி போற்றி" எனக்கடி மலர் தூவிப் பூசித்ததின் பலன் கயிலைக் காட்சி கண்டு "கயிலை மாமுனிவர்" என்ற பட்டத்தைப் பெற்றதாகும். அருள்நெறித் திருக்கூட்டத்தையமைத்து வளர்ச்சி கண்டு தமிழ்நெறி பரப்பியதிற் பெரும் பங்கு கொண்டவர் நம் அடிகள். தெய்வீகப் பேரவையில் அங்கம் வகித்து ஆக்கப்பணி புரிந் தவர் நம் அடிகள். பஞ்சாலைத் தொழிலாளர்கள் தொண்டாற்றும் மருதமலைக் கிருத்திகைக் கழகத்தின் புலவராய்த் திகழ்ந்து புகழ் சேர்த்த புண்ணியர் நம் அடிகள். விசுவ இந்து பரிட்சத்திற் பங்கு பற்றித் துறவியர் மாநாட்டிற்குத் தூணாய் விளங்கி நாடு தழுவிய தொண்டினை ஆற்றுபவர் நம்அடிகள். சிறைச்சாலைச் சொற்பொழிவால் சிந்தை திருத்தும் சீர்திருத்தவாதி நம் அடிகள். சாந்தலிங்கர் நூல்களில் தனிப் பயிற்சி மிக்கவர்கள். எடுத்தியம்பும் ஆற்றலும் எளிய நடையில் எழுதும் வல்லமையும் இவர் கட்குண்டு பட்டிதொட்டிகட்கெல்லாம் சென்று தமிழ்ப்பணியுடன் சமயப்பணியும் தவத்திரு சுந்தர சுவாமிகளுடன் இணைந்து புரிந்து வருகிறார்கள். அறுபதாண்டு நிறைவுறும்தவ முனிவரான இவர்களுடன் 38 ஆண்டுகள் நட்புடன் பழகும் பேற்றையும் பெருமையையும் பெற்றது முன் செய்த தவப்பயனேயாகும். இதயம் கவர்ந்த எம் அடிகள் பல்லாயிரம் பிறைகண்டு இன்னும்பீடுடன் திகழ எல்லாம் வல்ல கச்சியேகம்ப னையும் எம் செந்தில் மேய வள்ளி மணாளனையும் இறைஞ்சுகிறேன்.

டாக்டர் அ. அ. மணவாளன்
இணைப் பேராசிரியர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

மேலைச் சிதம்பரம் எனப் பெயர் பெற்ற பேரூரில் ஞானபீடம் அமைத்தருளிய தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளின் அருள் தோன்றலாக இன்று நம்மிடையே வாழ்பவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவர். சமயப் பணியைத் திருமடத்தின் அகஎல்லையிலேயே அமர்ந்து அருள்பாலித்து வந்த மரபினை மாற்றிச் சமுதாய வீதிகளில் உலாவந்து, சைவசமயத்தை மக்களிடம் எடுத்துச் சொல்ல முயன்ற முதல் ஆதீன அருளாளர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் எனலாம். அவர்தம் அருள்நெறித் திருக்கூட்டம் வழியே சமுதாயத்தின் இருண்மை இயற்கையை நேரிற்கண்டு இரங்கிய நம் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மக்களின் அகக் கண்களாகிய கல்வியைத் திறந்தாலன்றிச் சமயப் பணியைச் செவ்வனே செய்ய இயலாது எனக் கருதிக் கல்விப் பணியைத்—தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை—தம் சிறப்புத் தொண்டாகக் கருதி தொண்டாற்றி வருபவர்.

அடிகளாரது தொண்டாற்றும் முறையை வன்தொண்டர் முறை எனலாம். தொண்டர்கள் வந்தால் அருள் செய்வது மரபு. ஆனால் அடிகளார் மக்களிடம் தாமே இரங்கிச் சென்று அவர்களைத் தொண்டர்களாக்கும் முறை இந்த நூற்றாண்டிற்கு ஏற்ற முறைமை; போற்றி வணங்கத் தக்கது. அடிகளார் வன்தொண்டர் மட்டுமல்லர்; மேட்டுக்குடி மனப்பான்மையும் இல்லாதவர். கல்வி அல்லது சமயஞ் சார்ந்த தொண்டாற்றுகையில் சமுதாயத்து உயர் மட்டத்தில் உள்ளவர்களையும் அணுகுவார். கீழ்த்தட்டு மக்களிடத்தும் செல்வார், அகப்புற அழுக்குகளாகிய சேறு படிந்த நிலம் என்று ஒதுங்கிச் செல்லாத உள்ளம் படைத்தவர். ''கால் சேறாகும் என்று சேற்றில் இறங்காமலே இருந்தால் அதைத் தூய்மைப் படுத்துவது எப்படி? வினை முடிந்ததும்சேறான காலையும் கழுவிக் கொள்ளலாம்; இடமும் தூய்மை ஆகும்; துணிச்சலாக இறங்க வேண்டும்'' என்பது இவர்தம் கொள்கை. நல்லவர்கள் பலருக்கு இயல்பாக இல்லாத இந்தத் தெளிவும் துணிவும் அடிகளாரிடம் அமைந்திருப்பது குறித்து அவரது மாணவன் என்ற முறையில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இந்தத் தெளிவும், துணிவும், தூய்மையும், சாந்தலிங்கர் தண்ணருளும் நாளும் வளர்ந்து அடிகளாரின் திருப்புகழை நன்கு விளங்கச் செய்ய இறைவன் இனிது அருள்வானாக.

வெண்கொற்றக் குடையா? வெயிலுக்கேற்ற குடையா?

சொல்லின் செல்வர் சுகி. சிவம்

இல்லறத்தில் விரக்தி மனப்பான்மை ஏற்பட்டுப் படிப்படியாகத் துறவறத்தைத் தழுவுவது இயற்கையானது. நேரடித் துறவு சிக்கலானது. பிரச்சினைகட்கு உரியது.

பேரூர் முனிவர் தவத்திரு இராமசாமி அடிகளார் அவர்கள் அத்தகையவாழ்வு நெறியைத் தேர்ந்தெடுத்து இன்று அறுபதாண்டுகள் நிறைவுற்று நாம் வணங்கும் வண்ணம் வாழ்கிறார்கள்.

துறவியர்கள் சித்தர் போல், நாடோடி ஞானியர் போல் சிறகு முளைத்த தவப் பறவைகளாகத் திரிந்த காலம் ஒன்று உண்டு. அப்போது அவர்களுக்கு அவர்தம் தேவைகட்குச் சமுதாயம் துணைநின்றது.

'சொல் விருந்து ஓம்பி' என்ற திருக்குறள் வரிக்குத் துறவியரைப் பேணி என்று அர்த்தம் செய்து கொண்டு துறவியர்க்கு விருந்தளித்துக் காத்தனர் இல்லறத்தார்.

இன்று அப்படி இல்லை. நிறுவனம், மடம் என்ற சிக்கல் பிறந்துவிட்டது. துறவியர்க்கும் முகவரி தோன்றிவிட்டது. பல நூறு குடும்பத்தார்க்குச் சோறு போடும் பொறுப்பு தோன்றிவிட்டது. அந்தப் பணியையும் மேற்கொண்டவர் நம் அடிகள் அவர்கள்.


சைவ வாழ்வியலில் சமணத்தின் தாக்குதலுக்குப் பின் இரண்டாவது மாற்றம் பிறந்தது. கல்வி நிறுவனங்களில், மருத்துவமனைகளில் துறவியர் பொறுப்பேற்றல் என்ற புதிய நெருக்கடி தோன்றியது. அந்தப் பொறுப்பையும் ஏற்றுக் காலத்துக்கேற்பத் தம்மை அமைத்துக் கொண்டவர் நம் அடிகள்.

திருமடங்களின் சம்பிரதாயங்களையும் விட்டுவிடாமல் பொதுமக்களின் விருப்பங்களையும் புறக்கணிக்காமல் காலத்தின் தேவைக்கேற்பத் தம்மைப் புதுப்பித்துக் கொண்டவர் நம் அடிகள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தொடங்கி வைத்த புதிய பாசறையின் பொதுத் தளபதியாக விளங்கியவர் நம் அடிகள், தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தனித் தலைமையால் தமிழ்நாடு தெய்விகப் பேரவை தமிழகத்தில் ஏற்படுத்திய சமய மறுமலர்ச்சி அற்புதமானது.

ஆனால் அந்தப் பணிகளைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆற்றும் வண்ணம் அவரது தலைமையை, தெய்விகப் பேரவையில் நிலைபெறச் செய்த பெருமை இருவருக்கு உண்டு. ஒருவர் சிரவைத் துறவரசர் தவத்திரு சுந்தர சுவாமிகள்; மற்றவர் நம் அடிகள்.

மடாதிபதி பதவி—மன்னருக்குத் தலைமேல் நிற்கும் வெண்கொற்றக் குடையாக இருந்தது. அதனை மாற்றி மக்களின் மழைக்கும், வெயிலுக்கும் ஏற்ற குடையாக உண்மைப்படுத்திய பெருமை உடையவர் நம் அடிகள்.



தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
மணிவிழா மலர்

1986

அருட்பார்வையில் அறநிலையங்கள்



தமிழ்க் கல்லூரித் தொடக்க விழா



பாரதக் குடியரசுத் துணைத் தலைவர்
திரு பி. டி. ஜட்டி அவர்களுக்கு ஆதீனத்தில்
பொன் ஆடை போர்த்துதல்



அருள்மிகு
சாந்தலிங்கப் பெருமான்
திருக்கோயிலும் திருமடமும்

கொங்கு நாட்டின் தெய்வத் திருத்தலமாக விளங்குவது திருப்பேரூர். பேரூர் சமய வரலாற்றுத் துறைகளில் பழமை வாய்ந்தது. பிறவா நெறி மேலைச் சிதம்பரம் என்னும் பெயரை உடையது. தமிழ் நலங்கனிந்த அருட் சான்றோர்கள் புகழ்ந்து பாராட்டிய திருத்தலம். 'மீ கொங்கிலணி காஞ்சி வாய்ப் பேரூர்ப் பெருமானை," "பேரூர் உறைவாய்ப் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே" என்று குறிப்பிடுகிறார் ஆளுடைய நம்பியாகிய சுந்தரர். சேக்கிழார் பெருமானும் சங்கச் சான்றோர்களும் சிறப்பித்துக் கூறியுள்ளனர். தற்போது தொழில் துறையில் மிகச் சிறந்து விளங்கும் கோவை நகருக்கு மேற்கே விளங்குகிறது இத்தலம். இங்கு சுமார் முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் தமிழ்நாடு செய்த தவப்பயனாய் விளங்கிய நமது ஆதிகுரு முதல்வர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் எழுந்தருளித் தவம் புரிந்துள்ளார்கள்.

சாந்தலிங்க அடிகளார், பற்றற்று நிலையாமை யுணர்ந்து, பிறப்பறுக்கும் நெறியாகிய அருள் ஞான நெறியில் விளங்கிய செந்தமிழ்ப் புலவர். இவர்கள் திருவாவடுதுறையாதீனம் குரு முதல்வர் தவத்திரு நமச்சிவாய மூர்த்திகளது முதன் மாணவராகிய துறையூர் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர்கள். பின்னர் தமிழ் நாட்டுத் தலங்களை வழிபட்டுவருங்கால் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளது தொடர்பும் கொண்டனர். இருவருமாகக் காஞ்சிபுரம் நோக்கிச் செல்லும் வழியில் புதுச்சேரியை அடுத்துள்ள பொம்மை பாளையத்தில் சிவ ஞானியாக விளங்கிய அருள்மிகு சிவஞான பாலய சுவாமிகள் மீது பாடல் பாடுமாறு சாந்தலிங்க அடிகளார் சிவப்பிரகாசரிடம் கேட்டுக் கொண்டபோது யான் தெய்வங்களைப் பற்றித்தான் பாடுவேன் என்று அவர் கூற இருவரும் அண்மையில் இருந்த ஓர் ஊரில் இரவும் தங்கினர். சிவப்பிரகாசர் கனவில் முருகப் பெருமான் தோற்றி மலர்களைக் கொடுத்து மாலையாக்கித் தருகவெனக் கூறி மறைந்தார். பின் சிவப்பிரகாசர் சாந்தலிங்க அடிகளாரிடம் நிகழ்ந்தது கூறிச் சிவஞான பாலய சுவாமிகள் மீது பாடல் பாடுவதை எண்ணி 'நெஞ்சுவிடு தூது' என்னும் அருமையான நூலைப்பாடிச் சிவஞான பாலய சுவாமிகளை வழிபட்டுச் சிவப்பிரகாசர் அருளுபதேசம் பெற்றார். சிவஞான பாலயரது அருளாணையின் வண்ணம், சாந்தலிங்கர், சிவப்பிரகாசரது தங்கையாகிய ஞானாம்பிகை அம்மையாரைத் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார்.

சாந்தலிங்க அடிகளார் திருப்பேரூரில் திருமடத்து அடியார்கள் பலருடன் விளங்கினார். பிற சமயவாதிகட்கெல்லாம், தம் சமயச் சிறப்புக்களை விளக்கிப் பதில் கூறிச் சைவச் செந்நெறியை வளர்த்த பெருந்தகை நமது சாந்தலிங்க அடிகளார் என்பதை அவர்கள் அருளிய 'கொலை மறுத்தல்' என்னும் நூலால் அறியலாம். ஞானாம்

பிகையாருடன் சில காலம் வாழ்ந்து பின் முழுத் துறவு பூண்ட அவர்கள், கன்னட நாட்டின் அரசராக விளங்கிய குமார தேவருக்கு அருளுபதேசம் வழங்கியாட்கொண்டார். ஐயத்தின் நீங்கித் தெளிந்து அவா அறுத்தற்குப் பெரிதும் துணைபுரியும், "வைராக்கிய சதகம்" "வைராக்கிய தீபம்" ஆகிய நூல்களை அருளிய இவர் சிவநெறியின் தத்துவக் கருவூலமாகவும், சமய சமரசத்தை விளக்கும் பெரு விளக்காகவும் இயங்கும் 'அவிரோத உந்தியார்" என்னும் அருள் நூலை வழங்கிய மாதவச் செம்மலுமாவார்,

குமார தேவரது மாணவராக இவர்கள் காலத்திலேயே சிறப்புற்று விளங்கிய போரூர் சிதம்பர சுவாமிகள் இவர்களருளிய நான்கு நூல்கட்கும் மிகச் சிறந்த உரை வகுத்துத் தம் திரு முன்பு காட்டக்கண்டு மகிழ்ந்தார்கள் என்பர். இவ்வுரையினது திட்பமும் மேற்கோள் காட்டும் வளமையும் நூலைக் கற்பார்க்கு இனிது விளங்குவன வாகும்.

சாந்தலிங்க அடிகளார் அருள் ஞானச் செல்வராகப் பற்பல அடியார்களுடன் திரு மடமமைத்தே தங்கியிருந்தார்கள். பல பணிகளிலும் அடியவர்கள் ஈடுபட்டிருந்தனர், முழுத்துறவு பூண்டு விளங்கிய இவர்கள், ஒரு மாசி மகத்தில் நிறைமதி நாளில் பேரூர் தலத்தின் பெருமை விளங்க ஞான சமாதியடைந்து கூத்தப் பெருமான் திருவருளில் கலந்தார்கள். இவர்கள் சமாதிக் கோயில் பேரூரின் கிழக்குப் பகுதியில் நொய்யலாற்றின் தென் கரையில் பலரும் வழிபடச் சிறந்து விளங்குகிறது. இதனையொட்டித் திருமடமும் கல்வி நிலையங்களும் அமைந்துள்ளன.

சாந்தலிங்க அடிகளாரவர்கள் பல மாணவர்களுடன் தங்கித் தவமியற்றி அருளுரை வழங்கியிருந்த திருமடம் அன்பர்களது கவனக்குறைவாலும், மகமதிய ஆட்சி யாலும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டதெனக் கருத வேண்டியிருக்கிறது. தமிழகத்தின் சமயச் சான்றோர்கள் பலர் முந்திய நூற்றாண்டுகளில் இவர்களது நூல் களைத் தெளிவாகக் கற்றிருந்தும் சமாதி இடம் தெரியாமல் திகைத்துள்ளனர். சென்ற நூற்றாண்டில் தவநெறி மிக்க அருளாளர்களும் சமயத் தொண்டர்களும் தமது பணி கள்ால் திருமடத்தை உருவாக்கியுள்ளனர். தற்போது கிடைத்துள்ள சான்றுக்ளின்படி தவத்திரு நாச்சிமுத்து சுவாமிகள் இந்நிலையப் பணியில் பெரிதும் ஈடுபட்டுச் சமாதி பூசையாதியன நடத்தித் தவச்சாலையைப் பேணி வந்துள்ளனர், எனத் தெரிகிறது.

பின்னர் கோயம்புத்தூர் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) காவல் ஆய்வாளர் திரு பொன்னுரங்க முதலியார் அவர்கள் கனவில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தோன்றி எமது நிலையத்தைப் பேணுக எனத் தெரிவித்தபடி பொன்னுரங்க முதலியார் பேரூர் வந்து கள்ளிக்காடாகக் கிடந்த பகுதியில் இறைவன் திருக்குறிப்பால் இடம் உணர்த்தப் பட்டு நண்பர்களுதவியுடன் சமாதிக் கோயிலையும் தவச்சாலையையும் கண்டு விரிவு ப்டுத்தியுள்ளார்.

கிணறு வெட்டியது அவரது திருப்பணி. பொருளும் வழங்கியுள்ளார். சமாதிக் கோயில் கருவறை மட்டுமாக இருந்தது.

நாச்சிமுத்து சுவாமிகளுக்குப் பிறகு (பொன்னாபுரம்) இராமலிங்க சுவாமிகள் திருமடத்தையும் சமாதிக் கோயிலின் முன் மண்டபத்தையும் அன்பர்கள் உதவியால் அமைத்தார்கள். கம்பஞ் சோறு சமைத்து அதனோடு கலந்த நீரை வழிச் செல்வார் பசி தீர வழங்கினார்கள். திருமடத்தைக் கட்டியதுடன் திருமடத்திற்குரிய இடங்களையும் விரிவாக்கினார்கள். இவர்கள் 1892 வரையில் தலைவராக இருந்து பணியாற்றிச் சமாதி கொண்டுள்ளார்கள்.

அதன்பின் சச்சிதானந்த சுவாமிகள் திருமடத்தின் பணிகளை மேற்கொண்டு 1909 வரை இருந்துள்ளார்கள். இவர்கள் காலத்தில் சமாதிக் கோயிலின் மூன்றாவது மண்டபம் கட்டப் பெற்றது. இராமலிங்க சுவாமிகளது சமாதிக் கோயிலையும் கட்டியிருக்கிறார்.

இவருக்குப் பின் தவத்திரு மௌன சுவாமிகள் திருமடத்தில் தலைவராக இருந்தார்கள். இவர்கள் வாய் பேசாத விரதம் மேற் கொண்டிருந்து, பேரூர்ப்பட்டிப் பெருமான் திருக்கோயில் குடமுழுக்கினைச் செய்து முடித்தார். நாள் தோறும் குறிப்பிட்ட தொகை கிடைத்தாலன்றி உணவு உட்கொள்வதில்லை என்ற குறிக்கோளுடன் இருந்து அப்பணியைப் பல்லாயிர ரூபாய் செலவில் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

சமயத் தொண்டர்கள் பலரும் பொன்னுரங்க முதலியாரும் இத் திருமடத்தின் வளர்ச்சி கருதிக் கோவையை அடுத்துள்ள சிரவைக் கௌமார மடாலயத்தை நிறுவியவரும், இந்த நாட்டில் திருநீரும் சாதனமும் விளங்கிச் சமயத் திரு நெறியும் தமிழும் தழைக்க விளங்கியவருமான இராமாநந்த சுவாமிகளைத் தலைவராக இருக்குமாறு அழைத்து வந்தனர். அவர்கள் சாந்தலிங்கப் பெருமான் திருக்குறிப்பு வேறாக இருக்குமென எண்ணித் தலைமையேற்க மறுத்தனர். அவரது அடியவர்களின் சிலரை இத்திரு மடத்தில் தங்கியிருந்து பணியாற்றச் செய்தனர். அவர்களில் தவத்திரு ஆறுமுக சுவாமிகள் இத்திரு மடத்திலேயே நிலையாக இருக்கலாயினர். அப்பொழுது தவத்திரு இராமாநந்த சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்று சமயக் குரவர்கள் பெயரைத் தாங்கியிருந்த அடியவர்கள் நால்வருள் ஒருவராகிய தவத்திரு மாணிக்க சுவாமிகள் குரு நாதரிடம் விடை பெற்றுப் பல தலங்களையும் வழிபட்டுப் பின் அவர்களாணைப்படி இங்குத் தங்கினார்கள். இவர்களே திருமடத்தின் மடாதிபதியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

தவத்திரு மாணிக்க சுவாமிகள் திருமடத்திற்கு வந்து பொறுப்பேற்று, தவத்திரு. ஆறுமுக சுவாமிகளைத் துணையாக வைத்துக் கொண்டு திருமடத்தின் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டார்கள். கொங்கு நாட்டில் உள்ள பல ஊர்களுக்கும் சென்று அன்பர்களிடம் நன்கொடை பெற்றார்கள். திருமடத்தின் பணிகளும் அன்பர் கூட்டமும் வளர்ந்து வரலாயின. மாசி மகந்தோறும் குரு பூசை விழா மிகச் சிறப்பாகப் பல்லாயிரம் அடியார்களுக்கு அமுதளித்தலோடு, மூன்று நாட்கள் நடத்தப் பெற்றது. சாதுக்களும் சான்றோர்களும் தொடர்பு கொண்டனர்.

தவத்திரு மாணிக்க சுவாமிகளது நன் முயற்சியால் அன்பர்கள் பலரும் நன்கு உதவி புரிந்து உள்ளனர். பேரூர் திரு. மாரிமுத்து தொண்டராகப் பணியாற்றியுள்ளனர். நரசிபுரம் திரு செம்பரிச்சிக் கவுண்டர், வெள்ளி மலைப் பட்டினம் திரு சுப்பண கவுண்டர் ஆகியோர் நிலம் அளித்துள்ளனர். கோவை திரு கலேச கவுண்டர், சின்ன வேடம்பட்டி ஆறுமுகக் கவுண்டர், கவுண்டம்மாள், பொள்ளாச்சி முத்துலட்சுமியவர்கள் ஆகியோர் கட்டளைகளுக்காகப் பொருளும் உதவியுள்ளனர். கள்ளிப் பாளையம் இராமசாமிக் கவுண்டர் கட்டடத்திற்கு வேண்டிய மரங்களை உதவியிருக்கிறார். விளாங்குறிச்சி பச்சையம்மாள் பொருளுதவி செய்திருக்கிறார். திரு வேலாசாமி செட்டியார், திரு ஆண்டி கவுண்டர் ஆகியோர் கட்டிடங்கள் கட்டி உதவியுள்ளனர். இவ்வாறு பல அன்பர்கள் முன் வந்து சமய நிறுவனமாகிய திருமடத்தைப் பொலிவும் ஆக்கமும் உறுமாறு வளர்த்துள்ளனர். இன்னும் அன்பர்கள் பலர் ஒத்துழைத்துள்ளனர். இன்றும் அன்பர்கள் பலரது ஒத்துழைப்பும் உதவியும் நிலையங்களின் நற்பணிகளை வளரச் செய்து வருகின்றன. மக்கள் தொடர்பின்றி ஒதுங்கிய நிலையில் சமய நிலையங்கள் இருப்பது

பெரும் பயன் தராது. அன்பர்களும் மாணவர்களும் பேணி வளர்த்துப் பெருமைப் படுத்தினால் தான் எந்த நிறுவனமும் நன்கு பணியாற்றும். அத்தகைய வழியினை ஏற்படுத்திப் பல்லாற்றானும் இந் நிலையம் இன்றும் பணியாற்றி வருகிறது.

திரு மடத்தின் பணிகளும், வழிபாடுகளும் சிறந்து விளங்கி அன்பர்கள் மிகுதியும் வரத்தொடங்கினர். அன்பர்கட்குச் சமய நெறியினை விளக்குவதற்காகத் திருமடத்தின் தலைவர் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் மடம், சத்வித்யா சன்மார்க்க சங்கம் என்னும் பெயரால் ஒரு சங்கத்தைத் தொடங்க விரும்பினார்கள்.

தவத்திரு மாணிக்க சுவாமிகள் சங்கத்தின் வளர்ச்சியுடன் திரு மடத்தையும் சிறந்த முறையில் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து புதிதாகக் கட்டி முடித்தார்கள். தம் குருநாதராகிய சிரவணபுரம் கௌமார மடாலய நிறுவனர் அருண் மிகு இராமாநந்த சுவாமிகளை எழுந்தருளச் செய்து கட்டிடத் திறப்பு விழாவினைச் சிறப்புற நடத்தினார்கள்.

இது அடியவர்கள் தங்குவதற்கும் விழாக் காலங்களில் அடியார்க்கு அமுதளித் தலாகியவற்றிற்கும் பெரிதும் பயன் படுகிறது. திருமடத்தின் வருவாய் அன்பர்கள் உதவியையே ஆண்டுதோறும் பெரிதும் நம்பியிருப்பதில் பல சிக்கல்கள் இருந்தன. வெளியூர்களுக்கு நன்கொடை பெறச் செல்லுவதிலேயே ஆண்டில் பாதி நாட்கள் செலவழிந்தன.

இந்நிலையில் திருமடத்தின் நிலையான வருவாய்க்காக நஞ்சை நிலங்கள் வாங்கப் பெற்றன. பின்னும் ஆண்டு விழாக்கள் நடத்துவதற்காக ஆண்டு தோறும் கொட்டகை கள் போடுவதால் பொருட் செலவும் வேலைத் தொல்லைகளும் ஏற்பட்டன. எனவே அதற்காக நிலையான ஓர் ஓட்டுக் கொட்டகையினை மிகப்பெரிய அளவில் அமைத் தார்கள். பின்னர் அதுவே வருவாய் தரும் முறையில் பருத்தி, நெல், நிலக்கடலை அரைவு ஆலைகளுக்குப் பயன்பட்டு ஆண்டு தோறும் விழா நடத்துவதற்கும் ஏற்புடையதாக அமைந்தது. ஆலையைப் பொருத்தி வாணிபம் செய்வதற்குப் பூளைமேடு திவான் பகதூர் பூ. சா. கோ. அரங்கசாமி நாயுடு பெரிதும் உதவியாய் இருந்தார்கள்.

தவத்திரு மாணிக்க சுவாமிகள் திருமடத்தின் வருவாயும், கட்டிடமும், வளரப் பெரிதும் உழைத்தவராவார்கள். எதனையும் ஊக்கத்தோடும் விடாமுயற்சியுடனும் செய்து முடிப்பார்கள். இவர்களுக்குச் சிறிது உடல் நலக்குறைவு ஏற்பட்டவுடன் தம்முட னேயே இருந்து பணியாற்றிய பெருந்தகையும் செம்மனச் செல்வரும் மாசற்ற துறவியும் ஆகிய தவத்திரு ஆறுமுக சுவாமிகளிடம் திருமடத்தின் உரிமைகளை ஒப்படைத்து 1938 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் மன்றுளாடும் கூத்தப் பெருமான் திருநடனக் காட்சியோடு திரு வீதிக்கு எழுந்தருளும் நேரத்தில் அவர்கள் திருவடியிற் கலந்தார்கள். இவர் சமாதி சாந்தலிங்க அடிகளார் திருக்கோயிலுக்கு வடபால் அமைக்கப்பட்டுள்ளது.

தவத்திரு ஆறுமுக சுவாமிகள் திருமடத்தின் பணிகளைக் கவனித்து வந்தார்கள். இவர்கட்குத் துணையாகப் பேரூர் கோவை ஆகிய இடங்களில் உள்ள அன்பர்கள் பலரும் இருந்து திருமடத்தினை வளர்த்தனர்.

தவத்திரு ஆறுமுக சுவாமிகள் வயது முதிர்வதனால் தமக்குப் பின் ஒருவரைத் தேர்ந்தெடுக்க எண்ணினார்கள். தக்கவர்களைப் பல நாள் ஆய்ந்தார்கள். பின் தமது தலைமைக் குருபீடமாகிய சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு இராமானந்த

சுவாமிகளை அணுகி அவர்களது அனுமதி பெற்று, முதலிபாளயம் இராமானந்த மடம் தவத்திரு சிவராமசாமி சுவாமிகள் இசைவுடன் அவருடைய புதல்வராகிய தவத்திரு இராமசாமி அடிகளைத் திருமடத்தின் இளைய பட்டமாகத் தேர்ந்தெடுத்தார்கள். விரோதி ஆண்டு மாசித் திங்கள் 20 ஆம் நாள் மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பேருருக்கு .எழுந்தருளி இராமசாமி அடிகளுக்கு வீர,சைவ திட்சை செய்தனர். அவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சாந்தலிங்க அடிகளார் திருக்கோயில் பல்வேறு காலங்களில் சிறிது சிறிதாகக் கட்டப்பட்டு விரிவடைந்தது முன்னால் கூறப்பட்டது. தவத்திரு மாணிக்க சுவாமிகள் காலத்தில் 1929 ஆம் ஆண்டு ஒரு கும்பாபிடேகம் நடைபெற்றது. சாந்தலிங்க சுவாமிகள் உற்சவமூர்த்தி 1955 ஆம் ஆண்டில் அன்பர்கள் பலருடைய முயற்சியால் செய்யப் பெற்றது. அதன் பின்னர் 1960 ஆம் ஆண்டில் ரூ. 20,000—செலவில் இக்கோயிலின் முன் மண்டபத்தை மாற்றிப் பெரிதாக அமைத்து விமானத்தையும் புதுப்பித்துக் கும்பாபிடேகம் செய்யப்பட்டது. இதற்குத் திருமதி இரா. கௌசலாம்பாள் அம்மாள் ரூ. 10,000 உதவி செய்தார்கள். மற்றும் அன்பர்கள் பலர் உதவி செய்தார்கள்.

தவத்திரு ஆறுமுக சுவாமிகள் தமது உடல் தளர்வின் காரணமாகப் பொறுப்பிலிருந்து விலகி 1963 ஆம் ஆண்டு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாருக்குக் கல்லாடை நல்கி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து புரட்டாசித் திங்கள் சதய நாளில் இட்டலிங்க ஐக்கியம் ஆனார்கள். நமது அடிகளார் மடாதிபதிக்குரிய முழுப் பொறுப்பியையும் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்றுச் செயலபடலாயினர்.

சாந்தலிங்கப் பெருமான் தில்லை அம்பலவாணப் பெருமானிடம் மிகவும் ஈடுபாடு கொண்டனர். வைராக்கிய சதகம் என்னும் நூலின் பிற்பாதியர்கிய தோத்திரப் பகுதி ஐம்பது பாடல்களும் தில்லைப் பிரான் மீது பாடப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்ட நமது அடிகளார் அவர்கள் அம்பலவாணப் பெருமானை இத்திருமட வளாகத்தில் எழுந்தருளச் செய்யக்கருதி 1973 ஆம் ஆண்டில் அம்பலவாணர் திருக்கோயிலும் திருமுறை மண்டபமும் அமைத்து மிகச் சிறப்பாகத் திருக்குட நன்னீராட்டு விழாவும் மயிலம் 19 ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் தலைமையில் நிகழ்த்தினார்கள்.

1970 ஆம ஆண்டு நடைபெற்ற குருபூசை விழாவில் தமிழகத்திலும் அண்டை நாட்டிலும் உள்ள வீர சைவ மடாதிபதிகள பலர் கலந்து கொண்டனர், இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் அப்பொழுது புதுவை மாநில ஆளுநராக இருந்தவரும் வீர சைவ நெறியினை வளர்ப்பதில் மிகவும் ஈடுபாடு உடையவருமாகிய மேதகு பி. டி. ஜாட்டி அவர்களும் கலந்து கொண்டார்கள். இந்த ஆண்டு சாந்தலிங்கர் திருககோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. திருக்குட, நன்னீராட்டு விழா நிகழ்கின்றது. இத் திருமடத்தின் குருபூசை விழாக்களில் அறிஞர்கள், சான்றோர்கள் அவ்வப்பொழுது பாராட்டும் சிறப்பும் செய்யப்பெறுகின்றனர்.

இங்ஙனம் இத்திருமடத்தின் கல்வி, சமய, சமுதாயப் பணிகளும் இத்திருக்கோயிலின் கட்டிட அமைப்புகளும் விழாக்களும் ஆண்டு தோறும் புதுமையும் பொலிவும் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றன. இம் மடமும் கோயிலும் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து பொதுமக்களுக்குப் பயன் விளைவித்தல் வேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துவதும் இவற்றின் வளர்ச்சிக்கு ஒல்லும் வகையான் உதவி புரிதலும் பொதுமக்களின் கடமையல்லவா? ★



சத்வித்யா சன்மார்க்க சங்கம்

இச்சங்கம் தமிழ் இராட்சச ஆண்டு (கிறித்து ஆண்டு 1916) தைத்திங்கள் நாள் திங்கட்கிழமை பிரதோச புண்ணிய காலம் மாலை 3 மணிக்குத் தவத்திரு சிதம்பர மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளாலும், மற்றும் பல பெரியோர்களாலும், மெய்ப் பொருளுணர்த்தும் நூல்களையும் ஞான நெறியையும் மக்களிடம் பரவச் செய்யும் நோக்கத்துடன் தொடங்கப் பெற்றது.

சங்கத்தின் நடைமுறை

இச்சங்கம் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கி நடைபெறும். பல அன்பர்கள் சங்கத்தில் சொற்பொழிவாற்றுவார்கள். அவர்களுள் கோவை வழக்கறிஞர்கள் சி கே. சுப்பிரமணிய முதலியார், சி. எம் இராமச்சந்திரஞ் செட்டியார். பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை முதலியவர்கள் குறிப்பிடத் தக்க வராவர். பண்டித அ கந்தசாமிப் பிள்ளை, அருணாசல நாட்டார், விளாங்குறிச்சி புலவர் மருதாசலம், பேரூர் ச ப. மாணிக்கவாசகம் ஆகியோர் செயலாளர்களாக இருந்து சங்கத்தின் நிகழ்ச்சிகளைச் செவ்விதின் நடத்தியிருக்கின்றனர். இச் சங்கத்தின் மூலம் சாந்தலிங்க சுவாமிகளின் நூல்கள் முறையாய்ப் பாடஞ் சொல்லப் பட்டன இவையன்றி விசேட காலங்களில் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சங்கத்தின் பயன்

சுண்டக்காமுத்தூர் குனியமுத்தூர் முதலான ஊர்களிலிருந்து பல அன்பர்கள் வாரந்தோறும் வந்திருந்து சங்க நிகழ்ச்சியில் கலந்து பயனடைந்திருக்கின்றனர். சமயத் துறையில் தலைசிறந்து விளங்கிய அறிஞர்களும், துறவிகளும் ஆண்டு விழாக் களில் தலைமை வகித்தாற்றிய சமயச் சொற்பொழிவுகளால் இப்பகுதி மக்கள் சமய நெறியில் உறைப்புக் கொண்டனர். இச்சங்கத்தின் பயனாகக் கோவை நகரில் சமய உணர்வு அரும்பியது. சமயப் பெரியார்கள் பலர் கோவைக்கு வந்துசென்றனர். அவர்களும் கோவை நகரத்தால் பயன் பெற்றனர். 1922ல் சங்கத்தில் ஒரு ஆகம பாடசாலை நிறுவுவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. திருமடத் திற்கு அன்பர் கூட்டம் பெருகியது. அதனால் சந்தாத் தொகையாகவும், நிலம் முதலியவகையாகவும் கட்டளைகளாகவும் நெல், அரிசி முதலிய பொருட்களாகவும் வருவாய் பெருகியது. இவ்வகையில் இச்சங்கம் சுற்றுப்புறத்து மக்களுக்கும், திரு மடத்திற்கும் பெரிதும் பயனளித்திருக்கிறது.

சங்கத்தின் ஆண்டுவிழா மாசிமகம், குருபூசையினையொட்டி மூன்று நாட்கள் நடைபெறும். தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களும். துறவிகளும் விழாவில் தலைமை தாங்கியுள்ளனர். ஆண்டு விழாக்களின் சிறப்பைப் பற்றியும், தலைமை தாங்கிய பெரியார்களைப் பற்றியும் இம்மலரில் பண்டித அ. கந்தசாமிப் பிள்ளையவர்களும், கோவை கிழார் அவர்களும், கவியரசு கு. நடேச கவுண்டர் அவர்களும் எழுதியுள்ள கட்டுரைகளாலும், மறைமலையடிகள் வரலாறு என்னும் நூலிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்ட கட்டுரையாலும் நன்கு அறியலாம். இவ்விழாக்களுக்குப் பல வகையாலும் உதவிய அன்பர்களைப் பற்றி மாணிக்க சுவாமிகள் ஆண்டு தோறும் வெளியிட்ட அறிக்கையால் அறியலாம். அவர்களுள் குனியமுத்தூர் திரு. சோமசுந்தரம் பிள்ளை, சுண்டக்காமுத்தூர் திரு. பழநிச்சாமி செட்டியார், போடிபாளையம் திரு. நஞ்சப்பக் கவுண்டர், செட்டிபாளையம் திரு. அய்யாசாமிக் கவுண்டர், குப்பேபாளையம் திரு நஞ்சப்பக்கவுண்டர், முதலி பாளையம் திரு. சிவமலைக்கவுண்டர் (தவத்திரு சிவராம சுவாமிகள்) பொள்ளாச்சி திரு. இரத்தின சபாபதிக் கவுண்டர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள்.

இச்சங்கத்தின் வெள்ளிவிழா 1941 ஆம் ஆண்டில் சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. இவர்கள் சாந்தலிங்க சுவாமிகள் மேல் பிள்ளைத் தமிழ் நூல் பாடி அரங்கேற்றம் செய்தார்கள். இச்சங்கமே இத்திருமடத்தின் கல்வி நிலையங்களாகக் கிளைத்துத் தழைத்து வளர்ந்து பயனளித்து வருகின்றது. இதன் பொன் விழாவும் மணிவிழாவும் முறையே 1966ஆம் ஆண்டும் 1976ஆம் ஆண்டும் நிகழ்ந்தன.

இச்சங்கத்தினால் தமிழ் நாடும் சிறப்பாகக் கொங்குநாடும் பெற்ற பயனைப் பற்றியும் இச்சங்கத்தை நிறுவி நடத்தி வந்த தவத்திரு மாணிக்க சுவாமிகள் பற்றியும் இச்சங்கத்தின் பொன்விழா மலரில் அறிஞர்கள் எழுதியுள்ள கட்டுரைகள் கூறுவன பின்வருமாறு:

" . சங்க விழாவில் தலைமைக்கும் பேச்சுக்கும் சிறந்த ஆசிரியர்கள் தருவிக்கப் பட்டார்கள் . சென்னை கயப்பாக்கம் சதாசிவஞ் செட்டியார் அவர்கள் ஓராண்டு சங்கத்தின் பெயரையே தலைப்பாகக் கொண்டு மூன்று பேச்சுக்கள் நிகழ்த்தினார்கள். மற்றோராண்டு குரு, இலிங்க, சங்கமம் என்ற மூன்று தலைப்புகளில் மூன்று பேச்சுகள் நிகழ்த்தினார்கள். இவ்விதப் பேச்சுக்களால் சங்கத்தின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவிற்று.

...... வீரசுப்பையய சுவாமிகள் ...... பேசினால் இரண்டு மூன்று மணிநேரம் விடாமல் பேசக்கூடியவர், சைவ சமயத்தின் உட்பொருளை நன்கு ஆராய்ந்தவர். மாணிக்க சுவாமிகள் தவிர வேறொருவராலும் அவரை இந்த நாட்டிற்குக் கொண்டு வந்து சொற்பொழிவு நிகழ்த்தி வைக்க முடியாது.

......ஞானியார் சுவாமிகள் ... பேச்சுமிகவும் உருக்கமாகவும் தெளிவாகவும் இருக்கும் உரை 3 அல்லது 4 மணி நேரம் நீடித்தாலும் களைப்பென்பதே நேரிடாது. பொதுமக்கள் விலகமாட்டார்கள், அவர்களை அழைத்து வருவது மிகவும் கடினம்

அப்போது சத்வித்யா சன்மார்க்க சங்கம் செய்த திருப்பணி அபரிமிதம். கோவையில் ஒரு திங்கள் தங்கிப் பன்னிரண்டு பேச்சுக்கள் நிகழ்த்தினார்கள் திருப் பேரூர் அந்த மூன்று நாட்களிலும் மகோற்சவ நகரமாகி இருந்தது. நாட்டின் பல பக்கங்களிலிருந்தும் பெருவாரியான மக்கள் வந்து பேரூரில் தங்கிச் சமயப் பேச்சுக் களைக் கேட்டுத் திருவருள் கடாட்சம் பெற்றார்கள். அந்த சமய விழாப் போல் முன்னும் பின்னும் பார்த்ததே இல்லை.

மறைமலையடிகள் ஓராண்டு இந்த ஒப்பற்ற தமிழ் அறிஞுரைத் தலைமை வகிக்க சுவாமிகள் ஏற்பாடு செய்தார்கள். அவரை இங்கே அழைத்த பெருமை மாணிக்க சுவாமிகளுக்கே உரியது. ஏனெனில் அவருக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களின் பெருக்கம் வேறெங்கும் காண இயலாதது என்று கோவை கிழார் ம. இராமச்சந்திரஞ் செட்டியார் தமது பழைய நினைவுகள் என்னும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்,

கயப்பாக்கம் சதாசிவஞ் செட்டியார் அந்நாளில் புகழ்பெற்ற சொற்பொழி வாளராக இருந்தார். அவர் நமது சங்கத்தின் இரண்டாம் தலைவராக வந்தார். அவர்களுடைய சொற்பொழிவிலிருந்துதான் திருமுறைகளின் பெருமையினையும் பெரிய புராணத்தின் அருமையினையும் கோவையில் பல பெருமக்கள் அறிந்து கொண்டனர். செட்டியார் அவர்களைக் கோவை நகருக்கு அறிமுகப்படுத்தியது இச்சங்கமே. அவரது புலமை இச்சங்கத்தால் புலப்படவே கோவை நகரார் அவரை அழைத்துச் சென்று நாடோறும் இரவில் பெரிய புராணச் சொற்பொழிவாற்றுவித்து நிறைவேற்று விழாவில் பெரிய புராணத்தை யானைமேலேற்றி முழவொலியோடு நகர்வலம் செய்து ஆயிரம் ரூபாய் வெள்ளி நாணயமாகவே அவருக்குப் பரிசளித் தமைக்கு இச்சங்கம் காரணம் என்றால் அது இல்லது புனைந்துரைத்தல் ஆகாது.

... திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் நம் சங்கத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்க வந்தனர். அப்பொழுது கேட்க வந்தவர் தொகை ஏனைய ஆண்டு விழாக்களின் மிக்கிருந்தது. இருபத் திரண்டு கார்களுக்கு அதிகமாகவே வந்திருந்தன. நான் எண்ணிப்பார்த்தேன் ..."

இவ்வாறு பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் தமது தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடமும் சங்கமும் என்னும் கட்டுரையில் கூறியுள்ளார்.

"... இச்சங்கத்தினால் நற்பெயர் பெற்றோரில் யானும் ஒருவன் சத்வித் தையை நன்கு கற்றுச் சன்மார்க்கத்தில் நின்ற பெரியோர் பலர் பொழிந்த சொன்மாரி

யால் வயதிலும் கல்வியறிவிலும் சிறியனாக இருந்த என் உள்ளம் நனைந்து அதன்கண் கல்வி முளை தோன்றி வளரத்தொடங்கிற்று.

......கயப்பாக்கம் சதாசிவம் செட்டியாரவர்கள்... பதார்த்த நிச்சயம், ஆலய வழிபாடு, சாந்தம். லிங்கம், சாமி என்ற தலைப்புகளில் பேசிய அந்நாளைப் பேச்சுக் களைப் போல மீண்டும் கேட்கும் பேற்றினை என் செவிகள் என்று பெறுமோ !

.....கழிந்த காலத்தில் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் நடை முறை நினைக் கும் தோறும் மகிழ்ச்சி விளைவிக்கின்றது - என்பது கவியரசு கு. நடேச கவுண்டர் அவர்கள் ''திருப்பேரூர்ச் சத்வித்யா சன்மார்க்க சங்கம் சிங்க நோக்கு'' என்னும் கட்டு ரையில் கூறியுள்ளார்கள்.

- 17 2.1977 பிற்பகல் 1.30 மணிக்கு சாந்தலிங்க சுவாமிகள் மடத்தில் அமைக்கப்பட் டிருந்த பெரியஅணி செய்யப்பட்ட அழகிய பந்தலில் அன்பர்களும் அறி ஞர்களும் புலவர்களும் துறவிகளுமாக ஆயிரம் பேருக்கு மேல் குழுமி இருந்தனர் ... கோயமுத்தூர் சீர்மை முழுவதும் உள்ள பெரும்பாலான செல்வர்களும் வணிகர்களும் தலைவர்களும் வந்திருந்னர். மாலை நெருங்க நெருங்கக் கூட்டம் மிகுந்து கொண்டே சென்றது. இரவு 7 மணிக்குக் கூட்டத்தினரின் அளவு இரண்டாயிரம் பேர்.

- இரண்டாம் நாள் விழா பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடங்கியது. இரண்டாயிரம் பேர் திரண்டிருந்தனர் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுற்ற பிறகு தான் கேட்டார்களுக்கு ஓ ! இவ்வளவு நேரமாகி விட்டதா ? நேரம் போனதே தெரியவில்லையே! என்ற நினைவுகள் ஏற்பட்டன. பிற்பகல் 2 முதல் இரவு 10 மணி வரையில் 8 மணி நேரமாக கூட்டம் நடந்தது ! .. ..

......மூன்றாம் நாள் விழா ...... வெளியூர்களிலிருந்த மூவாயிரம் பேருக்கு மேற்பட்ட அன்பர்களும் அறிஞர்களும் புலவர்களும் பெருமக்களும் திரண்டு நிறைந் தனர் - இது போன்ற கூட்டம் எங்கும் நிகழ்ந்திராது என்று அன்பர்கள் ஆர்வ முடன் கூறினர்.''

என்று மறைதிருநாவுக்கரசு அவர்கள் தமது மறைமலையடிகள் வரலாறு என்னும் நூலில் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் மடமும் சத்வித்யா சன்மார்க்க சங்க விழாவும் என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இங்ஙனம் அறிஞர் பெருமக்களின் பாராட்டுதல்களைப் பெற்ற இச்சங்கம் இந்த ஆண்டு தனது எழுபதாவது ஆண்டு நிறைவினைப் பவள விழாவாகக் கொண்டாடு கின்றது. இச்சங்கம் மேலும் பல பணிகளைச் செய்யும் வகையில் சிறந்து விளங்குக என அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருவருளை வாழ்த்துவோமாக.



பேரூர் ஆதீனகர்த்தர்

கயிலைப் புனிதர்
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

கோவை நகரை அடுத்த திருப்பேரூர் அருண்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருமடவளாகத்துள் நுழைந்தால் அங்கே திருவடியில் மரத்தாலான பாதுகை, முன் புறம் முழங்காலளவு தெரியும்படியாய்த் தூக்கிச் செருகிக் கட்டின முரட்டுக் கதர்க் காவியாடை, தோளில் சரிந்து தொங்குகின்ற முரட்டுக் கதர்க்காவிமேலாடை, மார்பிலே பளிச்சிடுகின்ற இட்டலிங்கப் பேழை, கூட்டி முடித்துக்கட்டிய தலைமுடி ஆகிய தோற்றம் உடைய ஒருவர் கல்மண் சுமப்பவர்களுடன் கல்மண் சுமப்பவராய், வண்டி ஓட்டுபவனுடன் வண்டி ஓட்டுபவராய். தண்ணீர் பாய்ச்சுபவருடன் தண்ணீர் பாய்ச்சுபவராய்க் காணப்படுவார். ஆதீனகர்த்தர் எங்கே என வினவினால் அவரைத் தான் சுட்டிக் காட்டுவார்கள். கல்லூரி முதல்வர் எங்கே என வினாவினாலும் அவரைத் தான் சுட்டிக்காட்டுவார்கள்.

சிறிது நேரத்தில் படகுபோல் ஒருகார் வரும்; அதிலிருந்து செல்வச் செழிப்பு மிளிரும் தோற்றமுடைய ஒருவர் இறங்கித் திருமடத்தினுள் நுழையத் தயங்கியபடி நிற்பார். உடன் வந்த பணியாளர்கள் பழம், மாலை ஆகியன நிறைந்த தட்டங் களை ஏந்திப் பக்குவமாய் ஒதுங்கிநிற்பார்.

கல்மண் சுமந்து கொண்டிருந்த அவர் வாருங்கள் வாருங்கள் என்று வாய் நிறைந்த புன்னகையுடனும் மலர்ந்த முகத்துடனும் வரவேற்றபடியே வந்து கைகால் தூய்மை செய்து வரவேற்பறையில் இருக்கையிலமர்ந்து செல்வரின் வணக்கத்தையும் வரிசையினையும் ஏற்றுக்கொண்டு திருக்கோயிலமைப்பு, கும்பாபிடேக நிகழ்ச்சி முதலியனபற்றி ஆழ்ந்தகன்ற ஆலோசனைகளைக் கூறிக்கொண்டிருப்பார்.

இதற்கிடையே இளைஞர் சிலர் தம்பகுதியில் அமைத்துள்ள தமிழ்மன்றம், சமூகப்பணிமன்றம் ஆகியவற்றைக் குறித்த ஆலோசனை பெறக் காத்து நிற்பர்.

இத்தகைய எளிமை, உழைப்பு, உயர்வு, உள்ளத்தெளிவு, நாட்டு மக்களுக்கு நன்னெறி காட்டும் பாங்கு ஆகிய நற்பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்பவர் தாம் இன்று மணிவிழாக் காண்பவரும், இம்மலரின் கருப்பொருளாய்த் திகழ்பவருமாகிய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார். இவரை அடிகள், அடிகளார் என்னும் பெயராலேயே அனைவரும் அன்புடனும் மரியாதையுடனும் குறிப்பிடுவர்.

அடிகளாரவர்களின் பிறப்பு புண்ணியப் பிறப்பு எனப் போற்றத் தக்கதாகும். இவர் பிறந்த ஊர் அவினாசி வட்டம் முதலிபாளையம் என்னும் ஊராகும். இவருடைய தந்தையார் தவத்திரு சிவராமசுவாமிகள் என்னும் பெயரினர்; சிரவணபுரம் கௌமார மடாலயத்தின் தாபகராகிய தவத்திரு இராமானந்த சுவாமிகளின் தொடர்புடையவர்; அச்சுவாமிகளின் மாணாக்கராகிய கிரணத்தம் தவத்திரு மருதாசல சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர். இராமானந்த சுவாமிகளையும் மருதாசல சுவாமிகளையும் தமது தோட்டத்தில் தங்கியிருக்கச் செய்து பணிவிடை புரிந்து அவர்களாலேயே விநாயகப் பெருமான் திருக்கோயில் அமைத்துக் கொடுக்கப்பெற்று விநாயகர் வழிபாடும் வேற்பூசையும் செய்து வந்தவர்கள். சமயமும் தமிழும் தழைப்பதற்கென்றே ஒருபுதல்வனை ஈன்றெடுத்த புண்ணியம் உடையவர்கள். இவருடைய தாயார் கப்பினி அம்மையார் என்னும் பெயரினர். கணவனாருடைய சமயநெறி வாழ்வுக்கு உறுதுணையாய் 'மனையறத்தின் வேராய்' அமைந்து விளங்கியவர்கள். இப்பெற்றோர்களின் பெருமையினையும் புண்ணியத்தினையும் மேலும் விளக்க முறுத்தும் படியாக இவர்களுக்கு மூன்றாவது மகவாக குரோதன ஆண்டு புரட்டாசித் திங்கள் மகம் நாளில் அவதரித்தார் நமது அடிகளார். இவருடைய பிறப்பை நோக்கும் பொழுது நமக்கு "தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதல் " எனவரும் மெய்கண்டாரின் திருவாக்கும்.

நரர்பயில் தேயந்தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்த தோன்றல் மிக்க புண்ணியந் தானாகும்
தரையினில் கீழை விட்டுத் தவஞ்செய் சாதியினில் வந்து
பரசமயங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொணாதே"

எனவும்

... ... மேலாய பதங்கட்கு
ஈட்டிய புண்ணிய நாதராகி இன்பம்
இனிது நுகர்ந்து அரனருளால் இந்தப்பார்மேல்
நாட்டிய நற்குலத் தினில் வந்து அவதரித்துக் குருவால்
ஞானநிட்டை அடைந்து அடைவர் நாதன் தாளே"

எனவும் வரும் அருணந்தி சிவாசாரியாரின் அருள்வாக்குந்தாம் நினைவுக்கு வருகின்றன.

அடிகளார் அவர்கள் இளமையில் கிராமத்து வழக்கப்படியே தொடக்கக் கல்வி கற்றுத் தமது 15வது வயதில் 1941 ஆம் ஆண்டு சிரவணபுரம் கௌமார மடாலயத்துக்கு வந்து மடாலயத் திருப்பணிகள்' செய்து வரலாயினர். நாளடைவில் தவத்திரு இராமானந்த சுவாமிகளின் திருவருளுக்குப் பாத்திரராய் அவருக்கு அணுக்கத் தொண்டராக இருக்கும் பேறு பெற்றனர். அம்மடாலயத்துத் தவத்திரு கந்தசாமி சுவாமிகளிடம் சமய இலக்கியங்களைக் கற்றுணர்ந்தார். கவிபாடுவதிலும் வல்லவராயினார்.

இம்மடாலயத்தினர் நமது அடிகளார் அவர்களை-1947 ஆம் ஆண்டு தமிழ்க் கல்வி பயிலும் பொருட்டுத் தென்னாற்காடு மாவட்டத்தில் புகழ்பெற்ற முருகன்

தலமாகிய மயிலத்தில் உள்ள ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலயசுவாமிகள் தமிழ்க்கல்லூரியில் சேர்த்தனர். மயிலம் தமிழ்க்கல்லூரித் தாபகரும் மயிலம் பொம்மபுரம் ஆதீனகர்த்தருமாகிய பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் முன்னமே இராமானந்த சுவாமிகளின் பெருமையை அறிந்தவராதலின் நமது அடிகளாரிடம் மிகவும் அன்பும் மதிப்பும் உடையவராக இருந்தார். அடிகளார் அவர்களும் ஆதீன கர்த்தரின் நம்பிக்கைக்குரியவராகவும் ஆசிரியர்களின் பாராட்டுக்குரியவராகவும் ஆசிரியர்களின் பாராட்டுக்குரியவராகவும் உடன் பயிலும் மாணாக்கர்கனின் அன்புக்குரியவராகவும் விளங்கி ஐந்தாண்டுகள் பயின்று 1952ல் சென்னைப் பல்கலைக் கழகத்துப் புலவர் பட்டத்தினைப் பெற்றார்.

அடிகளார் அவர்கள் தமிழ்க்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த பொழுதே பேரூர் அருண்மிகு சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தின் தலைவராக விளங்கிய தவத்திரு ஆறுமுக சுவாமிகள் நமது அடிகளாரைத் தம் திருமடத்தில் தமக்கு அடுத்த பட்டத்துக்குரியவராக ஆக்கித் தருமாறு தவத்திரு. இராமானந்த சுவாமிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள் பேரூர் திருமடத்துக்குக் கௌமார மடத்தின் தொடர்புடையவரும் தவத்திரு. இராமானந்த சுவாமிகளின் திருவருளுக்கு இலக்கானவரும் தலைவராக வருவது ஒரு வழக்கமாகவே அமைந்திருந்தது. அவ்வழக்கப் படியே தவத்திரு. இராமானந்த சுவாமிகளின் அருளாணையால் நமது அடிகளார் அவர்கள் இம்மடத்தின் இளவரசுப் பட்டத்தினை 1950ஆம் ஆண்டு (விரோதி - மாசி 20) ஏற்றுக் கொண்டார்கள், அப்பொழுது மயிலம் பொம்மபுரம் ஆதீனம் பதினெட்டாம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளிடம் அடிகளார் அவர்கள் வீரசைவ தீக்ஷை பெற்று இலிங்க தாரணம் செய்துகொண்டார்கள். பின்னர் 1967 ஆம் ஆண்டு தவத்திரு. ஆறுமுக சுவாமிகளிடமிருந்து முழுப் பொறுப்பினையும் பெற்றுக் கல்லாடை புனைந்து மடாதிபதியாக அருளாட்சி செலுத்தத் தொடங்கினார்கள்.

அடிகளார் அவர்கள் திருமடத்தின் இளவரசுப் பொறுப்பேற்றுக் கொண்ட பொழுது இத் திருமடம் பொருள் வருவாயில் மிகச் சுருங்கிய அளவிலேயே இருந்தது. பொதுப் பணியும் அவ்வாறே. எனினும் இம்மடம் தமிழகம் முழுவதும் புகழ் பெற்று இருந்தது. சாந்தலிங்கப்பெருமானுக்கு நாள் வழிபாடு செய்தல், சத்வித்யா சன்மார்க்க சங்கத்தில் வாரக் கூட்டம் நடத்துதல், வருகின்ற துறவியர்களுக்கு உணவு, உறையுள் வசதி செய்துகொடுத்து உபசரித்தல், குரு பூசை விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுதல் என்பனவே இத்திருமடத்தின் நடைமுறையாக இருந்தன. அடிகளார் அவர்கள் தம்முடையதும் தம்மைச்சார்ந்த அன்பர்களுடையதுமாகிய உழைப்பினைப் பொருளாக மாற்றியும் செல்வர்களிடம் நிதியுதவி பெற்றும் பொருள் வருவாயை வளர்த்துப் பழைய சமயப் பணிகளைத் தொடர்ந்து நடத்தி வரலாயினர்.

அடிகளார் அவர்கள் இத்தகைய சமயப் பணிகளுடன் மட்டும் அமைந்து விடாமல் கல்விப் பணியும் செய்ய வேண்டுமென்று கருதி முதலில் 1951ஆம் ஆண்டு உயர் நிலைத் தொடக்கப் பள்ளியைத் தொடங்கினார்கள்.

மயிலம் சுவாமிகள் தமது அடிகளாரிடம் ''இங்கிருப்பது போலவே பேரூரிலும் ஒரு தமிழ்க் கல்லூரியைத் தொடங்கி நடத்தி வருக'' என அறிவித்திருந்தார். அதனைச் சிரமேற் கொண்ட நமது அடிகளார் அவர்கள் 1953இல் இத்திரு மடத்தின் சார்பில் தமிழ்க் கல்லூரியைத் தொடங்கினார்கள். இத்திரு மடத்தின் பொருளாதாரம் ஒரு கல்லூரியைத் தொடங்கி நடத்தும் அளவுக்கு வளமுடையதாக அப்பொழுது இல்லை. எனினும் நமது அடிகளார் அவர்கள் தமது செயலாற்றலினாலும் பழகும் பண்பினாலும் கோவைகிழார் கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார், வெ. சி. சுப்பையா கவுண்டர், ரா. க. சண்முகம் செட்டியார், சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் போன்ற அறிஞர்களையும் செல்வர்களையும் அணுகி அவர்களின் பொருளுதவி, ஆலோசனை ஆகியவற்றைப் பெற்றே இக்கல்லூரியைத் தொடங்கினார்கள். அதில் துணை முதல்வராகவும், முதல்வராகவும், ஆய்வுப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்கள். தமிழ்ச் சைவத் திருமடங்களில் இத்தகைய மரபினை இவர்கள் தோற்றுவித்தது மிகவும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

இங்ஙனம் கல்வி நிலையங்களின் வாயிலாகவன்றி அவ்வப்பொழுது சமய வகுப்புகள் நடத்துவதன் வாயிலாகவும் தமிழையும், சமய நெறியையும் பரப்பி வருகின்றார்கள். அத்தகைய சமய வகுப்புகளுள் சைவத்திரு வச்சிரவேலு முதலியார் அவர்களைக் கொண்டு சிவஞான சித்தியார் நடத்துவித்ததும் 'காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் (பூர்வாசிரமம் சு. மாணிக்கவாசக முதலியார்) சுவாமிகளைக் கொண்டு சித்தியார், சிவப்பிரகாசம், அவிரோத உந்தியார் ஆகியவற்றை நடத்துவித்ததும் சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறை டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்களைக் கொண்டு திருமந்திர வகுப்பு நடத்துவித்ததும் குறிப்பிடத்தக்கன.

இதனைத் தொடர்ந்து 1960ல் உயர் நிலைப் பள்ளியினையும் தொடங்கினார்கள். 1977ஆம் ஆண்டு மழலையர் பள்ளியைத் தொடங்கினார்கள். தமது கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்கள் ஏட்டுப்படிப்புடன் அமைந்து விடாமல், சமயப் பயிற்சி, வழிபாட்டு நெறியில் ஆர்வம், உடலுழைப்பில் ஊக்கம் ஆகியன உடையவர்களாக வளர வேண்டும் என்பது அடிகளார் அவர்களின் கொள்கை,

இங்ஙனம் கல்விப்பணியில் நாட்டம் செலுத்திய அடிகளார் திருக்கோயில் திருமடம் ஆகியவற்றை விரிவு படுத்துவதிலும் கல்வி நிலையங்களுக்குரிய கட்டிடங்கள் கட்டுவதிலும் நாட்டம் செலுத்தினார்கள்,

1956 ஆம் ஆண்டு தமிழ்க் கல்லூரிக்கென நிலையான கட்டிடம் கட்டப் பெற்றது 1961 ஆம் ஆண்டு அதற்கு மேலே மாடியும் அமைக்கப்பட்டது, 1955ஆம் ஆண்டு தொடக்கப்பள்ளிக் கட்டிடம் கட்டப் பெற்றது. 1958ஆம் ஆண்டு தமிழ்க் கல்லூரிக்கு நூலகக்கட்டிடம் கட்டப் பெற்றது. கல்லூரியில் படிக்கும் மாணாக்கியர்க்கென உணவு விடுதிக்கட்டிடம் ஒன்று1976இல் கட்டிமுடிக்கப்பெற்றது இதன் திறப்புவிழாஅன்றைய இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் மேன்மைமிகு. பி. டி. ஜாட்டி அவர்களைக் கொண்டு செய்விக்கப் பெற்றது.

சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயிலுக்கு 1960 ஆம் ஆண்டு விமானம் புதிதாக அமைக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு இராச கோபுரம் அமைக்கப் பெற்றது. சாந்தலிங்க சுவாமிகள் வைராக்கிய சதகத்தால் பாடித் துதித்த தில்லைப் பிரானைத் திருமட வளாகத்தில் எழுந்தருளுவிக்கும் நோக்குடன் நடராசப் பெருமான் திருக்கோயிலும் திருமுறை மண்டபமும் 1973ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்றன. திருமடத்துக் கட்டிட முகப்பும் மாற்றி அமைக்கப்பட்டது. இந்த ஆண்டு (1986) திருக்கயிலாய நினைவு வளைவு அமைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம் கட்டிடப் பணிகளில் கவனம் செலுத்திவரும் அடிகளார் அவர்கள் மொழி, சமயம், சமுகம் ஆகிய பொதுப்பணிகளில் கவனம் செலுத்துதிலும் தவறவில்லை அடிகளார் அவர்கள் நம் சமய நெறியும் சமூக அமைப்பும் தமிழ் நெறி அடிப்படையில் அமைதல் வேண்டும் என்பதில் மிகவும் பற்றுடையவர். ‘அயல் வழக்கின் துறைகளை அசைவில் செழுந்தமிழ் வழக்கால் வென்று’ தமிழினம் மேம்படுதல் வேண்டும் என்பதும் அடிகளார் அவர்களின் கொள்கை.

எங்கெங்கே தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்காகக் கழகங்கள், சங்கங்கள், அமைப்புகள் முதலியன உள்ளனவோ அங்கங்கே அடிகளார் அவர்கள் தொடர்பு கொண்டு அவற்றின் வளர்ச்சிக்குரிய ஆலோசனைகள் வழங்கித்தாமும் இயன்றஉதவிகளைச் செய்து வருகின்றார்கள். தமிழகப் புலவர் குழுவில் தொடக்க காலம் முதல் அங்கம் வகித்து வருகின்றார்கள். கீழ்த்திசைக் கல்லூரிகளுக்கெனச் சென்னைப் பல்கலைக் கழகத்துக் கல்விக் கழகத்தில் உள்ள இடத்திற்கு 1973 ஆம் ஆண்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் அங்கிருந்து ஆட்சிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தாமரைச் செல்வர் நெ. து. சுந்தர வடிவேலு, மால்கம் ஆதிசேஷையா, ஜி. ஆர். தாமோதரன் துணை வேந்தர்களாகப் பதவி வகித்த காலங்களில் இவர்கள் பல்கலைக் கழகத்துக் குழுக்கள் பலவற்றில் இடம் பெற்று அரும்பணிகள் பலவற்றைச் செய்துள்ளார்கள். இவருடைய பணிகளுக்குத் துணையாக உடனிருந்த உறுப்பினர்களுள் அருட்செல்வர் நா. மகாலிங்கம், டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம், தமிழ்நாடு மேலவைத் தலைவர் மாண்புமிகு ம பொ. சிவஞானம், டாக்டர். இராஜம்மாள் தேவதாஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவருடைய முயற்சியினால் தமிழகத் தமிழ்க்கல்லூரிகள் பல வகையான வளர்ச்சிகளைப் பெற்றன. கலைக்கல்லூரிகளில் தமிழ் வகுப்புகள், தமிழ்ப் பேராசிரியர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டன. இவர் தமது நிர்வாகத்தில் இருக்கும் தமிழ்க் கல்லூரியைப் படிப்படியாக வளர்த்து முதுகலைப் படிப்பு, எம். பில், பி எச்டி. ஆய்வுப் படிப்பு ஆகியவற்றைத் தொடங்கி இக்கல்லூரியை ஒரு ஆய்வு மையம் என்னும் நிலைக்கு உயர்த்தி இருக்கிறார்கள். இந்த ஆண்டு மெய்ப் பொருளியல் ஆய்வு அமைப்பு ஒன்றினைத் தொடங்குவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

அருண்மிகு சாந்தலிங்க சுவாமிகளின் நூல்கள் நாட்டு மக்களிடை பரவ வேண்டும் என்னும் நோக்கத்துடன் பதிப்புக்கள் வெளியிட்டுள்ளார்கள். அவிரோத

உந்தியாருக்கு சைவத்திரு. ந. முருகேச முதலியார் அவர்கள் ஆங்கில மொழி பெயர்ப்பு செய்வித்து வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சமயத்துறையில் தமிழ் நெறியே இடம் பெறுதல் வேண்டும் என்னும் நோக்கத்தினால் திருக்கோயில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழால் சைவத் திருமுறைகளைக் கொண்டே நடத்துதல் வேண்டும் என்று தொடக்ககாலம் முதல் பாடுபட்டு வருகின்றார்கள். இந்த வகையில் இவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் சைவத்திரு வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் ஆவர்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தொடங்கிய அருள்நெறித் திருக்கூட்டம் என்னும் அமைப்பிலும் பின் இவர்கள் முயற்சியால் தமிழக அறநிலையத்துறை தொடங்கிய தெய்வீகப் பேரவை என்னும் அமைப்பிலும் நமது அடிகளார் அவர்கள் தொடக்க காலம் முதலே பங்கேற்று அவற்றின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றார்கள், கோவை மாவட்டத்தின் பல ஊர்களிலும் உள்ள கோவில்களில் திருக்குட நன்னீராட்டு விழாவினைத் திருமுறைகளைக் கொண்டு தமிழ் நெறிப்படியே நடத்தி வருகின்றார்கள். இத்துறையில் இவருக்குப் பெருந்துணையாக விளங்குபவர் சிரவையாதீனம் சுந்தர சுவாமிகள். இவர்கள் இருவரும் கொங்கு நாட்டின் இரட்டை மடாதிபதிகள் என்று சமயத் துறையினரால் பாராட்டப் பெறுபவர்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. இவ்விருவரின் முயற்சியால் சிவாசாரியார்கள் பலரும் தமிழ்நெறி வழிபாட்டில் நாட்டம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். நம் தமிழகத் திருக்கோயில்களில் வழிபாட்டுப் பணியினை மேற்கொண்டெழுகும் குருக்கள்மார்கள் தம்மைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய 'முப்போதும் திருமேனி தீண்டுவார்' என்னும் சிறப்புடைய மரபினர் என்பதனையும் சைவாகமங்களும் திருமுறைகளுமே தமது நெறியின் அடிப்படை என்பதனையும் உணர்ந்து அவற்றில் தேர்ச்சியும் நம்பிக்கையும் கொள்கைப் பிடிப்பும் உடையவராய் விளங்கினால் தமிழ்நெறி வழிபாட்டுத் திட்டம் பெருவெற்றி பெறும் என்பதில் ஐயமில்லை.

திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாவில் நமது அடிகளார் அவர்கள் பெருங்கோயில், சிறுகோயில், ஊர்த் தெய்வங்களின் கோயில் என்று பாகுபாடு செய்து உயர்வு தாழ்வு கருதாமல் எல்லாக் கோயில் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகின்றார்கள். சிறுகோயில்கள் ஊர்த்தெய்வங்களின் கோயில்கள் ஆகியவற்றின் நடைமுறையில் உள்ள பொருந்தா வழிபாட்டு முறைகளை அகற்றித் தூய வழிபாட்டு முறையினை நிறுவினால் அவை தமிழ்நெறி அடிப்படையில் அமைந்த வழிபாட்டு முறையினை வளர்க்கும் நிலையங்களாக அமையும் என்பது நமது அடிகளார் அவர்களின் கொள்கை. திருக்கோயிற் பணிகள் வழிபாட்டுச் சடங்குகள் ஆகியன நிகழுமிடங்களில் அடிகளார் அவர்கள் தம்மை ஆதீனகர்த்தராகக் கருதிக்கொண்டு ஏவுதற் கருத்தாவாக மட்டும் இருந்துவிடாமல் தாமே தம் கையில் எல்லாப் பணிகளையும் செய்து பிறரும் இவ்வாறு செய்தல் வேண்டும் எனச் செய்துகாட்டுபவராக விளங்கி வருகிறார்கள்.

வழிபாட்டு நெறியில் தலயாத்திரை செய்வதில் அடிகள் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். சிவத்தலங்களுக்கு நடந்து சென்று வழிபடுதல் என்பது இவர்களுக்கு மிகவும் விருப்பமானதாகும். சற்றேறக்குறையத் தமிழகத்தின் பாடல் பெற்ற தலங்கள் அனைத்திற்கும் சென்று வழிபாடு செய்துள்ளார்கள். 1960, 62, 67, 72 ஆகிய ஆண்டுகளில் கேதாரயாத்திரை சென்றுவந்தார்கள். 1982 ஆம் ஆண்டு சூலை ஆகஸ்டு திங்கள்களில் திருக்கயிலைப் புனிதப் பயணம் செய்து முடித்தார்கள். நமது அடிகளார் அவர்களுக்கு இயல்பாகவே திருக்கயிலைப் பயணத்தில் வேட்கை இருந்தது. இதனை இவர்களிடம் பெரிதும் மதிப்புடைய தருமையாதீனம் மகா சந்நிதானம் கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இவர்களைத் தமது ஆதீனத்திற்கு அழைத்துச் சிறப்புச் செய்து உரையாடிய பொழுது தந்த சில குறிப்புகள் மேலும் தூண்டுவனவாக இருந்தன. அவர்கள் கூறியபடியே கயிலைமலையானிடத்து நாள்தோறும் விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அவ்வண்ணம் 1982ஆம் ஆண்டில் நிறைவெய்தியது ஈரோட்டில் அருள்நெறி அன்பர்கள் திரு. அழகப்பன் தம்பதிகளும் ஏனைய அன்பர்களும் திருப்பனந்தாள் காசிமடம் எஜமான் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக் குமார சாமித்தம்பிரான் சுவாமிகளும் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் இப்பொழுது பட்டத்தில் உள்ள ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளும் இப்பயணத்தில் ஒன்றாகச் சென்று வந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

அடிகளார் அவர்களுக்குச் சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், சூழ்நிலை வசத்தால் குற்றங்கள் புரிந்து சிறையிலகப்பட்டுத் துன்புறுபவர்கள் ஆகியோர் இடத்துப் பரிவும் பாசமும் உண்டு. தம் உயர்வு கருதாமல் எளிய மக்கள் வாழ்கின்ற இடங்களுக்குச் சென்று அப்பகுதிகளைத் தூய்மை செய்தல், அங்குள்ள சிறு சிறு கோயில்களைச் சீர் செய்து வழிபாட்டு முறையை அமைத்துக் கொடுத்தல் ஆகியன செய்து வருகின்றார்கள்.

திருமடத்துப் பொறுப்பேற்றுக் கொண்ட காலம் முதலே இவர்கள், அடியவர்கள் அன்பர்கள், புலவர்கள் ஆகியவர்களைக் கொண்டு சிறைப்பட்ட மக்களுக்குச் சன்மார்க்க நெறியினை எடுத்துக் கூறுதல், அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியவற்றைச் செய்து வருகின்றார்கள். தொடக்க காலத்தில் இதனால் இவரிடம் மிகவும் ஈடுபாடு கொண்டு விளங்கியவர்கள் பலர். அவர்களில் குறிப்பாகக் கம்யூனிஸ்டு தலைவர்களுள் ஒருவராகிய திரு. பால தண்டாயுதம் அவர்களைக் குறிப்பிடலாம். இது போன்றே நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் உள்ளவர்களுக்கும் ஆறுதல்கள் கூறுவதிலும் திருநீறு அளித்து உதவுவதிலும் ஆர்வத்துடன் பணி செய்து வருகின்றார்கள்

நமது அடிகளார் அவர்கள் செய்து வரும் திருப்பணிகளைக் கண்டும் கேட்டும் இன்றைய இளைஞர்களிடமும் முதியவர்களிடமும் சமயப் பணியில் ஓர் எழுச்சி உண்டாயிருக்கின்றது எனின் அது மிகையாகாது. இப்பணிகளைப் பாராட்டியும் தம்மையும் இப்பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ளும் விருப்பம் தெரிவித்தும் அன்பர்கள் எழுதியுள்ள கடிதங்களுக்கு கணக்கில்லை.

இப்பொழுது அடிகளார் அவர்கள் பங்கு பெற்றுள்ள அமைப்புக்கள் வருமாறு :

1. அருள் நெறித் திருக்கூட்டம்.
2. தமிழகப் புலவர் குழு.
3. திருப்பத்தூர்த் தமிழ்ச் சங்கம்.
4. திருக்குறள் பேரவை.
5. பழனி தண்டாயுதபாணி கோவில்.
6. தமிழ்ப் பல்கலைக் கழகம்

அடிகளார் அவர்கள் டில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை மொழிகளின் மாநாட்டில் கோவைகிழார் அவர்களுடன் சென்று கலந்துகொண்டார்கள். சைவசித்தாந்தப் பெருமன்ற மாநாட்டை இரண்டு முறை தமது திருமடத்தில் அன்பர்களுடைய ஒத்துழைப்பால் நடத்தியிருக்கின்றார்கள். உலக இந்து மகளிர் மாநாட்டை 1983 ஆம் ஆண்டு கோவையில் நடத்தினார்கள். 1985 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற உலக இந்து மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அடிகளார் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் அவர்களுக்கு அளிக்கப் பெறும் பாராட்டுகளுக்கும் கணக்கில்லை

சமய, சமுதாய, பண்பாட்டுத் துறைகளில் சிக்கல்கள், சீர்கேடுகள், உணர்ச்சிக் கொந்தளிப்புகள் ஏற்படும் பொழுது பொது மக்கள் நமது அடிகளாரின் ஆலோசனையை நாடுவதும் அடிகளார் அவர்கள் இதில் தலையிட்டுச் சரிசெய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கடிதம் எழுதுவதும் வழக்கமாயிருக்கிறது. இவை பற்றி நமது அடிகளாருக்கு வரும் கடிதங்கள் பல மிகவும் உணர்ச்சியும் உருக்கமும் உடையனவாக உள்ளன.

1. இன்றைய சூழ்நிலையில் மக்களுக்குப் பக்தி நெறியிலும் துறவு வாழ்க்கையிலும் பிடிப்பு இல்லை; இந்நிலை நீடிக்குமானால் தமிழகத்துச் சமய நிறுவனங்களைப் பொறுப்பேற்று நடத்துவாரின்றி அவை வலிமையிழந்துவிடும் என்பதைக் கருதி அடிகளார் அவர்கள் சமய நெறிகளைக் கற்றுத் தேர்ந்த நல்ல, தூய துறவிகளை உருவாக்கிச் சமய நிறுவனங்களில் பொறுப்பேற்கச் செய்வதற்குரிய திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளார்கள். இதன் பொருட்டுக் கோவை நகருக்கு மேற்கே 35 கிலோ மீட்டர் தொலைவில் சிறுவாணிமலையின் அடிவாரத்தில் நிலம் வாங்கியிருக்கின்றார்கள். அங்கே ஒரு சமயப் பயிற்சி நிறுவனம் அமைக்கும் முயற்சியினையும் மேற்கொண்டுள்ளார்கள்.


2. இதனுடன் முதியோர் பாதுகாப்பு இல்லம் ஒன்றும் தொடங்கத் திட்டமிட்டுள்ளார்கள். வாழ்க்கையில் புதல்வர்களின் பாதுகாப்பில் இருக்க இயலாமல் முதிய வயதில் அமைதி குன்றியிருக்கும் முதியவர்களுக்குத் தங்கும் இடம், உணவு முதலிய வசதிகளைச் செய்து கொடுத்தலும் அவர்களுடைய வயது முதிர்ந்த பருவம் ஆன்மீக வழிகளிலும் ஈடுபட்டு அமைதியாகக் கழிவதற்கு உதவி செய்தலும் இதனுடைய நோக்கமாகும்

3 தமிழ்க் கல்லூரியின் மெய்ப் பொருளியல் ஆய்வு மையத்தில் தமிழகத்தின் தொன்மைக் கடவுட் கொள்கையினை ஆய்வு செய்தல், வழிபாட்டில் ஆகமநெறியினைத் தெளிவு செய்தல், வீர சைவ நெறியினை இக்காலத்து நிலைக்கேற்ப எளிமைப்படுத்திப் பெரும்பாலான மக்கள் பின்பற்றுமாறு செய்தல், ஆகியவற்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றார்கள்.

4. இவற்றிற்கு உதவியாகத் திருமடத்தின் சார்பில் ஓர் அச்சகம் தொடங்கவும் மாத இதழ் தொடங்கவும் திட்டமிட்டிருக்கின்றார்கள்.

இங்ஙனம் பல்வகையாலும் திருமடங்களின் முதல்வர்களுள்ளும் சமய சமூகப் பணியாளர்களுள்ளும் கல்வியாளர்களுள்ளும் தனித்தன்மை பெற்றுச் சிறந்து விளங்கும் நமது அடிகளார் அவர்கள் இத்துணை யாண்டுகளாகத் தமிழுக்கும், தமிழகத்துக்கும் குறிப்பாகக் கொங்கு நாட்டுக்கும் சமய நெறிக்கும் குறிப்பாக வீரசைவம், சைவம் ஆகிய நெறிகளுக்கும் ஆற்றியுள்ள பணிகளைக் குறித்துப் பாராட்டுவதும் எதிர்காலத்தில் மேற் கொள்ளும் பணிகளும் பெருவெற்றி பெற்றுப் பொதுமக்களுக்குப் பயன்படுமாறு அவர்கள் நல்ல ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும் பெற்றுச் சிறந்து வாழ்க என்று வாழ்த்துவதும் அப்பணிகளுக்கு ஒல்லும் வகையான் உடனின்று ஓவாது பணிசெய்தலும் நமது கடமையாகும்.





பேரூராதீனத்தின் சமயப்பணிகள்

" இன்ப மாய தராதிடை ஓங்கவும்
துன்ப மாயது தூரத்துள் நீங்கவும்
முன்பராபரன் மொய் குழலோ டணைந்து
அன்பின் ஈன்றஓர் ஆனையைப் போற்றுவாம்"

உலக சமயங்கள் பலவற்றுள்ளும் நம் நாட்டின் பழம் பெருஞ்சமயமான இந்து சமயம் போற்றத்தக்கதாக விளங்குகிறது, பாரத நாட்டின் சிறந்த சைவச் செந்நெறியே இந்து சமயம். ஆன்றோர்களது ஆய்வின்படி 'தொன்மைச் சிவநெறியே' இந்து சமயமாகும்.

'சிவவழிபாடு' உலக வரலாற்றில் மிகப் பழமையானது என்பதற்குரிய சான்று களை உலகம் முழுதும் காணமுடிகிறது. பல நாடுகளிலும் கண்டங்களிலும் சிவ லிங்க உருவங்கள் அமைந்திருப்பதன் மூலம் சிவவழிபாட்டினை முன்னோர்கள் பழங்காலத்தில் செம்மையாகப் போற்றி வந்தனர் என்பதை அறியலாம். மொகஞ்ச தாரோ ஹாரப்பா போன்ற இடங்களில் அகழ்வாய்வின் மூலம் சிவலிங்கங்கள் அதிகம் கிடைத்தன என்ற அறிஞர்கள் கூற்றின்படி ஆன்மார்த்த வழிபாட்டிற்கு உரிய தாகிய சிறிய சிவலிங்கங்கள் பழமைச் சிவநெறியை நமக்கு விளக்குகின்றன. இச்சிவ நெறியே பிற உலக சமயங்கட்கும் ஆதாரமாகும். பிறநாடுகளிலும் இக்கொள்கையை நடைமுறைப்படுத்தி வழிபட்டு வருகின்றனர்.

இந்து சமயம் என்பது அறுவகைச் சமயங்களையும் அதனோடு தொடர்பு உடைய பிறசமயங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. இச்சிவநெறி கடல்கோட் கட்கும் முற்பட்ட ஒன்று. இமயம் முதல் ஈழம் வரையுள்ள நாடுகளில் பரந்த சிவ நெறியைக் காண்கிறோம். அன்னையின் வழிபாட்டைக் குமரியிலும் அப்பனது வழி பாட் டை இமயத்திலும் காட்டிப் பரந்த சிவநெறியின் சிறப்புக்குப் பல இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

இமயத்திற்கும் குமரிக்கும் இடைப்பட்ட இந்தியாவின் பழம்பெருஞ் சமயம் சைவசமயமாகும். இதனால் சமயநிறுவனங்கள் பல தோன்றின. அருளாளர்கள் மக்களிடையே சமயநெறியைச் சிறப்பாக வளர்த்து அதன் மூலம் வாழ்வாங்கு வழிவகை செய்ய ஏற்பட்டவையே ஆதீனங்கள்; இடையிடையே அப்பணிகள் காலச்

சூழல் காரணமாகத் தடைப்பட்டன. சென்ற நூற்றாண்டில் பணிசெய்த ஆதீனங்கள் திருமடங்கள் பற்பல. 16,17 ஆம் நூற்றாண்டில் பேரூரில் சாந்தலிங்க அடிகளார் திருமடம் என்ற பெயரோடு விளங்கிச் சிறப்பான பல பணிகளைச் செய்து கொண்டுள்ளது.

இதனைத் தோற்றுவித்தவர் 'வீரசைவச் சித்தாந்தச் செந்நெறியில் நன்னெறி ஈதென்று உலகுக்கு உணர்த்திய சான்றோரான சாந்தலிங்க அடிகளார்'' ஆவார். அடிகளார் தமிழகத்தின் பல இடங்களில் சென்று வழிபட்டு அருளாளர் தொடர்பு கொண்டு பல அருட்பணிகளை ஆற்றியுள்ளார். இவர்தம் ஞானாசிரியராக விளங்கியவர் திருவாவடுதுறை ஆதிகுருவாக விளங்கிய நமச்சிவாய தேசிகரது மாணவர் துறையூர் சிவப்பிரகாசர் ஆவார். அவர் சிவநெறிக்கு ஆற்றிய தொண்டு மிகப் பெரிது. சிறந்த சமயப்பணிகள் பலவற்றைச் செய்தவர். 'திருப்பருப்பதம்' என்று சொல்கின்ற ஸ்ரீசைலம் வரை சென்று பல மடங்களை நிறுவிப் பல தொண்டர்களை உருவாக்கிச் சமயச் செந்நெறியை வளர்த்திருக்கிறார். அவருடைய முதல் மாணவராக ஞானப்புதல்வராக விளங்கியவர் சாந்தலிங்க அடிகளார். இவர் சமயப் பொறையும் செந்தமிழ் நெறிப்பண்பும் உடையவர். இந்நிலையில் மக்களின் மனதைத் தெளிவுபடுத்தத் தவக்கோலம் பூண்டார்.

> '' தேறு நிமித்தம் திருத்தொண்டு செய்பவராய்
> கூறும் அடியார் குழாம் பலவும் கொண்டார்''
>
> ''சாலக் கருணை தழைத்த குருதாள் பணிந்து
> கூலப் பொலிவாரும் கொங்குவள நாட்டினிடை
> மேலைச் சிதம்பரமாம் மிக்க புகழ்ப் பேரூரில்
> சீலத்தவர் போற்றத் திருமடம் ஒன்று அமைத்தார் ''

என்று தவத்திரு தண்டபாணி சுவாமிகள் போற்றுகின்றார். இத்தகைய பெருமை படைத்தவரால் உருவாக்கப்பட்ட பேரூராதீனம் சிறந்த மாணவர்களை உருவாக்கி, அடியார் திருக்கூட்டங்களைப் பெருக்கியது. போரூர், திருமுதுகுன்றம், பேரூர் என்ற மூன்று இடங்களில் இவற்றின் பணிகள் சிறப்புப் பெற்றன. சிறந்த மனப் பக்குவம் அமைத்து உலகிற்கு உதவ வாழ்ந்த சாந்தலிங்கப் பெருமானைக் கன்னட நாட்டு மன்னரான குமாரதேவர் தமக்குரிய ஞானாசிரியராகக் கொண்டு வாழ்ந்தார். குமாரதேவராகிய மன்னர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் திருவாயிலைத் தூய்மைப்படுத்தல், அலகிட்டு மெழுகல் போன்ற பணிகளைச் செய்தார். இவரது மனப்பக்குவ நெறி உணர்ந்து சாந்தலிங்கப் பெருமான் அருள் மொழியுணர்த்திப் பலதலங்களைவழிபடுமாறு ஆணை வழங்கினார்.

இவர் மகாராஜத் துறவு. சுத்த சாதகம் போன்ற நூல்களை அருளிக்குமார தேவர், என்ற திருப்பெயரோடு பழமலை என்னும் திருமுதுகுன்றத்தில் பெரிய நாயகியம்மையாரின் திருவருள் பெற்றுத் திருமடம் அமைத்தார். இவரது மாணாக்கர் போரூர் சிதம்பரசுவாமிகள் முருகன் அருள்பெற்றவர்,

குமாரதேவரிடம் அவரது பக்குவம் கண்டு சாந்தலிங்க அடிகளார் திருமுன்பிற்கு அழைத்து வந்தார் அடிகளார் 'எனக்கு நீ ஒருவன் போதும் நீ அவனை ஆட்கொள்' என்று கூறினார் சிதம்பரசுவாமிகள் இத்தகைய குருமுதல்வரை பெற்ற தவப்பயனால் சாந்தலிங்கப் பெருமான் இயற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலைமறுத்தல், அவிரோத உந்தியார் ஆகிய நூல்களுக்கு உரை எழுதினார். இவருடைய உரைகள் அறிஞர் பலரால் பாராட்டிப் போற்றப்படுகின்றன. முருகன் திருவாசகம் என போற்றப் பெறும் திருப்போரூர் சந்நிதிமுறையைப் பாடினார். போரூர் முருகன் திருக்கோயிலைச் சிறப்பாக எடுப்பித்து அங்கு திருமடம் அமைத்து வாழ்ந்தார்.

பேரூராதீனம் மாணவர்களை உருவாக்கிப்பல அருள் நூல்களையும் பரப்பியது. இத்தகைய அருள் நூல்கள் சைவ சமயத்திற்குப் பெரிதும் துணைபுரிவன. மற்ற சமயங்களைப் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொண்ட ஒருமைப் பாட்டை இந்து சமயத்தில் காணலாம். அவ்வாறு காட்டிய அருளாளர்களும் உள்ளனர் இவ்வகையில் சாந்தலிங்கப் பெருமானுடைய நூல்கள் சமயச் செந்நெறியால் பிணக்குக் கொள்ளாமல் உண்மை உணர அமைந்தது. சாந்தலிங்கப் பெருமான் சமயக்கொள்கைகளை உள்ளவாறு உணர்ந்தவர்.

நாம் மாநாடு பல கூட்டி நமது சமுதாயத்திற்குரிய பல கருத்துக்களைக் கூறி வருகிறோம். ஆனால் அன்றே அத்தகைய பேரவை கூட்டிச் சமயத்தைப் பரப்பும் பாங்கினை அருளியவர் எமது ஆதி குருமுதல்வர். சிறந்த புலமையும் அறிவாற்றலும் மக்களை ஈர்க்கும் பண்பும் உலகவாழ்வின் தன்மையை உள்ளவாறே உணர்த்தும் திறனும் கொண்ட வாய்மைச் சீலர் உலக வாழ்வு பற்றிக் கேட்போருக்கு விளக்கம் கூறிப் பிறர் கருத்துக்களை மறுத்து தன் கருத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் நிலை நாட்டினார் என்பதை அவருடைய பாடல்களின் மூலம் அறியலாம்.

அவருடைய கொலைமறுத்தல் என்ற நூல் அன்பின் பெருமை பற்றிக் கூறுவது. அதாவது "அன்பின் வழியது உயிர்நிலை" "அன்பே சிவம், அன்பும் சிவனும் இரண்டன்று" 'அன்பின் வடிவம் சிவம்' அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை, என்னும் அடிப்படையில் உயிர்கட்கு அருளல், 'உயிர்கட்கு இரங்கல் போன்ற வழி களைக் கூறுகிறது. பல்வேறு சமயத்தவர் கருத்துகளை மறுத்து எடுத்துக்காட்டும் இடங்களில் இந்து சமயக் கொள்கையை நிலைநாட்டியுள்ளார்.

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு

என்று உலகினரைப் பற்றி வள்ளுவம் பேசுகிறது. உலகத்தோடு ஒட்ட ஒழுகும் அறிவுடையவர்களை வாழ்வியல் உண்மைகளை உணர்ந்து கொள்பவரை ஒழுக்கத் தில் உயர்ந்தவர்களை உலகோர் என்று பேசுகிறது வள்ளுவம். இத்தகையோர் சேர்ந்துள்ள அவையால் உயர்ந்த சமயமாகச் சாந்தலிங்கர் சில நெறியைக் கூறுகிறார்

குளிர்ந்த தண்ணிய நிலவு போன்று இந்து சமயக் கோட்பாடுடைய சைவர் வழி காட்டுபவராக விளங்குபவர் தன்னைப் பக்குவப் படுத்திக் கொள்ள நினைக்கும் ஒருவருக்கு கூறுவதாக அமைந்தது இப்பாடல் :

எடுத்துள எச்சமயிகளும் உலகருஞ்சார்
ஓரவை யினிடை பிற்றோன்றும்
உடுத்தனைச் சூழ்தர விளங்கும் மதியின் உயர்
சைவரை வந்து ஒருவன் தாழ்ந்தீண்டு

அடுத்த பல உயிர்த் தோற்றத்து உயர்வுதாழ்வு
அருளுக என அவனைத் தேற்றித்
தடுத்த புறச்சமயிகளுக்கு உத்தரம் உறுத்தி
நிறுத்து கின்றார் தாயபாலூற்றம்

(கொலை மறுத்தல்)

சமயத் தலைவர்களிடத்திலே பெற்ற விளக்கங்களை விடச் சாந்தலிங்க அடிகளார் தன் கருத்துச் சிறந்த கருத்து எனவும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய கருத்து என்றும் விளக்கம் செய்கிறார் எனவே பிறர் கூறும் தடைகளை நீக்கி விடைகூறி இதுவே முடிவு என விளக்குகிறார்.

'வைராக்கிய சதகம்' என்ற நூல் மனம் நிலைபெறப் பல காரணங்களைக் கூறுகிறது. வள்ளுவம்

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்று பேசியதோ அதுபோல இறைவன் திருவடியை வணங்கி அருளாளர்களது பாடல்களை ஓதுவதால் சிறந்தபயன் கிட்டும் என்றும் அப்பாடல்களை ஓதி ஓதி நெக்கு நெக்கு உருகினால் சிவபெருமான் அருள்புரிவார் என்பதையும் இறைவன் குருவடிவாய் வந்து அருள் செய்தான் என்பதை

''விளம்பற்கரும் சோதியென்கோ விடையோன் என்கோ என்
னுளம் புக்க சிவப்பிரகாசன் என்கோ என் அங்கைத்
தளம் பற்றிய சாந்தன் என்கோ நின்றனது நாமம்
வளம் பெற்ற திருக்கைலாய சொல்வாய் எனக்கே''

எனக் கூறும் அருட்பாக்களால் விளக்கியுள்ளார்.

வைராக்கிய தீபம் என்ற நூலில், சிறிய அளவில் உள்ள மருந்து உடலுள் சென்ற வுடன் நோயை அகற்றுவது போல, ஞானாசிரியரது அருள் நிறைந்த ஒரு சொல் நமக்கு உறுதியைத் தந்து பிறவிப் பிணிகளைப் போக்கிச் சிறந்த உள்ளுணர்வைப் பெற்றுக் கொண்டு வளர்கின்ற வளர்ச்சிக்கு உதவுவதாக அமைகிறது என்பதை

அருந்திய காலத் தற்பமாய்பின்பேர் அவுடதம் உடம்பி னின்றுடலை
வருத்திய பிணியெலாம் அகற்றுதல்போல் வஞ்சனேன் நெஞ்சில் மாற்றரிதாய்
இருந்த எப்பற்றும் பிற்றை நாள்களில் விட்டேக அன்றே
கடைக்கணித்தல் புரிந்த நம் குரவன்
அருளிருந்தமை எப்பொழுதும் உள்நினைந்து வாழ்ந்திடுவோம்,

என்று பேசுகிறது. உலக வாழ்க்கை அழிவுடையது. மறைகளின் கருத்து அது தான். திருவள்ளுவர் தமிழால் நமக்கு அருளப்பட்ட வேதம் திருக்குறள் என்று கூறுகிறது. அருளாளர்களின் சொல்லை ஏற்று நடக்கவேண்டும். நிலையான வாழ்வை அடைய முயல வேண்டும் என்றும், மேலான நெறிகளைப் பின்பற்றல் வேண்டும் என்றும், காட்டுகிறது இந்நூல்

அவிரோத உந்தியாரில் விரோத மனப் பான்மையை விட்டு ஒற்றுமை மனப் பான்மையோடு வாழ்தல் உயர்வுடையது என்ற இந்து சமயக் கோட்பாட்டையும் வீடுபேறு அடைதற்குரிய வழிகளையும் கூறுகின்றது, தத்துவக் கோட்பாடுகளை யும் விளக்குகிறது இந்நூல்.

''எல்லாம் உடையான் குருவாகி ஈங்கெமது
அல்லல் அறுத்தான் என்று உந்தீபற
அவன்தாள் தொழுவோம் என்றுந்தீபற''

என்று தொடங்கும் அருமையான இந்நூல்'

எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும்
சம்மதமே யெமக் குந்தீபற
தற்போத மாய்க்கு மேல் உந்தீபற

எனப் பொதுநிலை கூறி நீ விட்டு நெறி அடைய உலகியல் நன்னெறிகளை உள்ள வாறு உணர்ந்து செல்வதுதான் சிறந்த நெறி என்று காட்டுகிறது.

தவிரா விரோத சமயநூல் என்றால்
அவிரா அவிரோத உந்தி என்றுந்தீபற
ஆமிந் நூல்நமக் என்றுந்தீபற

என்று கூறுகிறார். எனவே இத்தகைய சிறந்த அருள் நூல்கள் மூலம் சமய உண்மையை விளக்கிய சாந்தலிங்கப் பெருமானால் தோற்றுவித்த இப் பேரூராதீனம் சைவ சமயக் கோட்பாடுகளைப் பல நூற்றாண்டுகளாக விளக்கி வரும் சிறந்த நிறுவனமாக விளங்குகிறது. அருளாளர்கள் கொங்குநாட்டின் பலபகுதிகட்கும் சென்று பாரதநாட்டின் சிவ நெறியும் சமயப்பண்பும் மக்களிடையே வளர்க்கத் தலையிட்டனர். அவற்றை அறிந்து கொள்ளவும் வாய்ப்புகளை பெருக்கியுள்ளனர்- சாந்தலிங்க அடிகளார் காட்டும் அருள் வழியில் இலங்கும் இவ்வாதீனம் 1916-ஆம் ஆண்டின்

தொடக்கத்தில் சத்வித்யா சன்மார்க்க சங்கம் தொடங்கிப் பல சமய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியும் சிறந்த கருத்தரங்குகளை நடத்தியும் வருகின்றது. சாந்தலிங்க அடிகளாரின் குருபூசை ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வமயம் அறிஞர்களை ஈடுபடச் செய்து தத்துவச் சமயக் கோட்பாடுகளை வளர்க்க அரிய சொற்பொழிவாற்றல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டு வருகின்றது.

நாடு முழுவதும் சென்று மக்களை அணுகி சமய நெறியால் வாழ்வதற்கு உரிய வழிகளை அறநெறிகளை உணர்த்தி நல்லுணர்வு ஊட்டுகின்றனர். தமிழ் நெறியில் திருமுறைகளின் துணைகொண்டு திருக்கோவில் வழிபாடு நடைபெறச் சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சிறந்த தமிழறிவும் சமய உணர்வும் ஏற்படும் வகையில் கோயில் புதுப்பித்தல், திருமுழுக்கு நீராட்டு இவற்றிற்குத் தலைவர்களும் தொண்டர்களும் தாமே முன்நின்று செய்து மக்களுக்குப் பக்தி உணர்வு பண்புகள் ஆகியவற்றை வளர்க்கின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட திருக்குட நீராட்டு நிகழ்ச்சிகள் தெய்வத் தமிழ் நெறியால் நிகழ்ந்துள்ளன.

சிறுவர் உள்ளத்தில் உயர் கல்வி புகட்டல், சிறந்த இலக்கண இலக்கியங்களை மக்களுக்குப் பரப்பல், சொல்லேர் உழவர்களை உருவாக்கல், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை சமய வழியில் காணுதல் இவ்வாதீனத்தின் பணியாகும்.

ஆதீனத்தின் சார்பில் பல நிறுவனங்கள் சமய ஒழுகலாறுகளை விளங்கக் கூறியும் குங்குமம் திருநீறு போன்ற இறைவனின் பிரசாதங்களை வழங்கியும் மன அமைதி பெறப் பணிபுரிகிறது.

இவ்வாதீனம் மேலும் "கடையனுக்கும் கடைத் தேற்றம்" என்ற வகையில் எல்லோருக்கும் அருள்நெறியை உணர்த்தி வழிகாட்டுகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நிலையில் தமிழகத்திலுள்ள அனைத்துச் சமய நிறுவனத்தோடும் தொடர்பு கொண்டு அவர்களது கருத்துக்களில் ஏற்பன ஏற்றுப் பணி புரிகிறது. பல சமய அறிஞர்களைக் கொண்டு ஆய்வுரைகளையும் வழங்கிச் சமயக் கருத்துக்களையும் பரப்புகின்றது.

பழுதுற்ற கோவில்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க தலங்கள் ஆகிய செப்பனிடல் கோடை கால வகுப்புகளை நடத்தித் தமிழுணர்வும் சமய அறிவும் வழங்குதல் ஆகிய பல வகைகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளது. வேறுபாடு காட்டாது திருமுறை நெறியில் சிவனை வழிபடுபவர் அனைவரும் நம் உறவுக்கு உடையவர் என்ற நிலையினை மேற்கொண்டு திருமூலர் நெறியில் நின்று சமய ஒழுகலாறுகளைப் பின்பற்றச் செய்கிறது இவ்வாதீனம்.

தென்னாட்டிலுள்ள மடங்களுக்குள் இருந்த வேற்றுமைகளை நீக்கி அனைத்து மடங்களையும் ஒருங்கிணைக்கும் சீரிய முயற்சியில் ஆதீனத்தலைமை நிறைவான வெற்றி கண்டது. அவ்வெற்றியின் விளைவாகவே "தெய்வீகப் பேரவை" என்ற அமைப்பு உருவாயிற்று.



யாகசாலையில் அடிகளார்



அருட்செல்வருக்குப் பாராட்டு

தமிழகத்திலுள்ள துறவியர்கள் அனைவரையும் உள்ளிட்ட ஒரு அமைப்பாகப் 'பேரவை' யொன்று அமைக்கும் விருப்பத்தைப் பேரூர் ஆதீனம் நீண்டகாலமாகக் கொண்டிருந்தது. இப் பெருவிருப்பில் திரண்ட பெற்றியதாய் உலக இந்துப் பேரவை யின் தொடர்போடு துறவியர் மாநாட்டைத் தில்லைத் திருத்தலத்தில் முதன் முதலாகத் தொடங்கியது. இம்மாநாட்டிற்கு ஆதீனத்தலைவர் அமைப்பாளராக இருந்து விழாச் சிறக்க அரும்பணியாற்றினார்

பின்னர் இரண்டாவது துறவியர் மாநாட்டைத் திருவானைக்காவில் தலைமை யேற்று வழி நடத்தினார்கள். இதனைத் தொடர்ந்து மதுரையம் பதியில் மூன்றாவது துறவியர் மாநாடு இனிது நடந்தேறியது. இம் மாநாட்டிற்கும் அமைப்பாளராக இருந்து சீரிய தலைமையில் சிறப்பாக வழிநடத்திய சால்பும் எம் ஆதீனத் தலைமை யையே சாரும். மேலும், அனைத்திந்தியத் துறவியர் மாநாட்டிலும், பிற மாநாடுகளி லும் அறவழிகாட்டும் ஆதீனப் பேரவையிலும் அங்கம் வகித்துச் சமய வளர்ச்சிக் கான கருத்துக்களைச் சமுதாய மேம்பாட்டுக்கானவற்றை நல்கித் தன் பணியை மேற்கொண்டு வருகின்றது. இமயம் முதல் குமரி வரையிலும், ஏன் இந்தியர் வாழும் அயல்நாடுகளிலும் சமயவளர்சசிக்கு உறுதுணையாய் இருந்து செயலாற்றும் பெரும் பொறுப்பையும் ஆதீனத் தலைவர் ஏற்றிருக்கிறார்கள்.

தொண்டுக்கும் தூய அன்புக்கும் முதலிடம் தந்து விழா நடத்தி, அன்பர் கூட்டமாகிய மக்கட் செல்வத்தைப் பெற்று இந்திய சமயக் கோட்பாடுகளின் தூயதாகிய சிவநெறியைக் கடைப்பிடித்து வீரசைவநெறியை உலகறியச் செய்யும் நடைமுறையைக் கொண்டது இவ்வாதீனம். தற்போது சமயதத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றைத் தொடங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகமநெறியை உளளவாறு அறிந்து கெள்ளும் வகையில் ஆய்வுகள் நடத்தத் திட்ட மிட்டுள்ளது. அரிய இலக்கியங்கள் ஓலைச்சுவடிகள் தொல்பொருள்கள் ஆகிய வற்றை வெளிப்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

''என்கடன் பணி செய்து கிடப்பதே
தன்கடன் அடியாரையும் தாங்குதல்''

என்றும் 'தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' என்றும் பாடிய அப்பர்அடிகளின் உயரிய குறிக்கோளுக்கேற்ப நடைபெற்றுவருகிறது. இவ்வாதீனம் திருமூலரும் மணிவாசகரும் மெய்ப் பொருளியலை மேற்கொண்டு அங்கலிங்க வழிபாட்டை நடை முறைப் படுத்தும் வீரசைவத் தொன்னெறியில் செயலாற்றுகிறது.

வளர்க சிவ நெறி !

வாழ்க வையகம் !



திருக்கயிலாய பரம்பரையில் திருப்பேரூராதீனம்

வித்துவான் கு. அருணாசலக் கவுண்டர்

இந்தியாவிலும், இலங்கை முதலிய தீவாந்தரங்களிலும் பெரும்பான்மையான தமிழ் மக்களின் சமயமும், தத்துவமும் ஆகிய சைவ சித்தாந்தத்தை வேதசாரம் என்கிறது சுப்ரபேதம். வேதாந்தத் தெளிவு என்கிறது சிவப்பிரகாசம். வேதங்களின் விரிவுரையாய்ச் சமைந்த ஆகமங்களின் முடிந்த முடிவுதான், (ஆகமாந்தந்தான்) சைவ சித்தாந்தம்.

ஒன்றோடொன்று ஒவ்வாமல் தம்முள் முரண்படும் உலக சமயங்கள், பிணக்கமின்றி, ஓரிடத்தே காணநிற்பது எது? அது சமயம் என்றால் சைவம் ஒன்றுதான். எல்லாம் தழுவும் சமயமாய் '' அரசாங்கத்து அமர்ந்தது '' என்று அதன் சமரசத் தன்மையைத் தாயுமானவர் புகழ்ந்திருக்கிறார். இதன் பண்பையும் பயனையும் குறிப்பிட்டுச் சமயங்கடந்த மோன சமரசமாய் முற்றிச் சமயாதீதப் பழம் பொருள்பால் சேர்க்க வல்லது இதுதான் என்று அனுபூதிமான்கள் போற்றியிருக் கிறார்கள்.

தத்துவ ஞானம் வேறு; சமய நம்பிக்கை வேறு; இரண்டுக்கும் ஆதாரம் வேதாகமங்களே. எனினும், பிரபஞ்ச இயல்பையும் அதன் மூலத்தையும் ஆராய்வது தான் தத்துவஞானம். இந்த ஆராய்ச்சியால் மட்டும் மனித உள்ளம் திருப்தி அடைந்து விடுவதில்லை. மனிதனுக்கு ஒரு குறிக்கோளும் அதை எய்தும் வழியும் தேவை. இதை நல்குவதுதான் சமயம். மக்களது பிரார்த்தனைகளைப் பூர்த்தி செய்து, அவர்களை ஈடேற்றவல்ல ஒரு முழுமுதற் கடவுளைப் பற்றுக்கோடாகக் கொள்ளும் சமயத்தையும் வறட்சியான தத்துவஞானத்தையும் இணைத்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழிகோலி மறுமையிலும் அந்தமில் இன்பத்தையும் வழங்குவதுதான் சைவ சமயம். ஆதலின் இந்திய மதங்களிலேயே இதுவே மேம் பட்டது என்பர் டாக்டர் போப்.

இப் பெரும் சமயத்தை உலகுக்கு நல்கியவர் மானிடர் எவரும் அல்லர். சிவ பெருமானே என்பது சைவர் நம்பிக்கை. சிவபெருமான் நேராகவே தகுந்த ஞானி யரை அதிட்டித்து நின்று அவர் மூலமாகவே உலகுய்ய உணர்த்தி அருளிய உண்மை கள் வேதாகமங்களிலும் திருமுறைகளிலும் பரந்து கிடக்கின்றன. எனினும் இந்நூல் களின் ஞான பாதப் பெரும் பயனைத் தமிழ் மக்களுக்களித்து, அதை ஒரு தரிசன மாக்கி உபகரித்த ஞான சூரியர் மெய்கண்ட தேவர்தான். இவர் அருளிய சிவஞான போதம் பன்னிரண்டு சிறு சூத்திரங்களாக அமைந்து வடிவிலே குறுகியது எனினும்

பொருளிலே ஆழ்ந்து அகன்றது. இந்நூல் சமயப் பொருள் காண்பார்க்கும் அனுபூதிமான்களுக்கும் ஞானக் களஞ்சியமாய்த் திகழ்கிறது. முத்திபெற முயல்வார்க்குப் பிறவி வேர் அறுக்கும் ஞான வாளாய் மிளிர்கிறது.

இதன் கோட்பாடுகள் மெய்யும் பொய்யுமான கதைகளை அல்லது மன முயற்சியான கற்பனைகளை ஆதாரமாய்க் கொண்டு சமைந்தவை அல்ல; உண்மையின் பிண்டங்களே. எங்கும் எக்காலத்தும் காணப்பெறும் உண்மைகளின் உருவங்களான இதன் கொள்கைகள் ஒன்றுக்கொன்று ஒத்தும், ஒன்றினின்று மற்றொன்று உதித்தும் ஒன்று மற்றொன்றை விளக்கியும் நிற்கின்றன. இதன் தரிசனத்தை உருவாக்கிய மெய்கண்டார் காலம் கி. பி 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர்க்கு முன்னமேயே தமிழ் மக்களிடையே சைவ சமயம் வேரூன்றியிருந்தது. தமிழ் நாடெங்கும் சிறியதும் பெரியதுமாகிய சிவ ஆலயங்கள் தோன்றியிருந்தன. கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலே அப்பரும் சம்பந்தரும் தல யாத்திரை சென்று நெஞ்சுருக்கும் தேவாரங்கள் மூலம் சைவத்தைப் பரப்பி வந்தது சரிதம் ஏறிய உண்மை. ''பண்டை நல்தவத்தால் தோன்றி ப்பரமனைப்பத்தி பண்ணும்'' இத்தொண்டர் வேதாகமங்களின் நுண்பொருளை வெண்ணைபோலக் கடைந்து எடுத்துத் தேவாரமாக வழங்கினர். அதன் நெய்தான் சிவஞானபோதம் என்கிறது ஒரு பழம் பாடல்.

''வேதம் பசு அதன்பால் மெய்யரகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதன் உள்ளுறு நெய்—போதமிகு
நெய்யின் உறு சுவையாம் நீள் வெண்ணை மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்''

எனினும், சிவஞானத்தைக் குருமாராலே பெற்றுத் தமிழினிலே ஒரு தரிசனமாக உருவாக்கிக் கொடுத்தவர் மெய்கண்டார் தான். இவர் காலம் கி.பி. 1225. உத்தேசமான இக்கால வரையறையைக் கவனத்திலே கொள்வது இன்றியமையாதது; ஏனெனில் இதற்குச் சற்றுமுன் அதாவது கி பி. 12ஆம் நூற்றாண்டில் கன்னட தேசத்தில் சைவ சமயம் வீறு கொண்டெழுந்தது. சமண மதம் பின் எப்பொழுதும் அங்கு தலையெடுக்காதவாறு அழிந்தது; காசுமீரத்திலும் அபிநவ குப்தரால் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் சைவம் மிக உன்னத நிலையை அடைந்தது. இவர் உருவாக்கிய பிரத்திய பிஞ்ஞா தரிசனம் தமிழகச் சைவ சித்தாந்தத்தை ஒத்திருக்கிறது. இவற்றால் நாம் யோசிக்கக் கூடியது என்ன? முதலில் காசுமீரத்திலிருந்தும் பின்னர் கன்னட தேசத்திலிருந்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட சைவ சமயக் கோட்பாடுகள் அலை அலையாய்த் தமிழகத்திற்கு வந்தன என்பதே. தேவாரங்களிலே இடம் பெற்றுள்ள தத்துவக் கருத்துக்கள் ஆகமங்களினின்றும் முதன்முதல் சிற்றலைகளாக வந்திருக்கலாம். பின்னர் சிவஞானப்பெரு வெள்ளம் பிரவேசித்து மெய்கண்ட நூல்களைத் தோற்றுவித்திருக்கலாம். சைவ சித்தாந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இப்படித்தான் நிகழ்ந்திருத்தல் கூடும் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உண்டு. கயிலைத்தாழ் வரையிலே ஆகமாந்தம் பிரத்திய பிஞ்ஞா தரிசனமாகத் தோன்றிப் பின்னர் கன்னட தேசத்தில் வீர மகேஷ்வரர் தரிசனமாகவும் தமிழகத்திலே சுத்த சைவ தரிசனமாகவும் திரிந்தது. இப்படித் திரிந்ததேனும் அடிப்படைகள் மாறவில்லை.

ஆகமங்களின் முடிவான சைவம் காசுமீரத்திலே பிரத்திய பிஞ்ஞை, ஸ்பந்தம் என்ற இரு பிரிவுகளிலே இயங்குகிறது. இவற்றின் அடிப்படையிலே வேற்றுமை யில்லை. பிரத்திய பிஞ்ஞைதான் அனுட்டான நெறியிலே ஸ்பந்தம் எனப்படுகிறது. ஸ்பந்த தத்துவத்தை வகுத்தவர் வசுகுப்தர். இவர் காலம் கி.பி. 800. பிரத்திய பிஞ்ஞையை அபிநவ குப்தர் உருவாக்கியதால் அது கி.பி 9ஆம் நூற்றாண்டிலேயே தோன்றியிருத்தல் கூடுமென்று டாக்டர் பக்லர் (Backler) கருதுகின்றார். இது தவறு. ஏனென்றால் கி.பி. 850இல் தான் தாம் இயற்றிய ஸ்பந்த காரிகையில் கல்லாடர் தமக்கு முற்பட்ட பிரத்திய பிஞ்ஞை நூல்களினின்றும் மேற்கோள் கொடுத்திருக் கிறார். எனவே இவருக்கு முன்னமேயே பிரத்தியா பிஞ்ஞை சமைத்திருத்தல் கூடும். இதன் அடிப்படை சுவேதா சுவதர உப நிடதம்; இவ்வுபநிடதம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குமுன் தோன்றியிருக்கக் கூடும். மெய்ஞ்ஞான விளக்காகிய இவ் வுபநிடதத்தைச் சங்கருக்கு முற்பட்டவரான நீலகண்டர் சிவபர மாகச் செய்து தமது பிரமசூத்திர பாஷ்யத்திலே பிரமாண நூலாகக் கொண்டிருக் கிறார். இவ்வுபநிடதக் கோட்பாடுகளைப் பல கோணங்களிலும் விளக்குபனதாம் 28 திவ்யாகமங்கள்; இவற்றின் பிறப்பிடம் கயிலைத் தாழ்வரை காசுமீர தேசம்

காசுமீரத்தைப் பாரசீகர் சுவர்க்கத்தின் முன்றில் சோலை—The garden of Para dise என்றனர் ஐரோப்பியர் முத்துக்கள் பதிக்கப்பட்ட மரகதம் Emerald Set with Pearls-என்றனர். பசிய சோலைகளும், பனிமலைகளும பூம்பொய்கைகளும், சூழ்ந்த இப்பிரதேசத்தை இந்திய ஞானிகள் பூகைலாசம் என்றனர். இங்கே ஞானி களும், யோகிகளும், சிவலோக மர்மங்களை நேருக்கு நேர் உணர்ந்து மெய்ஞ் ஞானத்தை வெளிப்படுத்தியதிலே வியப்பில்லை. அவர்களிலே ஒருவர்தான் திருமூலர்.*

கயிலையினின்றும் தென்னாடு போந்த திருமூலர், முதிர் பேர் அறிவாகிய ஆக மாந்தத்தின் கோட்பாடுகளை மூவாயிரம் பாசுரங்களிலே திருமந்திரம என்ற ஞான நூலாகத் தமிழர்க்கு வழங்கினார். இடையறாத சிந்தனையினால் புந்தியிலே நிகழும் ஆழ்ந்த உண்மைத் தோற்றங்களே மந்திரங்கள், சைவத் திருமுறையின் பத்தாவது பகுதியாய்த் திருமந்திரம் தொகுக்கப் பட்டிருப்பினும் நால்வர்க்கும் திரு மூலர் காலத்தால் முற்பட்டவர். இவர் தமிழ்நாடு போந்தபோது, தென்மொழி யிலே ஞான நூல்கள் ''பொங்கி மிகாமல்'' (திருமந்–97) இருந்தன. ஆதலின்,

---

* மெய்ப்பொருள் உணர்வுக்குச் சாதனமாக நல்லொழுக்கத்தை வலியுறுத்தும் புராணக்கதைகள் சிலவற்றின் உள்ளுறையைக் கூறிக் கடவுளின் ஐந்தொழிலையும் ஆன்மாக்களின் கூறுகளையும் கடவுளின் வழிபாட்டிலே நேரும் வழுக்களையும், முத லிரண்டு தந்திரங்களிலே விளக்கியிருக்கிறார், அடுத்து இரண்டு தந்திரங்களிலே யோகத்தின் வழிகளையும் பேறுகளையும் பேசுகிறார். பின்னர் சைவ மதத்தின் பகுதிகளையும் படிகளையும் வழிகளையும் கடவுள் அருள் ஆன்மாக்கள் தோறும்பதி யும் முறைகளையும் கூறி, ஏழாம் தந்திரத்திலே யோகப் பயிற்சியால் ஆன்மாவை நிலை நிறுத்தும் ஆதாரங்களையும், அவ்வாதாரங்களிலே ஒளிரும் கடவுள் கூத்துக் களையும்கூறி யோகப் பயிற்சியைக் கைப்பற்றிய இடத்து மேற்கொள்ள வேண்டிய ஆசாரங்களையும் அனுட்டானங்களையும் விவரிக்கிறார். 18 அவத்தைகளையும் 6 அத்துவாக்களின் இயல்புகளையும் 8-ஆவது தந்திரத்திலே கூறி, 9வது தந்திரத்திலே பஞ்சாக்கரத்தின் உட் பிரிவுகளையும், அவைகளில் தோய்ந்து இடைவிடாது நினையும் ஆன்மாவின் புந்தியில் பொழியும் இறைவனது அருளையும் பேரின்ப வீட்டை அணுகும் ஆன்மாக்களுக்குப் புலப்படும் காட்சிகளையும் முத்தியின் இலக் கணத்தையும் கூறித் திருமந்திர நூலை முடித்திருக்கிறார்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' (திருமந்-9)

என்று தொடங்கி, ஆகமாந்தம் கூறும் அகவுணர்வு நுகர்ச்சிகள் அனைத்தையும் முறை பிறழாமல் நன்கு கூறியிருக்கிறார்.

இவர் காலம் கி. பி. 6 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனினும், ஆகமாந்தத்தைக் குருமரபிலே பெற்று அதை 12—சிறு சூத்திரங்களிலே ஒரு தரிசனமாக உருவாக்கிய பெருமை 13 ஆம் நூற்றாண்டிலே தோன்றிய மெய்கண்டார்க்கு உரித்தாகிறது. ஒவ்வொரு சூத்திரத்திலும் அவர் விவாதத்திற்குரிய விஷயத்தை அதிகரணங்களாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் தாம் கூறும் பொருளும் பின்னர் அதன் கண் தோன்றக்கூடும் ஐயமும் அதற்குப் பிறர் கூறும் மறுப்பும் முடிவான தீர்ப்பும் புலப்படுத்திச் சிவஞான போதத்தை இயற்றிச் சைவ சித்தாந்தத்தை உறுதியான அடிப்படையிலே சமைத்தார்.

கயிலைத் தாழ்வரையிலே குருமரபின் நாதராகிய நந்திதேவர் சீகண்ட முதல்வர் பால்கேட்ட சிவஞானத்தை ஒருவர்பின் ஒருவராய் வழி முறையிலே உபதேசம் பெற்றவர்கள் சனக்குமாரர், சத்யஞான தரிசினிகள், பரஞ்சோதியாவர். கயிலையினின்றும் போந்து திருவெண்ணை நல்லூர் சேர்ந்து மெய்கண்டார்க்கு உபதேசிக்கவே மெய்கண்டாரும், அதன் மெய்ப் பொருளைச் சுவானுபூதியில் கண்டு தெளிந்து கி. பி. 1225 இல் சிவஞான போதத்தைத் தனிப்பெரு நூலாகச் செய்து அருள் நந்திக்கு உபதேசித்தார். ஆதலின் இவர்தான் கயிலாய பாம்பரை நந்தி மரபிலே மெய்கண்ட சந்தானத்தைத் தோற்றுவித்த பூலோக முதற்குரவர். ஆண்டவனின் முதற் குழவியாய்ச் சுடர் விட்டிருந்த மெய்கண்டாருடைய உபதேச முறையிலே ஒருவர் பின்ஒருவர் சீடராய் வந்த சிவாசாரியார்கள். 1. அருணந்தி 2. மறை ஞானசம்பந்தர் 3. உமாபதி சிவனார்.

மாட்சிமை வாய்ந்த இந்த ஞானமா குரவர் நால்வரையும் சைவ சந்தானச் சாரியர் என்பர். தீர்க்க தரிசனங்களாக இவர்கள் உண்மை ஒளியிலே திகழ்ந்தார்கள். உண்மையை உலகுக்கு உரைக்கவே தோன்றியவர்கள். ஞான பீடாதிபதிகளாய் விளங்கி பக்குவிகளுக்கு உபதேசம் செய்து பாரமார்த்திகப் பேருண்மைகளைப் போதிக்கும் நூல்களையும் இவர்கள் அருளிச் செய்தார்கள். இவர்கள் அருளிய ஞான நூல்களை மெய்கண்ட நூல்கள் அல்லது சித்தாந்த சாத்திரங்கள் என்பர். வேதாக மோக்த சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமய பிரதிட்டாசிரியர்களாய்த் திகழ்ந்தார்கள்.

ஆன்மாவின் மாட்டுப் பொருந்திய புலப்படாது நிற்கும் முதல்வனை உணர்வதற்கு இந் நூல்கள் மட்டும் போதா? நூற் பொருளை முறைப்படி கேட்டற்கும் சிந்திப்பதற்கும் தெளிவிக்கவல்ல அனுபவம் முதிர்ந்த ஞான தேசிகன் இன்றியமையாதவன். அதற்கு முதல்வனே குருவாய் வருவான் என்பதுதான் நம் நம்பிக்கை. ஏனெனில் மல நோய் உயிரைப்பற்றியது. அதனை, 'உயிர்க்கு உயிராய் மறைந்து உள் நின்றுணர்த்தும் முதல்வனைக் குருவடிவில் தோன்றித் தீட்சையாலும் உபதேசத்தாலும் அநுபவ முகத்தாலும் தெளிவித்து ஆட்கொள்கிறான்.

''அருவாகி நின்றானை யார் அறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று''...

எனவே, ஞானமா குரவர்கள் சிவமேயாய் சிவபிரான் சிறப்பாக அதிட்டித்து நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்தற்குரிய அந்தரங்க உரிமையுடையவர். இவர்களையும் இவர்கள் வழிவரும் ஞான புங்கவரையும் கயிலாய பரம்பரையாக வந்த திருமேனிச் சட்டையோடே கூடியிருக்கிற ஞானாசாரியன் என்னும் மேலாகிய பரமசிவன் என்று போற்றுவது மரபு.

பிற்சேர்க்கையிலே அமைந்த [கொடி வழியிலே கண்டபடி கயிலாய பரம்பரையின் அருட்குரவர்களிலே ஏழாமவர் திருவாவடுதுறை ஆதீனத்தாபகர் நமச்சிவாய மூர்த்திகள்; எட்டாமவர், துறையூர், திருவண்ணாமலை ஆதீனத் தாபகரான பட்டீசு வரம் சிவப்பிரகாசர்; பன்னிரெண்டாமவர் : பேரூர் மடாலயத்தாபகர், சாந்தலிங்க சுவாமிகள்; ஏழாமவர் காழிக்கங்கை மெய்கண்டார். இவர் மரபிலே வந்த கச்சி ஞானப்பிரகாசர் காஞ்சிபுரத்திலே தொண்டை மண்டல ஆதீனத்தைத் தாபித்தார் குரு ஞானசம்பந்தர் தருமபுர ஆதீனத்தை நிறுவினார்.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டிலே சற்று முன் பின்னாகத் தோன்றிய இம் மடாலயங் களின் முதல்வர்கள், வழிவழியாக ஞானோபதேசம் பெற்றுச் சீவன்முத்தராய் எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம் யாவர்க்கும் மேலானோம் என்று திருவருளிலே செம்மாந்து திளைப்பவர். சிவபெருமானைத் தனி முதல்வனாகவும் தம்மை அவனது அடிமையாகவும், கருதித் தம்மின் வேறுபட வைத்துத் தியானித்தும், அப் பெருமானது எல்லையற்ற பேராற்றல் முன் தனக்கென்று ஒரு செயல் இல்லாமை யால் தான் என்ற முனைப்பு அற அவனது அருளிலே அடங்கி ஒன்றாகத் தம்மை மறந்தும் இவ்விரு திறமும் விளங்க அவன் அருள் வழியராய் நின்று ஒன்றித்து உணர்ந்தும் வழிபட்டு வருபவர். பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங்களாகப் பெற்ற இப்பெரு மக்களைக் காணுங்கரணங்கள் எல்லாம் பேரின்பம் என்பர் பெரியோர்

வையகம் வாழ்த்திப் போற்றும் இவ்வான்மீக மாபெரும் ஞானக்குரவர் நடமாடும் தெய்வங்களே. இவர்கள் அடியிலே வீழ்ந்து இவர்களைக் கடவுள் என வணங்குவதிலே என்ன வியப்பிருக்கிறது ? நாம் வேறு என்ன செய்யக்கூடும் ? கடவுளைப்பற்றிய சிந்தனையை நம்மனசிலே நாமாக உருவாக்க முடிகிறதா? ஞானப் பிழம்பான இவர்கள்தான் உண்மையை நேரில் உணர்ந்தவர்கள். அதைக் காட்டவும் வல்லவர்கள்.

தமிழ் மக்கள் சமய ஞானத்தைக் கற்றுக் குரு வாயிலாகப் பெறுவதைத்தான் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை நமக்குப் பிறவியிலேயே அமைந்தது. ஓர் இலட்சிய புருடன் வாயிலாகத்தான் ஓர் உபதேசத்தை அறிய இயலும். முன் மாதிரி இல்லாமல், ஞான குரவர் உதவியில்லாமல் ஒரு தத்துவத்தை ஆராய்கிற பண்பாடு நம்மிடையே இல்லை. ஆதலின் ஞான குரவர் பொன்னடிக்கீழ் நம் ஆன்மாவைச் சமர்ப்பித்துச் சரணடைகிறோம். தெய்வம் போன்ற மனிதர் வாயிலாகத்தான் நாம் இறைவனைக் காணவோ உணரவோ இயல்கிறது. ‘பெரியோய்’ இறைவனாம் தந்தையைக் காட்டுங்கள் : என்று இயேசு நாதரைக் கேட்டபோது அவர், என்னைக் கண்டவர் இறைவனைக் காண்பவராவார்’ என்றார். இறைவனை மனித வடிவிலே காண்பதைத் தவிரவேறு எவ்விதமும் கற்பனை செய்ய முடியாது அல்லவா ? ஆண்டவன் மானிட வடிவிலே நம்மிடம் வந்தால்தான் நாம் அவரை அறிய இயலும். இறைவனே குருவாய் வருவான். எப்படி வருவான் ? பறந்து வருவானா ? இல்லை. சைவ சந்தானத்திலே வந்த பெரியார் ஒருவரது கரணங்களைத் தன் கரணங்களாகவும் அவரது ஆன்மாவையே தன் இருப்பாகவும் கொண்டே வருவான் நம் போன்ற பாமர மக்கட்கு மானிட உருவத்தையே ஆதாரமாகக் கொண்டு அருள் செய்கிறான். மேன்மக்களுக்கு அவர்களது உயர்ந்த ஆன்மாவிலேயே கலந்து நின்று உள்ளிருந்த படியே உண்மை காண உதவுகிறான்; அவரவர் நிலைக்குத் தகுந்தவாறு உணர்த்து கிறான் என்பதுதான் சைவக் கோட்பாடு.

எவரிடம் உண்மையான சிந்தனைச் சுடர் மிளிர்கிறதோ, எவரிடம் ஆண்டவன் பால் அன்பு மலர்கிறதோ அவர் பால் ஆண்டவனை நோக்கி ஆன்மா வளர்ந்திருப் பதைக் காணலாம். அவர்தான் அருட்குரவர். அவர் முன் நம் ஐயங்கள் அகன்று விடுகின்றன. மனக் கோணல்கள் நிமிர்ந்து விடுகின்றன கடவுள் காட்சி தென்படு கிறது. '' மரத்தடியிலே ஒரு ஞான சற்குரு—பதினாறு வயதுப் பாலகனாய்த் தோன்று கிறார். எதிரிலே அமர்ந்த சீடர்களோ முதுபெருங் கிழவர்கள். அவர்களுக்கு மௌனந்தான் உபதேசம். ஐயுறவெல்லாம் மறந்து போயின!'' என்பது ஒரு பழம் பாடலின் கருத்து கடவுளின் அருள் வெள்ளத்தை எங்கும் எவரும் உணரச் செய்கிற ஞானக் குரவர்கள் பேசத் தொடங்கினால் உலகமே செவிசாய்க்கும். ஆனால் பெரும்பாலும் இவர்கள் பேசுவதில்லை. வாய்திறவாது மௌனம் சாதிப்பாரேனும் நம் மனத்துக்கு உண்மையை நல்குவதிலே வல்லவர்கள்.

''தருமம் குன்றி அதருமம் மேலிடும்போது மனித இனத்தின் நன்மைக்காக நான் உலகில் தோன்றுகின்றேன்'' என்பது கண்ணபிரான் வாக்கு. இதன் பொருள் என்ன ? புதிய சந்தர்ப்பம் சூழ்நிலையால் ஒரு நூதன ஒழுங்கு முறை இவ்வுலகுக்குத் தேவைப்படும் போதெல்லாம் வல்லமை வாய்ந்த ஒரு பெருஞ் சக்தி கிளர்ந்தெழுகிறது என்பது தானே. இலௌகிகம், ஆன்மீகம் ஆகிய இரு துறைகளிலும் இவ் வொழுங்கு முறை அவ்வப்போது தோன்றித் துலங்கியே வந்திருக்கிறது என்பதைத் தமிழக வரலாற்றிலும் காணலாம்.

சோழ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியினால் கொடுமையும், குழப்பமும் மலிந்த காலத்திலே (13-ம் நூற்றுண்டு) மெய்கண்ட சந்தானம் தோன்றிச் சமுதாய ஒழுங் கைப் பேணி வளர்த்தது சரித்திரப் பிரசித்தி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளிலே மேனாட்டு வணிகர் கத்தி முனையினாலும், துப்பாக்கி முனையினாலும் தம் மதத் தைப் பரப்பி வந்தபோது, பாதிரிகள் தமிழ் மக்களைப் பார்த்துக் காட்டு மிராண்டி கள் என்றும், பேய்பிசாசுகளை வழிபடுபவர்கள் என்றும் ஏளனம் செய்து மெய்ப் பிக்க முயன்றபோது மடாலயங்கள் தோன்றித் தொன்னெடுங் காலமாக நம் சமுதா யம் நிலைத்து நின்று நடத்தி வந்த வாழ்க்கை வீணா? என்று வினவி அம் முயற்சி யை முறியடித்தன. அரசியல் சுதந்திரத்தின் பயனாய்த் தொழில் வளர்ச்சியும் விஞ்ஞானக் கல்வியும் மேலோங்கி உலகாயத வாழ்க்கை வளர்ந்து வரும் இந்நாளி லும் ஆன்மீகத் துறையில் மாபெரும் குரவர்களைப் பிறப்பித்திருக்கின்றன.

இப்பரம்பரை வாழ்க

அமரர்கள் பரவும் திருமுது குன்றில் ஆழத்துப் பிள்ளையைச் சிகரிக்
குமரசற் குருவை யிமகிரி ராச குமாரியாம் பெரியநாயகியை
மும்மலமு மொருங்கே அகற்றிடும் முக்கண் முதல்வனைச் சாந்த நாயகனை
நமதெணப் படியே முடிந்திடத் தினமும் நாடிநின்றிறைஞ்சி வாழ்த்திடுவாம்.

(குமாரதேவர்-மகாராசாத் துறவு)

பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயம்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டசந்தானம் கொடி வழி

சீகண்ட பரமசிவன்
திருநந்தி தேவர்
சனற் குமாரர்
சத்திய ஞானி தரிசனிகள்
பரஞ்சோதி முனிவர்.

1. மெய்கண்ட தேவர்
2. அருணந்தி சிவாசாரியர்
3, மறைஞான சம்பந்த சிவாசாரியார்
4. உமாபதி சிவசாரியார் கி.பி. 1313
5. சிதம்பரம் மச்சு செட்டி அருணமச்சிவாயர்

6. சித்தர் சிவப்பிரகாசர்

7. நமச்சிவாய மூர்த்தி (1) (திருவாவடுதுறை ஆதீனத் தாபகர்)

8. பட்டீசுவரம் சிவப்பிரகாசர் (2) (துறையூர் திருவண்ணாமலை) ஆதீனத் தாபகர்

9. மறைஞான தேசிகர்

10. அம்பலவாண தேசிகர் (இவர் மரபிலே வருவது திருவாடுதுறை ஆதீனம்)

11. ஞானக் கூத்தர் (துறையூர், திருவண்ணாமலை பெரிய மடம்)

12. சாந்தலிங்க சுவாமிகள் (3) திருப்பேரூர் ஆதீனத் தாபகர்

இராமலிங்க சுவாமிகள்

சச்சிதானந்த சுவாமிகள்


மௌன சுவாமிகள்

மாணிக்க சுவாமிகள்

ஆறுமுக சுவாமிகள்

சாந்தலிங்க இராமசாமியடிகளார் (அருளாட்சி ஏற்பு 1967)

பட்டீசுவரம் சிவப்பிரகாசர் நமச்சிவாய மூர்த்திகள் நிட்டையில் இருந்த காலம் முழுவதும் திருவாவடுதுறை ஆதீனத்தை நிர்வகித்து வந்தார். சிதம்பரம் நடராசப்பெருமானின் பூசை நின்றுபோயிருந்தது. அதை மறுபடியும் நடத்தி வைப்பதாகக் குருவின் கட்டளைபெற்றுச் சிதம்பரத்துக்குச் சென்று இவர் வீரசைவரானார். நின்றிருந்த பூசையை நடத்தினார். வீரசைவத்தில் சேர்ந்து விட்டதனால் மறைஞான தேசிகர்க்கு அபிடேகம் செய்து வைத்தார். மறைஞான தேசிகர் பரிபூரணமானபின், அம்பலவாண தேசிகருக்கு அபிடேகம் செய்து வைத்தார். திருவண்ணாமலை ஆதீனம் துறையூர் மடம் நிறுவி ஞானக் கூத்தர்க்கு அபிடேகம் செய்வித்து அவருக்குத் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து 64 மடங்களை கொடுத்துப் பரிபாலித்து வரும்படி செய்தார். இதிலே ஒன்றுதான் (சிதம்பரம்) கொற்றவன் குடி, உமாபதி சிவாசாரியாரின் மடம். துறையூர் திருவண்ணாமலை ஆதீனத்தார், பேரூர் சாந்தலிங்க ஆதீனத்தார், விருத்தாசலம் குமாரதேவராதீனத்தார் — இவர்கள் அனைவரும் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டான் சந்தானத்தில் வந்தவர்கள்தான்.





கயிலை முனிவர்

பேரூராதீனம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் அறுபதாவது ஆண்டு நிறைவு நாண்மங்கல விழா அறிக்கை

கொங்கு மலிகின்றதொரு கொங்கு வளநாட்டில் மேலைச் சிதம்பரமாம் மிக்க புகழ்ப் பேரூரில் அருள்மிகு சாந்தலிங்கப் பெருமானாரால் அமைக்கப்பெற்ற பேரூர் ஆதீனத்தின் அருளாட்சி ஏற்று பலவாற்றானும் தமிழ், சமய, சமுதாயப் பணிகளை ஆற்றிவரும் கயிலைப் புனிதர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு இந்தக் குரோதன ஆண்டு புரட்டாசித் திங்கள் மகத் திருநாளில் அறுபதாண்டு நிறைவெய்தியது. இதனை முன்னிட்டு அறுபதாண்டு நிறைவு நாண்மங்கல விழாவினைப் புரட்டாசித்திங்கள் 24, 25 ஆகிய இரண்டு நாட்களில் ஆன்மார்த்த நெறியில் அன்பர்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர்.

இவ்விழா நடத்தும் முறை பற்றி ஆராயச் சிரவையாதீனம் தவத்திரு, சுந்தர சுவாமிகள் தலைமையில் 27-9-85 வெள்ளிக்கிழமை அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் ஆராய்ந்து எடுக்கப்புட்ட முடிவுகளின்படியே இரண்டு நாட்கள் விழா நடைபெற்றது.

விழாவின் அங்கமாக 10—11—85 வியாழன் அன்று காலை 10-00 மணிமுதல் மாலை 5 மணிவரை திருமுறை முற்றோதுதல் நிகழ்ச்சி நடைபெற்றது, முற்றோதுதலில் ஓதுவாமூர்த்திகளும், கல்லூரிப் பேராசிரியப் பெருமக்களும், மாணாக்க மாணாக்கியரும், தொண்டர்களும் பங்குபெற்றனர். இந்நிகழ்ச்சியினைத் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

மாலை 5 மணிக்கு வேள்வி வழிபாடும், திருமுறைகள் முற்றோதுதல் நிகழ்ச்சியும் நடைபெற்றன. நமது அடிகளார் அவர்கள் திருத்தொண்டர்களிடத்து பக்தியுடையவர்கள் ஆதலின் திருத்தொண்டின் நெறியினை வளர்த்த அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் அறுபத்து மூன்று கலசங்கள் தாபனம் செய்து 'திருத்தொண்டத் தொகை' ஓதிச் சிரவையாதீனம் சுந்தரசுவாமிகளாலும், திருவாமாத்தூர் கௌமார மடத்துத் தலைவர் தவத்திரு. முருகதாச சுவாமிகளாலும் வேள்வி செய்யப் பெற்றது.

11—11—1985 வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்குப் பூரண ஆகுதி செய்யப்பெற்றது. 6 மணிக்கு அருள்மிகு சாந்தலிங்கப் பெருமானுக்குப் புரட்டாசி

‘ மகம் ’ சிறப்பு வழிபாடு நடைபெற்றது. 9மணியளவில் வேள்விச் சாலையிலிருந்து அறுபத்து மூன்று கலசங்கள் வலமாக எடுத்து வரப்பெற்று மந்திர நீரினால் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் முன்னின்று நடத்தி வைத்தார்கள்

காலை 10-00 மணிமுதல் தவத்திரு அடிகளார் அவர்களுக்கு வாழ்த்துரைகளும் வணக்கவுரைகளும் சந்நிதானங்களாலும், சான்றோர்களாலும், தொண்டர்களாலும் தெரிவித்துக் கொள்ளப்பட்டன.

இந்நிகழ்ச்சியினைச் சிரவை ஆதீனம் தவத்திரு சுந்தரசுவாமிகள் தலைவராக இருந்து தொடங்கிவைத்தார்கள். மயிலம் பொம்மபுரம் ஆதீனத்தின் சார்பில் அடிகளார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. அதன்பின் முறையே தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு முருகதாச சுவாமிகள், தவத்திரு. சத்குரு இராமலிங்க அடிகளார் முதலான அடிகள் பெருமக்களும், அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம், அன்னூர் ‘தர்மவீர’ திரு. கோவிந்தசாமிநாயுடு ஆகியோர் பொன்னாடை போர்த்திப் பாராட்டுரைத்துச் சிறப்புச் செய்தனர், சொல்லின் செல்வர் திரு சுகிசிவம், ‘ கயிலைமணி ’ திரு. மு. அழகப்பன் ‘ சேவைமணி ’ திரு.இராம. ஏகப்பன் முதலான சைவ அருட்செல்வர்களும் அடிகளார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்து மாலை அணிவித்து வாழ்த்துரை வழங்கினார்கள். மற்றும் இராமப்பட்டணம் ஜமீன்தார் ஆனந்தராஜா அவர்கள், சமத்தூர் ஜமீன்தார் கிருஷ்ணராஜவாணவராயர் அவர்கள், இராமகிருஷ்ண மருத்துவமனை திருமண மண்டபம் முதலியவற்றின் நிறுவனர் சின்னச்சாமி நாயுடு (SOVR) அவர்கள், பூச்சக்காட்டு வலசு சின்னசாமிக் கவுண்டர் அவர்கள் முதலிய பெரியோர்கள் பாராட்டுரை கூறினார்கள்.

அதன்பின் பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த தொண்டர்களும், கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, மழலையர் பள்ளி ஆகியவற்றின் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணாக்க, மாணாக்கியர் ஆகியோரும் வாழ்த்தும் வணக்கமும் தெரிவித்துக் கொண்டனர். மணிவிழா நினைவாக நூலகத்துக்கென நூல்களும், நூல்கள் வாங்குவதற்கெனப் பொருள்களும், பிறவும் அளிக்கப்பெற்றன.

இதன்பின் கயிலைமுனிவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் அருளுரை வழங்கினார்கள். இந்த அளவில் முற்பகல் நிகழ்ச்சி நிறைவெய்தியது.

வந்திருந்தோர் அனைவருக்கும் நண்பகல் விருந்து அளிக்கப்பெற்றது. ஏழை எளிய மக்களுக்கு அன்னதானமும் வழங்கப் பெற்றது.

அன்று பிற்பகல் விழா 3-00 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவின் ஓரங்கமாகக் கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கிற்குக் ‘ கவிமணி’ காந்தி

தாசன் அவர்கள் தலைமையேற்றார்கள். கவிஞர் இளமுருகு அவர்கள் கவியரங்கினைத் தொடங்கி வைத்தார்கள்

''பேரூர் அடிகளார் கவிமனத்தோர் விழிகளில் ...'' என்னும் தலைப்பின் வழி கவிஞர் புவியரசு 'பெரும்பேராசானாய்' என்னுந் தலைப்பிலும், கவிஞர் இராசுகவி 'துணிவுடைய துறவியாய்' என்னுந் தலைப்பிலும், கவிஞர் உரோகிணி 'ஒளிர்ஞானப் போரொளியாம்' என்னுந் தலைப்பிலும், கவிஞர் நித்திலன் 'தமிழ்மறைமுனிவராய்' என்னுந் தலைப்பிலும். கவிஞர் இளங்கீரன், 'அருள் ஒளிச் சுடராய்' என்னுந் தலைப்பிலும் கவிதைகளை அரங்கேற்றினர்.

தலைவர் கவிஞர் காந்திதாசன் அவர்கள் இடையிடையே கவிஞர்களின் கவிதைச்சிறப்பைக் கவிதையிலேயே போற்றிப் பாடினார்.

நிறைவாகப் புலவர் சி. இராசப்பன் எம். ஏ. அவர்கள் நன்றி நவிலக் கவியரங்கம் நிறைவெய்தியது.

விழா நடைபெற்ற இரண்டு நாட்களிலும் காலை, நண்பகல், மாலை, இரவு ஆகிய நேரங்களுக்கு வேண்டிய உணவு வகைகள் மிகச்சிறப்பான முறையில் அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.



''கயிலாயம்''



கயிலைமுனிவர் பேருராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்



நற்றமிழ் வளர்க்கும் ஞானத் தந்தையின் நானிலம் போற்றும் நாண்மங்கல விழா



பேரூர் ஆதீனத் தமிழ்ச் சுவடிகள்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
இணைப் பேராசிரியர், தமிழ் மொழித் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்

பழந்தமிழரின் பல்துறைப் புலமையினையும் அறிந்து கொள்ளக் கருவிகளாக இலங்குவன அவர்கள் காலத்தில் தோன்றிய நூல்களும் பிறவும் ஆகும். அந்நூல்கள் முழுவதும் நமக்குக் கிடைத்திருப்பின் அவர்தம் ஆற்றலும் அறிவும் அவற்றின் மூலம் முழுமையாகத் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. பழந்தமிழர்களுடைய கல்வி, பண்பாடு, பிற பெருமைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கு அச்சில் வாராத அருந்தமிழ்ச் சுவடிகளும் இன்று துணைநிற்கின்றன. அவற்றை முறைப்படி தொகுத்தும், படி எடுத்தும் உரிய முறையில் செயல்படாததால் பல அரிய சுவடிகள் அழிந்தொழிந்தன. தனியார் இல்லங்களிலும், தமிழ் ஆர்வலர்களிடமும் இன்னமும் ஆயிரக்கணக்கான சுவடிகள் உள்ளன, அவற்றின் அருமை பெருமைகளை உணராதிருப்போரும் உண்டு. உணர்ந்திருப்போரும் உண்டு. உணர்ந்திருப்போர் முறையாக அவற்றைப் பேணிக் காக்கும் நிறுவனங்களிடம் ஒப்படைத்தால் தமிழுக்கும் தமிழருக்கும் அருந் தொண் டாற்றியவராவார்கள்.

பல்லாண்டுகளாகத் தமிழுக்கும் சமயத்திற்கும் அருந் தொண்டாற்றி வரும் திருப்பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தின் தமிழ்க் கல்லூரியில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் அரிய முயற்சியாலும் பிற அறிஞர்களின் ஒத்துழைப்பாலும் ஏறத்தாழ 350க்கும் மேற்பட்ட தமிழ்ச்சுவடிகளைத் தொகுத்து வைத்துள்ளனர். இச்சுவடிகள் அனைத்தும் எழுமாத்தூர் வேலம்பாளையம் புலவர் இரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் தொகுத்து வைத்தவையாகும். இச்சுவடி களை அழிந்து போகாமற்காத்துத் தமிழறிஞர்கட்குப் பயன்படும்வண்ணம் கல்லூரி நூலகத்திற்கு அளித்துள்ள தமிழறிஞர் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்குத் தமிழ்கூறு நல்லுலகம் நன்றிக் கடன்பட்டுள்ளது. அவர்கள் தொகுத்து வைத்த இச் சுவடித் தொகுப்பினின்றும்தான் ‘பஞ்சமரபு’ என்னும் நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளமையும் நினைவு கூரத்தக்கது.

இலக்கணம், இலக்கியம், சோதிடம், மருத்துவம் முதலான பல்வேறு சுவடிகளும் இத் தொகுப்பில் உள்ளன. மகாபாரதம் கன்னடச் சுவடியும், பெயர் தெரியாத வேறொரு கன்னடச் சுவடியும் (170, 171) இத்தொகுப்பில் உள்ளமை குறிப்பிடத்தக் கது. சாலங்கராம பரீஷக்ரந்தமு சாலிங்கிராமப் பரீக்ஷை நூல் (?)(169) என்று எழுதப்

பெற்ற தெலுங்குச் சுவடியும் இத் தொகுப்பில் உள்ளது. தக்காரைக்கொண்டு இச் சுவடிகளை ஆராய்ந்தால் பல புதிய உண்மைகள் தெரியலாம். விவாக காண்டம் எனும் (195) சுவடியையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இது இஸ்லாமியச் சட்ட நூலா? எனக் குறிப்புரை எழுதி வைத்துள்ளனர். எனவே மேலும் ஆராயத்தக்கதாம். தொண்டை நாட்டுச் செய்திகள் (237) எனும் பெயர்க் குறிப்புக் கொண்ட சுவடி தொண்டை நாடு பற்றிய பல்வேறு செய்திகளைக் கொண்டதாக இருக்கலாம். வரலாற்றுக் குறிப்புகளும் இச்சுவடி வழி அறிய வாய்ப்புண்டு.

புராணங்கள்

இலிங்க புராணம் (2) கூர்ம புராணம் (2) கந்த புராணம் (3) திருவிளையாடற் புராணம் (5) முதலாய புராண இலக்கியங்களும் இத் தொகுப்பினுள் காணக் கிடக்கின்றன. விநாயக புராணம் (11) வசனமாக எழுதி வைக்கப்பட்ட சுவடியும் இத் தொகுப்பினுள் உண்டு. சென்னி மலைத் தலபுராணம் (18) எனும் சுவடியும் உண்டு. இந்நூல் பதிப்பாகவும் வெளி வந்துள்ளது. நந்திவனப் புராணம், அருணாசலப் புராணம் (21) எனும் இரண்டும் ஒரே சுவடியில் உள்ளன. திருப்பரங்கிரிப் புராணம் (51) திருவாப்புதூர் புராணம் (75) வள்ளியம்மன் புராணம் (78) சிவ மகா புராணம் (98) பதரிவனப் புராணம் (பவானி 121) முதலாய சுவடிகளும் ஆராயத்தக்கன. இவற்றுள் சில அச்சாகியிருக்கக்கூடும். மதுரைத் தலபுராண வசனம் என்னும் சுவடி நூலும் இத் தொகுப்பினுள் அடங்கும். திருவிளையாடல் நாட்டுப் பாடல், திருவிளையாடல் பயகரமாலை, திருவிளையாடற்புராண வெண்பா (உரையுடன்) முதலாய சுவடிகள் இத் தொகுப்பினுள் உள்ளன. இத் தொகுப்பினுள் கொங்கு நாட்டைச் சார்ந்த தலபுராணச் சுவடிகள் மிகுதியாக உள. திருச்செங்கோட்டுப் புராணம், திருச்செங்கோட்டுக் கோவை. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் தண்டாயுத சதகம்எனத் திருச்செங்கோட்டுத் தலத்தையொட்டிப் பல்வகையான சுவடிகள் இருப்பது குறிக்கத்தகுந்தது. இச் சுவடிகளை முழுமையாகப் பார்த்து ஆராய்ச்சி செய்தால் அந்தத் தலத்தைப்பற்றிய குறிப்புகளும், வரலாற்றுச் செய்திகளும் கிடைக்கக்கூடும். இவற்றுள் சில நூல்கள் அச்சாகியுள்ளன.

அவ்வாறே பழனிக்காதல், பழனிக்காவடி, பழனிசந்தப் புகழ்வண்ணம், பழனித் தலபுராண உரை, பழனிப்பிள்ளைத் தமிழ் முதலாய சுவடிகள் புகழ்பெற்ற பழனித்தலத்தைப் பற்றிய சுவடிகளாகும். சிற்றிலக்கிய வகைகளில் பல்வேறு வடிவங்களும் இச்சுவடி இலக்கியங்களுள் காணக் கிடக்கின்றன. இவ்வகையில் பேரூர் பச்சை நாயகி சதகம், பேரூர் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்,பேரூர் சிவகாமியம்மை அகவல் முதலாயின குறிப்பிடத்தக்கன.

இத் தொகுப்பினுள் அக்காலத்தே கொங்கு நாட்டில் பெரும்புகழ் பெற்று விளங்கிய பல்வேறு நிலக்கிழார்கள், ஜமீன்தார்கள். ஊர்த்தலைவர்கள், ஆகியோரைப் பற்றிய புகழ் பாடும் பல சுவடிகள் உள. கொங்கு நாட்டு வரலாற்றைக் கணிப்பதற்கு இத்தகைய சுவடிகள் பெருந்துணை செய்யும்.

சுவடி எண் 30 கொண்ட ஒரு சுவடியின் ஈற்று ஏட்டில் 'தண்ணீர்ப்பந்தல் பாளையம் உருமாண்டக் கவுண்டர் சரிதம்' என்னும் குறிப்புக் காணப்பெறுகின்றது. வேளாளப்பட்டயம் செப்பேடு(76), அப்பிச்சியார் காவியம் எனும் குறுங்காவியம்(118), வேளுக்குறிச்சிக் கவுண்டர் சதகம் (128) பூந்துறை, ராமண கவுண்டர் தாய் மகள் ஏசல் (133) வேளாளர் கீர்த்தி 96 குலத்துப்பாடல் (163) பெருந்துறை பிர்க்கா நத்தம் பாளையம் மதுக்குளத்துப் பாளையம் மணியம் குமாரசாமிக் கவுண்டர் மகன் சங்கரப்பன் எழுதிய மகாபலி நாடகம் (167), முதலிக்காமிண்டன் பள்ளு (191), வேளாளர் வரலாறு(208), மணியனூர் ராசாக் கவுண்டர் மோகனக் குறவஞ்சி (214), சீரங்கராயன் பள்ளு (267) முதலாய சுவடிகள் கொங்கு நாட்டுச் சமுகப் பின்னணி வரலாற்றைக் காட்டும் வகையில் அமைந்திருக்கலாம்.

முதலிக்காமிண்டன் என்பவன் கொங்குப் படையைச் சேர்ந்தவன், கோவைத் தலைவன். பருத்திப்பள்ளியைச் சார்ந்தவன். இந்த ஊரினைச் சித்திர மேழி விண்ணகரம் என்பர், இவன் தாராபுரத்தில் பகைவர்களை விரட்டியடித்து வெற்றி பெற்றான். அப்போரில் இவன் வலிமையைப் பாராட்டி 'முதலிக்காமிண்டன்' என்னும் பட்டம் விஜயநகரம் கிருஷ்ணராயரவர்களால் கொடுக்கப்பட்டது என்பர். இதனைக் கொங்கு மண்டல சதகம்,

> புதுமைப் படைவேட் டுவர் சூழத்தாரா புரத்துடனே
> சதுர மிகுபடை யாற்சம ராற்றிச் சயம்பெறவே
> முதலிக்கா மிண்ட னெனக்கிருஷ்ண ராயர் மொழிவிருதை
> மதிகொள் பருத்திப் பளிச்செல்ல னுங்கொங்கு மண்டலமே-1

என்னும் பாடலால் (கொங்கு மண்டல சதகம் தி. அ. முத்துசாமிக்கோனார் பதிப்பு, ப. 91, 92) விளக்கும். இதனை இருப்புலிப்பள்ளு என்னும் நூலும் பின்வருமாறு காட்டும் :

> வெற்றியுடனே கிருஷ்ணராயரிடத்தில் வர
> மேன்மைப் பட்டாபிஷேக முடிசூட்டி
> முத்தின் சிவிகையில் வைத்து வலஞ்செய்துதான்
> முதலிக்காமிண்ட னென்னும் விருதுங்கொடுத்து
> நத்தூர் பருத்திப்பள்ளி நாடும் பூந்துறைநாடு
> நாலாறு நாடுதானு மேலுமையாப் பெற்றோன்
> (இருப்புலிப்பள்ளு)

'இருப்புலிப்பள்ளு' என்னும் நூலும் 'இத் தொகுப்பில் காணும் 'முதலிகாமிண்டன் பள்ளு' என்னும் நூலும் ஒன்றா என்பது ஆராயத்தக்கது.

இலக்கண நூல்கள்

யாப்பருங்கலக்காரிகை (10) மட்டும் இத் தொகுப்பில் எட்டுச் சுவடிகளில் உள சில மூலம் மட்டும் பெற்றுள்ளன. சில சுவடிகளில் சிற்றுரை, பேருரை என இரு பிரிவுகள் காணப்படுகின்றன. ஆராய்ச்சிக்குத் துணை புரியும் சுவடியாகும். அகத்திய சூத்திரம் (16) என்னும் சுவடியில் எழுத்திலக்கணச் சூத்திரமும், நிகண்டு நூற்பாக்களும் காணப்படுகின்றன. நன்னூல் விருத்தியுரையும் இத் தொகுப்பில் உண்டு(25) நேமிநாதம் மூலம், நன்னூல் மூலம், காரிகை உரை, நம்பியகப்பொருள் மூலம் ஆகியன ஒரே சுவடியில் எழுதித் தொகுத்து வைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலக்கண விளக்கம் (46) சிதம்பரப்பாட்டியல் (47) நீதபாட்டியல் உரை (48) வெண் பாட்டியல் (59) குவலாயனந்தம் (60) இலக்கணக்கொத்து (146) முதலாய பல்வகை இலக்கண நூல்களும் இத் தொகுப்பினுள் காணப்பெறுகின்றன இலக்கண சூடாமணி இலக்கணக் களஞ்சியம் என்னும் சுவடிகள் மேலும் ஆய்தற்குரியன. அச்சுருவம் பெற வில்லையெனில் அச்சிடலாம்.

நிகண்டுகள், அகராதிகள்

சேந்தன் திவாகரத்தில் (79, 140, 226) மூன்று சுவடிகளும் ஆசிரிய நிகண்டு (79) உரிச்சொல் நிகண்டு (210) அகராதி நிகண்டு (221) முதலாய சுவடிகளும் இத்தொகுப் பில் உள. இவையன்றிப் பெயர் தெரியாத நிகண்டுகள் (174) என்னும் குறிப்பின் கீழ் இருசுவடிகளும் உள. பேரகராதி (209), என்னும் சுவடியும், பழமொழி மாலை (126) என்னும் சுவடியும்இது வரைக்கும் அச்சாகியுள்ளதா என்பது தெரியவில்லை. பழமொழி மாலை என்பது பழமொழித் தொகுப்புகளாக இருக்கலாம்.

கீதை மொழியாக்கம்

பகவத் கீதை, உத்திர கீதை, பிரமகீதை, சிவ கீதை, சதானந்த கீதை, அவதூத கீதை என்னும் குறிப்பமைந்த (48) சுவடியில் அனைத்தும் தமிழ்க் கவிகளாக அமைந் துள்ளமை குறிப்பிடத்தகுந்தது. இச்சுவடி குறித்து மேலும் ஆய்தல் வேண்டும். தமிழ் பகவந் கீதை உரையுடன் (35) வேறொரு சுவடியும் உள்ளது.

தக்கை இராமாயணம்

இத் தொகுப்பினுள் குறிப்பிடத்தகுந்த ஒரு சுவடி இச் சுவடியாகும். தக்கை இராமாயணம் எனும் அரிய பதிப்பு நூல் இச் சுவடியைக் கொண்டுதான் வெளிவர உள் ளது. தமிழறிஞர் திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் இந் நூலைப் பதிப்பித்துள் ளார்கள். வேறு எங்கும் இச்சுவடி கிடைத்ததாகத் தெரியவில்லை.

அம்புவி மெச்சுகுன் றத்தூரிலாயரி லாய்கலைநேர்
எம்பெரு மானைக் கொடுதக்கை யென்று மிசைத்தமிழால்
நம்பு மிராம கதையையன் பாக நவிலவிசை
வம்பவிழ் தார்ப்புய னல்லய னுங்கொங்கு மண்டலமே

என்னும் கொங்கு மண்டலச் சதகப்பாடல் குன்றத்தூரான சங்ககிரி துர்க்கத்தில் ஆயர் குலத்தில் தோன்றிய எம்பெருமான் என்னும் புலவரைக் கொண்டு இசைத்தமிழில் இராமாயண கதையை இயற்றுவித்தவன் நல்லதம்பிக் காங்கேயன் என்பவனாவான் என்று கூறும்.

கீழ்கரைப்பூந்துறை நாட்டு அதிபனாக மோரூரில் நல்லதம்பிக் காங்கேயனும், எம்பெருமான் கவிராயரும் உழுவலன்புடைய நண்பர்கள். சோழமண்டலம் போலக் கொங்கு மண்டலமும் பெருமைபெற ஒரு இராமாயணம் பாட வேண்டுமென்று காங்கேயர் பெரிதும் வேண்டினர். ஸ்ரீராமபிரானின் அருள் அமைந்தால் நிறைவேறும் என்றனர் கவிராயர். ஒருநாள் அக் கோட்டையுள் விளங்கும் ஸ்ரீவரதராஜப் பெருமாள் சந்நிதியையடைந்து இவ்வெண்ணத்தை விண்ணப்பித்து நிற்கையில், ''உலகமாதா'' என்று தோன்றிய மங்கல மொழியை மங்கலச் சொல்லாகக் கொண்டு தக்கை யிசையால் இராமாயணம் பாடத் தொடங்கினர். காண்டங்கள் சில படலங்களின் தலைப்பில் வெண்பாவும், மற்றையன தக்கை ஒற்றை இரட்டையென்னும் சூடகம் முதலிய வரிப் பாட்டுகளும் அங்கங்கு அமைத்து ஆறு காண்டமாய்க் கம்பர் கருத்தைத் தழுவி பாடி முடித்தனர். மேற்குரங்கம் என்று புகழ்ந்து பேசும் சங்ககிரி ஸ்ரீவரதராஜப் பெருமாள் சந்நிதியில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது என்பர். இரு இராமாயண அரங்கேற்றச் செய்திகளும், மரபும் ஏறத்தாழ ஒத்து வருவதைப் பார்க்கலாம்.

மெத்த வேகண்ணன் வெண்ணெம
தனில் விருத்தச்சீரா ராமாயணத்தை
சுத்தநாக் கம்பநாடன் சொன்னான்
சொன்ன பொருள் தக்கையிசையாலே
பக்தர் பாடியெம் பெருமானாற்
பகரும் படிசெய்தான் மோரூரான்
அர்த்த நாரிசொ னல்லதம்பி
யமலனருள் பெற்று வாழ்வாரே

என்று தக்கை இராமாயணமும் கூறும். இச் சுவடி அச்சுருவம் பெறுவது மகிழ்ச்சிக் குரியதாகும்.

நாட்டுப் பாடல்கள்:

இத் தொகுப்பில் வட்டார இலக்கியங்களான நாட்டுப்புறக் கதைகளும் பாடல்களும் ஓரளவு உள்ளன. அல்லி அரசாணி மாலை போன்ற நாட்டுப்புறப்

பாடல்கள் (145) இரு சுவடிகளில் அமைந்துள்ளன. ஊமைத்துரைப் பாடல் (135), என்னும் சுவடியும் இன்று வெளிவந்துள்ள அச்சான நூல்களோடு ஒப்பு நோக்கத்தக்க தாகும். திருவிளையாடல் நாட்டுப் பாடல் (166) என்னும் ஒரு சுவடியும் ஆராயத் தக்கது. இராமாயண ஓடம் (215), திங்களூர் நொண்டி நாடகம் (217) ஆகியன இத் தொகுப்பினுள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. எண் 253 கொண்ட சுவடியில் 'ஏதேதோ கதைகள்—வசனம்' என்னும் குறிப்புக் காணப்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. எண் 259ஆம் சுவடி 'ஒரு பாடல்—நாட்டுப்பாடல் கதை' என்னும் குறிப்புடன் காணப் பெறுகின்றது. இச் சுவடிகளைப் பார்க்கும் வாய்ப்புப்பெற்று ஆராய்ந்தால் இவ்வகை இலக்கியங்கள் இன்னும் பல இத் தொகுப்பினுள் இருக்கக் கூடும்.

சோதிட நூல்கள்

சாதகாலங்காரம் (74), சகதேவர் சாத்திரம் ஆரூடம் (84) சித்தர் ஆரூடம் (89) சோதிடம், மந்திரம் (102) வான்மீக சாத்திரம் (109) சோதிடநூல் (119) இரு சுவடிகள்)—சூடாமணி உள்ளமுடையான் (137), குமாரசாமியம் (149) முதலாய பல சுவடிகள் சோதிடக் கலையைப் பற்றியதாகும்.

மந்திர சாத்திர நூல்கள் (20) 7 சுவடிகளில் உள்ளன. மந்திர சாத்திரம் (86) எனப்பிறிதொரு சுவடியும் காணப்பெறுகின்றது.

வைத்திய நூல்கள்

வைத்திய நூல்களும் இச்சுவடித் தொகுப்பினுள் உண்டு. அகத்தியர் வைத்தியம் (33), நயன நூல் (37)போகர் எழுநூல் திரட்டு (58).அகத்தியர் செந்தூரம் (61) வைத்திய முறை (82) அகத்திய யோகாசன மூலம் உரை (83) மருத்துவ நூல்கள் (114–8 சுவடிகள்), புலிப்பாணிசாலம், புலிப்பாணி வைத்தியம் (244) முதலாய பல சுவடிகள் மருத்துவத்தைப் பற்றியதாகும். ஏனைய மருத்துவச் சுவடிகளோடு இவற் றையும் ஒப்பு நோக்கி ஆராயின் பல புதிய செய்திகள் தெரிய வாய்ப்பு ஏற்படும்.

பெயர் தெரியாத கூத்து நூல் (117) என ஒரு சுவடி உள்ளது. பஞ்சமகா சரித லட்சணம் (94) பரத சங்கிரகம் (95) தாளமரபு (103) முதலாய சுவடிகள் ஆய்விற் குரியன. இசைத் தமிழ் இலக்கியங்களாகவும், கூத்த நூல் இலக்கியங்களாகவும் இவை இருக்கக் கூடும்.

முடிவுரை

நாட்டுப்புற இலக்கியங்கள் இலக்கணம், நிகண்டு, பேரகராதிகள் எனப் பல்வேறு துறைகள் குறித்து அரிய பல சுவடிகளைத் தொகுத்துப் பேரூர் ஆதீனத் திற்கு அளித்த பெருந்தகை புலவர் இரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்குத்

தமிழ்கூறு நல்லுலகம் பெறிதும் நன்றிக் கடன் பட்டதாகும். இவற்றை முறையாகப் பகுத்தும் தொகுத்தும் இச் சுவடிகள் பற்றிய ஒரு விளக்க நூல் அடைவு வெளியிடுதல் மிக மிக இன்றியமையாததாகும்.

உலகம் முழுதும் கிடைக்கின்ற சுவடிகளுக்கு இங்ஙனம் விரிவான சுவடி அடைவுகள் அமைக்கும் போதுதான் இன்னும் வெளியாகாத, அச்சுருவம் பெறாத பல அரிய செல்வங்கள் நமக்குக் கிடைக்கும். சுவடிகளைத் தேடிப் பாதுகாக்கும் அரிய முயற்சியை இன்னும் தொடர்ந்து செய்ய வேண்டும். முன்னையோர் தொடர்ந்து பல இடையூறுகள் ஏற்பட்டபோதும் இம்முயற்சியில் தளராது ஈடுபட்டதினால்தான் இன்று நாம் சங்க நூல்களையும் இலக்கணங்களையும் பிற நூல்களையும் காணும் பேறுபெற்றோம்.

சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே.சா. போன்றோர் ஏட்டுச் சுவடிகளைத் தேடியெடுத்துப் பரிசோதனை செய்து, பொருள் நட்டம் ஏற்படும் நிலையிலும் அவற்றைப் பதிப்பிக்க ஆர்வம் கொண்டமைக்கு அவர்களுடைய தமிழ் மொழிப்பற்றே காரணமாகும். கலித்தொகைப் பதிப்புரையிலே சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் கூறுவது இன்றைக்கும் பொருந்துமாறு உள்ளது. அது வருமாறு:

> பழைய சுவடிகள் யாவும் கிலமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்போரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதின் மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப் பெற்ற வித்வான்களை அவள் மாமியும் எட்டிப் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தைப்பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றோகிட்டுவது? காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமும்தான் மீறும், அரைக்காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது. சங்கமரீஇய நூல்களுட் சில இப்போதுதானுங் கிடைப்பது சமுசயம். முப்பால் அப்பாலாய் விட்டது. என்காலத்தில் யான்பார்க்கப்பெற்ற ஐங்குறுநூறு இப்போது தேசங்கள் தோறும் தேடியும் அகப்பட்டிலது. இப்பொழுது தேசங்கள் தோறும்தேடியும் அகப்பட்டிலது. எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன் பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம் ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கிலும் மனந்தளம்புகின்றதே! தமிழ் மாதுநுந் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம். பாஷாபிமானமென்று இவை

யில்லாதார் பெருமையும் பெருமையாமா? இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களா''.

என்று தாமோதரம் பிள்ளையவர்கள் அன்று கூறிய சொற்கள் இன்றும் பொருந்துமாறு விளங்குகின்றன.

சுவடிகளைத் தேடிப்பாதுகாப்போர்க்கு உறு துணையாய் விளங்கி தமிழ்ச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பது இன்றியமையாக் கடமையாகும்.

(குறிப்பு. அடைப்புக் குறியிடையே காணும் எண்கள்: பேரூர் ஆதீனச் சுவடிகளின் பட்டியலில் காணப்பெறும் வரிசை எண்களாகும்).

பேரூராதீனம்

தவத்திரு சாந்தலிங்கர் தமிழ்க்கல்லூரி

தமிழ்ச் சுவடிகள் பட்டியல்

அகர நிரல்

அகத்திய சூத்திரம்
அகத்தியர் செந்தூரம்
அகத்தியர் ஞானம் முதலிய
சித்தர் நூல்கள்
அகத்தியர் தேவாரத்திரட்டு
அகத்தியர் யோகாசனம் மூலம் உரை
அகத்தியர் வைத்தியம் 200
அகராதி நிகண்டு
அசுவசாத்திரம்
அண்ணாமலை சதகம்
அப்பிச்சியார் காவியம் எனும்
குறுங் காவியம்
அம்மன் அகவல் (அழைப்பு)
அம்மன் அழைப்பு—அம்மானை
(பூசாரி பாடல்)
அம்பலவரகவல்
அர்த்தநாரீசுவரர் மாலை
அர்த்தநாரீசுவரர் வண்ணம்
அரங்கநாதர் ஊசல்
அரங்கேசர் வெண்பா
அரிச்சந்திர புராணம்
அரிய பெரிய அகவல்
அருக்கன் நிலை
அருணாசல சதகம்
அருணாசலப் புராணம்
அல்லி அரசாணி மாலை போன்ற
நாட்டுப் பாடல்கள்
அவதூத கீதை
அவிநாசிக் கருணையந்தாதி
அழகர் பிள்ளைத்தமிழ்
அறுபத்து நான்கு திருவிளையாடல்
ஆசாரக் கோவை
ஆசிரிய நிகண்டு
ஆத்தி சூடி
ஆத்திசூடி வெண்பா
ஆனந்த விளக்கம்
ஆனந்தக் களிப்பு
இராமாயண ஓடம்
இரு பிரபந்தத்தின் சில பாடல்கள்
இலக்கணக் களஞ்சியம்
இலக்கணக் கொத்து
இலக்கண சூடாமணி
இலக்கண விளக்கச் சூறாவளி
முதற் சூத்திர விருத்தி
இலக்கண விளக்கம் அகம்–புறம்
இலிங்க புராணம்
உசிலைனம் ஐயனார் சதகம்
உடலறி விளக்கம்
உத்திர கீதை
உப்பிலசாமி ஆனந்தன் களிப்பு
உபதேசக் கட்டளை
உரிச்சொல் நிகண்டு
உருமாண்ட கவுண்டர் சரிதம்
ஊமைத்துரைப் பாடல்
எண் சுவடி
ஏகாம்பரநாதர் உலா
ஏழுலகத் தோற்றம்
ஒரு பாட்டியல்
கடம்பவன புராணம்
கடம்பவன மான்மியம்
கணக்கதிகாரம்
கந்த புராணம்
கந்த புராணம் (அறுபடை வீடு வாழ்த்து
உரை)

கந்தர் அந்தாதி உரையுடன்
கந்தர் அலங்காரம்
கந்தர் அனுபூதி
கபிலகிரி புராணம்
கபில நாடகம்
கபில ரகவல்
கம்பர் வாழ்த்து
கயிலாசநாதர் சதகம்
கர்ணசிகை சடுத்தல அனுபவ சூத்திரம்
கருட பத்து
கருடாசல விலாசம்
கருணாம்பிகை பாடல்கள்
கருணையம்மன் பேரில் அந்தாதி முழுநூல்
கருவூர் பசுபதீஸ்வரர் மாலை
கல்லாடம் மூலம்
கலை சூட்சுமம்
காஞ்சி வெண்பா-உரை சில தனிப்பாடல்
காரிகை உரை
காளத்தி உலா
காளியம்மன் குறவஞ்சி
கிருஷ்ணன் தூது
கீரம்பர் அம்மன் பாடல்
குண்டலகேசிச் சருக்கம்
குணவீர பண்டிதர் பாட்டியல்
குமரேச சதகம்
குமாரசாமியம்
குவலயானந்தம்
குற்றாலக் கோவை
குறிஞ்சிப் பாட்டு
கூர்ம புராணம்
கூனம்பட்டி மாணிக்கமூர்த்தி மேகவிடு தூது
கூனம்பட்டி மாணிக்கவாசக மூர்த்தி
ஆற்றுப்படை
கைரேகை முனிவர் பூசாவிதி
கொங்கு மண்டல சதகம்
கொன்றை வேந்தன் மாலை
கொன்றை வேந்தன் விருத்தம்
சக்தியுலா
சக தேவர் சாத்திரம் ஆருடம்
சட்டி கவசம்
சட்டை முனி சடாட்சர கோவை
சந்தி உலா
சம்பிரதாய விளக்கம்
சர நூல்

சவுந்தரி யந்தாதி
சாத்திர நூல் தொகுப்பு
சாதகாலங்காரம்
சாலங்கராம பரீஷகிரந்தமு சாலிங்கிராமப் பரீஷை நூல்
சித்தர் ஆரூடம்
சித்தர் பாடல்கள்
சித்திர புத்திரன் கதை வசனம்
சித்தாந்த பிரகாச கட்டளை
சித்தியார் பரபக்க மூலம்
சிதம்பரச் சக்கரம்
சிதம்பரப் பாட்டியல்
சிலப்பதிகாரம்
சிவகாம புராணம்
சிவகிரி ஊஞ்சல்
சிவகிரித் தல புராணம்
சிவகிரி முருகன் பிள்ளைத்தமிழ்
சிவகிரி வேலவர் காதல்
சிவ கீதை
சிவஞான சித்தியார் மூலம்
சிவஞான போதம் உரை
சிவஞான போதம் முதலிய சிந்தனையுரை
சிவஞான போதம் முதலிய மெய் கண்ட சரித்திரம்
சிவஞான போத திருவிருத்தம் மூலம் உரை
சிவநெறி விளக்கம்
சிவப்பிரகாசம் சிந்தனை உரை
சிவமலைக் குறவஞ்சி
சிவமலையாண்டவர் சண்முக மாலை
சிவராக்கியம்
சிற்றின்பக் கலித்துறை
சிறு தொண்டர் சிந்து இசைப்பாடல்
சிவானந்தலகரி தமிழ் உரையுடன்
சீரங்கராயன் பள்ளு
சீவகசிந்தாமணி-பழம் பாடல்
சுந்தரபாண்டியம்
சூடாமணி
சூடாமணி உள்ளமுடையான்
சூரன் அனுபூதி
சூரிய நமஸ்காரம்
செங்குந்தர் எழுபது
செங்குந்தர் திருக்கை வழக்கம்
செப்பேடு
சென்னிமலைத் தல புராணம்

சென்னிமலை தோத்திரம்
சென்னிமலைப் பிள்ளைத் தமிழ்
சென்னி மலை வண்ணம்
சேந்தன் திவாகரம்
சொக்கர் பயகர மார்லை நெல்லி மாலை
சோடசவுப்சாரம்
சோதிட நூல்
சோதிட மந்திரம்
ஞானப் பிரகாசம்
ஞானப் பிரகாச மெய்மொழிச் சரிதை
ஞான வாசகம்
தக்கை ராமாயணம்
தஞ்சையர் திருப்புகழ்
தஞ்சைவாணன் கோவை உரை
தத்துவ அக விளக்கம்
தத்துவகோசம்
தனிகை வெண்பா (உரையுடன்)
தனிக்குறள் வெண்பா
தனிப்பாடல்கள்
தாடை மாலை
தாயுமானவர் மடல்
தாள மரபு
திங்களூர் நொண்டி நாடகம்
திட்டமலைக் கும்மி
திமான சக்கரம்
திரட்டு வாடகம்
திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி
திருக்குறள்
திருக்கொள்ளக் காட்டுத் தலபுராணம்
திருக்கோவையார்
திருச்சிற்றம்பலக்கோவை சம்புநாதர் உரை
திருச்செங்கோட்டுக் கோவை
திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை
திருச்செங்கோட்டுப் பிள்ளைத் தமிழ்
திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர்
தண்டாயுத சதகம்
திருச்செங்கோடு தல புராணம்
திருஞான விளக்கம்
திருத்தொண்டர் புராணம்
திருப்பரங்கிரிப் புராணம்
திருப்பரங்குன்றப் பதிற்றுப்பத்து அந்தாதி
திருப்புகழ்
திருமந்திர உபதேசம் உத்திரபோதம்
திருமுருகாற்றுப்படை உரையுடன்
திருமுருகாற்றுப்படை பரிதியார் உரை
திருவண்ணாமலைப் புராணம்
திருவருட்பா
திருவாசகம்
திருவாப்புதூர் புராணம்
திருவாரூர்க் கோவை
திருவானைக்கா உலா
திருவிசைப்பா திருப்பல்லாண்டு
திருவிளையாடல் நாட்டுப் பாடல்
திருவிளையாடல் பயகர மாலை
திருவிளையாடற் புராணம்
திருவிளையாடற் புராண வெண்பா
உரையுடன்
திவாகர நிகண்டு
தொண்டை நாட்டுச் செய்திகள்
தொண்டை மண்டல சதகம்
தேவி மான்யம்
தொல்காப்பியம் உரையுடன்
நந்தி நூல்
நந்திவனப் புராணம்
நம்பி அகம் மூலம்
நம்பியகப் பொருள்
நம்பியகப்பொருள் அகத்திணை களவு
நயன நூல்
நல் வழி
நவதுக கோள் துதி
நவநீதப் பாட்டியல்
நவர்த்தின மாலை
நன்னூல் காரிகை
நன்னூல் விருத்தியுரை
நாட்டுப் பாடல் கதை
நாட்டுராயன் கலித்துறை
நாலடியார் பதுமனார் உரை
நிகண்டுகள் (பெயர் தெரியவில்லை)
நீதி நூல்
நெடுநல் வாடை நச்சர் உரை
நேமிநாதம் மூலம்
நைடதம்
நொண்டி நாடகம்
பகவத்கீதை
பகவத்கீதை உரையுடன் (தமிழ்)
பசும்பை 70
பஞ்ச தந்திர உரையுடன்
பஞ்ச மகா சரித வட்சணம்

பஞ்ச மரபு
பண்ணாவூர் தல புராணம்
பதரி வனப்புராணம் (பவானி)
பதிபசு பாச விளக்கம் ஆனந்த விளக்கம்
பரத சங்கிரகம்
பரமராசிய மாலை
பராபரத்வ விளக்கம்
பல வண்ணங்கள்
பவானி வேதநாயகர் சதகம்
பழனிக் காதல்
பழனிக் காவடி
பழனி சந்தப் புகழ் வண்ணம்
பழனித்தல புராண-உரை
பழனிப் பிள்ளைத் தமிழ்
பழமொழி மாலை
பழையனூர் நாடகம்
பன்னிரு பாட்டியல்
பாகவதம்
பாசவிபாசனன் கதை
பாரதம்
பாரத வசனம்
பிரபந்தப் பாட்டியல்
பிரம கீதை
புலிப்பாணிசாலம்
புலிப்பாணி வைத்தியம்
புவன கோசகம்
புறத்திரட்டு
புறநானூறு-பழைய உரை
பூந்துறை இராமண கவுண்டர் தாய் மகள் ஏசல்
பெரியபுராண சாரம்
பெருங்கருணை நாயகி மாலை
பெருந்தேவனார் பாரதம்
பேரகராதி
பேரூர் சிவகாமியம்மை யகவல்
பேரூர் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்
பேரூர் பச்சைநாயகி சதகம்
போகர் எழுநூல் திரட்டு
மகாபாரதம் (கன்னடம்)
மகாபலி (?) நம் நாடகம்
மணியனூர் ராசாக் கவுண்டர் மோகனக் குறவஞ்சி
மதன நூல்
மதன வித்தாரம்
மதுராபுரியம்பிகை மாலை
மதுரைத் தலபுராணம்—வசனம்
மதுரைப்பதிற்றுப் பத்தந்தாதி
மந்திர சாத்திர நூல்கள்
மந்திர கருத்து சாத்திர தோத்திர நூல்கள் திரட்டு
மருத்துவ நூல்கள்
மாணிக்கவாசகர் அகவல்
மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்
மீனாட்சியம்மன் தாய் மகள் ஏசல்
முனி மொழி
மூதுரை
மெய்கண்ட சாத்திரங்கள்
மெய்ம்மொழிச் சரிதை
மேக விடு தூது
மேழி விளக்கம்
யாப்பருங்கலக்காரிகை
வணிகர் பன்னிரு மாந்தர்
வராகி மாலை
வருசாதி நூல்
வள்ளியம்மை புராணம்
வளையாபதிச் சுருக்கம்
வாசிட்டம்
வாசிட்டம் சில மருத்துவ நூல்
வாலையந்தாதி
வான்மீக சாத்திரம்
விக்கிரம சோழன் உலா
விநாயக புராண வசனம்
விநாயகரகவல்
வியாக்கர பாதர் ஞான காண்டம் (திருமாகறல், சுப்பராயன் ஏடு)
வில்வ நாயகர் மாலை
விவாக காண்டம்
வீட்டு நெறிப் பாடல்
வீரபாகு தேவர் வகுப்பு முதலானவை
வீரத் திருவேங்கடன் விறலிவிடு தூது
வெண்பாட்டியல்
வெண்பாப் பாட்டியல்
வெள்ளி மலைப் பதிகம்
வேதாந்த சித்தாந்த சமரச பொருளுரை
வேதாந்த சித்தாந்த சமரச பொருளுரை
வேலுக் குறிச்சிக் கவுண்டர் சதகம்
வேளாளப் பட்டயம்
வேளாளர் கீர்த்தி 96 குலத்துப் பாடல்
வேளாளர் வரலாறு
வைராக்கிய சதகம் முதல் பாதி கொஙு வகுப்பு
வைராக்கிய தீபம்—உரையுடன்
ஸ்ரீ கிருஷ்ண விலாசம்

உ

திருப்பேரூர்

அருண்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயில் திருக்குட

நன்னீராட்டுப் பெருவிழா

சத்வித்யா சன்மார்க்க

சங்கப் பவளவிழா

தவத்திரு அடிகளார்

மணிவிழா - குருபூசை விழா

நிகழ்ச்சிகள்

அருண்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருவருளாலும் அருண்மிகு அம்பலவாணர் பேரருளாலும் இவ்வாண்டு புனிதமான பெருவிழாக்கள் நடைபெற்றுள்ளன. திரு மடத்தின் திருக்கோயிலில் அமைந்துள்ள அருண்மிகு. சாந்தலிங்கப் பெருமானுக்கும். அருண்மிகு. அம்பலவாணர்க்கும் திருக்குட நன்னீராட்டு 1973–இல் செய்வித்துப் பன்னீராண்டுகள் நிறைவுற்றன. எனவே மீண்டும் திருக்குட நன்னீராட்டு நிகழ்த்த வேண்டுமென ஆதீனம் திருவுளம் கொண்டார்கள்.

சிரவையாதீனம், தவத்திரு. சுந்தரம் அடிகளார் அவர்களை ஆலோசகராகக் கொண்டு அன்னூர் கோவிந்தசாமி நாயுடு தலைமையில் விழாக்குழு அமைக்கப்பெற்றது. ஆதீனத்தின் திருவுளப் பாங்கின்படி அருண்மிகு சாந்தலிங்கப் பெருமான் குருபூசை நாளான மாசிமக நன்னாளையொட்டி நிகழ்த்தவும், 1916-இல் தவத்திரு மாணிக்க சுவாமிகளால் தோற்றுவிக்கப் பெற்ற சத்வித்யா சன்மார்க்க சங்கத்திற்கு இன்றைக்கு 70 ஆண்டுகள் நிறைவுற்றமையால் அதற்குப் பவள விழாவினையும் நிகழ்த்த எண்ணி உறுதி செய்யப் பட்டது. அன்பர்களும், தொண்டர்களும் தவத்திரு. அடிகளார்க்கு மணிவிழாவினை நடத்தவும், அடிகளார் திருக்கயிலை சென்றதன் நினைவாக ஆதீனத்தின் நுழைவு வாயிலில் திருக்கயிலைக் காட்சி அமைத்துக் கொடுக்கவும் மணிவிழா மலர் ஒன்று வெளியிடவும் தீர்மானித்தனர்.

விழாக்குழு திறம்படச் செயல்பட்டுத் திருக்கயிலைக் காட்சி நுழைவு வாயிலை அமைத்துள்ளது. மலருக்குரிய கட்டுரைகளைச் சேகரித்துச் சிறப்பான முறையில் பொலிவுபெற வெளியிடப்படுகிறது. விழாக்களில் பங்குகொண்டு சிறப்பிக்கப் பல ஆதீனத் தலைவர்கட்கும் சான்றோர்கட்கும் முறையான அழைப்புகள் விடுத்து வரவழைக்கப்பட்டனர். திருக்குட நன்னீராட்டு விழாவில் திருமுறைகள் ஓத திருமடங்கட்கும் திருக்கோயில்கட்கும் அழைப்புகள் விடுத்து வரவழைக்கப்பட்டது.

விழாக்கள் 19-2-86 முதல் 24-2-86 முடிய ஆறு நாட்கள் சிறப்பான முறையில் நிகழ்வுற்றன.

முதல் நாள் 19-2-86 புதன்கிழமை

விழாவில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருந்த ஓதுவா மூர்த்திகள் முன்னதாகவே வந்திருந்தனர். திருமுறைகள் ஓதும் நிகழ்வு தொடங்கவே காலை 10 மணி அளவில் திருக்குட நன்னீராட்டு விழாத் தொடக்கமாகப் பிள்ளையார் வழிபாடும் திருவின் பூசனையும் நிகழ்வுற்றன.

காலை 11 மணியளவில் மழலையர் பள்ளி விழா நிகழ்ச்சிக்கு திரு. பாலசுப்ரமணியம் அவர்களும், அவரது துணைவியாரும் தலைமை வகித்துப் பரிசுகள் வழங்கினர் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளோடு விழா இனிது நிறைவுற்றது மாலை 3 மணியளவில் உயர்நிலைப்பள்ளி விழா சிறப்பான முறையில் நிகழ்வுற்றது.

விழாவையொட்டிச் சிறப்பான முறையில் அமைக்கப் பெற்றிருந்த வேள்விச் சாலைக்கு இன்னிசை முழங்க. அன்பர்கள் திருக்குடங்களை எடுத்துச் சென்று வேதிகைகளில் வைத்து முதல்கால வேள்வி வழிபாடு நிகழ்த்தினர். பன்னிரண்டு திருமுறைகளை முறையே ஓதச் செய்து சிறப்பான முறையில் நிகழ்வுறச் செய்தனர்.

இரண்டாம் நாள் 20 2-86 வியாழக்கிழமை

அதிகாலை வேள்விச்சாலையில் ஓதுவா மூர்த்திகளால் திருப்பள்ளியெழுச்சி பாடப் பெற்றது. காலை 11 மணியளவில் இரண்டாங்கால வேள்விவழிபாடு தொடங்கிற்று. ஆதீனத்தலைவ களில் தவத்திரு. மயிலம் ஆதினம், முருகதாச சுவாமிகள், திருப்போரூர் சிதம்பர சிவஞான சுவாமிகள், விட்டோபா மடத்தின் தலைவர், பல துறவியர்கள் சான்றோர்கள் வழிபாட்டில் கலந்து கொண்டனர். பன்னிரு திருமுறைப் பாடல்களையும் ஓதுவார்கள் பாட ஒரு மணியளவில் வேள்வி வழிபாடு சிறப்பான முறையில் நிறைவெய்தியது.

மாலை 3 மணியளவில் வீரசைவக் கருத்தரங்கு நிகழ்வுற்றது. மயிலம் ஆதீனம் விழாவிற்குத் தலைமை தாங்கி வீரசைவச் செந்நெறியின் தொன்மையினையும் மக்களிடம் பரவ மேற்கொள்ள வேண்டிய எளிய வழிமுறைகளை யும் எடுத்துக்கூறி விளக்கினர்.

1 தவத்திரு *சிவஞான பாலய சுவாமிகள்* மயிலம் ஆதீனம்

2 தவத்திரு. *சிதம்பர சிவஞான சுவாமிகள்* திருப்போரூர்

3 தவத்திரு. *இராமலிங்க சுவாமிகள்* விட்டோப மடம் போரூர்

4 தவத்திரு *சிதாபானந்த சுவாமிகள்* சின்னதண்டா

5 தவத்திரு. *சாந்தலிங்க இராமசாமி அடிகளார்* பேரூராதீனம்

6 சைவத்திரு. டாக்டர் *வை இரத்தினசபாபதி* சென்னை

ஆகியோர் பங்குகொண்டு உரை நிகழ்த்தினர்.

மாலை 7 மணிக்கு மூன்றாங்கால வேள்வி வழிபாடு தொடங்கிற்று. திருமுறைகளை ஓதுவா மூர்த்திகள் பாட, வேள்வி நிறைவெய்துகையில் சிரவையாதீனம் திருமுறைகளை முறைபடுத்த, பண் இசை முழங்க வழிபாடு இனிது நிறைவெய்தியது.

இரவு 9 மணியளவில் புலவர். சுந்தரராசன் குழுவினரால் திருநாவுக்கரசர் வரலாறு இசைச் சொற்பொழிவாக நிகழ்த்தப் பெற்றது.

இரவு 12 மணிக்குக் கோபுர கலசங்களுக்குப் படிமானம் செய்து. பீடங்கட்கு எண் வகை மருந்துக்கலவை சாத்தினர்.

மூன்றும் நாள் 21-2-86 வெள்ளிக்கிழமை

அதிகாலை 4 மணிக்கு ஓதுவா மூர்த்திகள் திருப்பள்ளியெழுச்சி பாடினர். கலசங்கட்கு மலர்மாலை அணிவிக்கப் பெற்றன. பீடசுத்திக்குப்பின் சன்னிதானங்கள் நாடி சந்தானம் செய்தனர். பின்னர் நான்காம் கால வேள்வி வழிபாடு நடைபெற்றது. திருமுறைப்பாடல்கள், இன்னிசைகள் முழங்க, கலசங்கள் புறப்பட்ட காட்சி கண் குளிர வைத்தன. சரியாக 6-45 மணிக்குப் புறப்பட்டு 7-15 அளவில் கோபுரங்கட்கும் கருவறைகட்கும், மூர்த்திகட்கும், திருக்குட நன்னீராட்டு நிகழ்வுற்றது. இக்காட்சியினை ஆயிரக்கணக்கான அன்பர்கள் தம் கண்ணினுல் கண்டு மண்ணினிற் பிறந்த பெரும்பயன் அடைந்தனர்.

அடுத்து, ஆதீனத் தலைவர்கள் விழாவின் சிறப்புக் குறித்தும், திருக்குட நன்னீராட்டின் மகிமை குறித்தும் சிறப்புரையாற்றியருளினர் திருக்குட நன்னீராட்டினைக் கண்ணினிற் கண்ட காட்சிக்குக் கருத்து விளக்கம் தந்து பொலிவு பெறச் செய்தனர்.

திருக்கயிலைத் தோரண வாயிலினைத் தொண்டை மண்டல ஆதீனம் தலைமையில் திரு. தி. சு. அவிஞசிலிங்கம் அவர்கள் திறந்து வைத்தனர்.

காலை 10 மணியளவில் அன்னூர், தர்ம வீர திரு. கே. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் சார்பில் அவர்தம் புதல்வியார் திருமதி. அம்மு பாலசுந்தரம் அவர்களும், மருமகன் திரு. பாலசுந்தரம் அவர்களும் அடியார்கட்கும், அன்பர்கட்கும் அமுது அளித்தனர்.

பிற்பகல் 3 மணியளவில் துறவியர் கருத்தரங்கு நிகழ்வுற்றது. அவ்வமயம் பங்கு பெற்ற திருமடத்தின் தலைவர்கள் வருமாறு.

விழாத்தலைமை - மயிலம் ஆதீனம் தவத்திரு. சிவஞானபாலைய சுவாமிகள்

கருத்துரை வழங்கியோர்:

1 தவத்திரு. சொரூபானந்த சுவாமிகள் இராசபாளையம்
2 தவத்திரு. பிரமானந்த சுவாமிகள் சீரங்கம், திருச்சி
3 தவத்திரு. போதானந்த சுவாமிகள் திருவேடகம்
4 தவத்திரு. பரிபூரானந்த சுவாமிகள் போரூர்
5 தவத்திரு. அரங்கநாத சுவாமிகள் திருக்களர்
6 தவத்திரு. சதாபானந்தா சுவாமிகள் சின்னதண்டா
7 தவத்திரு. ஊரனடிகள் வடலூர்
8 தவத்திரு இராமலிங்க அடிகளார் போரூர்
9 தவத்திரு. சாயிமாதா சிவபிருந்தாதேவி திலகவதியார் ஆதீனம் புதுக்கோட்டை
10 திருவேடகம் சுவாமிகள்
11 தவத்திரு சிதம்பர சிவஞான சுவாமிகள் திருப்போரூர்
12 தவத்திரு. முருகதாச சுவாமிகள் திருவாமாத்தூர்
13 தவத்திரு. சுந்தர சுவாமிகள் சிரவையாதீனம்
14 தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பேரூராதீனம்
15 தவத்திரு ஞானப்பிரகாச சுவாமிகள் தொண்டை மண்டல ஆதீனம் காஞ்சிபுரம்
16 தவத்திரு. இராமசாமி அடிகள் உடுமலை
17 தவத்திரு. சற்குரு இராமலிங்க சுவாமிகள் குன்னூர்
18 தவத்திரு. மதுவினந்த சுவாமிகள்

ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்து விளக்கியுரைத்தனர்.

திருக்குட நீராட்டு விழாவில் காலை அடிகளார் அவர்களின் கட்டுரைத் தொகுப்பு நூலான '' தமிழ் நெறிகள் '' என்ற நூலை ஔவை. து. நடராசன் அவர்கள் வெளியிட சத்தியமங்கலம் திரு. பி. என். பழனிசாமிக் கவுண்டர் அவர்கள் பெற்றுக்கொண்டனர். ஆய்வுரையினை திரு. ம. ரா. போ. குருசாமி அவர்கள் நிகழ்த்தினர்.

இரவு 9 மணியளவில் திருத்தணிகை சுவாமிநாதன் சீர்காழி திருஞானசம்பந்தம் ஆகியோரால் தேவார இன்னிசைப் பாடல்கள் பண்ணுடன் இசைக்கப் பெற்றன.

நான்காம் நாள் 22-2 86 சனிக்கிழமை

தவத்திரு. அடிகளார் அவர்களின் மணிவிழாவை மங்கல இசையுடன் அருளாளர்கள், சான்றோர்கள், அறிஞர்கள், தொண்டர்கள் குழுமியிருந்து காலை 9 மணியளவில் தொடங்கினர். திரு எஸ் ஆர். சுப்ரமணியம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, மயிலம் ஆதீனம் தலைமை தாங்க, தவத்திரு. குன்றக்குடி அடிகளார், தமது நீண்டகாலத் தொடர்பினை ஆசியுரையாக நல்கினர் சிரவையாதீனம் தாம் வேறு. அடிகள் வேறு என்றில்லாமல் இளமை தொட்டு ஒன்றாக இருந்து பயின்று, பணிபுரிந்து வருவதால் தம்மையே புகழும் உரையாக அமையும் என்று எடுத்துரைத்துத் தமது உணர்வை வெளிப்படுத்தினர். தொண்டை மண்டல ஆதீனம், பேரூர் திருமடத்தோடு தமது பன்னெடுங்கால அனுபவத்தை எடுத்துரைத்தனர். திருப்போரூராதீனம் தமது திருமடத்தோடு அமைந்த தொடர்பினை விளக்கி உரைத்தனர்.

மாண்புமிகு. கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் சிறப்புரை நிகழ்த்தினர். திருப்பேரூர் பட்டீசுவரப் பெருமான் திருக்கோயில் தக்கார், திரு. க. சண்முகசுந்தரம், செயல் அலுவலர், அர்ச்சகர்கள் பணியாளர்கள் சார்பிலும், திருக்கோயில் மரியாதைகள் வழங்கியும், திருக்கூத்தப் பெருமான் வெள்ளித் திருவுருவம் ஒன்றும் வழங்கிச் சிறப்பித்தனர்.

தருமையாதீனம் சார்பில் கட்டளை மகாலிங்கத் தம்பிரான் அவர்கள் வந்திருந்து பொன்னுடை போர்த்தி வாழ்த்துச் செய்தியினை நல்கினர். பலரும் பொன்னுடை போர்த்த காணிக்கைகள் செலுத்தி வணங்கினர்.

மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி இரா. செங்கோட்டுவேலன் அவர்கள் அடிகளாரின் பணிகுறித்துப் பாராட்டினர். அரசவைக் கவிஞர் புலமைப் பித்தன் தனது இளமைக் காலக் கல்வி அடிகளார் கல்லூரியில் அமைந்ததைக் கூறி மிக்க பெருமை அடைந்தார்.

மெய்ப் பொருளியல் ஆய்வுக் கூடத்தைக் குன்றக்குடி அடிகளார் தலைமையில் மாண்புமிகு இரா. செங்கோட்டு வேலன் திறந்து வைத்தார்.

அடிகளார் மணிவிழா மலரினை குன்றக்குடி அடிகளார் பாராட்டி வெளியிட திருமதி சந்திரகாந்தி கோவிந்தராசுலு அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

கொங்கு மண்டல சதகம் வெளியீட்டினை முன்னாள் மைய அரசு அமைச்சர் திரு கே எஸ். இராமசாமி அவர்கள் வெளியிட இயற்கைச் சித்த வைத்தியர் திரு கே. கிருட்டினசாமிக் கவுண்டர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

பின், அடிகளார்க்குப் பல்வேறு மன்றங்கள், கல்வி நிலையங்கள் அன்பர்கள் சார்பில் பாராட்டுக்கள் நிகழ்த்தப்பட்டன.

மாலை 4 மணிக்கு, தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் இன்றைய உடனடித் தேவை - சமுதாயச் சீர்திருத்தமே - சமயச் சீர்திருத்தமே - சமய நிறுவனங்களின் ஒருங்கமைப்பே என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது.

இரவு 8 மணிக்கு, சூலமங்கலம் சகோதரிகள் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்தினர்.

ஐந்தாம் நாள் 23-2-86 ஞாயிற்றுக்கிழமை

காலை 10 மணிக்குத் தமிழ்க்கல்லூரி ஆண்டுவிழாச் சிறப்பாக நிகழ்வுற்றது.

பிற்பகலில் விழா சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் பவள விழா நிகழ்ச்சியாகப் பரிணமித்தது தவத்திரு ஊரன் அடிகள் தலைமையில் சிந்தனை அரங்கத்தில் ''சாந்தலிங்கர் கண்ட அவிரோதம்'' என்ற தலைப்பில் டாக்டர் வை. இரத்தின சபாபதி ''வள்ளலார் கண்ட சன்மார்க்கம்'' என்ற தலைப்பில் பேராசிரியர் திரு இருசுப்பிள்ளை அவர்களும் ''தாயுமானவர் கண்ட சமரசம்'' என்ற தலைப்பில் டாக்டர் பொன். சௌரிராசனும் தமது ஆய்வுக் கருத்துக்களை விளக்கினர்.

தவத்திரு மாணிக்கசுவாமிகள் படத்தைத் திரு கே. கிருட்டினசாமிக் கவுண்டரும் தவத்திரு ஆறுமுக சுவாமிகள் படத்தை திரு வெ சு பழனிசாமிக் கவுண்டரும் திறந்து வைத்தனர். அவர்கட்கு பொன்னாடை போர்த்திப் பாராட்டும் செய்யப் பட்டது.

தொடர்ந்து பேரூராதீனம் ஏர்உழவன் ஆசிரியர் திரு கிருட்டிணசாமிக்கவுண்டர் அவர்கட்கு, ''வாழ்வியல் அறிஞர்'' என்றபட்டமும், பேரூர் சிவசண்முகசுந்தரக் குருக்கட்கு ''திருமுறை ஆகமச் செம்மல்'' என்ற பட்டமும், சிற்பி த. சானகிராமனுக்கு, ''சிற்பக் கலை வல்லுநர்'' என்ற பட்டமும், தேவார ஓதுவார் அருணாசலத்திற்கு ''பண்ணிசைச் செம்மல்'' என்ற பட்டமும் அளித்துத் திருக்கோயில் அர்ச்சகர்கட்கும், தொண்டர்கட்கும் பரிவட்டங்கள் போர்த்தியும் சிறப்பளித்தது.

இரவு 7 மணியளவில் ''நாவுக்கரசர்'' சோ. சத்தியசீலன் தலைமையில் ''பெரிய புராண நெறிகளை வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தாத சமுதாயம் குற்றமுடையது'' என்ற வழக்கினை அருள்நெறி நாவலர் திரு அ வ இராசகோபாலன் அவர்கள் தொடுக்க நகைச்சுவை அரசு திரு அ அறிவொளி அவர்கள் மறுத்துரை வழங்க, தலைமையுரைக்குப் பின் சுவைபட வழக்காடு மன்றம் நிறைவெய்தியது.

ஆறாம் நாள் 24-2 86 திங்கட்கிழமை குருபூசை விழா

அதிகாலை திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை ஓதுவா மூர்த்திகள் பாடினர். காலை 7 மணிக்குத் திருக்கோயில் வழிபாட்டிற்குப் பின் வேள்வி வழிபாடும்-சாந்தலிங்கப் பெருமானுக்கு அபிடேக வழிபாடும் ஆராதனையும் நடைபெற்றது.

மதியம் அடியார்கட்கு அமுதளித்தலும் சிறப்பாக நடைபெற்றது.

இரவு எட்டுமணிக்கு அருள்மிகு அம்பலவாணர் - சிவகாமியம்மையுடன் சாந்தலிங்கப் பெருமான் திருவீதி உலா - வான வேடிக்கை தேவாரப் பாடலுடன் இன்னிசை முழங்கிவர அன்பர்கள் அடியார் குழாத்துடன் நகர்வலம் வந்து, விழாக்கள் இனிது பொலிவுற்று நிறைவெய்தின.

உ

அருட்கசிவு......

எஸ். ஆர். சுப்பிரமணியம்

ஈரோடு

எழுமின், விழிமின்

ஊறி சாரும் வரை ஓயாது உழைமின் .....

இது முழுஞான வீரராகிய விவேகானந்தரின் வீரவாக்கு. இதுவே மனித வாழ்க்கையின் தாரக மந்திரம்! ஆம். மந்திர மகிமையும், மந்திரப் பலனும் ஒருங்கே அமைந்த உன்னதப் புனிதரே ''கயிலை முனிவர்'' தவத்திரு. பேரூர் அடிகள் ஆவார். அவர்தம் வரலாறே ஒரு காவியம், அவர் வாழ்க்கையே காவியத்தின் பாவிகம்.

சின்னஞ்சிறிய பவளமல்லிகையின் மகரந்தச் சிரிப்பு
மண்ணுலகையே தேவலோகமாக்குகிறது...
சிறிய அகல்விளக்கின் ஒளித்துணுக்கு ஒளி உலகுக்குக்
கை கொடுத்து அழைத்துச் செலகிறது
ஒரு புல்லாங்குழலின் இனியகீதம் ஆயர்பாடிக் கண்ணனை
அகமனதில் அபிநயித்துக் காட்டுகிறது
ஞானமனத்தின் அருட்கசிவு பல் ஆன்மாக்களுக்கு அருள்
ஒளிபரப்பி ஞான உய்வினைத் தருகின்றது.

உண்மைதான், சாந்தலிங்கர் தவச்சாலையில் தவத்திருவின் தவமனத்தால் எத்தனை தவமலர்கள் ...

கால் நூற்றாண்டு காலம் அவர் நடந்த பாதை .... அவர்காட்டிய வழி சமய உலகின் சரித்திரச் சாதனைகள், ஓயாத உழைப்பு, உயர்ந்த சிந்தனை ஆன்மீக உலகிற்கு அவர்காட்டும் புதுநெறி ...

சமயம் வெறும் சடங்குகளில் மட்டுமல்ல, சமுதாயப் பணியில்தான் அதன் மலர்ச்சியே உருவாகிறது என்பது தவத்திரு அடிகளாரின் முழக்கம். அவர்தம் பேச்சும் எழுத்தும் தமிழ்மரபை ஒட்டி அமைந்திருக்கும்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதே அவர் பேச்சு! உலகப் பொது மறையாம் திருக்குறட்பாக்களின் மேற்கோள்களும், அவற்றிற்கு நயமும், உரையும், கூறும் திறனும் அவர்தம் உரைவீச்சில் காணலாம்.

திருமுறைகளின் கனிவும், சித்தாந்த நூல்களின் தெளிவும், சங்க இலக்கிய நோக்கும், வரலாற்றுப் பார்வையும் அனுபவ உண்மையும் அடிகள் பேச்சின் தனிச்சிறப்பு.

கொங்கு நாட்டின் சமய எழுச்சியும், சமய மலர்ச்சியும் இவர்தம் அருட்பார்வையில் நிகழ்ந்துள்ள அற்புதங்கள்......

மணிவிழாக் காணும் மாண்புறு அடிகள்

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

பேரூராதீனம்

அருண்மிகு சாந்தலிங்கப்பெருமான் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் குழு

சிறப்பு ஆலோசகர் :

தவத்திரு. சுந்தரசுவாமிகள்; சிரவையாதீனம்

தலைவர்

'தர்மவீர' அன்னூர் கே. கோவிந்தசாமி நாயுடு

துணைத் தலைவர்கள்

வீகோ. வீரண்ணச் செட்டியார் கோவை

ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார் ஈரோடு

வெ. சு. பழனிசாமிக் கவுண்டர்; வெள்ளிமலைப்பட்டினம்

அரங்க. தாமோதரசாமி நாயுடு; பெரியநாயக்கன்பாளையம்

கே. சின்னுச்சாமிக் கவுண்டர்; பூச்சக்காட்டுவலசு

A. R. கந்தசாமிக் கவுண்டர்; சென்னியூர்

செயலர்கள் :

அ. பழனியப்பன் (எல். ஐ சி.)

தெ. அ. சண்முகம்

கு. வெ. தங்கவேலு

செ. செங்கோடன்

வெங்கிடசாமிக் கவுண்டர் முதலிபாளையம்

பொதுச்செயலர்கள்

பழ. மணிவண்ணன்

மா. பாலசுப்பிரமணியன்

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க !

பேரூராதீனம் சத்வித்யா சன்மார்க்க சங்கப் பவளவிழாக் குழு

சிறப்பு ஆலோசகர்

சற்குரு இராமலிங்க அடிகளார்

தலைவர் :

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்; பொள்ளாச்சி

துணைத்தலைவர்கள் :

இரா. செங்கோட்டுவேலன்; சென்னை

வி. என். கிருஷ்ணசாமி நாயுடு; கோவை

மு. அழகப்பன்; ஈரோடு

வி. எல். பாலகிருஷ்ண நாயுடு; கோவை

செயலர்

டாக்டர் ர. வையாபுரி

இணைச் செயலர்கள்;

சிவகளை மு. சுப்பையா

த. தருமராசன்

ம. ஈசுவரசாமி

துணைச்செயலர்கள் :

க. சண்முக சுந்தரம்

குப்புசாமிக் கவுண்டர்; கணபதி

புலவர் சாமியப்பன்

பொதுச் செயலாளர்கள் :

பழ. மணிவண்ணன்

அ. பழனியப்பன் (எல்.ஐ.சி)

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க !

பேரூராதீனம் "கயிலை முனிவர்"
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

மணிவிழாக் குழு

நெறியாளர்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தலைவர் :

V. S. சின்னசாமிக்கவுண்டர், வெள்ளக்கிணறு

துணைத்தலைவர்கள் :

கிருஷ்ணராஜ் வாணவராயர்; சமத்தூர்

ஆனந்தராஜா; இராமபட்டணம்

C. M. பாலுசாமி ஈரோடு

புரவலர்கள் :

G. K. சுந்தரம் கோவை

K. S. இராமசாமி சூலூர்

சந்திரகாந்தி கோவிந்தராஜுலு கோவை

N. இராமச்சந்திரன்; ராமு பிரதர்ஸ், கோவை

பொருளாளர் :

எஸ், இராமசாமி

செயலர்கள் :

கி. ப. கணேசன்

சோ. கு. பழனிச்சாமி

கு. நடராசன்

இணைச்செயலர்கள் :

எஸ். ஆர். சுப்பிரமணியம்

பி. எம். செல்வகுமார்

மொ. சண்முகசுந்தரம்

சிவசாமி; சிங்கராம்பாளையம்

மலர்ப்பதிப்பாசிரியர்கள்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

டாக்டர் ம. ரா. போ. குருசாமி

பொதுச்செயலர்கள் :

பழ. மணிவண்ணன்

அ. பழனியப்பன் (எல்.ஐ.சி.)

பின் கண்ட மூன்று குழுக்களிலும் பணியாற்றிய உறுப்பினர்கள்

செ. துரைசாமி, ஈரோடு

கி. அரங்கநாதன், பேரூர்

வெ. சாந்தலிங்கம், பேரூர்

ஸ்ரீ பிரகாசம், பேரூர்

பிரகாசம், பேரூர்

மருதாசலம் முதலிபாளையம்

முத்துச்சாமி திருப்பூர்

V. P சபாபதி வேட்டைக்காரன்புதூர்

லட்சுமணன் பள்ளிபாளையம்

M. K. மல்லையராஜ் பவானி

சி. தட்சிணாமூர்த்தி திருச்செங்கோடு

பிரபுல் சேஜ்பால் கோவை

சுப்பேகவுண்டர் கிணத்துக்கடவு

சிவஆறுமுகம் நந்தி அச்சகம்

V. முத்துசாமி மருதமலை அன்னதானக் கமிட்டி

A. அருணாசலம் அருணகிரிநாதர் கி. கழகம்

கவிஞர் காந்திதாசன் கோவை

புலவர் மருதாசலம் கோவை

வெங்கடசுப்பிரமணியம் பேரூர்

இராமண கவுண்டர் கீழ்கதவுகரை

பெரியசாமிக்கவுண்டர் கீழ்கதவுகரை

P. குமாரசாமிக் கவுண்டர் வெற்றிலை ஜோதிடர்

சுப்பிரமணியம் பேரூர்

செல்வி மரகதம்

செல்வி செல்லாத்தாள்

செல்வி அருட்செல்வி

செல்வி பத்மாவதி

செல்வி ராதாமணி

குரோதன ஆண்டு மாசித் திங்கள் 7-ம் நாள் முதல் 12-ம் நாள்

(19-2-86 முதல் 24-2-86) முடிய நடந்த

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டு விழா

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

மணிவிழா

சத்வித்யா சன்மார்க்க சங்கப்

பவள விழா

குருபூசை விழா ஆகிய விழாக்களின்

வரவு செலவுப் பட்டியல்

வரவுகள் :

1. நன்கொடைச் சீட்டுகள் மூலம் :-

அ)	அன்பர்கள் மூலம் பட்டியல் படி	ரூ. 60,183-00	
ஆ)	ரூ 250/-க்கும் குறைவாகக் கொடுத்த அன்பர்கள் மூலம்	ரூ. 25,779-00	85,962-00

2. மலர் விளம்பரங்கள் மூலம்

(அ)	இது வரை வந்தது	ரூ. 40,450 00	
(ஆ)	இன்னும் வரவேண்டியது	ரூ. 11,550.00	52,000-00

3. சத்வித்யா சன்மார்க்க சங்க அன்பர்கள் மூலமாகவும் காணிக்கைகள் மூலமாகவும் ரூ. 14,494-00

மொத்த வரவு ரூ. 1,52,456-00

செலவுகள் :

1.	கயிலை முன்வளைவு, கோபுரங்களுக்கு வர்ணம் அடித்தல், சுவர்களுக்குச் சுண்ணாம்பு, கோபி அடித்தல், கதவு-நிலவுகளுக்கு வண்ணம் அடித்தல் முதலிய திருப்பணிச் செலவுகள் (பட்டியல்படி)	ரூ 36,648-00
2.	விழாச் செலவுகள்	ரூ. 65,808-00
3.	மணிவிழா மலர், கொங்கு மண்டல சதகங்கள், ''நெறிகள்'' முதலியவற்றிற்கான அச்சகச் செலவுகள்	ரூ. 50,000-00
		ரூ 1,52,456-00

பேரூராதீனம் அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, சத்வித்யா சன்மார்க்க சங்கப் பவளவிழா, கயிலை முனிவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மணிவிழா ஆகிய விழாக்களுக்கு ரூ. 250-ம் அதற்கு மேலும் நன்கொடை வழங்கிய அன்பர்கள்

	ரூ.
அருட்செல்வர் டாக்டர் திரு நா. மகாலிங்கம்	5,000
தர்மவீரா அன்னூர் திரு கோவிந்தசாமி நாயுடு	5,000
K. G. நிறுவன அன்பர்கள் மூலம் அன்னம்பாலிப்புக்கு	5,000
திரு B. M. செல்வக்குமார், கோபி	3,001
ஞானாம்பிகை மில்ஸ், வெள்ளக்கிணறு	3,000
விஸ்வஹிந்துபரிசத், கோவை	3,000
திருமதி V. L. B. ஜானகி அம்மாள், விஜயலட்சுமி மில்ஸ், குனியமுத்தூர்	3,000
திரு V. P. சபாபதி, வேட்டைகாரன்புதூர்	2,000
தவத்திரு ராமானந்த அடிகளார் திருமடம், முதலிபாளையம்	1,500
திரு N. தேவய்ய கவுடர், மேட்டுப்பாளையம்	1,111
திரு K. R. பழனியப்ப செட்டியார், முத்துக்கவுண்டனூர்	1,006
திரு நஞ்சப்ப சுவாமிகள், கரியாம்பாளையம்	1,001
திரு பெரியசாமிக் கவுண்டர் மலையப்பாளையம்	1,001
திரு P. K. துரைசாமி, கோவை	1,001
திரு Dr. C. S. நடராஜன் M.B.B.S., ஆர்.எஸ்.புரம்	1,001
திரு A. தேவராஜ், சின்னவேடம்பட்டி	1,001
திரு ஆனந்தராஜா, இராமபட்டினம் ஜமீன்	1,000
திரு C. M. பாலுசாமி, ஈரோடு	1,000
திரு M. R. சின்னச்சாமிக் கவுண்டர் கான்ட்ராக்டர் ஈரோடு	1,000
திரு A. R. கந்தசாமிக் கவுண்டர், சென்னியூர்	1,000
திரு சி. தட்சிணாமூர்த்தி திருச்செங்கோடு	1,000
திரு N. இராமச்சந்திரன், ராமு எலக்ட்ரிகல்ஸ்	1,000
திரு K. C. சின்னசாமிக் கவுண்டர். பூச்சக்காட்டுவலசு	1,000
திரு M. K. மல்லையராஜ், பவானி	1,000
திரு பழதரும ஆறுமுகம், சரவணம்பட்டி	700
திரு சரவண சுப்பிரமணியம், பெருந்துரை	504
திரு சின்னுச்சாமி, அன்னூர்	504
திரு P. நடராஜன், T. நல்லிக்கவுண்டன்பாளையம்	501
திரு ராமண கவுண்டர், கீழ்கதவுகரை	501
மகாராஜா ரீபைனரீஸ் ஈரோடு	500
திரு S. V. பாலசுப்பிரமணியம், சக்தி சர்க்கரை அலுவலகம் கோவை	500
ஆக ..	49,333

முன்பக்கப்படி	ரூ. 49,333
திரு A. சேனுபதிக் கவுண்டர், M. P. சங்கரண்டாம்பாளையம்	500
சக்தி நூற்பு ஆலே, பொள்ளாச்சி	500
திரு கி. ஜெயச்சந்திரன், சென்னே	500
திரு சொ. கு. பழனிச்சாமி சோமனூர்	500
திரு S. இராமசாமி கோவை	500
திரு V. சொக்கலிங்கம் அப்பரடிகள் திருக்கூட்டம் விஜயமங்கலம்	500
திரு S. R. S. மூலமாக ஈரோடு அன்பர்	500
திரு S R. S. மூலமாக ஈரோடு அன்பர்	500
திரு K. S. வீரண்ணச் செட்டியார் கோவை	500
திரு வேலா இராசமாணிக்கம்,, ஈரோடு	500
திரு கந்தசாமிக் கவுண்டர் அவனுசி	500
திரு சுப்பே கவுண்டர், சிங்கராம்பாளையம்	500
திரு வித்யாசாகர், உடுமலேப்பேட்டை	500
கவிஞர் காந்திதாசன் கோவை	500
திரு A. சுப்பிரமணியம், கோபி	400
திரு தங்கமுத்து எல்லப்பாளையம்	400
திரு C. R. பாஸ்கரன், கோவை	344
திரு ஈஸ்வர மூர்த்தி VKV பிரிண்டர்ஸ்	331
திரு V. துரைசாமி பண்டாரம், சங்ககிரி	301
திரு முருகன் தலயாத்திரைக் குழுவினர், உடையாம்பாளையம்	300
திரு P. குமாரசாமிக் கவுண்டர், வெற்றிலே ஜோதிடர்	274
திரு P. கிருஷ்ணசாமி, ஈரோடு	250
திரு ரா. கிருஷ்ணசாமிக் கவுண்டர், உழவகம், கணபதி	250
திரு பொன் சண்முகம், திருச்செங்கோடு	250
திரு E. புருஷோத்தம நாயுடு, ஹார்ட்வேர், கோவை	250
திரு இராமசாமி நாயுடு	250
திரு T.T S. திப்பையா, தாளியூர்	250
ஆக மொத்தம்...	60,183

திருப்பணிச் செலவுகள் :

		ரூ.	
1.	கயிலை முன் வளைவு		
	கடைக்கால் தோண்டி கான்கிரீட்போட	350-00	
	முன்வளைவுத் தூண்களுக்கு கற்கள்		
	கொத்தியது	6,000-00	
	தூண்கள் கட்டிய கூலி	1,000-00	
	இரண்டு தூண்களை இணைத்துப்		
	போட்ட கான்கிரீட் ஸ்லேப்புக்குக் கம்பி	350-00	
	,, ,, சிமெண்ட் ஜல்லி	850-00	
	,, ,, கம்பி கட்டிய கூலி	100-00	
	ஊது உலைக்குக் கரி, உழி, கத்தி	500 00	
	நந்தி, மலை, சிவலிங்கம்		
	ஆகியவற்றுக்கு செங்கல் வேலைகள்,	1,150-00	
	கம்பிகள்	250-00	
			10,550,00
2.	அருள்மிகு சாந்தலிங்கர் திருக்கோயில் கருவறை பல முனைக் கொத்துக் கூலி		1,500-00
3.	முன்வாயில் நுழைவுக் கதவு		
	பட்டா எல் ஆங்கில் கம்பி	500-00	
	,, ,, கூலி	800-00	
			1,300-00
4.	பெயர்ப் பலகைக் கற்கள் இரண்டுக்கு		450-00
5.	திருவாசகக் கற்கள் பதித்த வகையில் சிமெண்ட், கூலி உட்பட		450-00
6.	மேல் தளத்தில் இரண்டு நந்திகள், சிவலிங்கம் அமைக்க சிமெண்ட், ஜல்லி கம்பி		1,000-00
7.	கோபுரங்களுக்கு வர்ணங்கள் வாங்கியது		4,000-00
8.	சிற்பி கூலி		12,500-00
9.	கட்டிடங்கள் பூச சுண்ணாம்பு, காவி, நீலம், கோபி		500-00
	பூச்சுக் கூலி		2,500-00
			3,000-00
10.	மின்சாதனங்க்ள் வாங்கின		
	வகையில்	1,748-00	
	மின் சாதனங்கள் பொறுத்தக் கூலி	150-00	
			1,898-00
	ஆக .. மொத்தம் .. ரூ.		36,648-00

குரோதன ஆண்டு மாசித் திங்கள் 7ஆம் நாள் முதல் 12ஆம் நாள்
(19-02-1986 முதல் 24-02-1986) முடிய நடந்த

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டு

தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்

மணிவிழா

சத்வித்யா சன்மார்க்க சங்கப்

பவள விழா - குருபூசை விழா

செலவுகள்

		ரூ. பை.
1.	பந்தல்	4,250-00
2.	ஒலி, ஒளி அமைப்புக்கள்	2,500-00
3.	நாதசுரம்	1,600-00
4.	வேள்விச் சாலை அமைப்பு	1,000-00
5.	சுவரொட்டி விளம்பரங்கள்	2,000-00
6.	வேள்விச் சாலை-சாதனங்கள்	1,877-00
7.	திருநீற்றுப் பைகள், நினைவுப் பைகள்	1,076-00
8.	ஓதுவார்கள்	2,500-00
9.	துறவியர்கள், அடியவர்களுக்கு வழங்கியது	1,754-00
10.	ஓதுவார்கள், யாகசாலை அன்பர்கள் வேஷ்டி துண்டுகள்	2,651-00
11.	வாணவேடிக்கை	225-00
12.	வீடியோ	2,000-00
13.	பக்கமேளம்	225-00
14	அன்னம்பாலிப்பு	23,400-00
15.	தொண்டர்களுக்குத் துண்டுகள்	1,800-00
16	இசை நிகழ்ச்சி	6,750-00
17.	புகைப்படம்	400-00
18.	சொற்பொழிவாளர்கள்	4,000-00
19.	துப்புரவு கூலி வகை	500-00
20.	அழைப்பிதழ்கள், அறிக்கைகள்	2,000-00
21.	அஞ்சல் செலவுகள்	1,500-00
22.	போக்குவரத்து	1,500-00
23.	கலசங்கள் பழுது பார்த்தல், மெருகிடுதல்	300-00
	ஆக... மொத்தம் ரூ.	65,808-00

அன்னம்பாலிப்புச் செலவுகள்

	ரூ.	ரூ
சமையல் ஐயர்கள் கூலி :-		
19,20,21 பிப்ரவரி'86 3 நாட்களுக்கு	740.00	
22.2 86 முதல் 3 நாட்களுக் கூலி	1,120.00	
வேலையாட்கள் 6 நாட்களுக் கூலி	270.00	
		2 130.00
எலுமிச்சம்பழம்		20.00
நெய்		600.00
தட்டக்கூடை மூங்கில் பாய்கள் கூடைகள்		268.00
காய்கறிகள், பச்சை மிளகாய் வெங்காயம் முதலியன		1,634.00
காப்பித்தூள் & டீத்தூள்		260 00
பால்		1 634 00
மளிகை சாமான்கள்		11,344 00
கடைவீதியில் சாமான்கள் எடுபிடி கூலி		102.00
சமையல் கொட்டகையில்		
செய்த சில்லரைச் செலவுகள்		67 00
விறகு வெட்டிய கூலி		420 00
ஈய டம்ளர்கள்		250.00
பாத்திர வாடகை		570 00
அரிசி		2 950 00
வெள்ளை உளுந்வம் பருப்பு		156 00
ஏலம் கிராம்பு		105 00
உப்பு		40.00
வண்டிச் செலவு		37.00
தேங்காய்கள்		500.00
தயிர்		200.00
சிற்றாட்கள் கூலி		113.00
ஆக...		23,400.00

முப்பெரும் விழாவிற்காக அன்பர்கள் வகை - உபயம் - பொருட்கள்

திரு கே. ஆனந்தராசா, கோவை	-	350 தேங்காய்கள்
		1 மூட்டை வெள்ளம்
திரு பொம்மன்பட்டி, திருக்கோயில் அன்பர்கள்	-	2 மூட்டை கரும்புசர்க்கரை
திருமதி மீனாட்சியம்மாள் ஞானாம்பிகைமில்ஸ்,	-	2 மூட்டை நெல்
திரு கே. ரகுபதி, குனியமுத்தூர்	-	2 மூட்டை அஸ்கா சர்க்கரை
திரு பசீர் அகமது, கோவை	-	1 மூட்டை கரும்பு சர்க்கரை
		1 மூட்டை உருண்டை வெல்லம்
திரு பொன்னாச்சி முதலிபாளையம்	-	1 மூட்டை கரும்பு சர்க்கரை
திரு நாச்சிமுத்து ,,	-	100 லிட்டர் பால்
புலவர் திரு மருதாசலம் கோவை	-	ரூ. 4,000/- மதிப்புள்ள வாழை இலை, பழம்
திரு கே இலக்குமணன் வழி (சேசசாயி பேப்பர் மில்ஸ்)	-	50 ரீம் வெள்ளைத் தாட்கள்
திரு சின்னத்துறை, காளம்பாளையம்	-	1000 செங்கற்கள்
திரு மயில்சாமிகவுண்டர் குடும்பம் பேரூர்	-	1 மூட்டை அரிசி
திரு வெ. சு. பழநிச்சாமிக் கவுண்டர் வெள்ளிமலைப்பட்டினம்	-	1 மூட்டை அரிசி, உணவுச் சாதனங்கள்
திரு V N. கிருஷ்ணசாமிநாயுடு மருதமலை ஆண்டவர் மில்ஸ்	-	குருபூசை அபிடேகச் செலவு
திரு சின்னுப்பிள்ளை, பழநி.	-	5000 விபூதி, குங்குமம், பொட்டலங்கள்
மெசர்ஸ் நந்தி அச்சகம்	-	5000 திருக்குட நீராட்டு விழா அழைப்பிதழ்கள்
திரு இராமசாமி முதலியார் சாந்தலிங்கர் அரிசி ஆலை பேரூர்	-	1 மூட்டை அரிசி
திரு கந்தசாமிக் கவுண்டர் நீருற்று நிபுணர், கணபதி	-	ரூ. 1000/- மதிப்புள்ள மாலைகள், மலர்கள்

23-2-86 அன்று நடந்த பேரூராதீனம் சத்வித்யா சன்மார்க்க சங்கப் பவள விழாவில் வழங்கிய பட்டங்கள்

பட்டம் பெறுபவர்	வழங்கியபட்டம்	சேவை செய்த துறை
1. திரு R. கிருஷ்ணசாமிக் கவுண்டர்	வாழ்வியல் அறிஞர்	சமுதாயநலம்
2. மேலூர் குமாரசாமி ஐயா	வீரசைவ தத்துவ வித்தகர்	சமயம்
3. திரு சண்முக சுந்தரக் குருக்கள்	திருமுறை ஆகமச்செல்வர்	வழிபாட்டுநெறி
4. திரு S. இராமசாமி	தேசியச் செம்மல்	சமுதாயப்பணி
5. திரு அருணசலம்	பண்இசை மணி	திருமுறை
6. முனைவர் இ. சுந்தரமூர்த்தி	குறள்நெறிச் செல்வர்	இலக்கண இலக்கியம்
7. புலவர் ஐ. இராமசாமி	தொல்வியல் ஆய்வுச் செம்மல்	கொங்குநாட்டு இயல்
8. திரு S. R. சுப்பிரமணியம்	கொங்குத் தோன்றல்	சமூகப்பணி
9. திரு அ. பழனியப்பன் LIC	தொண்டர் மணி	சமயப் பணி
10. திரு பழ. மணிவண்ணன்	செஞ்சொல் நாவலர்	சொற்பொழிவு
11. திரு த. ஜானகிராமன்	சிற்பநுன் கலைஞர்	சிற்பக்கலை
12 திரு. P. K. குமார் & திரு. P. K. ராஜா	ஏழிசைச்செல்வர் இன்னிசை	இசை



தவத்திரு

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

மணிவிழா மலர்

1986

விளம்பரங்கள்





''கயிலைமுனிவரின்'' மணிவிழாக் காட்சிகள்